## அர்ப்பணம்...

என் தாயின் கருவிலே என்னைத் தெரிந்து
கொண்டு தமது ஊழியத்திற்கென்று
பிரித்தெடுத்த என் தேவாதி தேவனுக்கு
துதியும் கனமும் மகிமையும் உண்டாவதாக!
தெய்வபக்தி என்னும் விதையை என் தாயின்
மூலம் என்னில் விதைத்த தேவன்
" பக்தியுள்ளவனைக் கர்த்தர் தமக்காகத்
தெரிந்து கொண்டார் " (சங்.4:3)
என்ற வசனத்திற்கேற்ப சத்தியம் என்னும்
விதையை எனக்குள் விதைத்து
தன்னோடு கூட இணைந்து
குறிப்பாக ஸ்திரீகளுக்கு
சத்தியத்தை அறிவிக்கவும் போதிக்கவும்
என்னைப் பயிற்றுவித்து ஊக்கப்படுத்திய
என் ஆசானும் என் கணவருமாகிய
B.அர்ஜுனன் அவர்களுக்கும்;
நமது மாத இதழ் 'தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்' ல்
நான் எழுதிய செய்திகளை வாசித்து என்னை
ஊக்கப்படுத்திய அனைத்து சகோதரிகளுக்கும்;
இப்புத்தகத்தை வாசிக்கின்றவர்களுக்கும்;
இதன் தலைப்புகள் தேவனுடைய சித்தத்தையும்,
கணவனுக்கு ஏற்றதுணையாக
சிருஷ்டிக்கப்பட்டுள்ள ஸ்திரீகளுக்கான மாபெரும்
பொறுப்பு, பங்கு மற்றும் தேவனுக்கென்று நாம்
செய்யவேண்டிய பணிகள் என்ன என்பதையும்
அறிந்து கொள்ள தெளிவான சத்தியத்தின்
அறிமுகமாய் இருக்குமென்று நம்பி
இப்புத்தகத்தை உங்களுக்கு அர்ப்பணிக்கின்றேன்.

*என்றும் அன்புடன்,*
**சகோதரி குளோரி அர்ஜுனன்.**

குளோரி அர்ஜுனன்

மகிழ்ந்து களிகூரு

# மகிழ்ந்து களிகூரு

## Be glad and rejoice



**குளோரி அர்ஜுனன்**

*Published by*
World Evangelism

# மகிழ்ந்து களிகூரு

## Be Glad and Rejoice

*Presented By*

**The Word of Christ**

**Vol.1**

# அறிமுகவுரை...

தேவனால் எனக்கு ஏற்ற துணையாக கொடுக்கப்பட்ட என் துணைவி குளோரியை உங்களுக்கு அறிமுகம் செய்வதில் பெரும் மகிழ்ச்சியடைகிறேன். 1992 ல் திருமணத்தில் இணைக்கப்பட்ட நாங்கள் கர்த்தருடைய வேலையை தொடர்ந்து செய்துவருகிறோம். அவருடைய தீர்மானத்தின்படி தெரிந்துகொள்ளப்பட்ட நாங்கள் வத்தலக்குண்டு கிறிஸ்துவின் சபையில் பணியாற்றுகிறோம். **"அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த்தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்" என்ற ரோமர் 8:28 ன் படி** எங்களுடைய வாழ்க்கையில் சகலமும் நன்மைக்கு ஏதுவாகவே நடக்கிறதை அறிகிறோம். அரசு உயர்நிலைப்பள்ளியில் தலைமை ஆசிரியையாக பணியாற்றி ஓய்வு பெற்றதிலிருந்து ஓய்வில்லாமல் கர்த்தருடைய பணியை என்னோடுகூட இணைந்து செய்யும்படியாக ஒப்புக்கொடுத்து, தமிழகத்திலுள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் சென்று சுவிசேஷ வேலையைச் செய்துவருகிறோம். சில மாவட்டங்களிலுள்ள கர்த்தருடைய சபையார் எங்களோடு இணைந்து கர்த்தருடைய பணியை செய்துவருகிறார்கள்.

சகோதரிகளுக்காக ஒரு புத்தகத்தை வெளியிடவேண்டும் என்ற விரும்பத்தோடு பல ஆண்டுகளாக நமது "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" மாத இதழில் வெளிவந்த பெண்களுக்கான செய்திகளை என் துணைவி குளோரி எழுதியும், பெண்கள் மத்தியில் கர்த்தருடைய செய்திகளை, தொடர்ந்து பகிர்ந்துகொண்டு வருகிறார்கள். அந்த செய்திகளை இணைத்து **"மகிழ்ந்து களிகூரு"** என்ற தலைப்பில் ஒரு புத்தகமாக வெளியிடுவதில் எல்லையில்லா மகிழ்ச்சியடைகிறோம். இது 55 செய்திகளை உள்ளடக்கிய ஒரு புத்தகமாக இருக்கிறது. உங்களுடைய ஆவிக்குரிய ஜீவியத்திற்கு இது மிகவும் பிரயோஜனமாக இருக்குமென்று நம்புகிறோம்.

இப்புத்தகம் வெளிவர எங்களை ஊக்கப்படுத்திய சகோதரி பெட்டி பார்ட்டன் சோட் அவர்களை எங்களால் மறக்க இயலாது. கணக்கிலடங்காத புத்தகங்களை அவர்கள் எழுதி காலமெல்லாம் பேசும் புத்தகமாக அவர்கள் இருக்கிறார்கள். என் துணைவியார் குளோரியைப் பற்றி நான் சொல்லவேண்டுமானால் அவர்கள் என்னிடத்தில் இதுவரை ஒன்றும் கேட்டது கிடையாது இப்போதும் அவர்கள் என்னிடம் எதுவும் கேட்கவில்லை இனிமேலும் என்னிடம் எதுவும் கேட்கமாட்டார். எனவே இப்புத்தகத்தை அவருக்கு அன்பு பரிசாக வெளியிடுவதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். என்னோடுகூட நீங்களும் சந்தோஷப்படுங்கள். புதிய ஏற்பாட்டு காலத்தில் அப்போஸ்தலனாகிய பவுலுக்கு உதவியாக இருந்த ஆக்கில்லா பிரிஸ்கில்லாவைப்போல நாங்கள் ஊழியம் செய்ய விரும்புகிறோம். எங்களுக்காக ஜெபியுங்கள். கர்த்தர் நம்மை ஆசீர்வதிப்பாராக!

அன்புடன்,
**B. அர்ஜுனன்**
ஆகஸ்ட் 12, 2021

**Copyright : 2021**
The Word of Christ Publications
First Printing Tamilnadu - 2021
**This Printing - 1000 Copies**

# உள்ளடக்கம்

1. மகிழ்ந்து களிகூரு - Be Glad And Rejoice
2. பெண்ணாய் பிறந்தவளே - பகுதி 1 -Oh! Ye Who Born As A Woman -1
3. பெண்ணாய் பிறந்தவளே - பகுதி 2 - O! Ye Who Born As A Woman -2
4. பெண்ணாய் பிறந்தவளே! - பகுதி 3 - O! Ye Who Born As A Woman -3
5. தேடுங்கள் - Seek
6. இயேசுவைப் பின்பற்றுங்கள் - Follow Jesus
7. தேவ அன்பு பூரணப்பட்டிருக்கிறது - The Love of God Is Perfected
8. எல்லாம் புதிதாயின - All things have become new
9. விசேஷித்த மேன்மை - பகுதி 1 - Special Distinction -1
10. விசேஷித்த மேன்மை - பகுதி 2 Special Distinction - 2
11. சத்தியத்தைப்பற்றி... - About the Truth...
12. நமக்காக வேண்டுதல் செய்கிறவர் ஒருவர் உண்டு - There is an Intercesser for us
13. எத்தனை நன்மை! எத்தனை இன்பம்!! - How Good! How Pleasant!!
14. நீங்கள் உயர்த்தப்படவேண்டுமா? - Should You Be Exalted?
15. மகதலேனா மரியாள் - Mary Magdalene
16. அவர் இங்கே இல்லை - He is not here
17. வேதாகமத்தில் சில ஸ்திரீகள் - A Few Women In The Bible
18. பாவியாகிய ஒரு ஸ்திரீ - A Woman, Who was a sinner
19. லீதியாள் - Lydia
20. ரெபெக்காள் - Rebekah
21. பயப்படாதே – Fear Not
22. வஞ்சிக்கப்படாதிருங்கள் - Be Not Deceived
23. ஞான இருதயமுள்ள ஸ்திரீகள் -The Women That Were Wise Hearted
24. சபைக்கு ஊழியஞ்செய்தல் - Serving The Church
25. கர்த்தரைக் குறித்தே மேன்மைபாராட்டுவோம் - Lets` Boast in the Lord
26. புத்தியுள்ள ஸ்திரீ - The Wise Woman

27. பதிலளிக்கப்படாத ஜெபங்களுக்கான காரணங்கள் - Reasons for Unanswered Prayers
28. முள் - Thorn
29. அழிவை நோக்கி... - Towards Destruction...
30. கசந்த மாரா மதுரமாகும் - Bitterness Will Become Sweetness
31. மனைவி - Wife
32. அன்றும் இன்றும் - Yesterday and Today
33. என் பிரியமே, உன்னில் பழுதொன்றுமில்லை - My Darling, There is No Flow in You
34. நீ சிறியதாயிருந்தாலும்... - Though You be Little...
35. ஒரு சிறிய ஊசியினால்... - With a Small Needle...
36. அதிகமாய்க் கொடுக்கப்படும் - More Will be Given
37. அவள் வருங்காலத்தைப் பற்றியும் மகிழ்கிறாள் - She Shall Rejoice In Time To Come
38. விக்கிரகாராதனைக்காரர் ஆகாதிருங்கள் - Do Not Become Idolaters
39. ஊழியருக்கேற்ற மனைவி - A Proper Wife for A Minister
40. உங்கள் பிள்ளைகள் சத்தியத்திலே நடக்கிறார்களா? - Your Children walk In Truth?
41. கொடுங்கள் - Give
42. நீங்கள் தேவை - You Are Wanted
43. முதல் நூற்றாண்டில் முதன்மையான தம்பதியர் -An Excellent Couple In The First Century
44. தாய் - Mother
45. கர்த்தர் தெய்வமானால் அவரை பின்பற்றுங்கள் - If The Lord Be God, Follow Him
46. நித்திய ஜீவனைப் பற்றிக்கொள் - Hold On Eternal Life
47. ஒன்றுக்கும் கவலைப்படாதிருங்கள் - Be Careful for Nothing
48. அலங்காரம் - The Ornament
49. தேவன் உங்களை உயர்த்துவார் - God May Exalt You
50. யார் வஞ்சகர்? - Who are Deceivers?
51. இதையே சிந்தித்துக்கொண்டிருங்கள் - Put it into practice
52. அதிக நாட்கள் காத்திருக்க வேண்டியிருந்த ஸ்திரீ - The Woman Who Had To Wait For A Long Time
53. அற்பமாய் எண்ணாதிருங்கள் - Despise Not
54. ஓட்டத்தை முடித்தேன் - I have finished my Course
55. கர்த்தர் வருகிறார் - Maranatha

# மகிழ்ந்து களிகூரு
# Be Glad and Rejoice

**1**

**அ**ன்பான சகோதரிகளே, இத்தலைப்பினை இன்னொரு முறைகூட வாசித்துப்பாருங்கள். அப்பொழுது நம் இருதயம் மகிழ்ந்து களிகூரும். ஏன் தெரியுமா? நம்மை உருவாக்கின தேவன் பெண்களாக நம்மை அற்புதவிதமாக சிருஷ்டித்து அநேக பொறுப்புகளையும் கொடுத்துள்ளார். எனவே இப்பூமியில் நம்முடைய பங்கு அதிக முக்கியத்துவம் வாய்ந்தாக இருக்கிறது. எப்படியென்று கேட்கிறீர்களா? வாருங்கள், பரிசுத்த வேதாகமத்தின் அடிப்படையில் நம்முடைய பங்கினை அறிந்து கொண்டு கர்த்தரை மகிமைப்படுத்துவோம், மகிழ்ந்து களிகூருவோம்!

தேவன் வானத்தையும் பூமியையும் அதிலுள்ள அனைத்தையும் சிருஷ்டித்து ஆறாம் நாளில் தம்முடைய சாயலாகவே மனுஷனை சிருஷ்டித்தார். அந்த முதல் மனிதனாகிய ஆதாமை சிருஷ்டித்த தேவன் தாம் படைத்துள்ள இந்த சிருஷ்டிப்புகளுடன் நீ உறவாடி மகிழ்ந்திரு, இவைகள் எல்லாம் உனக்குத்துணையாக இருக்கும் என்று சொல்லவில்லை மாறாக, "...தேவனாகிய கர்த்தர்: மனுஷன் தனிமையாய் இருப்பது நல்லதல்ல, ஏற்ற துணையை அவனுக்கு உண்டாக்குவேன் என்றார்" (ஆதி.2:18). அந்தப்படியே "தேவனாகிய கர்த்தர் தாம் மனுஷனில் எடுத்த விலா எலும்பை மனுஷியாக உருவாக்கி, அவளை மனுஷனிடத்தில் கொண்டுவந்தார்" (ஆதி.2:22). பார்த்தீர்களா, நாம் எவ்வளவு அற்புதமான பாத்திரமாக வடிவமைக்கப்பட்டுள்ளோம்! ஒவ்வொரு ஸ்திரீயும் தன் புருஷனுக்கு ஏற்ற துணையாக சிருஷ்டிக்கப்பட்டுள்ளாள் என அறியும்போது நமது பங்கு அதி முக்கியமானதல்லவா? ஆம், ஒவ்வொரு ஆண் மகனின் வளர்ச்சிக்கும் அல்லது மேன்மைக்கும் பின்னே ஓர் பெண்மணி இருக்கிறாள் என்பர். நீதிமொழிகள் 31 ம் அதிகாரத்திலுள்ள அநேக வசனங்கள் இதனை உறுதிசெய்கின்றன. கர்த்தர் ஸ்திரீகளாகிய நம்மை நம் புருஷனுக்குக் கிரீடமாகவும் ஏற்ற துணையாகவும் உண்டாக்கியிருக்கும்போது நம் கர்த்தருக்கு நன்றி சொல்லி மகிழ்வோம்.

மேலும், தாய்மாராகிய ஒவ்வொரு பெண்ணுக்கும் தன் பிள்ளைகளைக் கர்த்தருக்குள் வளர்க்கும் பொறுப்பு என்பது இவ்வுலகில் காணப்படும் அநேக பதவிகளுக்கான பொறுப்பினைக்காட்டிலும் பெரியது. "இன்றைய குழந்தை நாளைய தலைவன் என்பர்". வேதாகம பெண்களில் அநேகர் தங்களுடைய பிள்ளைகளுக்கு சிறுவயதிலேயே உட்காரும்போதும், எழுந்திருக்கும்போதும், படுத்திருக்கும்போதும், கர்த்தருடைய மகத்துவங்களைக்கூறி வளர்த்து பிற்காலங்களில் அடிமைத்தனத் திலிருந்து ஜனங்களை காப்பாற்றும் தலைவனாகவும், பஞ்சகாலத்திற்கு தப்புவிக்கும் தலைவனாகவும், கர்த்தருடைய வார்த்தைகளைப் போதிக்கும் தீர்க்கதரிசிகளாகவும்,

போதகர்களாகவும், மீட்பின் செய்தியை கூறும் பிரசங்கியார்களாகவும் மாற காரணமாகயிருந்திருக்கிறார்கள். புதிய ஏற்பாட்டில் தாயாகிய ஐனிக்கேயாளும், பாட்டியாகிய லோவிசாளும், உத்தம தீமோத்தேயுவை உருவாக்கும் பொறுப்புடையவர்களாக இருந்திருக்கின்றனர் (2தீமோ.1:5). இப்பேர்பட்ட பொறுப்பினை உடைய தாய்மார்களை தங்கள் பிள்ளைகள் எழும்பி பாக்கியவதிகள் என்று சொல்லுகிறபோது அது எத்தனை மகிழ்ச்சியாயிருக்கும்!

வேதம் சொல்கிறது; "அந்தப்படி பிள்ளைபெறாத மலடியே, மகிழ்ந்திரு; கர்ப்பவேதனைப்படாதவளே, களிப்பாய் எழும்பி ஆர்ப்பரி; புருஷனுள்ளவளைப் பார்க்கிலும் அநாத ஸ்திரீக்கே அதிகபிள்ளைகளுண்டு என்று எழுதியிருக்கிறது" (கலா.4:27). இந்த வேதப்பகுதியானது அன்றும் இன்றும் பொருத்தமுடையதாக இருக்கிறது என்று நினைக்கிறேன். ஏனென்றால் அநேக ஸ்திரீகள் தங்களுக்குக் குழந்தை பாக்கியம் கிடைக்கவில்லை என்று சோர்ந்துபோகலாம். ஆனால் நம்மை உருவாக்கின தேவனோ, இல்லாதவைகளை இருக்கிறவைகளைப்போல அழைக்கிற ஆபிரகாமின் தேவன். ஆபிரகாமுக்கு குழந்தைகள் ஒன்றும் இல்லாதிருக்கும்போது நம்மெல்லொருக்கும் தகப்பனாக்கினார்.

அன்பு சகோதரியே, நீ ஆபிரகாமின் விசுவாச குமாரத்தி. அதை ஒருபோதும் மறந்துபோகாதே, உன் சிருஷ்டிகர் வல்லவர். கர்த்தர் உன் வாழ்க்கையில் பெரிய காரியங்களைச் செய்கிறவர். "தேவனாலே கூடாத காரியம் ஒன்றுமில்லை..." (லூக்.1:37). இதை வாசிக்கிற நீங்களும்கூட சிறுமைப்பட்டவளைப்போல பெருங்காற்றில் அடிபட்டவளைப்போல, தேற்றரவற்றவளைப் போல இருக்கலாம். ஆனால் "அவர் (கர்த்தர்) சிறியவனைப் புழுதியிலிருந்து எடுத்து, எளியவனைக் குப்பையிலிருந்து உயர்த்துகிறார்...." (1சாமு.2:8). "என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார்" (பிலி.4:19) என்று எண்ணி மகிழ்ந்து களிகூருங்கள்.

இளம் பிராயத்தில் விவாகம் செய்து தள்ளப்பட்டவளைப் போலிருக்கிற அன்பு தங்கையே 'மகிழ்ந்து களிகூரு' "பயப்படாதே, நீ வெட்கப்படுவதில்லை; நாணாதே, நீ இலச்சையடைவதில்லை; உன் வாலிபத்தின் வெட்கத்தை நீ மறந்து, உன் விதவையிருப்பின் நிந்தையை இனி நினையாதிருப்பாய்; உன் சிருஷ்டிகரே உன் நாயகர்; சேனைகளின் கர்த்தர் என்பது அவருடைய நாமம். இஸ்ரவேலின் பரிசுத்தர் உன் மீட்பர், அவர் சர்வபூமியின் தேவன் என்னப்படுவார். கைவிடப்பட்டு மனம் நொந்தவளான ஸ்திரீயைப்போலவும், இளம்பிராயத்தில் விவாகஞ்செய்து தள்ளப்பட்ட மனைவியைப்போலவும் இருக்கிற உன்னைக் கர்த்தர் அழைத்தார் என்று உன் தேவன் சொல்லுகிறார்" என எருசலேமைப்பார்த்து ஏசாயாவைக் கொண்டு கர்த்தர் உரைத்தார் (ஏசா.54:4-6). அதைப்போல நம்மை சிருஷ்டித்த நம் நாயகராகிய கர்த்தர் நம்மைத் தள்ளிவிடமாட்டார். ஏனெனில் இயேசுவும் இப்பூமிக்கு மாம்சத்தில் வந்தபோது எல்லாராலும் தள்ளப்பட்டார். அற்பமாய் எண்ணப்பட்டார். ஆனால்



"...அவரே மூலைக்குத் தலைக்கல்லானவர்" (அப்.4:11). நாம் மனுஷரால் தள்ளப்பட்டவர்களாயிருந்தாலும் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டதும் விலையேறப்பெற்றதுமாயிருக்கிற ஜீவனுள்ள கல்லாகிய அவரிடத்தில் சேரக்கடவோம் (1பேது.2:4). எனவே 'மகிழ்ந்து களிகூரு!

நீங்கள் இயேசுவைக் குறித்து போதிக்கப்பட்டவர்களாயிருக்கிறீர்களா? மகிழ்ந்து களிகூருங்கள்! ஏனெனில் பெந்தெகொஸ்தே நாளில் பேதுருவின் வார்த்தையைக் கேட்டபோது சந்தோஷப்பட்டார்கள். "அவனுடைய வார்த்தையைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள். அன்றையத்தினம் ஏறக்குறைய மூவாயிரம்பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள்" (அப்.2:41). கர்த்தர் தமது சபையில் அவர்களை சேர்த்துக்கொண்டார். நீங்களும் அவருடைய வார்த்தையை சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டு ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டு மகிழ்ந்து களிகூருங்கள்.

நீங்கள் கிறிஸ்தவர்களாயிருந்து பலவிதமான சோதனையில் அகப்படும்போது, "உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்குமென்று அறிந்து, அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள்" (யாக்.1:3). மனுஷகுமாரனாகிய இயேசுவின் நிமித்தமாக ஜனங்கள் உங்களை பகைத்து, உங்களை புறம்பாக்கி, உங்களை நிந்தித்து தள்ளிவிடும்போது, "அந்நாளில் நீங்கள் சந்தோஷப்பட்டுக் களிகூருங்கள்; பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்..." (லூக்.6:22-23). "...உங்கள் நாமங்கள் பரலோகத்தில் எழுதியிருக்கிறதற்காகச் சந்தோஷப்படுங்கள்" (லூக்.10:20).

கிறிஸ்துவை முழுமனதுடனே ஏற்றுக்கொண்ட ஒருவர்கூட துக்கத்திலே நிலைத்திருப்பதில்லை. **கிறிஸ்தவம் ஒருபோதும் ஒரு துக்கம் நிறைந்த மார்க்கமாக ஏற்படுத்தப்படவில்லை. Christianity was never designed to be a religion of sadness.** கிறிஸ்துவுடனே நாம் கொண்டிருக்கிற ஐக்கியம் இப்பூமியிலுள்ள எந்த ஒரு உறவுடனும் நாம் கொள்ளும் ஐக்கியத்தைக் காட்டிலும் அற்புதமானது! நாம் கிறிஸ்துவுக்குள் வாழும்போது ஒருபோதும் ஏமாற்றமோ மனச்சோர்வோ ஏற்பட முடியாது. ஏனெனில் அவர் நம்முடைய எல்லா பாடுகளிலிருந்தும் துன்பங்களிலிருந்தும் நம்மை விடுவித்து இரட்சிப்பவர். "தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ, அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்" (யோவா.3:16) என வாசிக்கிறோம். நாம் செய்ய வேண்டியதெல்லாம் கர்த்தர் நம்நடுவில் இருக்கிறார்; அவர் வல்லமையுள்ளவர், அவர் இரட்சிப்பார் என விசுவாசிக்கவேண்டும். அப்போது, "....அவர் உன்பேரில் சந்தோஷமாய் மகிழ்ந்து, தம்முடைய அன்பினிமித்தம் அமர்ந்திருப்பார்; அவர் உன்பேரில் கெம்பீரமாய்க் களிகூருவார்" (செப்.3:17). தேவன் நம்மில் மகிழ்ந்து களிகூரும்போது, நாம் அவரில் மகிழ்ந்து களிகூரவேண்டாமா? மகிழ்ந்து களிகூருவோம்.

எபிரெய பாஷையில் **சந்தோஷம் – Joy என்பதற்கு நித்திய மகிழ்ச்சி – eternal pleasure** என்று சொல்லப்படுகிறது. தேவசமுகத்தில் இந்த மகிழ்ச்சியைப் பெற்றுக்கொள்ளமுடியும். மகிமையும் கனமும் அவர் சமுகத்தில் இருக்கிறது; வல்லமையும் மகிழ்ச்சியும் அவர் ஸ்தலத்தில் இருக்கிறது" (1நாளா.16:27). மேலும் தாவீதின் சங்கீதத்தில் "ஜீவமார்க்கத்தை எனக்குத் தெரியப்படுத்துவீர்; உம்முடைய சமுகத்தில் பரிபூரண ஆனந்தமும் உம்முடைய வலதுபாரிசத்தில் நித்திய பேரின்பமும் உண்டு" (சங்.16:11) எனத் தீர்க்கதரிசனமாக உரைக்கப்பட்டுள்ளது. நாம் இந்த பூவுலகில் எங்கு சென்று முட்டிமோதினாலும் நித்திய மகிழ்ச்சியையும் களிப்பையும் பெற்றுக் கொள்ளமுடியாது, தேவனுடைய சமுகத்தில் மட்டும் தான் இவைகளைப் பெற்றுக்கொள்ள முடியும். எனவே அன்பு தோழிகளே, தேவனிடத்திற்குத் திரும்பி தேவசமூகத்தில் நித்திய மகிழ்ச்சியைப் பெற்றுக்கொள்ளுங்கள். **தேவனுக்குள் எப்போதும் சந்தோஷம் உண்டு – Rejoice is always available in God.**

அன்றைய நாட்களில் ஒரே மெய்தேவனையே தங்கள் சொந்த தெய்வமாகக் கொண்டிருந்த இஸ்ரவேலை நோக்கி "பயப்படாதே, மகிழ்ந்து களிகூரு; கர்த்தர் பெரிய காரியங்களைச் செய்வார்" (யோவேல் 2:21) என்று தீர்க்கதரிசனமாக உரைக்கப்பட்டது. அதே மெய் தேவனிடத்திற்கு மனந்திரும்பியிருக்கிற ஆவிக்குரிய இஸ்ரவேலராகிய நம்மையும் பார்த்து தேவன் மகிழ்ந்திரு களிகூரு என்றெல்லாம் கூறி ஆறுதல்படுத்துகிறவராகயிருக்கிறார். **மகிழ்ந்திரு, களிப்பாயிரு அல்லது சந்தோஷமாயிரு என்ற வார்த்தைகள் 400 தடவைகளுக்கும் மேலாக வேதாகமத்தில் இடம் பெற்றுள்ளதாகக் கூறப்படுகிறது – The words Rejoice and joy are found more than the 400 time in the Bible.** தேவன் நம்மேல் எவ்வளவு கரிசனையுள்ளவராக இருந்தால் பரிசுத்த ஆவியானவரின் மூலமாக இவ்வாறு எழுதப்பட்டிருக்கும்! இப்பேர்பட்ட தெய்வத்தை தன் சொந்த தெய்வமாகக் கொண்ட ஜனம் பாக்கியமுள்ளதல்லவா?

ஆம், நாம் எச்சூழலில் அல்லது எந்நிலையிலிருந்தாலும் பாக்கியவதிகள் தான். எனவே நாம் பயப்படுகிறவர்களாக, கவலைப்படுகிறவர்களாக, வெட்கப்பட்டு கூனிகுறுகி போனவர்களாகக் காணப்படாதபடி 'மகிழ்ந்து களிகூருவோம்'.

அன்பான சகோதரிகளே, நாம் சந்தோஷப்பட்டு மகிழ்ந்து களிகூரும்படிக்கு கிறிஸ்துவின் வசனங்கள் நம்மைப் பெலப்படுத்துகிறதாய் இருக்கிறது. கர்த்தருடைய வசனங்கள் 'ஆவியாயும் ஜீவனாயுமிருக்கிறது: எனவே நாம் எதைக்குறித்தும் கவலைப்படவேண்டியதில்லை, நமக்கு இப்பூமியில் கிடைக்காத காரிங்கள் ஏராளமிருக்கலாம், ஆனால் எல்லாம் மாயையும் மனதுக்கு சஞ்சலமாகவும் இருக்கிறது என்று சொன்ன பிரசங்கியின் வசனத்தை நினைவுகூருவோம். அவைகள் எல்லாம் அநித்தியமானவைகள், நாம் அவரைக் (இயேசுவை) காணமலிருந்தும், தரிசியாமலிருந்தும் அவரிடத்தில் விசுவாசம் வைத்திருக்கிறபடியால் சொல்லி முடியாததும் மகிமையால் நிறைந்ததுமாயிருக்கிற சந்தோஷமுள்ளவர்களாய்க்



களிகூர்ந்து நம்முடைய விசுவாசத்தின் பலனாகிய ஆத்தும ரட்சிப்பை அடைகிறவர்களாயிருக்கிறோம் (1பேது.1:8-9). எனவே நம்முடைய சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி வேண்டிக்கொள்ளுவோம். "இதுவரைக்கும் நீங்கள் என் நாமத்தினாலே ஒன்றும் கேட்கவில்லை; கேளுங்கள், அப்பொழுது உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி பெற்றுக்கொள்வீர்கள்" (யோவா.16:24) என்று இயேசு சொல்கிறார். எனவே மகிழ்ந்து களிகூருவோம். கர்த்தர் நம்மை தம்முடைய நித்திய மகிழ்ச்சி நிறைந்த இடத்திற்கு அழைத்துச் செல்ல சீக்கிரம் வருகிறார். ஆயத்தமாயிருப்போம் அதுவே நிலையானது நித்தியமானது. அவருடைய நித்திய மகிழ்ச்சி உங்கள் தலையின் மேல் இருக்கும். மறுபடியும் சொல்லுகிறேன் "மகிழ்ந்து களிகூருங்கள்" ஆமென்.

## கேள்விகள்

1. மகிழ்ந்திரு, களிப்பாயிரு அல்லது சந்தோஷமாயிரு என்ற வார்த்தை வேதாகமத்தில் எத்தனை முறை கூறப்பட்டுள்ளது?
2. மூலைக்குத் தலைக்கல்லானவர் எவர்?
3. உங்கள் விசுவாசத்தின் பரீட்சை எதை உண்டாக்கும்?
4. எபிரெய பாஷையில் சந்தோஷம் என்பதற்கு என்ன அர்த்தம்?
5. பயப்படாதே மகிழ்ந்து களிகூரு என்ற தீர்க்கதரிசி யார்?

# பெண்ணாய் பிறந்தவளே – 1
# Oh! Ye Who Born As A Woman - 1

**2**

பிறக்கும் குழந்தை ஆணா அல்லது பெண்ணா என்ற கேள்வி முதலாவது கேட்கப்படுகிறது. ஏன் இந்தக் கேள்வி. ஆணாக பிறந்தால் ஒரே அமர்க்களம். பெண்ணா பிறந்தால் பெற்ற தகப்பன் கூட தன் பிள்ளையைப் பார்க்க விரும்புவதில்லை. முதன் முதலில் ஒரு பெண்ணை ஆணிலிருந்து நம்முடைய பிதாவாகிய தேவன் உண்டாக்கினார். இது மாபெரும் அற்புத செயல் அல்லவா? இன்று ஒரு பெண்ணையும் ஆணையும் பெற்று எடுப்பது ஒரு பெண்ணாக இருக்கிறாள். ஆனால் உலகத்தின் முதன் முதலில் ஆணிலிருந்தே ஒரு பெண் வெளிப்பட்டாள். அப்பொழுது வெளிப்பட்ட அந்தப் பெண்ணைப்பார்த்து முதல் மனிதனாகிய ஆதாம் "இவள் என் எலும்பில் எலும்பும், என் மாம்சத்தில் மாம்சமுமாய் இருக்கிறாள்; இவள் மனுஷனில் எடுக்கப்பட்டபடியினால் மனுஷி என்னப்படுவாள் என்றான்" (ஆதி.2:24). அன்று ஆதாம் அவளை தன் மனைவியாக ஒரே சரீரமாக நேசித்தான். அந்த நேசம் இன்று அநேகரிடம் இருப்பதில்லை.

இந்த ஆதாம் மூலமாக வெளிப்பட்ட ஸ்திரீ பிசாசுக்குச் செவிகொடுத்ததினால் இருவரும் ஏதேன் தோட்டத்திலிருந்து வெளியேற்றப்பட்டனர். "இப்படியாக, ஒரே மனுஷனாலே பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்ததுபோலவும், எல்லா மனுஷரும் பாவஞ்செய்தபடியால், மரணம் எல்லாருக்கும் வந்ததுபோலவும் இதுவுமாயிற்று... அப்படியிருந்தும், மரணமானது ஆதாம்முதல் மோசேவரைக்கும், ஆதாமின் மீறுதலுக்கொப்பாய்ப் பாவஞ்செய்யாதவர்களையும் ஆண்டுகொண்டது" (ரோம.5:12,14). ஆதாமின் மூலமாக வெளிப்பட்ட ஸ்திரீயை பயன்படுத்தி பிசாசு உலகத்தில் பாவத்தை விதைத்தான். ஆகையால் இன்றும் ஏவாளை குறித்து பேசப்பட்டு வருகிறது. பெண்களைக்கொண்டு பிசாசு தந்திரமாக ஏமாற்றி தன்னுடைய வேலைகளை ஆரம்பித்துவிடுவான் என்று பேசப்படுகிறது.

ஏவாளின் வழி வந்த மரியாள் என்ற பெண்ணைக் கொண்டு பாவத்தை ஜெயிக்கும்படி பிதாவாகிய தேவன் பரிசுத்தரை பெற்றெடுக்கும்படி அநுக்கிரகம் செய்தார். உலகத்திலே உள்ள அநேக பெண்களுக்கு கிடைக்காத ஒரு மாபெரும் பாக்கியத்தை மரியாள் பெற்றாள். பெண்ணாய் பிறந்துவிட்டாளே என நினைத்து, ஏதோ இடி விழுந்த குடும்பம்போல சிலர் மாறிப்போகின்றார்கள். மரியாள் என்ற பெண் பெற்றெடுத்த மாமன்னன் இயேசுவினாலே உலகத்திற்கு இரட்சிப்பு வந்தது என்பதை நீங்கள் அறிவீர்களா? "ஒருவனுடைய மீறுதலினாலே, அந்த ஒருவன்மூலமாய், மரணம் ஆண்டுகொண்டிருக்க, கிருபையின் பரிபூரணத்தையும் நீதியாகிய ஈவின் பரிபூரணத்தையும் பெறுகிறவர்கள் இயேசுகிறிஸ்து என்னும் ஒருவராலே ஜீவனை



அடைந்து ஆளுவார்களென்பது அதிக நிச்சயமாமே" என்கிறார் அப்போஸ்தலனாகிய பவுல் (ரோம.5:17).

இச்செய்தியை வாசிக்கும் அன்பு பெண்ணே நமது ஆதித்தாய் ஏவாளினால் வந்தது பிரச்சனை அதேவேளையில் மரியாள் என்ற பெண்ணின் மூலமாக உலகஇரட்சகர், சமாதானபிரபுவின் பிறப்பு உலகத்திற்கு இரட்சிப்பைக் கொண்டு வந்தது. இன்றைக்கு அநேக குடும்பங்களில் சமாதானமில்லை. சில ஸ்திரீகள் தங்கள் குடும்பத்திலுள்ள பிரச்சனைகளைக் குறித்து வேதனையுடன் அழுதுகொண்டு மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ளுகிறார்கள். ஸ்திரீகளாகிய நமக்கும் நம்முடைய புருஷனுக்கும் இடையே சண்டைகள் சச்சரவுகள் எழும்புமானால் பேசாமல் அமைதியாக இருந்துவிட்டால் எல்லாம் சூரியன் அஸ்தமிப்பதற்குள் சரியாகி விடும். அதைசெய்யாமல் நாள்கணக்காக அதை பெரிதுபடுத்தி பழையவைகளை கிளறிக்கொண்டே இருப்போமானால் பிரச்சனைகள் ஒரு முடிவுக்கு வரவாய்ப்பு இல்லை.

வேதாகமம், "பேசாதிருந்தால் மூடனும் ஞானவான் என்று எண்ணப்படுவான்; தன் உதடுகளை மூடுகிறவன் புத்திமான் என்று எண்ணப்படுவான்" (நீதி.17:28) என்று கூறுகிறது. வீட்டில் எழும்பக்கூடிய கோபத்தை "மெதுவான பிரதியுத்தரம் உக்கிரத்தை மாற்றும்" நீதி.15:1-ன் படி ஸ்திரீகளாகிய நாம் பொறுமையுடன் நடந்துகொள்ளும்போது குடும்பங்களில் சமாதானம் ஏற்படும்.

சமாதான கர்த்தர் வந்தும் இன்னும் குடும்பங்களில் சமாதானம் இல்லை என்றால் அதற்கு காரணம் என்ன? சமாதான கர்த்தருடைய வசனம் அங்கு இல்லை என்றே சொல்வேன். "மனைவிகளே, கர்த்தருக்குக் கீழ்படிகிறதுபோல, உங்கள் சொந்த புருஷருக்குக் கீழ்ப்படியுங்கள்" (எபேசி.5:22). உண்மையிலே நீங்கள் கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறவர்களானால் நிச்சயமாக எந்த நிபந்தனையுமின்றி உங்கள் புருஷருக்குக் கீழ்ப்படியவேண்டும். நமக்குப் பிடித்தாலும் பிடிக்காவிட்டாலும் வசனத்தின்படி "வார்த்தையினாலாவது கிரியையினாலாவது, நீங்கள் எதைச் செய்தாலும் அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து, அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்தரியுங்கள்" (கொலோ.3:17).

புதிய ஏற்பாட்டில் லூக்கா 1-ம் அதிகாரத்தில் நாம் காணும் ஸ்திரீகள் நமக்கு நல்ல எடுத்துக்காட்டுகளாயிருக்கின்றனர். மலடியாயிருந்த எலிசபெத்தும் அவள் புருஷன் சகரியாவும் "கர்த்தரிட்ட சகல கற்பனைகளின்படியேயும் நியமங்களின் படியேயும் குற்ற மற்றவர்களாய் நடந்து, தேவனுக்கு முன்பாக நீதியுள்ளவர்களாயிருந்தார்கள்". இந்த தம்பதியினர் மேற்குறிப்பிடப்பட்டுள்ள அத்தனை காரியத்தை செய்து குற்றமற்றவர்களாய் நடந்து, தேவனுக்கு முன்பாக நீதியுள்ளவர்களாயிருந்தார்கள். ஆனபடியினால் அவர்களுக்கிடையே எந்த கருத்து வேறுபாடும் இருந்ததாக வேதத்தில் காணமுடியவில்லை.

கர்த்தருக்குள்ளிருக்கும் நாமும் இவர்களைப்போல் இருந்தால் நிச்சயம் தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களாயிருப்போம். "பிசாசுக்கு இடங்கொடாமலும் இருங்கள்... கெட்ட வார்த்தை ஒன்றும் உங்கள் வாயிலிருந்து புறப்படவேண்டாம்; பக்திவிருத்திக்கு ஏதுவான நல்ல வார்த்தை உண்டானால் அதையே கேட்கிறவர்களுக்குப் பிரயோஜன முண்டாகும்படி பேசுங்கள்" (எபே.4:27,29). இப்படிச் செய்வீர்களானால், எதிராளியாகிய பிசாசுக்கும், பிசாசினால் அனுப்பப்படுகிறவர்களுக்கும் நம்முடைய குடும்பத்தில் இடமிருக்காது. ஒவ்வொருநாளும் தேவனுக்கு நன்றி சொல்லிக்கொண்டு, தேவனுடைய சித்தத்தின்படி ஒவ்வொரு நாளும் வாழும்படியாக உங்களை கர்த்தருக்கு ஒப்புக்கொடுங்கள். குடும்பங்கள் தேவனால் ஏற்படுத்தப்பட்டது. அதை பாதுகாப்பது நமது கடமை.

### கேள்விகள்

1. மனுஷி என்ற பெயர் எப்படி வந்தது?
2. மெதுவான பிரதியுத்தரம் எதை மாற்றும்?
3. மனைவிகள் யாருக்குக் கீழ்ப்படிகிறதுபோல தங்கள் சொந்தபுருஷருக்குக் கீழ்ப்படிய வேண்டும்?
4. நீங்கள் எதைச் செய்தாலும் அதை யாருடைய நாமத்தினாலே செய்ய வேண்டும்?
5. கர்த்தரிட்ட சகல கற்பனைகளின்படியேயும் நியமங்களின்படியேயும் குற்றமற்றவர்களாக நடந்த தம்பதியர் யார்?



## பெண்ணாய் பிறந்தவளே – 2
## Oh! Ye Who Born As A Woman - 2

**3**

**பெ**ண்ணாக பிறந்துள்ள அன்பு சகோதரியே, உன் புருஷனுக்குக் கிரீடமாயிருக்கிறாயா? "குணசாலியான ஸ்திரீ தன் புருஷனுக்குக் கிரீடமாயிருக்கிறாள்" என்று நீதிமொழிகள் 12:4 கூறுகிறது. உலக வழக்கில் ஒரு ஆணின் முன்னேற்றத்திற்குப் பின்னால் ஒரு பெண்ணிருக்கிறாள் என்கின்றனர். நீங்கள் உங்களுடைய புருஷருக்கு ஏற்றதுணையாக இருந்து அவருடைய முன்னேற்றத்திற்கு ஊக்கமளிப்பவராக இருக்கிறீர்களா? அல்லது அது உங்களுடைய வேலை உங்களுடைய வேலைக்கும் எனக்கும் சம்பந்தமில்லை என்கிறீர்களா? நிச்சயமாக ஒரு குணசாரியான ஸ்திரீ புருஷருக்கு புகழ்ச்சியைக் கொண்டுவருவாள். யார் அந்த குணசாலியான ஸ்திரீ? நீதிமொழிகள் 31-ம் அதிகாரத்தில் குணசாலியான ஸ்திரீயைப் பற்றி ஒரு பெரிய பட்டியலே கொடுக்கப்பட்டுள்ளது.

குணசாலியான ஸ்திரீயின் விலை முத்துக்களைப் பார்க்கிலும் உயர்ந்தது அவள் தன் புருஷனையும் தன் வீட்டாரையும் தன் வேலைக்காரர்களையும் நன்கு கவனிக்கிறாள். எனவே அவள் வருங்காலத்தைப் பற்றி கவலை கொள்ளாமல் மகிழ்கிறாள். ஆனால் இன்றைய சகோதரிகள் நாளைய தினத்தைக் குறித்து கவலைப்படுகின்றனர். அதிலும் பெண்குழந்தைகள் பிறந்துவிட்டால் அவ்வளவு தான்! வசனம் கூறுகிறது "பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்திரம், கர்ப்பத்தின் கனி அவரால் கிடைக்கும் பலன்" (சங்,127:4) என்று. இப்படியிருக்க கர்த்தர் உங்கள் பிள்ளைகளைப் பார்த்துக் கொள்ளமாட்டாரா? அவர் வருங்காலத்திற்கும் தேவனாயிருக்கிறார். ஒரு குணசாலியான ஸ்திரீ ஒன்றுக்கும் கவலைப்படாமல் தன் புருஷனுக்கும் தன் வீட்டாரனைவருக்கும் ஏற்ற தன் கடமைகளைச் செய்தால் நிச்சயம் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்படுவாள். அவளுடைய குடும்பமும் ஆசீர்வதிக்கப்படும். ஸ்திரீகள் செய்யவேண்டுவதெல்லாம் சிறுவயதிலேயே தன் பிள்ளைகளுக்குக் கர்த்தருடைய கற்பனைகளையும், கட்டளைகளையும் கற்றுக் கொடுக்கவேண்டும்.

பாருங்கள்! நோவா காலத்தில் நோவாவின் மனைவி தன் புருஷன் நோவாவிற்குக் கீழ்ப்படிந்திருந்ததுமட்டும்மல்லாது தன் பிள்ளைகள் மூவரும் தன் மருமக்கள் மூவரும் கீழ்ப்படிந்திருந்தபடியினால் ஜலத்தின் அழிவிற்கு தப்பிக் காக்கப்பட்டார்கள். மேலும் பேழையை விட்டு இறங்கியதும் கர்த்தருக்கு ஒரு பலிபீடம் அமைத்து நன்றி செலுத்தினார்கள். நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள். ஆனால் யோபுவின் மனைவியோ பொருளாசை பிடித்தவளாக அத்தனையும் இழந்துவிட்டோமே எனக்கருதி யோபுவை பார்த்து: "நீர் இன்னும் உம்முடைய உத்தமத்தில் உறுதியாய் நிற்கிறீரோ? தேவனைத் தூஷித்து ஜீவனை விடும் என்றாள்" (யோபு 2:9). நோவாவின் காலத்தில்

ஜலப்பிரளயம் வந்தபோது தன் உடமைகள் எல்லாமே ஜலத்தில் அழிந்துபோயிருக்கும். ஆனால் அவன் மனைவியோ பொருளாசைப்பிடித்தவளாகக் காணப்படவில்லை என்று தான் கருதவேண்டும். அப்படிப் பொருளாசையுடைவளா யிருந்திருப்பாளேயென்றால் நிச்சயம் நோவாவின் சொல்லுக்குக் கீழ்ப்படிந்து இருக்கமாட்டாள்.

இன்றைய சகோதரிகள் அநேகர் பொருளாசையுடையவர்களாய் யோபுவின் மனைவியைப் போல தன் கணவனை போடா வாடா என்று கூட பேசி விடுகின்றனர். இப்படிப் பேசுவது நிச்சயமாக ஒரு கிறிஸ்தவ ஸ்திரீக்கு அழகல்ல. ஒரு உண்மையுள்ள, வசனத்தைக் கைக்கொள்ளுகிற கிறிஸ்தவள் நிச்சயமாக தன் புருஷனுக்குக் கொடுக்கவேண்டிய மரியாதையையும், கனத்தையும் செலுத்தியே ஆக வேண்டும். ஏனென்றால் நாம் நம் புருஷர்மார்களுக்கு ஏற்ற துணையாக உண்டாக்கப் பட்டிருக்கிறோம். துணையாக இருப்பவள் அதிகாரியாக மாற முடியாது. எனவே பவுல் ஸ்திரீயானவள் எல்லாவற்றிலும் அடக்கமுடைய வளாயிருந்து, அமைதலோடு கற்றுக் கொள்ளக்கடவள். உபதேசம்பண்ணவும், புருஷன் மேல் அதிகாரஞ்செலுத்தவும், ஸ்திரீயானவளுக்கு நான் உத்தரவு கொடுக்கிறதில்லை..." (1தீமோ.2;11) என்கிறார். ஏனென்றால், "ஆதாம் பிசாசினால் வஞ்சிக்கப்படவில்லை, ஸ்திரீயானவளே வஞ்சிக்கப்பட்டு மீறுதலுக்கு உட்பட்டாள்" (1தீமோ.2;13) எனவே குற்றஞ் செய்த நாம் மனசாட்சியில் குத்தப்பட்டவர்களாக அடங்கி ஒடுங்கி தம் தம் புருஷருக்குக் கிரீடமாயிருக்க வேண்டும்.

சாராள் என்ற ஸ்திரீயைப் பற்றி கிறிஸ்தவ பெண்கள் நன்கு அறிந்திருப்பார்கள். இவள் தன் புருஷன் ஆபிரகாமை ஆண்டவன் என்று சொல்லி, அவனுக்குக் கீழ்ப்படிந்திருந்தாள்; நீங்கள் நன்மை செய்து ஒரு ஆபத்துக்கும் பயப்படாதிருந்தீர் களானால் அவளுக்குப் பிள்ளைகளாயிருப்பீர்கள் (1பேது.3:6). பாருங்கள், அவளுடைய நடக்கையைக் கண்ட தேவன் அவளை எவ்வளவாய் கனப்படுத்தியுள்ளார். அவள் விசுவாசிகளின் தாய் எனக் கருதப்படுகிறாள். உலகிலுள்ள அத்தனை விசுவாசிகளுக்கும் அவள் தாய் என்றால் என்னே பெரிய பாக்கியம் பெற்றுள்ளாள்!

அன்பு சகோதரிகளே! கிறிஸ்தவர்கள் கிறிஸ்தவர்களாகவே, கிறிஸ்துவை யுடையவர்களாகவே இருக்கப் பிரயாசப்படுங்கள். நீ, வா என்று பேசுவதும் போடா, வாடா என்று பேசுவதும் உங்கள் புருஷனுக்கு புகழையும், கிரீடத்தையும் கொண்டுவராது. புறஜாதி ஸ்திரீகள் எப்படி எப்படியோ பேசுவார்கள் அதைப் பற்றி நாம் சிந்திக்க வேண்டியதில்லை. அவர்களைப் பின்பற்றவும் கூடாது என வேதம் கூறுகிறது. "புறஜாதிகளுடைய மார்க்கத்தைக் கற்றுக் கொள்ளாதிருங்கள்" (எரே.10:2). பெண்ணாய் பிறந்தவளே, குணசாலியான ஸ்திரீயாகயிருந்து உன்னுடைய புருஷருக்கு கிரீடமாகவும், புகழ்ச்சியாகவும் காணப்பட தேவன் தாமே உதவிசெய்வாராக ஆமென்.



## கேள்விகள்

1. குணசாலியான ஸ்திரீ தன் புருஷனுக்கு எப்படியிருக்கிறாள்?
2. தேவனை தூஷித்து ஜீவனை விடும் என்றவள் யார்?
3. பிசாசினால் வஞ்சிக்கப்பட்டு மீறுதலுக்கு உட்பட்டது யார்?
4. சாராள் ஆபிரகாமை என்னவென்று சொல்லி அவனுக்குக் கீழ்ப்படிந்திருந்தாள்?
5. விசுவாசிகளின் தாய் என்று அழைக்கப்பட்டவள் யார்?

# *பெண்ணாய் பிறந்தவளே – 3*
# Oh! Ye Who Born As A Woman - 3

**4**

அன்பான சகோதரிகளே, உங்கள் யாவருக்கும் என்னுடைய உளமார்ந்த வாழ்த்துதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அநேக கிறிஸ்தவ ஸ்திரீகள் கிறிஸ்துமஸ் விழாவினை குதுகூலத்துடன் கொண்டாடுவார்கள், சிலர் கிறிஸ்துமஸ் விழாவினை கொண்டாட மாட்டார்கள். எதுவாயிருப்பினும் "கிறிஸ்து இயேசு" இவ்வுலகில் பிறந்தது உண்மை. அதுவும் பல நூற்றாண்டுகளுக்கு முன் ஒரு கன்னியின் வயிற்றில் பிறப்பார் என்ற முன்னறிவிப்பின்படியே பிறந்தார். இப்படிக் கூறியதும் முப்பத்து முக்கோடி தெய்வங்களை பலரூபத்தில் வணங்குகிறவர்கள் தாங்கள் வணங்கும் சிலவற்றுடன் இயேசுவின் பிறப்பினையும் ஒப்பிட்டுப் பேச ஆரம்பித்து விடுவர். ஆனால் இயேசு கிறிஸ்துவோ பரிசுத்தமுள்ளவர் தேவனுடைய குமாரன் என்னப்படுபவர். லூக்கா1:35-ல் "தேவதூதன் அவளுக்குப் (மரியாளுக்கு) பிரதியுத்தரமாக பரிசுத்த ஆவி உன்மேல் வரும்; உன்னதமானவருடைய பலம் உன்மேல் நிழலிடும்; ஆதலால் உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது தேவனுடைய குமாரன் என்னப்படும்" என்ற முன்னறிவிப்பின்படி பிறந்தார். இது ஒரு கட்டுக்கதையல்ல. இது வரலாற்று பூர்வமான உண்மையாகும்.

தேவனுடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்து இவ்வுலகில் பிறந்ததின் நோக்கமென்ன? கிறிஸ்மஸ் பண்டிகையினை கொண்டாடி புத்தாடை அணிந்து மகிழுந்து களிகூர்ந்து, ஏதோ சில நன்மைகளை சிலருக்கு செய்து திருப்தியடைகின்ற அன்பு சகோதரிகளே, நீங்கள் என்றாவது ஒரு நாள் இயேசுகிறிஸ்து இவ்வுலகில் பிறந்ததின் நோக்கத்தை சிந்தித்து பார்த்ததுண்டா? அவரது பிறப்பு ஓர் நற்செய்தி என்பதை சிந்தித்ததுண்டா? "தேவதூதன் அவர்களை (மேய்ப்பர்களை) நோக்கி: பயப்படாதிருங்கள்; இதோ, **எல்லா ஜனத்துக்கும்** (உலகிலுள்ள அனைவருக்கும்) மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் **இரட்சகர்** உங்களுக்குத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார்" (லூக். 2:11). எதற்காக பிறந்தார்? உலகிலுள்ள எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை நாம் பெற்று அனுபவிக்கும்படி பிறந்தார். இந்த சந்தோஷம் நித்தியமானது. அநித்தியமான சந்தோஷத்தைத் தேடி அலையும் ஜனங்களுக்கு மிகுந்த சந்தோஷத்தை கொடுக்கும் இயேசுவின் பிறப்பைப் பற்றி நாம் கூற வேண்டாமா?

அதுமாத்திரமல்ல அவரது பிறப்பு "உன்னதத்திலிருக்கிற **தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர்மேல் பிரியமும்** உண்டாவதாக என்று சொல்லி தேவனைத் துதித்தார்கள்" (லூக். 2:14). இவ்வாறு துதித்தவர்கள் யார்? பரமசேனையின் திரள் அந்த தூதனுடனே தோன்றி துதித்தார்கள். என்ன அற்புதம்!



எனக்கன்பான சகோதரிகளே, இதையறியாது என் வீட்டில் சந்தோஷம் இல்லை, சமாதானம் இல்லை, குடும்பத்தில் பிள்ளைகள் கீழ்ப்படிவதில்லை மிகுந்த வேதனையுடன் காலத்தைக் கழிக்கிறேன் என்று கண்ணீர் விட்டுக் கொண்டிருக்கிறீர்களா? இந்த கண்ணீர் வாழ்வுக்குக் காரணம் பெண்களாகிய நாமே! கிறிஸ்துவின் பிறப்பு எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தைக் கொடுக்கும் நற்செய்தி! அப்படியானால் இப்பெருமான் உன் உள்ளத்தில் பிறக்கவேண்டும். இன்றும் இயேசுவை ஒரு குழந்தையாகவே பார்த்துக் கொண்டு அவரது பிறப்பின் நோக்கம் அறியாமல் இருப்பாயானால் நீ உள்ளான சந்தோஷத்தைப் பெறமுடியாது.

மேலும் பரம சேனையின் தூதர்கள் அவரது பிறப்பினிமித்தம் "உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர் மேல் பிரியமும் உண்டாவதாக என்று சொல்லி தேவனைத் துதித்தார்கள்" என்ற வேதவாக்கியத்தை வாசித்தோம் இது எப்பேர்பட்ட ஆசீர்வாதம்! பூமியிலே சமாதானம் என்றால் என்ன? பூமியிலே வாழும் நமக்குள் சமாதானம் இருக்கவேண்டும். மனுஷர்மேல் பிரியம் வைக்கும்படி அவர் பிறந்தார். அப்படியானால் நம்மேல் தேவன் பிரியம் வைக்கச் சித்தமாயிருக்கும் போது நாம் ஏன் கவலைப்படவேண்டும். தேவன் நம்மேல் பிரியம் கொள்ள விரும்பும்போது நீங்கள் உலகம் மற்றும் மாம்சகாரியங்கள் மேல் பிரியம் கொள்ள விரும்பினால் நிச்சயம் தேவன் கொடுக்கும் சமாதானத்தை பெறமுடியாது. தேவன் மனுஷனை எவ்வளவாய் நேசிக்கிறார்! தேவனுக்கு மகிமையை செலுத்துவோம்.

இன்னும் அவரது பிறப்பினை தியானிப்போமென்றால், "...இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள்; அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவார்கள் என்று சொன்னான். இம்மானுவேல் என்பதற்குத் தேவன் நம்மோடிருக்கிறார் என்று அர்த்தமாம்" (மத்.1:23). தேவன் நம்மோடிருக்கும்போது கவலை, பிரச்சனை, வேதனை, இன்னும் பல்வேறு தேவனுக்குப் பிரியமில்லாத காரியங்களைக் கொண்டுவருகிற பிசாசுக்கு நம்மிடத்தில் என்ன வேலை! பிசாசு இயேசு கிறிஸ்துவை நோக்கி "நீர் சாஷ்டாங்கமாய் விழுந்து என்னைப் பணிந்துகொண்டால், இவைகளையெல்லாம் உமக்குத் தருவேன் என்று சொன்னான்" (மத்.4:9) "அப்பொழுது இயேசு: அப்பாலே போ சாத்தானே; உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்துகொண்டு அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக என்று எழுதியிருக்கிறதே என்றார். அப்பொழுது பிசாசானவன் அவரை விட்டு விலகிப் போனான்" (மத்.4:10). இப்படி தேவன் நம்மோடிருக்கும் போது அவரது வசனத்தைக் கொண்டு நாமும் பிசாசை ஜெயிக்கலாம். பிசாசை வணங்குகிறவர்கள் இவ்வசனத்தின்படி இவ்வுலக ஆசீர்வாதங்களால் செழித்துக் காணப்படுகிறார்கள். பொதுவாக இன்றும்கூட உலகப்பொருட்களைப் பார்த்து பெண்கள் மயங்கி அதை வாங்க வேண்டும், இதை வாங்க வேண்டும், இந்தப்பொருளை வாங்கினால் வெவ்வேறு இலவசங்கள் கிடைக்கிறது என்று தங்கள் நிலைமையை மறந்து பிசாசுக்கு இடங்கொடுத்து வீட்டில் பிரச்சனையை கொண்டுவருகின்றனர். அன்பு சகோதரியே பிசாசுக்கு இடங்கொடாதிருங்கள்.

இயேசு கிறிஸ்துவின் பிறப்பு இன்னொரு மாபெரும் நற்செய்தியைக் கொண்டுவருகிறது. "...கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்குத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார்" (லூக்.2;11) ஆம். இயேசு கிறிஸ்து ஜனங்களை பாவங்களிலிருந்து இரட்சிக்கும் இரட்சகராக பிறந்தவர். இந்த இரட்சகர் உலகத்திற்கு வரவில்லை என்றால் எல்லா ஜனங்களுக்கும் பாவத்திலிருந்து விடுதலையே கிடைத்திருக்காது. உண்மையிலேயே அவர் இம்மைக்குரிய ஆசீர்வாதத்தை மட்டும் கொடுக்க இவ்வுலகத்திற்கு வரவில்லை. ஆத்துமா இரட்சிக்கப்பட வேண்டும், அது பாவத்தினின்றும் அழிவினின்றும் காக்கப்பட்டு என்றென்றும் இயேசுவோடுகூட பரலோகத்தின் சந்தோஷத்தைப் பெறவேண்டுமென்று இயேசு நமக்காக இரட்சகராகப் பிறந்தார். அவருடைய பிறப்பின் மகத்துவத்தை அறியாமல் உலக ஜனங்களைப்போல உண்ணவும், உடுக்கவும், களியாட்டுகளில் ஈடுபட்டு அவர்களுக்கும் நமக்கும் வித்தியாசமில்லாமல் வாழக்கூடாது. நாம் பிரித்தெடுக்கப்பட்ட சந்ததியாயிருக்கிறோம் என வேதம் கூறுகிறது. பிரித்தெடுக்கப்பட்ட சந்ததியாகிய நாம் இருக்கவேண்டிய இடத்தில் இருக்கவேண்டும். சங்கீதம் 1:1-2 "துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமலும், பாவிகளுடைய வழியில் நில்லாமலும், பரியாசக்காரர் உட்காரும் இடத்தில் உட்காராமலும், கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்" எனக் காண்கிறோம். அவ்விதமாக நடந்து உங்களை துன்மார்க்கத்திற்கு விலகிக் காத்துக்கொள்ளுங்கள்.

மேலும், பரமசேனையின் திரள் அந்தத் தூதனுடனே தோன்றி; உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர் மேல் பிரியமும் உண்டாவதாக என்று சொல்லி, தேவனைத் துதித்தது போல நாமும் துதிப்போமாக! கிறிஸ்து இயேசுவின் பிறப்பின் நற்செய்தி உலகிற்கு கிடைத்த மாபெரும் நற்செய்தி. பாவிகளை இரட்சிக்க பிறந்த இயேசுவின் பிறப்பின் செய்தியையும் நாமும் சொல்லியாகவேண்டும்.

நீங்கள் 'நான் இந்த பூமியில் பிறந்தது முதல் ஒரு பாவமும் செய்யவில்லை' என்று கூறமுடியுமா? சற்று சிந்தித்துப் பாருங்கள். என்னுடன் பணிபுரியும் ஒரு பெண், நானும் என் கணவரும், என் பிள்ளைகளும் ஒரு பாவமும் இதுவரை செய்யவில்லை என்று சற்றும் சிந்திக்காமல் கூறினாள். நான் அந்தப் பெண்ணை குறித்து மிகவும் பரிதாபப்பட்டேன். "நமக்குள் பாவம் இல்லையென்போமானால் நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாக இருப்போம். சத்தியம் நமக்குள் இராது" என 1யோவான் 1:9-ல் வேதம் நமக்குப்போதிக்கிறது.

மேலும், வேதாகமம் "நீதிமான் ஒருவாகிலும் இல்லை; உணர்வுள்ளவன் இல்லை தேவனைத் தேடுகிறவன் இல்லை" (ரோம.2:10,11) மேலும், "எல்லாரும் பாவஞ்செய்து, தேவமகிமையற்றவர்களாகி.." (ரோம3:23) என்று கூறுகிறது. அப்படியிருக்க நாம் நம்மை நாமே நீதிமான் என்றும், பாவஞ்செய்யாதவர்கள் என்றும் கூறி காலத்தை கழித்தோமானால் உண்மையிலே நாம் முடிவில் மிகவும் பரிதபிக்கப்படத்தக்கவர்களாவோம்.



இப்படியிருக்க நம்மேல் இரக்கம் கொண்டு, தம்முடைய இரத்தத்தைச் சிந்தி, நம்மை பாவமற கழுவி நீதிமானாக்கியிருக்கிறார் உலக இரட்சகராகிய இயேசு கிறிஸ்து. ஆனால் "உலகமோ அவரை அறியவில்லை" (யோவா.1:10). இதை வாசிக்கிற பெண்களாகிய நீங்கள் அவரை அறிந்திருக்கிறீர்களா? அல்லது அந்த இயேசு கிறிஸ்து எங்களுக்குத் தேவையில்லை என்று அவரை ஒதுக்கித் தள்ளிவிட்டீர்களா? எது எப்படியிருப்பினும் நான் உங்களை அன்பாய் கேட்டுக்கொள்வது "இயேசுகிறிஸ்து உங்களுக்கு நிச்சயமாக தேவை"என்பதே. ஏனென்றால், "...இயேசு: நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" என்று யோவான் 14:1-ல் கூறியுள்ளார். நாம் பிதா வாசமாயிருக்கும் பரலோகத்திற்குச் செல்லவேண்டுமானால் அதற்கு இயேசுவே வழி, சத்தியம், ஜீவனுமாயிருக்கிறார் என்பதை விசுவாசிக்க வேண்டும். காலம் செல்லாது. இது கடைசி காலம். உங்களை நீங்களே வஞ்சித்துக் கொள்ளாதீர்கள். இது ஒரு மதமாற்ற செய்தியல்ல, உண்மை மார்க்கப்போதனையாக இருக்கிறது. அநேகர், ஏதோ 'ஒரு சக்தி' உள்ளது, அதை நம்பி நான் அந்த சக்தியை வணங்குகிறேன் என அடம்பிடிக்கின்றனர். தற்போது 'யோகா' பயிற்சியில் எனக்கு அமைதி கிடைக்கிறது என்கின்றனர். வேதாகமம், "சரீர முயற்சி அற்பபிரயோஜனமுள்ளது; தேவபக்தியானது இந்த ஜீவனுக்கும் இதற்குப் பின்வரும் ஜீவனுக்கும் வாக்குத்தத்தமுள்ளதாகையால் எல்லவற்றிலும் பிரயோஜனமுள்ளது" (1தீமோ.4:8) என்று கூறுகிறது.

பிதாவானவர் நம்மேல் அளவுக்கதிகமான அன்பு வைத்துள்ளார். இந்த பூமியிலிருக்கிற "ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்" (2பேது.3:9). கிறிஸ்துவின் இரண்டாம் வருகை அதிசீக்கிரத்தில் இருக்கிறது. "...மெய்யாகவே நான் சீக்கிரமாய் வருகிறேன் என்றார்"... (வெளி.22:20). ஆனபடியினாலே பிதாவானவர் தாமே நம்மெல்லோரும் தம்முடைய சொந்த பிள்ளைகளாகும்படி "தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படியே, நம்மை இயேசுகிறிஸ்து மூலமாய்த் தமக்குச் சுவிகாரபுத்திரராகும்படி முன் குறித்திருக்கிறார். அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது" (எபே.1:6,7).

ஆம், சகோதரியே உங்களுடைய ஜீவன் தப்ப வேண்டுமானால் பிதாவையும், இயேசுவையும், அவருடைய ஆவியானவரையும் விசுவாசித்து அவருடைய பிள்ளையாக மாற உங்களை ஒப்புக்கொடுங்கள். இன்னும் கண் கண்டதெல்லாம் தெய்வமென்றும், பல மனிதர்களை தெய்வமாகவும், மனது எண்ணியதெல்லாம் தெய்வமென்றும் கருதி வஞ்சிக்கப்பட்டு போய்விடாதீர்கள். புதிய ஏற்பாட்டு புத்தகத்தில் இயேசுவினிடத்தில் சுகத்தையும் ஆசீர்வாதங்களையும் பாவமன்னிப்பையும் பெற்றுக்கொண்ட ஸ்திரீகள் அநேகர். அவர்களில் "ஒரு பாவியாகிய ஸ்திரீ இயேசுவின் பாதங்களின் அருகே பின்னாக நின்று அழுது கொண்டு, அவருடைய பாதங்களைத் தன் கண்ணீரினால் நனைத்து, தன் தலைமயிரினால் துடைத்து, அவருடைய பாதங்களை முத்தஞ்செய்து, பரிமளதைலத்தைப் பூசினாள். ...அதுவும் இயேசுவின்

பாதங்களை ஓயாமல் முத்தஞ்செய்து தன் தலைமயிரினால் துடைத்தாள்" (லூக்.7:38-46). இதைக் கண்ட இயேசு அவள் மிகவும் அன்பு கூர்ந்தாளே என்று சொல்லி "அவளை நோக்கி: உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டது என்றார்" (லூக்.7:48). அன்பு சகோதரியே இயேசுவினிடத்தில் அன்புகூருவாயா? அவர் உன் பாவங்களை மன்னிக்க காத்திருக்கிறார்.

அன்பானவர்களே, இயேசு மரித்துவிட்டார், பிறகு அவர் உயிர்த்தெழுந்தார் என்ற கூற்றை என்னால் நம்ப முடியவில்லை என்கிறாயா? இப்போது ஜீவிக்கிற நாம் காந்தியடிகள் பற்றியும், நேரு போன்றவர்கள் பற்றியும் பாடப்புத்தகத்தில் படித்து இவர்களெல்லாரும் சுதந்திரத்திற்காகப் பாடுபாட்டார்கள் என்று அவர்களைப் பார்க்காமலே நம்புகிறோம். இவர்களுடைய சமாதிகள் இன்றும் டில்லியில் உள்ளது வருடந்தோறும் இவர்களை கனம் பண்ணும்படி மாலைகளை போய் வைக்கிறார்கள். ஆனால் இங்கு மாற்கு 16:1-6-ல் படிக்கும்போது "...சிலுவையில் அறையப்பட்ட நசரேயனாகிய இயேசுவைத் தேடுகிறீர்கள்; அவர் உயிர்த்தெழுந்தார்; அவர் இங்கேயில்லை; இதோ, அவரை வைத்த இடம்" மேலும், "...உயிரோடிருக்கிறவரை நீங்கள் மரித்தோரிடத்தில் தேடுகிறதென்ன?" (லூக்.24: 5) என வேதாகமத்தில் வாசிக்கிறோம். பாடப்புத்தகத்தில் வாசிப்பதை நம்புகிற நீங்கள் பரிசுத்த வேதாகமத்தில் சொல்லப்பட்டதை ஏன் நம்பக்கூடாது? பரிசுத்த வேதாகமம் ஒரு பாடபுத்தகத்தை காட்டிலும் மேலானது. அது இறைவனுடைய வார்த்தைகள் அடங்கிய வேதபுத்தகம். அதிலுள்ள ஒவ்வொரு எழுத்தும், எழுத்தின் உறுப்பும் ஜீவனாயும் ஆவியாயும் இருக்கிறது.

எனவே அன்பு சகோதரியே, நீ யாரானாலும் சரி, ‘உனக்கு நிச்சயம் இயேசு தேவை’ அவராலன்றி ஒருவராலும் உனக்கு மீட்பு கிடைக்காது. வீணாக நித்திய வாழ்வையும் இழந்து விடாதே. உன்னுடைய புத்தக அறிவு உன் ஆவிக்குரிய கண்களை மறைக்காதபடிக்கும், ஆவிக்குரிய அறிவைப் பெறாதபடிக்கும் தடைசெய்யாமலிருக்க ஜெபிக்கிறேன். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

### கேள்விகள்

1. பூமியிலே சமாதானமும் மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக என்று சொல்லி துதித்தவர்கள் யார்?
2. எல்லாரும் பாவம் செய்து என்ன ஆனார்கள் என்று வேதம் கூறுகிறது?
3. சரீர முயற்சி எப்படிப்பட்டது? எது எல்லாவற்றிலும் பிரயோஜனமுள்ளது?
4. மெய்யாகவே நான் சீக்கிரமாய் வருகிறேன் என்று சொன்னவர் யார்?
5. கர்த்தர் ஏன் நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்?



## தேடுங்கள்
## Seek
## 5

**இ**ன்றைய நாட்களில் ஜனங்கள் எதை எதையோ நாடித் தேடுகிறார்கள். சிலர் நல்ல உத்தியோகத்தை தேடுகிறார்கள், சிலர் பட்டங்கள், பதவிகளை நாடுகின்றனர். சிலர் தங்கள் குழந்தைகளுக்கு நல்ல வரன்களைத் தேடுகின்றனர். சிலர் ஓயாது காலை முதல் மாலை வரை உணவுக்காகவும், உடைக் காகவும் அலைந்து திரின்றனர். சிலர் உலக சம்பத்தைத் தேடுகிறார்கள். சிலர் சமுதாயத்தில் ஒரு பெரிய ஆளாக மாறவேண்டுமென உலக மேன்மையை நாடுகின்றனர். இப்படி அழிந்து போகின்றவைகளையே தேடிக்கொண்டிருக்கிறவர்களைப் பார்த்து வேதம் உலகத்தார் என்றும், அஞ்ஞானிகள் என்றும் இழித்துரைக்கிறது.

அன்பு சகோதரிகளே, “...இவைகளெல்லாம் உங்களுக்கு வேண்டியவைகள் என்று உங்கள் பரமபிதா அறிந்திருக்கிறார்” (மத்.6:32). “ஆகையால் நாளைக்காகக் கவலைப்படாதிருங்கள்; நாளையத்தினம் தன்னுடையவைகளுக்காகக் கவலைப்படும் அந்தந்த நாளுக்கு அதினதின் பாடு போதும்” (மத்.6:34). அநேகர் இரட்சிக்கப்பட்டும், பரம ஈவை ருசி பார்த்தும் இன்னும் உலத்தாரைப் போலவும், அஞ்ஞானிகளைப் போலவும் இப்படிப்பட்டவைகளையே நாடித்தேடுகிறார்கள். தேவன் “தம்முடைய சொந்தக் குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர், அவரோடே கூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்ப தெப்படி?” (ரோம.8:32).

**கர்த்தரைத் தேடுங்கள்:**

“உன் தேவனாகிய கர்த்தரைத் தேடு...” (உபா.4:29) என வேதம் கூறுகிறது. உங்களை உண்டாக்கி அனுதினமும் உங்களைக் காத்துவருகிற கர்த்தரைத் தேடுங்கள். முழு இருதயத்தோடும் முழு ஆத்துமாவோடும் கர்த்தரைத் தேடுங்கள். அவரே உங்கள் இரட்சகர், அவரே உங்களை சிருஷ்டித்தவர், அவரே உங்களைக் காண்கிறவர், அவரே உங்களை சகல தீமையினின்றும் விடுவிக்கிறவர். அவரே உண்மையுள்ளவர், அவரே உயிருள்ளவர், அவரே நித்திய பிதா. ஆகவே அவரையே தேடுங்கள். வீணானவைகளை நாடித்தேடி ஏமாந்து போகாதீர்கள். மேலும் “கர்த்தரைக் கண்டடையத்தக்க சமயத்தில் அவரைத் தேடுங்கள்;” (ஏசா.55:6). அதிகாலையில் என்னைத் தேடுகிறவர்கள் என்னைக் கண்டடைவார்கள்” (நீதி.8:17) என வேதம் கூறுகிறது. ஆம், நம்முடைய அனுதின பாடுகளில் தேவன் நம்மோடிருக்கும்படிக்கும், நம்முடைய காரியங்கள் யாவும் கைகூடி வரும்படிக்கும் நாம் சோதனைக்குட்படாதபடிக்கும் அதிகாலையிலே கர்த்தரைத் தேடுவோம். தேவ ஆசீர் பெறுவோம்.

**கர்த்தருடைய முகத்தைத் தேடுங்கள்:**

கர்த்தர் நமக்கு க்ஷேமத்தைக் கொடுக்கும்படிக்கு அவருடைய முகத்தைத்

தேடுங்கள் என்று 2நாளா.7:14 கூறுகிறது. நாம் க்ஷேமத்துடனிருப்பது தேவசித்தம். ஆனால் அநேகர் க்ஷேமம் அடையும்படி அவருடைய முகத்தைத் தேட மறந்து விடுகின்றனர். மனுஷருடைய தயவையே நாடி ஓடுகின்றனர். ஜெபிக்க நேரமில்லையென்று கூறி கர்த்தருடைய முகத்தைத் தேடாமல் இரவெல்லாம் தங்களுடைய விருப்பத்தையே நிறைவேற்றும்படி திட்டமிட்டு அதிகாலையில் அதே நினைப்போடு எழுந்து உலகத்தாரைப் போல அழிந்து போகின்றவற்றையே தேடிச் செல்லுகின்றனர். காரியம் வாய்க்காமல் திரும்புகின்றனர் அல்லது காரியம் வாய்த்தாலும் அது அதிசீக்கிரத்தில் அழிந்து போகக் கூடிய அநித்தியமானவை என்பதை மறந்து முடிவிலே ஏமாற்றமடைகின்றனர். தாவீது ராஜா பாடும்போது; "அவர்கள் அவரை நோக்கிப் பார்த்து பிரகாசமடைந்தார்கள். அவர்கள் முகங்கள் வெட்கப்படவில்லை" (சங்.34:5) என்று பாடுகிறான். நாமும் கர்த்தருடைய முகத்தை நோக்கிப்பார்த்து பிரகாசமடைவோமாக!

**தேவனுடைய ராஜ்யத்தைத் தேடுங்கள்:**

“தேவனுடைய ராஜ்யத்தையே தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்” (லூக்.12:31) என வேதம் கூறுகிறது. மத்.6:32-ம் கூட “முதலாவது தேவனுடைய ராஜ்யத்தை...... தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்” என்கிறது. இங்கு தேவனுடைய ராஜ்யத்தை மட்டும் தேடுங்கள், அதை முதலாவது தேடுங்கள் என்று அறிவுறுத்திக் கூறப்படுவதை சற்று சிந்திக்கவேண்டும். அஞ்ஞானிகளைப் போல உலகக்காரியங்களையே நாடித்தேடுவதை தேவன் விரும்புகிறதில்லை. தம்முடைய பிள்ளைகள் தம்முடைய வார்த்தைகளை விசுவாசித்து தம்முடைய ராஜ்யத்தையே தேடும்படி விரும்புகிறார். அவருடைய விருப்பத்தின்படி செய்யும் போது நமக்கு வேண்டியவைகள் எல்லாவற்றையும் அவர் அருளிச்செய்வார். அன்பு சகோதரியே, இன்னும் உலகம் உலகம் என்று உலகத்தையே நாடி முடிவிலே கவலைப்பட்டு கலங்குவதை நிறுத்துங்கள். தம்முடைய சொந்தகுமாரனையே ஒப்புக்கொடுத்து உங்களை அழைத்தவர் உண்மையுள்ளவர். அன்று இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்தில் அடிமைப்பட்டு அடிமைத்தனத்தினால் தவித்து முறையிட்டுக் கொண்டிருந்தார்கள். தேவன் அவர்கள் பெருமூச்சைக் கேட்டு அவர்களை நினைத்தருளி அடிமைத்தனத்திலிருந்து விடுவித்தார். அவர்களைப் பாலும் தேனும் ஓடுகிற தேசத்திற்குக் கொண்டுபோவேன் என்று சொல்லி அழைத்தார். அழைத்தவர் அவர்களை நாற்பது வருடங்களாகப் போஷித்து குறைவின்றி வழிநடத்திச் சென்றார். அதன்பின் தாம் வாக்களித்த வண்ணம் தம்மை விசுவாசித்தவர்களை பாலும் தேனும் ஓடுகிற கானான் தேசத்திற்குள் கொண்டுபோய் சேர்த்தார்.

ஆம், உங்களை அழைத்தவரும் அவரே! அவர் உங்களைப் பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்து பரம கானானாகிய பரலோகத்திற்குக் கொண்டு செல்லும்படி அவருடைய ராஜ்யத்தையே தேடுங்கள் என்கிறார். முதலாவது தேவனுடைய ராஜ்யத்தைத் தேடுங்கள். சபையாகிய இந்த ராஜ்யத்தைத் தேடும்போது நீங்கள் போஷிக்கப்படுவீர்கள். குறைவின்றி நடத்திச்செல்லப்படுவீர்கள். ஏனெனில்



கர்த்தர் சபையைப் போஷித்துக் காப்பாற்றுகிறார் (எபே.5:29). சபையாகிய ராஜ்யத்தைக் குறித்த வைராக்கியம் உங்களுக்குள் இருக்கட்டும். சபையை அலட்சியம் செய்யாதீர்கள். விசுவாசத்தில் நிலைத்திருக்கிறவர்கள் மட்டுமே பரம கானானுக்குள் சேர்க்கப்படுவர்.

**கர்த்தரைத் தேட இதுவே காலம்:**

“......கர்த்தர் வந்து உங்கள் மேல் நீதியை வருஷிக்கப்பண்ணும் மட்டும், அவரைத் தேடக்காலமாயிருக்கிறது” (ஓசி.10:12) என வேதம் கூறுகிறது. கர்த்தர் உங்கள் பிரயாசங்களுக்கேற்ற, பலனை வருஷிக்கப்பண்ணும் வரைக்கும் அவரைத்தேடக்காலமாயிருக்கிறது. ஆம், காலம் சமீபித்து வருகிறபடியால் இதுவே அவரை தேட வேண்டிய சமயமாயிருக்கிறது. அன்பு சகோதரியே, நீ ஒருவேளை கர்த்தராகிய உன் சிருஷ்டிகரைத் தேடாமலிருக்கலாம். தாமதிக்காதே. “.....இப்பொழுதே அநுக்கிரககாலம், இப்பொழுதே இரட்சணிய நாள்”. எனவே இன்றே அவரைத் தேட வேண்டிய காலமாயிருக்கிறது. இன்று அவரைத் தேட தாமதிப்பாயானால் இம்மையிலும் மறுமையிலும் அநேக ஆசீர்வாதங்களை இழந்து போவாய். கர்த்தர் வந்து உங்கள் மீது நீதியை வருஷிக்கப் பண்ணுமட்டும் அவரைத் தேட காலமாயிருக்கிறது.

அன்பு சகோதரிகளே, தேடுங்கள் அப்பொழுது உங்களுக்குத் தேவையானவைகள் எல்லாம் கூடக் கொடுக்கப்படும். உலகத்தாரைப் போல அல்ல. ராஜ்யத்தின் பிள்ளைகளாய் விசுவாசத்துடன் “...தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்...” (மத்.7:7). “என்னைத் (கர்த்தரைத்) தேடுங்கள் அப்பொழுது பிழைப்பீர்கள்” (ஆமோ.5:4) என்று கர்த்தர் சொல்லுகிறார். ஆகவே கர்த்தருடைய ஆசீர்வாதங்களைக் கண்டடையும்படிக்கும், நீங்கள் பிழைத்திருக்கும்படிக்கும் கர்த்தரைத் தேடுங்கள், கர்த்தருடைய முகத்தைத் தேடுங்கள், தேவனுடைய ராஜ்யத்தையே தேடுங்கள், கர்த்தரைத் தேடக் காலமாயிருக்கிறபடியால் இன்றே தேடுங்கள்.

## கேள்விகள்

1. நம் தேவனாகிய கர்த்தரை எவ்விதமாக தேடவேண்டும்?
2. அவர்கள் யாரை நோக்கிப்பார்த்து பிரகாசம் அடைந்தார்கள்?
3. முதலாவது எதைத்தேடும்போது இவைகள் எல்லாம் நமக்குக்கூடக் கொடுக்கப்படும்?
4. கர்த்தர் சபையை எவ்வாறு காப்பாற்றுகிறார்?
5. எது மட்டும் கர்த்தரை தேட காலமாயிருக்கிறது?

# <u>இயேசுவைப் பின்பற்றுங்கள்</u>

## Follow Jesus

**6**

அன்பான சகோதரிகளே, இயேசு கிறிஸ்துவை பின்பற்றுங்கள் என்று உங்களை அன்பாய் வேண்டிக்கொள்ளுகிறேன். இன்றைய நாட்களில் எங்கு பார்த்தாலும் பிரச்சனைகள், வேதனைகள், துக்கங்கள், சமாதானமின்மை போன்ற பல காரியங்கள் ஜனங்களை அமுத்திக் கொண்டிருக்கின்றன. குறிப்பாக பலவீனப் பாண்டமாகிய ஸ்திரீகளோ அநேக பாரங்களையும் துக்கங்களையும் சுமக்கிறவர்களாகவே காலத்தைக் கழிக்கின்றனர். ஆனால் இயேசுவின் பிறப்பு துவங்கி மரணம் வரை சந்தோஷமும் சமாதானமும் உலகத்திற்குரிய நற்செய்தியாக இருக்கிறது. எனவே தான் இயேசுவைப் பின்பற்றும்படி உங்களை அழைக்கிறேன்.

உலகம் இயேசுவை புறக்கணிக்கிறது. இயேசுவின் பிறப்பின் செய்தியை தேவதூதன் கூறினபோது; "...பயப்படாதிருங்கள்; இதோ, எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்குத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார்" (லூக்.2;10,11) என்றான். மேலும் "உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக என்று சொல்லி, தேவனைத் துதித்தார்கள்" (லூக்.2:14) என வாசிக்கிறோம். இயேசுவின் பிறப்பு ஒரு குறிப்பிட்ட தேசத்தாருக்கோ, ஜனத்தாருக்கோ சந்தோஷத்தையும் சமாதானத்தையும் கொண்டுவரவில்லை. இது எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தி அத்தோடு பூமியிலே சமாதானமும் எல்லா மனுஷர் மேலும் பிரியமும் உண்டாக்கும் நற்செய்தி ஆகும். இயேசுவை விசுவாசித்து அவரைப் பின்பற்றும் அனைவருமே இந்த ஆசீர்வாத்தை அளவில்லாமல் பெற்றுக் கொள்ளமுடியும்.

நாங்கள் பரம்பரை கிறிஸ்தவர்கள், அவரைத்தானே பின்பற்றுகிறோம் என்று நீங்கள் கூறலாம். நல்லது. ஆனால் இயேசு நம்மிடம் எதிர்பார்க்கிற வண்ணமாக நாம் அவரைப் பின்பற்ற வேண்டும். ஏனோ தானோவென்று கிறிஸ்தவர்கள் என்ற பெயரைத் தரித்துக் கொண்டிருப்பதும், தவறான சபைக்குச் செல்வதும், வேதம் வாசிப்பதும், ஜெபிப்பதும் மட்டுமே அவரைப் பின்பற்றும் செயலாகாது. வேதம் கூறுகிறது; "பின்பு அவர் (இயேசு) ஜனங்களையும் தம்முடைய சீஷர்களையும் தம்மிடத்தில் அழைத்து: ஒருவன் என் பின்னே வரவிரும்பினால் அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு, என்னைப் பின்பற்றக்கடவன்" (மாற்கு8:34) என்று இயேசு சொன்னார். நம்மை நாமே வெறுத்து, நம்முடைய பாடுகளை எடுத்துக் கொண்டு அவரைப் பின்பற்ற வேண்டும் என்றுதானே பொருள். இதை அறியாத அநேக சகோதரிகள் ஆசீர்வாதங்களை மட்டுமே விரும்பி, சோதனை வரும்போது சோர்ந்து போகின்றனர். நாம் இன்னும் பாலை உண்ணும் குழந்தைகளைப் போல இருக்கவேண்டாம்.



**முதலாவது** நம்மை நாமே வெறுக்கக் கற்றுக்கொள்வோம். அப்படியென்றால் நம்மையே நாம் வெறுத்து இப்பூமியில் நாம் ஏன் வாழ்கிறோம் என்று சலித்துக் கொண்டு வாழ்வதல்ல. ஸ்திரீகளாகிய நாம் சதா இவ்வுலகத்தையும் அதின் இச்சையையும் அடைய விரும்புவோமானால் நம்மால் நமக்காக தன் ஜீவனையே கொடுத்த இயேசுவைப் பின்பற்ற முடியாது. நம்முடைய சுயநலத்துக்காக நாமும் நம்முடைய குடும்பமும் மாத்திரம் நன்றாக சுகித்து வாழவேண்டும் அல்லது பார்வைக்கு பக்தியாய் வாழ்தல் போன்ற இவ்வுலகத்திலுள்ளவைகளில் அன்பு கூருவோமானால் பிதாவின் அன்பினை நாம் இழந்துவிடுவோம். "ஏனெனில், மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவைகளெல்லாம் பிதாவினாலுண்டானவைகளல்ல, அவைகள் உலகத்தினால் உண்டானவைகள்' என்று 1யோவா.2:11ல் எழுதப்பட்டுள்ளது. எனவே இப்பேர்பட்ட காரியங்களை வெறுப்பதே நம்மை நாமே வெறுப்பதாகும். இப்படிச் செய்யும்போது தனக்கானவைகளையல்ல, பிறருக்கானவைகளை நோக்கினவர்களாய் வாழமுடியும் (பிலி.2:4). இதில் தேவன் பிரியப்படுவார்.

**இரண்டாவதாக,** தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன் என்று மாற்கு 8:34ல் வாசிக்கிறோம். தன் சிலுவை என்பது என்னவென்று நாம் அறிவோம். இவ்வுலகில் நமக்கு வருகிறதான கஷ்டங்கள், போராட்டங்கள், பாடுகள் போன்றவைகளே நம்முடைய சிலுவையாக இருக்கின்றன. ஒரு கிறிஸ்தவ ஸ்திரீயானவள் நிச்சயமாக சுகபோகமாக வாழமுடியாது. கிறிஸ்தவர்கள் என்றாலே ஆசீர்வாதங்கள் மட்டுமே அவர்களுக்கு இருக்குமென்று சொல்லி பலர் தங்களை வஞ்சித்துக்கொள்கின்றனர். அப்படியானால் சகோதரியே 1தீமோ.5:6ல் "சுகபோகமாய் வாழ்கிறவள் உயிரோடே செத்தவள்" என்று எழுதப்பட்டுள்ளதே! சிந்திப்போம். கிறிஸ்துவும் கூட "...உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன்கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன் என்றார்" (யோவா.16:33). எனவே நமக்கு பாடுகள் உண்டு, நமக்கு வரும் பாடுகளே நம்முடைய சிலுவையாக இருக்கிறபடியால் நாம் தனித்தனியே நமக்கு வைக்கப்பட்டிருக்கிற சிலுவையை எடுத்துக்கொண்டு தான் இயேசுவை பின்பற்ற வேண்டியவர்களாயிருக்கிறோம். ஒருவேளை இது கடினமான உபதேசம், யார் இதைக் கேட்பார்கள் என அநேக சீஷர்கள் சொன்னது போல் (யோவா.6:60) நீங்களும் சொல்லலாம். கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே பரிபூரணமாக வாசமாயிருப்பதாக! கிறிஸ்து உலகத்தை ஜெயித்ததுபோல நாமும் ஜெயிப்போம்.

இச்செய்தி நமக்கு ஆசீர்வாதமாக இல்லையே என்றுகூட நினைக்கலாம். இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலர்கள் கூட எல்லாவற்றையும் விட்டு உம்மைப் பின்பற்றினோமே, எங்களுக்கு என்ன கிடைக்கும் என்றனர். நம்முடைய இயேசுகிறிஸ்து நமக்காக ஒரு ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணும்படி பிதாவிடத்திற்குச் செல்லும் முன், "சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்; உலகம் கொடுக்கிற பிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும்

இருப்பதாக" (யோவா.14:27). என்று சொல்லி தன்னுடைய சமாதானத்தையே விட்டுச் சென்றுள்ளார். இப்படியிருக்க நாம் ஏன் பற்பல காரியங்களைக் குறித்து கலங்க வேண்டும்? சமாதானக்காரணராகிய சமாதான பிரபு இயேசுவை அவர் எதிர்பார்க்கிற வண்ணமாகப் பின்பற்றுவோம். அவரை அறிகிற அறிவிலே மேன்மேலும் வளர்ந்து நம் ஆத்துமாவிலே சுகமாயிருப்போம். சரீரப் பிரகாரமான அல்லது உலகப்பிரகாரமான மாம்சத்தின் கிரியைகளை அழித்து நித்திய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளுவோம். உங்கள் ஆத்துமா வாழ்கிறதுபோல நீங்கள் எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்கும்படி வேண்டிக்கொள்கிறேன். இயேவைப் பின்பற்ற விரும்புகிற உங்கள் அனைவருக்கும் சமாதானம் உண்டாவதாக!

### கேள்விகள்

1. இயேசுவின் பிறப்பின் நற்செய்தி யாருக்கெல்லாம் சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தி?
2. யாருடைய சிலுவையை எடுத்துக்கொண்டு யாரைப் பின்பற்றவேண்டும்?
3. எவைகளெல்லாம் பிதாவினால் உண்டானவைகள் அல்ல?
4. யார் உயிரோடே செத்தவள்?
5. இயேசு கொடுக்கிற சமாதானம் எது கொடுக்கிற பிரகாரமல்ல?



## தேவ அன்பு பூரணப்பட்டிருக்கிறது
## The Love of God Is Perfected

**7**

அன்பு சகோதரிகளே, தேவனுடைய அன்பு பெரியது என்பதை ருசித்ததுண்டா? தேவன் அன்பாகவே இருக்கிறார் எனவே தான் நம்மை நம் பாவங்களிலிருந்து விடுவிக்கும்படி தம்முடைய ஒரே குமாரனையே கொடுத்திருக்கிறார். இதனை அறிந்த நாம் மெய்யாக அவருடைய அன்பு பூரணமானது. இவ்வுலகில் ஒருவராலும் கொடுக்கக் கூடாத அன்பினை நம்மேல் பொழிந்தருளிக் கொண்டே இருக்கிறார், நாம் அல்ல அவரே நம்மிடத்தில் அன்பு கூர்ந்தார் என்பதையெல்லாம் அவ்வப்போது மறந்துவிடுகிறோம். இதற்கெல்லாம் காரணம், நாம் அவருடைய வசனத்தைக் கைக்கொள்ளுகிறதில்லை, அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறதில்லை. நாம் அவருக்குள் இருக்கிறோம், அவரே நம்மை போஷிப்பார், அவரே நம்மை எல்லாவற்றினின்றும் காப்பார், அவரே நம்மை முழுவதும் கவனித்துக் கொள்ளுவார் என்பதையெல்லாம் மறந்து ஒவ்வொரு வாரமும் சபைக்குச் சென்று வசனத்தைக் கேட்டும் பலனற்றவர்களாக போய்விடுகிறோம். இப்பேர்பட்டவர்களைக் குறித்து இயேசு தாமே தம்முடைய உவமையில் இவ்விதமாய் கூறுகிறார். மாற்கு புத்தகம் 4ம் அதிகாரம் வசனங்கள் 18 முதல் 19 முடிய இப்படியாக வாசிக்கிறோம். "வசனத்தைக் கேட்டும், உலகக்கவலைகளும், ஐசுவரியத்தின் மயக்கமும், மற்றவைகளைப்பற்றி உண்டாகிற இச்சைகளும் உட்பிரவேசித்து, வசனத்தை நெருக்கிப்போட, அதினால் பலனற்றுப்போகிறார்கள். இவர்களே, முள்ளுள்ள இடங்களில் விதைக்கப்பட்டவர்கள்". இவ்வசனத்தில் மூன்று காரியங்கள் சொல்லப்பட்டுள்ளது. அவைகளைக் குறித்து தியானிப்போம்.

**உலகக் கவலைகள்:**

வசனத்தைக் கேட்டாலும் உலகக் கவலைகள் நமக்குள் உட்பிரவேசிக்கிறது. இதனால் நம்மில் அநேகர் தேவ அன்பினையே மறந்து விடுகின்றனர். அவருடைய வசனம் கூறுகிறது "நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங் குறித்து... தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்" (பிலி.4:6). ஆனால் நாமோ நம்முடைய கஷ்டங்கள், கவலைகள் மனப்பாரங்கள், மன உளைச்சல்கள் இவற்றையெல்லாம் தேவனுக்குத் தெரியப்படுத்தாமல் நம்முடைய சொந்தங்கள், பந்தங்கள், அண்டை வீட்டார் என நாசியில் சுவாசமுள்ள மனிதர்களிடம் தெரிவித்து விட்டு மென்மேலும் கவலைகளை அதிகப்படுத்திக் கொள்கிறோம். தேவனைத் தவிர எந்த மனுஷனால் உங்கள் கவலைகளைத் தீர்க்கமுடியும்? எல்லாருக்குமே ஏதோ பிரச்சனைகளும், பாடுகளும் நிச்சயமிருக்கும். எந்த மனுஷராலும் உங்களுக்கு ஒன்றும் செய்யமுடியாது. உங்கள் கவலைகளை நீக்கிவிடவும் முடியாது. "மனுஷருடைய உதவி விருதா" என்று வேதம் சொல்லுகிறது. மேலும் வேதம், கவலைப்படுகிறதினால் எவன் தன் சரீரத்தில் ஒரு முழத்தைக் கூட்ட முடியும்? என

கேள்வி எழுப்புகிறது. "கர்த்தர் மேல் உன் பாரத்தை வைத்துவிடு அவர் உன்னை ஆதரிப்பார்" (சங்.55:22) என்ற வசனத்திற்கு ஜீவன் இல்லை என நினைக்கிறீர்களா? ஏன் கவலைப்படவேண்டும்? காரணம், உலகம் உங்களுக்குள் இருக்கிறது. உலகத்தின் காரியங்கள் உங்களுக்குள் இருக்கிறது. உலகத்தையும், உலக ஜனங்களையும் பார்த்து அவர்களைப் போல உங்களையும் மாற்றிக் கொள்ள நினைக்காதீர்கள். "உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம்;.." (1யோவா.2:17). உலகத்தில் யாருடைய அன்பையும் நாம் இழந்து போகலாம். அதினால் எந்த நஷ்டமும் வந்துவிடாது. ஆனால் பிதாவின் அன்பினை இழந்துவிட்டால் நம்மால் அசையக் கூட முடியாது என்று பயத்தோடிருப்போம். "உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்புகூராதிருங்கள்; ஒருவன் உலகத்தில் அன்புகூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை" (1யோவா.2:15).

உங்கள் குடும்பம் கணவன், பிள்ளைகளின் காரியங்கள் குறித்து கவலை கொள்ளும்போதும் தேவனை அறியாத உலகத்தாரைப் போல நம்மை மாற்றவும், வாழவும் நினைக்கும் போதும் தான் இந்த உலகக் கவலைகள் நம்மை நெருக்கும். அப்படி நெருக்கும் போது பலனற்றவர்களாக மாறுகிறோம் உங்களுடைய உலகக் கவலைகளைத் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள். அப்பொழுது உங்களுடைய புத்திக்கு எட்டாத தேவ சமாதானம் உங்கள் இருதயங்களையும் சிந்தைகளையும் நிரப்பும். பயத்தோடே தேவ வசனங்களைக் கைக்கொள்ளுவோம் (பிலி.4:6).

**ஐசுவரியத்தின் மயக்கம்:**

ஐசுவரியத்தின் மயக்கம் பொதுவாக அநேக ஸ்திரீகளிடம் அளவுக்கதிகமாகவே இருக்கிறது. மத்தேயு 19:23 ல் "...இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி: ஐசுவரியவான் பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பது அரிதென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றார். மேலும் பவுல் 1தீமோ.6:9 ல் "ஐசுவரியவான்களாக விரும்புகிறவர்கள் சோதனையிலும் கண்ணியிலும், மனுஷரைக் கேட்டிலும் அழிவிலும் அமிழ்த்துகிற மதிகேடும் சேதமுமான பலவித இச்சைகளிலும் விழுகிறார்கள்" என்கிறார். ஐசுவரியவான் பரலோக ராஜ்யத்தில் அல்லது தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பது அரிதென்று இயேசு சொல்லுகிறார். பொதுவாக பணக்காரர்களுடைய இருதயம் அவர்களுடைய பணத்தின் மேலும் சொத்துக்களின் மேலும் தான் இருக்கும். தேவனுடைய விசுவாசிகளைக் குறித்து வேதம் கூறும்போது, அவர்களை அந்நியரும் பரதேசிகளும் என்றழைக்கிறது (எபி.11:13). நம்மில் யாரும் அந்நியராகவோ, பரதேசிகளாகவோ வாழ விரும்புவதில்லை. சமுதாயத்தில் நல்ல நிலையிலிருக்க வேண்டும், நான்கு பேர் நம்மை அற்பமாக எண்ணிவிடக் கூடாதென்று எண்ணி ஐசுவரியவானாக விரும்புகிறோம். அக்கம் பக்கத்தாரைப் பார்த்து அவர்களைப் போல நாமும் சொந்த பங்களாவில், இருக்க வேண்டும், வாகனம் வாங்கவேண்டும் அதுவும் வீட்டின் முன்பு நிற்கவேண்டும், நன்றாக உடுத்த வேண்டும், அணிகலன்களை ஆடம்பரமாக அணியவேண்டும் மற்றவர்கள் பார்த்து இவர்கள் பெரிய பணக்காரர் போல் தெரிகிறது எனக் கூறவேண்டும், இப்படி பல ஆசைகளை மனதில் வைத்து ஐசுவரியவான்களாக



விரும்புவர். இப்படிப்பட்ட விருப்பம் நம்மில் இருக்குமானால் சோதனையிலும், கண்ணியிலும் அகப்பட்டு, நம்மைக் கேடான சூழ்நிலையிலும், அழிவிலும் அமிழ்த்துகிற மதிகேடான பலவித இச்சைகளில் சிக்குண்டு தவிக்க வைத்துவிடும்.

அன்பானவர்களே, நாளைக்கு நடக்கப்போவது இன்னதென்று நமக்குத் தெரியாது இன்றைய நாட்களில் அநுதினமும் பல்வேறு அழிவுகளைக் காண்கிறோம். வேதாகமத்தில் ஒரு ஐசுவரியவானை பற்றிய உவமையில் அவன் ஆத்துமாவே, உனக்காக அநேகப் பொருள்கள் சேர்த்து வைக்கப்பட்டிருக்கிறது: நீ இளைப்பாறி, புசித்துக் குடித்து, பூரிப்பாயிரு என்று என் ஆத்துமாவோடே சொல்லுவேன் என்று தனக்குள்ளே சிந்தித்துச் சொல்லிக் கொண்டான். தேவனோ, அவனை நோக்கி: மதிகேடனே, உன் ஆத்துமா உன்னிடத்திலிருந்து இந்த இராத்திரியிலே எடுத்துக் கொள்ளப்படும் அப்பொழுது நீ சேகரித்தவைகள் யாருடையதாகும் என்றார் (லூக்.12:16-20). ஐசுவரியவான்களாக வேண்மென விரும்புகிற யாவருக்கும் இதுதான் பதில். பயத்தோடு தேவனுடைய வார்த்தைகளைக் கைக்கொள்ளுவோம், ஐசுவரியத்தின் மயக்கத்திலிருந்து நம்மை விடுவித்துக் கொள்வோம்.

**மற்றவைகளைப் பற்றி உண்டாகிற இச்சைகள்:**

மேலும் ஸ்திரீகளாகிய நமக்குள் பலவிதமான காரியங்களில் இச்சைகள் ஏற்படுகின்றன. இந்த இச்சையானது நமது ஆதித்தாய் ஏவாளிடத்திலிருந்தே துவங்கிவிட்டது. அன்று அவளுக்கு தேவன் விலக்கிய கனியின் மேல் இச்சை இன்றைக்கோ கணக்கில்லாத இச்சைகள். பிசாசு அன்றைய நாளில் ஏவாளிடத்தில் இச்சையைத் தூண்டி தேவனுக்கு விரோதமான காரியத்தைச் செய்யும்படி செய்தானே, அதைப்போல் இன்றும் தேவனுக்குப் பிடிக்காத அநேகக் காரியங்களை இச்சிக்கும்படி நம்மையும் வஞ்சிப்பதில் தீவிரம் காட்டி வருகிறான். வேதம் "பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது; சிலர் அதை இச்சித்து விசுவாசத்தை விட்டு வழுவி அநேக வேதனைகளாலே தங்களை உருவக் குத்திக் கொண்டிருக்கிறார்கள்" (1தீமோ.6:10) என்று கூறுகிறது. என் பிள்ளைகளின் படிப்பு, எதிர்கால வாழ்வு, என பல காரணங்களைச் சுட்டிக்காட்டி பணத்தை சம்பாதிப்பதில் தீவிரம் காட்டுகின்றனர். ஆனால் பிள்ளைகளையோ தேவனுக்கேற்ற விதமாக வளர்க்கவும் அவர்களிடத்திலும் தன் புருஷனிடத்திலும் அன்பு செலுத்தவும் தவறிவிடுகின்றனர் (தீத்.2:4).

கிறிஸ்தவ ஸ்திரீகளாகிய நாம் தேவவசனம் தூஷிக்கப்படாதபடிக்கு நம் குடும்பத்தின் மேல் அக்கரையுள்ளவர்களாயும் அன்புள்ளவர்களாயுமிருப்போம். "உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம்...." (1யோவா.2:17). பண ஆசை என்ற இச்சையிலிருந்து மாத்திரமல்ல "மாம்சத்தின் இச்சை, கண்களின் இச்சையும் ... பிதாவினால் உண்டானவைகளல்ல, அவைகள் உலகத்தினாலுண்டானவைகள் என்று வேதம் கூறுகிறது. இவைகள் அனைத்துமே நிலையற்றவைகள். "உலகத்திலே நாம் ஒன்றும் கொண்டுவந்ததுமில்லை இதிலிருந்து நாம் ஒன்றும் கொண்டுபோவதுமில்லை என்பது நிச்சம்" (1தீமோ.6:7). கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிறவிதமாய் வரும்; அப்பொழுது வானங்கள் மடமட என்று அகன்றுபோம், பூதங்கள் வெந்து உருகிப்போம், பூமியும் அதிலுள்ள கிரியைகளும்

எரிந்து அழிந்துபோம்" (2பேது.3:10) எனவே அவருடைய வசனத்தைக் கைக்கொள்வோம். நம்மிடத்தில் தேவ அன்பு மெய்யாகப் பூரணப்பட்டிருக்கும் (1யோவா.2:5).

அன்பு சகோதரிகளே, தேவன் அன்பாக இருக்கிறார் என்று சொல்லுகிறோமே தவிர, அதனை நம்முடைய தனிப்பட்ட வாழ்வில் ருசிக்கத் தவறிவிடுகிறோம். நாம் அவருக்குள் இருக்கிறோமென்பதை அவருடைய வசனத்தைக் கைக்கொள்ளுவதன் மூலம் அறிந்து கொள்ள முடியும். தேவ அன்பு உண்மையுள்ளது, நிரந்தரமானது. எனவே முழு இருதயத்தோடும், முழு மனதோடும், முழு பலத்தோடும் தேவனிடத்தில் அன்பு கூருவோம். "...வசனத்தினாலும் நாவினாலுமல்ல, கிரியையினாலும் உண்மையினாலும் அன்புகூரக்கடவோம்" (1யோவா.3:18). மேலே தியானித்த முட்களைப் போல நம்மை நெருக்கிக் கொண்டிருக்கிற மூன்றுவிதமான உலகக் கவலைகள், ஐசுவரியத்தின் மயக்கம் மற்றும் மற்றவைகளைப் பற்றிய இச்சைகளிலிருந்து நம்மை விடுவித்துக் கொண்டு வசனம் நமக்குள் பலன் செய்ய இடமளிப்போம். கர்த்தர் தாமே இக்கடைசி நாட்களில் அவருடைய வசனத்தைக் கைக்கொண்டு வாழ உதவி செய்வாராக! ஆமென்.

### கேள்விகள்

1. வசனத்தைக்கேட்டும் எதினால் பலனற்றுப்போகிறார்கள்?
2. கர்த்தர்மேல் நம் பாரத்தை வைத்துவிடும்போது அவர் என்ன செய்வார்?
3. எவைகளில் அன்புகூராதிருங்கள் என வேதம் சொல்லுகிறது?
4. எப்போது தேவ சமாதானம் நம் இருதங்களையும் சிந்தனைகளையும் நிரப்பும்?
5. நாம் தேவனிடத்தில் எவ்வாறாக அன்புகூரவேண்டும்?



# எல்லாம் புதிதாயின
# All things have become New

**8**

அன்பு சகோதரியே, எல்லாம் புதிதாயின! இவ்வசனத்தை அடிக்கடி வாசித்திருப்போம். சில வேளைகளில் பிரசங்கத்திலும் கேட்டிருப்போம். நாமும்கூட எல்லாம் புதிதாகவேண்டும், பழைய பாடுகள். பிரச்சனைகள், தோல்விகள், நோய்கள் எல்லாமே நம்மை விட்டு அகல வேண்டுமென விரும்புகிறோம். ஆனால் தேவன் நம்மிடம் எதிர்பார்க்கும் அந்த புதியவைகள் எவைகள் என நாம் அறிந்துகொள்வது இக்கடைசி காலத்திலுள்ள நமக்கு மிகவும் அவசியமென நினைக்கிறேன்.

ஆவியானவர் பவுலின் மூலம், **"..உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்"** (ரோம.12:2) என திருவுளம்பற்றுகிறார். ஆம், நம் மனம் மறுரூபமாக வேண்டும். மறுரூபம் என்றால் என்ன? ஒரு நிலையிலிருந்து இன்னொரு நிலைக்கு மாற்றமடைவது. அதாவது பழைய நிலையிலிருந்து புதியநிலைக்கு மாற்றமடைவது. அப்படியானால் மனதளவில் நம்முடைய நிலை என்ன என்பதை தேவனுடைய வார்த்தையின் துணை கொண்டு அறிந்துகொள்ள வேண்டும். ஏனென்றால் நம்முடைய உள்ளிந்திரியங்களை தேவன் ஒருவரே அறிவார். நம்முடைய இருதயம் செம்மையாக இருக்கிறதா? அல்லது திருக்குள்ளதாயிருக்கிறதா? என்பதையும் அவர் அறிவார். அவருடைய கண்களுக்குமுன் ஒன்றும் மறைவானதில்லை என வேதம் கூறுகிறது. அன்பு சகோதரியே, இன்றைய நாட்களில் எங்கும் மாய்மாலம் பெருகியுள்ளது. அநேகர் தங்கள் உதடுகளினால் இனிமையாகப் பேசுவர், ஆனால் தங்கள் உள்ளத்திலோ வஞ்சகம் அல்லது கபடு நிறைந்து காணப்படும். ஆனால் நாமோ மிகவும் ஞானமுள்ளவர்களாய் நடந்துகொள்ள வேண்டியது மிக அவசியமாயிருக்கிறது. கிறிஸ்துவுக்கு வெளியே அல்லது புறம்பே இருக்கிறவர்களுக்கு முன்பாக மிக ஞானமுள்ளவர்களாக நடக்கவேண்டும். வேதமும் அவ்வாறே கூறுகிறது "புறம்பேயிருக்கிறவர்களுக்கு முன்பாக ஞானமாய் நடந்து காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள்" என (கொலோ. 4:5) போதிக்கிறது.

ஒருவேளை நாமே, கிறிஸ்துவுக்கு வெளியே அல்லது புறம்பேயிருக்கிறவர் களைப்போல் மாய்மாலம் பண்ணிக்கொண்டு வாழ்வோமென்றால் முதலாவது நாம் நம்மை சரிசெய்து கொள்ள வேண்டும். நம்முடைய மனம் பலவிதமான பாவங்களால் நிறைந்து பழைய ஆதாமின் நிலையிலிருக்குமானால் நம் மனம் புதிதாக வேண்டியது அவசியம் "உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர்களாகி," (எபேசி.4:23) என வேதம் கூறுகிறது. பழைய ஜென்ம சுபாவங்களாகிய கோபம், மேட்டிமை, பொய், அசுத்தம், புறங்கூறுதல், கோள்ச்சொல்லுதல், சுயநலம், இன்னும் இது போன்ற அநேக காரியங்களை நம்மிலிருந்து அப்புறப்படுத்த கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை நம் உள்ளத்தில் ஏற்றுக்கொள்ள வேண்டும். அதுமாத்திரமல்ல, இப்பேர்பட்ட நம்முடைய

பாவங்கள் மன்னிக்கப்பட்டு உள்ளத்தில் புதிதான ஆவியினை பெற ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளவேண்டும். அப் 2:38 "நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள்; அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்" என்கிறது. அப்படியானால் ஞானஸ்நானத்தின் மூலம் நாம் உள்ளத்திலே பரிசுத்த ஆவியாகிய அந்த புதிதான ஆவியைப் பெற்றவர்களாகமாறுவோம். அப்போது பழையவைகள் ஒழிந்துபோகும். இவ்வாறாக நம்முடைய மனம் புதிதாகி நாம் நம்முடைய பழைய பாவநிலையிலிருந்து மாறி மறுரூபமடைவோம்.

இதையே கொலோசெயர் 3:8-9ம் கூட "இப்பொழுதோ கோபமும் மூர்க்கமும் பொறாமையும் உங்கள் வாயில் பிறக்கலாகாத தூஷணமும் வம்பு வார்த்தைகளுமாகிய இவைகளையெல்லாம் விட்டுவிடுங்கள். ஒருவருக்கொருவர் பொய் சொல்லாதிருங்கள்; **பழைய மனுஷனையும் அவன் செய்கைகளையும் களைந்துபோட்டு.**" என வலியுறுத்துகிறது. மேற்கூறப்பட்டுள்ள இத்தகைய செய்கைகள் நம்மிடம் இருக்கின்றனவா? அப்படியிருக்குமானால் அவைகளை களைந்து போட இப்போதே முயற்சிப்போம். கிறிஸ்து தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளை சுதந்தரித்துக்கொள்ள நாம் அழைக்கப்பட்டுள்ளோம். பூமிக்குரிய ஆசீர்வாதங்களைப் பெற அநேகர் அடித்துக்கொள்ளுகின்றனர். ஓயாது தங்களுடைய மேன்மையையே நாடி மற்றவர்களையும் காயப்படுத்தவோ அல்லது பிறருக்குத் தீமைசெய்யவோ துணிகின்றனர். அன்பு சகோதரியே, இழிவான ஆதாயத்தை நாடிப் போவாயானால், தேவனுடைய வலது பாரிசத்திலுள்ள மேலானவைகளை எப்படி பெற்றுக் கொள்ளுவாய்? கிறிஸ்துவுக்குப் பிரியமில்லாத உங்களுடைய செய்கைகளினால் மேலான ஆசீர்வாதத்தை இழந்துவிடாதீர்.

லோத்தின் மனைவி அன்று பூமிக்குரியவைகளைத் திரும்பிப்பார்த்து உப்புத்தூணாகி மேலான காரியத்தை இழந்தாள். ஒருவேளை வரக்கூடிய பிரச்சனைகளின் அழுத்தத்தினாலும், பாரத்தினாலும் கிறிஸ்துவுக்குப் பிரியமான செய்கைகளை என்னால் செய்யமுடிகிறதில்லை. கர்த்தரை நம்பி இத்தனை நாட்களாக என் துன்பமும் துயரமும் எங்கே ஒழிந்தன, விரும்பாத காரியங்களே என் வாழ்வில் நடக்கிறது, அநேக இழப்புகளையும், வியாதிகளையுமே அனுபவிக்கிறேன் என்று அங்கலாய்த்துக்கொண்டிருக்கிறீர்களா? அன்று நகோமி தன்னுடைய புருஷனையும், தன்னுடைய குமாரர்களையும் இழந்தாள். நான் நிறைவுள்ளவளாய்ப் போனேன்; கர்த்தர் என்னை சிறுமைப்படுத்தி, சர்வவல்லவர் என்னை கிலேசப்படுத்தியிருக்கையில்."(ரூத்.1:21) என்று அங்கலாய்த்துக் கொண்டாள்.

அன்பு சகோதரியே, நாம் கர்த்தரை ஏற்றுக்கொண்டவுடனே, கர்த்தர் எல்லாவித உலக ஆசீர்வாதங்களையும் குறைவில்லாமல் தருவேன் என நமக்கு வாக்குப்பண்ணவில்லை. ஆனால் 'தேவன் நம்மோடிருப்பதாக' (மத்.1:23) வாக்குப்பண்ணியுள்ளார். இந்த ஆசீர்வாதம் பெரிதல்லவா? அவர் இந்த பூமியிலே நம்மோடிருப்பாரானால், மறுமையில் மேலான இடத்தில் அவரோடுகூட நாம் இருக்கப்போவது அதிக நிச்சயமல்லவா? அன்பு சகோதரியே வரப்போகிற மேலான



ஆசீர்வாதத்தை நினைத்து நம்முடைய பழைய செய்கைகளைக் களைந்து போடுவோமாக!

மேலும் மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாகச் சிருஷ்டிக்கப்பட்ட **புதிய மனுஷனைத் தரித்துக்கொள்ளுங்கள்**" (எபே.4:24). ஆம், எவ்வாறு புதிய மனுஷனைத் தரித்துக்கொள்ளுவது? மெய்யான அதாவது உண்மையான நீதியிலும், பரிசுத்தத்திலும் நம்மை சிருஷ்டித்தவருடைய சாயலுக்கொப்பாய் மாறும்போது புதிய மனுஷனைத் தரித்துகொள்கிறோம். அதாவது ஆதாமின் கீழ் பாவத்திற்குட்பட்ட நம்முடைய பழைய மனுஷன் அவரோடுகூடச் (இயேசுவோடுகூட) சிலுவையில் அறையப்படும் போதும் புதிய மனுஷனைத் தரித்துக்கொள்வோம். பவுல் இதனையே "கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டேன்; ஆயினும் பிழைத்திருக்கிறேன்; இனிநான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்..." (கலா. 2:20) என்கிறார். ஏனெனில் "அவரே (இயேசுவே) தேவனால் நமக்கு ஞானமும் நீதியும் பரிசுத்தமும் மீட்புமானார்."(1கொரி.1:31) இப்படியாக நீதியும் பரிசுத்தமுமாயிருக்கிற இயேசுவைத் தரித்துக்கொள்ளும்போது கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே நமக்குள்ளும் குடிகொள்ள ஆரம்பிக்கிறது. இப்படியாக நாம் புதிய மனுஷனைத் தரித்துக்கொள்கிறோம்.

அன்பான சகோதரியே, இதுவே தேவன் நம்மிடத்தில் எதிர்பார்க்கிற ஒன்றாகும். வீழ்ந்துபோன ஆதாமின் பாவசுபாவத்திலிருந்து நம்முடைய மனதையும், நம்முடைய செய்கைகளையும் களைந்து போட்டு புதிய மனுஷனைத் தரித்துக்கொள்வோம். மீண்டும் ஏதேனின் (The Happy Place) பரலோக வாழ்விற்கு திரும்ப, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தமே பரிகாரமாயிருப்பதினால் அவரை விசுவாசித்து, அவரே ஜீவனுள்ள தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட்டு, ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள். அப்போது பரிசுத்தஆவியின் வரத்தைப்பெற்று புதிய மனுஷியாக மாறுவீர்கள். பழையவைகள் எல்லாம் ஒழிந்துபோம். எல்லாம் புதிதாகும். அப்போது கர்த்தர் தம்முடைய சபையிலே உங்களை சேர்த்து. போஷித்துக் காப்பாற்றுவார். அவருடைய மந்தையில் சேர்ந்து உள்ளும் புறம்பும் மேய்ச்சலைக் கண்டு நித்திய ஆசீர்வாதம் பெற கர்த்தர் தாமே உங்களுக்கு உதவிசெய்வாராக!

## கேள்விகள்

1. புறம்பே இருக்கிறவர்களுக்கு முன்பாக எப்படி நடந்து, எதைப்பிரயோஜனப் படுத்திக்கொள்ள வேண்டும்?
2. நாம் எதற்கென்று ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளவேண்டும்?
3. நாம் எதையெல்லாம் களைந்து போடவேண்டும்?
4. கர்த்தர் என்னை சிறுமைப்படுத்தி சர்வவல்லவர் என்னைக் கிலேசப்படுத்தி யிருக்கையில் என்று சொன்னவள் யார்?
5. எப்போது புதிய மனுஷனைத் தரித்துக்கொள்கிறோம்?

# <u>விசேஷித்த மேன்மை -1</u>
# <u>Special Distinction -1</u>

**9**

இன்றைய நாளில் பெண்கள் இப்பூமியிலும், விண்வெளியிலும் எத்தனை எத்தனையோ சாதனைகளைப் படைத்து மண்ணுக்கும் மகிமையைக் கொண்டு வருகின்றனர். சில ஆண்டுகளுக்கு முன் சுனிதா வில்லியம்ஸின் விண்வெளி சாதனை பூமியை வியக்கப்பண்ணினது. பெண்களாகிய நம்மெல்லோருக்கும் இது பெருமையை மாத்திரமல்ல எதையும் சவாலாக்கிக் கொள்ளும் ஊக்கத்தையும் அளிக்கிறது. இருந்தபோதிலும் அப்போஸ்தலனாகிய பேதுரு, "கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிறவிதமாய் வரும்; அப்பொழுது வானங்கள் மடமட என்று அகன்றுபோம், பூதங்கள் வெந்து உருகிப்போம், பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம்... அவருடைய வாக்குத்தத்தின்படியே நீதி வாசமாயிருக்கும் புதிய வானங்களும் புதிய பூமியும் உண்டாகுமென்று காத்திருக்கிறோம்" (2பேது.3:10,13) என்று எழுதியிருக்கிறதை வாசிக்கும்போது எல்லாம் மாயை என்ற முடிவுக்கு வரவேண்டியுள்ளது.

ஆம், எல்லாம் மாயை! "சூரியனுக்குக் கீழே செய்யப்படுகிற காரியங்களை யெல்லாம் கவனித்துப் பார்த்தேன்; இதோ, எல்லாம் மாயையும், மனதுக்குச் சஞ்சலமுமாயிருக்கிறது" (பிர.1:14) என்கிறார் ஞானி சாலொமோன். இப்படியிருக்க அழிந்துபோகாத **ஆவிக்குரிய காரியங்களைச் (Spiritual Matters)** சிந்தித்து, அதைப் பற்றிக்கொண்டு, நீதிவாசமாயிருக்கும் புதிய இடத்திற்குச் செல்ல நம்மை ஆயத்தப்படுத்தும் முயற்சியில் ஈடுபடுவோம். இம்முயற்சிக்கு உதவியாக வேதாகமத்தில் விசேஷித்த இடத்தினைப் பிடித்துள்ள சில பெண்களை நமக்கு மாதிரியாகக் கொள்வோம்.

**சிலுவையின் கடைசிபரியந்தமும் (Last At the Cross) இருந்தவர்கள்:** இயேசுவின் சிலுவைப் பயணத்தில் கடைசிமட்டும் இயேசுவோடு இருந்தவர்கள் மகதலேனா மரியாளும் யோசேயின் (இயேசுவின் தாய்) தாயாகிய மரியாளும்தான். இயேசுவோடு உண்டு உறங்கி ஊழியஞ்செய்த இயேசுவின் சீஷர்களெல்லாரும் ஓடிவிட்டனர். ஆனால் தேவனுடைய ராஜ்யம் வரக் காத்திருந்தவனாகிய யோசேப்பு என்பவன் ஒரு கனம்பொருந்திய ஆலோசனைக்காரன், இவன் வந்து இயேசுவின் சரீரத்தைப் பெற்று, மெல்லிய துப்பட்டியை வாங்கிக் கொண்டு வந்து, மரித்த இயேசுவை சிலுவையிலிருந்து இறக்கி, அந்தத் துப்பட்டியிலே சுற்றி, கன்மலையில் வெட்டியிருந்த கல்லறையிலே அவரை வைத்து, கல்லறையின் வாசலில் ஒரு கல்லைப் புரட்டிவைத்து இவ்விதமாக அடக்கம்பண்ணினான். "அவரை வைத்த இடத்தை மகதலேனா மரியாளும் யோசேயின் தாயாகிய மரியாளும் பார்த்தார்கள்" (மாற்.15:47). அப்படியானால் இந்த ஸ்திரீகள் கல்லறைவரைக்கும் சென்றிருக்கிறார்கள். ஆனால் சீஷர்களோ பயந்து தங்களை ஒளித்துக்கொண்டார்கள். "பூரண அன்பு பயத்தைப்



புறம்பே தள்ளும்" இயேசுவின்மேல் முழுமையான அன்பு கொண்டிருந்ததால் அந்த இரு ஸ்திரீகளும் கல்லறை வரை சென்றார்கள். ஒருவேளை இயேசுவின் தாய் என்பதால் இயற்கையான தாய்அன்பு மரியாளிடம் காணப்பட்டது என்று சொல்லலாம். ஆனால் மகதலேனா மரியாளிடம் எப்படி அந்த பூரண அன்பு காணப்பட்டது? இயேசு அவளிடமிருந்த ஏழு பிசாசுகளை அவளை விட்டு அகற்றியிருந்தார். பிசாசின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டபடியினால் அவ்வாறு அன்பு கூர்ந்தாள். பிசாசின் பிடியிலிருந்த அவள் தேவனுடைய பிள்ளையாக மாற்றப்பட்டாள். இது எப்பேர்பட்ட விடுதலை! அன்பு சகோதரியே, உங்களையும் கூட தேவன் தமது குமாரன் மூலமாக பிசாசின் கிரியைகளாகிய பல்வேறு பாவங்களிலிருந்து விடுவித்திருக்கலாம். விடுதலையின் சந்தோஷத்தை அனுபவிக்கின்ற நீங்கள் முடிவுபரியந்தம் இயேசுவின் மேல் அன்புகூர வேண்டியது அவசியமல்லவா? உலகத்தில் அன்புகூராதிருங்கள். உலக சிநேகம் தேவனுக்கு விரோதமான பகையாயிருக்கிறது. உலக ஜனங்களுக்கு பயந்து கொண்டு அந்த சீஷர்களைப் போல் உங்களை ஒளித்துக்கொள்ளாதீர்கள். முடிவுபரியந்தம் நிலைத்திருப்பவனே இரட்சிக்கப்படுவான் என்று வேதம் கூறுகிறது.

**முதலாவது கல்லறையினிடத்தில் இருந்தவள் (First At The Tomb)**

இயேசு அடக்கம்பண்ணப்பட்டு, மூன்றாம் நாளில் அதாவது வாரத்தின் முதல்நாளில் சுகந்தவர்க்கமிடும்படி கல்லறையினிடத்திற்கு மகதலேனா மரியாளும் மற்ற மரியாளும் வந்தார்கள். ஆனால் "வாரத்தின் முதலாம் நாள் அதிகாலையிலே இயேசு எழுந்திருந்தபின்பு, மகதலேனா மரியாளுக்கு முதல் முதல் தரிசனமானார்" (மாற்.16:9). மற்ற ஒருவரும் முதல் முதல் இயேசுவை தரிசிக்காமல் மகதலேனா மரியாள் மட்டும் தரிசிக்கும் பாக்கியம் பெற்றதற்குக் காரணமென்ன? கல்லறையில் இயேசுவைக் காணவில்லை என்ற செய்தி அறிந்து, மற்ற சீஷர்களும் ஸ்திரீகளும் கல்லறையினிடத்திற்கு வந்து பார்த்து விட்டு மீண்டும் தங்கள் இடத்திற்குத் திரும்பிப் போய்விட்டார்கள் (யோவா.20:1-10).

ஆனால் மகதலேனா மரியாளோ கல்லறையினருகே வெளியே நின்று அழுதுகொண்டிருந்தாள். இயேசுவின் மேல் அவள் கொண்டிருந்த அன்பினால் அவள் கல்லறையை விட்டு அகலாதிருந்தாள். அதனால் இயேசுவை முதல் முதல் தரிசிக்கும் பாக்கியம் பெற்றாள். அன்பு சகோதரியே, கர்த்தருடைய நாளிலே கர்த்தருக்கு சுகந்தவர்க்கமிட வந்தவள் கர்த்தரை தரிசித்தாள். நீங்கள் கர்த்தருடைய நாளிலே எதற்கு முக்கியத்துவம் கொடுக்கிறீர்கள்? சபையாகக் கூடி தேவனை ஆராதிக்கவா அல்லது இப்பிரபஞ்சத்தின் தேவைகளைப் பிரியப்படுத்தவா? சிந்தியுங்கள்.

இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் உலக சம்பத்தைக் காட்டி தன்னைப் பணிந்து கொள்ளும்படி தந்திரமாக செயல்படுவான் உங்களுடைய உலகப்பிரகாரமான தேவைகள், மற்றும் விருப்பங்களை அறிந்தவனாய் உங்களை மோசம்போக்கும்படி சுற்றித்திரிகிறான். இயேசுவையே வஞ்சிக்கத் திட்டமிட்டவன் உங்களை விட்டுவிடுவானா? மத்தேயு4:10,11-ல் இயேசுவைப் பார்த்து நீர் சாஷ்டாங்கமாய் விழுந்து என்னைப் பணிந்துகொண்டால், இவைகளையெல்லாம்

உமக்குத்தருவேன் என்று சொன்னான். அப்பொழுது இயேசு: அப்பாலே போ சாத்தானே; உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்துகொண்டு அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக என்று எழுதியிருக்கிறதே என்றார்'' வேதவசனத்தினால் அவனை ஜெயித்தார். பிசாசு கிறிஸ்தவர்களையே குறிவைத்துள்ளான். ஞாயிற்றுக் கிழமை தான் சகல வைபவங்களும், தேர்வுகளும் நடைபெறுகின்றன. என்னசெய்வது எனக்கு வேலைகிடைக்காமல் கஷ்டப்படுகிறேனே என்று சொல்லி வாரத்தின் முதல் நாளை கர்த்தருடைய சமூகத்தில் செலவிட்டு தேவனை ஆராதிப்பதைத் தவிர்த்து உலகவேலையை நோக்கி ஓடுகின்றனர். கர்த்தருடைய நாளை இவர்கள் கொள்ளையடிக்கின்றனர். சகோதரியே, சற்று சிந்தியுங்கள் ''சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறதுபோல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்திசொல்லக்கடவோம். நாளானது சமீபித்துவருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்திசொல்லவேண்டும்'' (எபி.10:25). இல்லையெனில் கர்த்தருடைய வசனமே நம்மை நியாயந்தீர்க்கும்.

**முதலாவது உயிர்த்தெழுதலை அறிவித்தவர்கள் (First To Proclaim Resurrection)**

கர்த்தருடைய தூதன், ''சீக்கிரமாய்ப் போய், அவர் (இயேசு) மரித்தோரிலிருந்து எழுந்தார் என்று அவருடைய சீஷர்களுக்குச் சொல்லுங்கள். அவர் உங்களுக்கு முன்னே கலிலேயாவுக்குப் போகிறார்; அங்கே அவரைக் காண்பீர்கள்; இதோ, உங்களுக்குசொன்னேன் என்றான். அவர்கள் பயத்தோடும் மகா சந்தோஷத்தோடும் கல்லறையை விட்டுச் சீக்கிரமாய்ப் புறப்பட்டு, அவருடைய சீஷர்களுக்கு அறிவிக்க ஓடினார்கள்'' (மத்.28:7,8).

பொதுவாக ஒரு செய்தி வெகு சீக்கிரத்தில் பரவ வேண்டுமென்றால், பெண்களிடம் கூறிவிட்டால் போதும் பல இடங்களுக்கு மின்னல் வேகத்தில் அந்த செய்தி சென்றடைந்து விடும் என்பார்கள். ஸ்திரீகளுக்குள்ளே இந்தகுணம் இருக்கத்தான் செய்கிறது. அதனால் தான் என்னவோ, கர்த்தருடைய தூதன் இயேசு உயிர்த்தெழுந்த செய்தியை ஸ்திரீகளின் மூலம் சீஷர்களுக்கு அனுப்புகிறார். எப்படியோ, இந்த மாபெரும் நற்செய்தியை உண்மையான சந்தோஷத்துடன் மகதலேனா மரியாளும், மற்ற மரியாளும் முதன் முதலாக சீஷர்களுக்கு அறிவித்தார்கள்.

சகோதரியே, நீங்கள் என்னநினைக்கிறீர்கள்? ஸ்திரீகளுக்கு இந்த அதிகாரம் கொடுக்கப்படவில்லை என்கிறீர்களா? வேதவாக்கியங்களை தெளிவாகப் புரிந்துகொள்வோம். உபதேசம்பண்ணவும், புருஷன் மேல் அதிகாரஞ்செலுத்தவும், ஸ்திரீயானவளுக்கு நான் உத்தரவு கொடுக்கிறதில்லை; ...(1தீமோ.2:12) என்று வேதம் கூறுகிறது. வேதவாக்கியத்தின்படி நாம் உபதேசிக்கவும், புருஷன்மேல் அதிகாரஞ் செலுத்தவும் அதிகாரத்தைப் பெறவில்லை. ஆனால் மத்.28:7,8-ன்படி கர்த்தருடைய அடக்கம் உயிர்த்தெழுதலின் செய்தியை நம்தோழிகளுக்கு அறிவிக்கலாமே. கர்த்தருடைய காரியத்தில், கர்த்தருடைய சபை வளர்ச்சிக்கான காரியத்தில் ஈடுபடுவதில் முதலாவதாக இருப்போம்.



## கேள்விகள்

1. அவருடைய (கர்த்தருடைய) வாக்குத்தத்தின்படியே எவைகள் உண்டாகுமென்று காத்திருக்கிறோம்?
2. சிலுவையின் கடைசி பரியந்தமும் இயேசுவோடு இருந்த ஸ்திரீகள் யாவர்?
3. பூரண அன்பு என்னசெய்யும்?
4. இயேசு உயிர்த்தெழுந்த பின்பு யாருக்கு முதல் முதல் தரிசமானார்?
5. சீக்கிரமாய்ப் போய் இயேசு மரித்தோரிலிருந்து எழுந்தார் என்று அவருடைய சீஷர்களுக்குச் சொல்லுங்கள் என்றது யார்?

# <u>விசேஷித்த மேன்மை –2</u>
# <u>Special Distinction -2</u>

**10**

**வே**தாகமத்தில் விசேஷித்த மேன்மையான இடத்திலிருந்த சில ஸ்திரீகளாகிய **சிலுவையின் கடைசி (Last At the Cross)** வரை இயேசுவோடு இருந்த மகதலேனா மரியாள், யோசேயின் (இயேசுவின் தாயும்கூட) தாயாகிய மரியாள், **முதலாவது கல்லறையினிடத்திலிருந்து (First At the Tomb)** இயேசுவை தரிசித்த மகதலேனா மரியாள் மற்றும் **முதலாவது இயேசுவின் உயிர்த்தெழுதலை அறிவித்த (The First to proclaim Resurrection)** மகதலேனா மரியாள் மற்ற மரியாள் ஆகியோரின் மேன்மையான காரியங்களைக் குறித்து வேதாகம ஆதாரத்துடன் அறிந்து கொண்டோம். அதைப்போலவே வேதாகமத்தில் விசேஷித்த மேன்மையான இடத்தைப்பிடித்த வேறு சில சகோதரிகளைக்குறித்தும் ஆராய்ந்து பார்ப்போம்.

**முதலாவது யூதர்களுக்கு அறிவித்தவள் (The First Preach to the Jews):**

யார் அவள்? எதைப் பற்றி அறிவித்தாள்? லூக்கா2:36,37-ல் அவளைக் காணலாம், ‘‘ஆசேருடைய கோத்திரத்தாளும், பானுவேலின் குமாரத்தியுமாகிய அன்னாள் என்னும் ஒரு தீர்க்கதரிசி இருந்தாள்; அவள் கன்னிப்பிராயத்தில் விவாகமானதுமுதல் ஏழு வருஷம் புருஷனுடனே வாழ்ந்தவளும், அதிக வயதுசென்றவளுமாயிருந்தாள். ஏறக்குறைய எண்பத்துநாலு வயதுள்ள அந்த விதவை தேவாலயத்தை விட்டு நீங்காமலும், இரவும் பகலும் உபவாசித்து, ஜெபம் பண்ணி, ஆராதனை செய்து கொண்டிருந்தாள். அவளும் அந்நேரத்திலே வந்து நின்று, கர்த்தரைப் புகழ்ந்து, எருசலேமிலே மீட்புண்டாகக் காத்திருந்த யாவருக்கும் அவரைக் குறித்துப் (இயேசுவை) பேசினாள்’’. இந்த தீர்க்கதரிசி எருசலேமிலே தங்களுக்கு மீட்புண்டாக வேண்டும், இரட்சிப்புண்டாக வேண்டுமென காத்திருந்த யூதர்களுக்கு இயேசுவைக் குறித்து அறிவித்தாள். பாவத்திலிருந்து யாவரையும் மீட்கப்போகிற இயேசு இவர்தான் என்று யூதர்களுக்கு அறிவித்தாள்.

அன்பு சகோதரியே, அவளுடைய சூழ்நிலைகளை அறிந்தீர்களா? ஒன்று, அவள் தன் புருஷனோடு ஏழுவருஷம் மட்டுமே வாழ்ந்தவள், அடுத்தாக, அவள் ஏறக்குறைய எண்பத்துநாலு வயதை அடைந்த விதவை. கன்னிப்பருவத்தில் விவாகம் செய்து ஏழு ஆண்டுகள் மட்டுமே புருஷனோடு வாழ்ந்து அதன்பின் ஏறக்குறைய எண்பத்துநாலு வயது வரை விதவைக் கோலம் பூண்டவளாயிருந்த அவளது மனநிலை எப்படியிருந்திருக்கும் என்று சற்றே சிந்திபோம்! அவள் நிச்சயமாகவே தன்னுடைய விதவையிருப்பை குறித்தும் அதிகக் கவலைகொள்ளாதவளாக இருந்திருக்கலாம். அதனால் தான் அவள் தேவாலயத்தை அண்டி, அதை விட்டு நீங்காமல், இரவும் பகலும் உபவாசித்து, ஜெபம்பண்ணி ஆராதனை செய்து



கொண்டிருந்தாள் என வாசிக்கிறோம். இந்த அன்னாளை நினைக்கும் போது எனக்கு மெய்யாகவே மெய்சிலிர்க்கிறது. பொதுவாக, சமுதாயத்தில் பிள்ளைகளெல்லாரும் தாயையும் தகப்பனையும் விட்டுச் சென்று விடுவார்கள், ஆனால் கணவனும் மனைவியும் மட்டும் கடைசிவரை ஒருவருக்கொருவர் உதவியாக இருப்பார்கள் என்பர். ஆனால் இந்த அன்னாள் அந்த உறவை இழந்த போதிலும் தேவனைப்பற்றிக் கொண்டது எவ்வளவு விசேஷித்த மேன்மையாயிருக்கிறது! சங்கீதக்காரனாகிய தாவீது இரவும் பகலும் கர்த்தருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான் என்கிறார். ஆம், இதன்படி இவள் ஒரு பாக்கியவதி, தேவலாயத்தை விட்டு நீங்காமல் உபவாசித்து ஜெபம் பண்ணி அதாவது மரியாள் இயேசுவின் பாதத்தைவிட்டு நீங்காமல் நல்ல பங்கை தெரிந்துகொண்டதுபோல, இவளும் தேவாலயத்தை விட்டு நீங்காது இருந்திருக்கிறாள்.

அன்பு சகோதரியே, நம்மை சுற்றிலும் உள்ள அநேகர் இந்த மீட்பரைப் பற்றி அறியாமலிருக்கிறார்கள். இந்த மீட்பராகிய இயேசுவைக் குறித்து அறிவித்தும் ஏற்றுக்கொள்ளாமல் ஏளனம் செய்கிறவர்களும் அநேகர். இப்படியிருக்க, நீங்கள் உங்களைக் குறித்தும், உங்களுடைய இழப்பு, வேதனை, கஷ்டம், நஷ்டம், உங்களுடைய உறவுகள் இதுபோன்ற இன்னும் எத்தனையோ காரியங்களைக் குறித்தும் சிந்தித்துக்கொண்டு இருக்கிறீர்களா? மார்த்தாளைப்போல அநேகக் காரியங்களைக் குறித்து கவலை கொண்டிருப்போமானால் நாம் ஒன்றையும் சாதிக்கப்போவதில்லை. மரித்தோர் மரித்தோரை அடக்கம்செய்யட்டும், நீயோ என்னைப் பின்பற்றி வா என இயேசு கூறிய வார்த்தை உங்கள் செவியில் விழவில்லையா? இயேசுவை அறிந்தும், அறியாதவர்களைப்போல, ஆவியில் மரித்தவர்களாக ஏனோ, தானோவென்று ஜீவிப்பதை தேவன் ஒருபோதும் விரும்புகிறதில்லை.

நம்மை நாமே தேவ சமூகத்தில் குணப்படுத்திக்கொண்டு மற்றவர்களை ஸ்திரப்படுத்த இந்த மீட்பின் செய்தியை அறிவிப்போம். மேன்மையான இந்தப் பணிக்கு ஈடான ஒரு பணியும் இவ்வுலகில் இல்லை. இழந்த காரியங்களையே நினைத்துக் கொண்டிராமல் வரப்போகும் பரலோக மேன்மையை நினைத்து, ஒவ்வொருநாளும் இழந்துகொண்டிருக்கிற ஸ்திரீகளைக் காப்பாற்றுவோம். அன்னாளைப் போல இரவும் பகலும் தேவசமூகத்தை விட்டு நீங்காமல் தனிப்பட்ட முறையில் உபவாசித்து, ஜெபித்து மீட்பின் செய்தியை அறிவிக்க ஆயத்தப்படுவோம்.

**முதல் ஜெபக்கூட்டத்தில் கலந்துகொண்டவர்கள் (Attended the First Prayer Meeting) :**

இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த பின்பு, நாற்பது நாளளவும் அப்போஸ்தலருக்கு தரிசனமாகி, அவர்களை நோக்கி பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெறும்படி எருசலேமை விட்டுப் போகாமல் பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறக் காத்திருங்கள் என்று கட்டளையிட்டார் (அப்.1:3-5). அதன்படி ‘‘அங்கே இவர்களெல்லாரும், ஸ்திரீகளோடும் இயேசுவின் தாயாகிய மரியாளோடும், அவருடைய சகோதரரோடுங்கூட ஒருமனப்பட்டு, ஜெபத்திலும் வேண்டுதலிலும்

தரித்திருந்தார்கள்'' (அப்.1:14). இந்த ஜெபக்கூட்டம் இயேசு பரமேறிச்சென்றபின் கூடின முதல் ஜெபக்கூட்டம். அந்த முதல் ஜெபக்கூட்டத்தில் ஸ்திரீகளும் இயேசுவின் தாயாகிய மரியாளும் இருந்திருக்கிறார்கள். அப்போஸ்தலர்களெல்லாரும் இவர்களோடு ஒருமனப்பட்டு, ஜெபத்திலும் வேண்டுதலிலும் தரித்திருந்தார்கள். அந்த ஸ்திரீகள் செய்த காரியங்கள் இரண்டு.

**ஒன்று,** ஒருமனப்பட்டவர்களாயிருந்தார்கள். இயேசுவின் நாமத்தில் கூடுகிற அன்பு சகோதரியே, உங்களிடத்தில் இவ்விதமான ஒருமனமிருக்கிறதா? சபையில் ஒருவர் ஜெபிக்கும்போது கூடியிருக்கிற சிலர் தங்கள் தங்கள் மனதில் என்ன நினைத்திருக்கிறார்களோ அதைச் சொல்லிக் கொண்டிருப்பார்கள், இல்லாவிட்டால் எதற்காக அந்த நபர் விண்ணப்பிக்கிறாரோ அந்த விண்ணப்பத்தில் முழுகவனம் செலுத்திக் கொண்டிருப்பவருக்கு இடையூராக ஸ்தோத்திரம், ஸ்தோத்திரம், ஸ்தோத்திரம் என்று ஓயாமல் சொல்லிக்கொண்டே இருப்பார்கள். இப்படி ஜெபிப்பது ஒருமனப்பட்டு ஜெபிக்கின்ற ஜெபமாகவும் விண்ணப்பமாகவும் இருக்கமுடியாது. ஒருமனம் என்றால் ஒரே காரியத்தை கூடியிருக்கிற அனைவரும் மனதில் கொண்டு ஜெபிப்பதாகும். இடைவிடாமல் ஸ்தோத்திரஞ் செய்யுங்கள் என வேதம் கூறாமல் **"எல்லாவற்றிற்காகவும் ஸ்தோத்திரஞ் செய்யுங்கள்"** என்று கூறுகிறது ஆங்கில வேதாகமத்தில் **"Give thanks in all circumstances"** என்றுள்ளது. அப்படியானால் யோபு கூறினதுபோல் 'கர்த்தர் கொடுத்தார் கர்த்தர் எடுத்தார் கர்த்தருடைய நாமத்திற்கு ஸ்தோத்திரம்' என எச்சூழலிலும் ஸ்தோத்திரம் சொல்ல வேண்டும்.

இரண்டாவதாக, அந்த ஸ்திரீகள் ஜெபத்திலும், விண்ணப்பத்திலும் தொடர்ந்து தரித்திருந்தார்கள். சில ஆங்கில வேதாகமங்களில் **Continued** மற்றும் **Constantly** என்று எழுதப்பட்டுள்ளது. ஜெபத்திலும், விண்ணப்பத்திலும் தொடர்ச்சியாக மற்றும் இடைவிடாமல் இருந்திருக்கிறார்கள். நாம் இங்கே சற்று சிந்திப்போம். நாம் கூடி ஜெபிக்கையில் இவ்வாறு இருக்கிறோமா? அல்லது ஜெபம் முடிவதற்குள் நம்சொந்த வேலைகளினிமித்தம் இடையிலேயே எழுந்து சென்று விடுகிறோமா? ஆதி அப்போஸ்தலர்களோடேகூட, ஸ்திரீகளும் உறுதியுடனிருந்தனர்.

புத்தியுள்ள ஸ்திரீ தன் வீட்டைக் கட்டுகிறாள் என்ற வசனத்தின்படி சபை சகோதரர்களோடு ஒருமனப்பட்டவர்களாக ஜெபத்திலும், விண்ணப்பத்திலும் தரித்திருந்த சமயத்தில் கிறிஸ்துவின் சபை எருசலேமில் ஸ்தாபிக்கப்பட்டது. இன்றும் நம் தமிழகம் முழுவதும், ஏன் நம் பாரதம் முழுவதும் ஆங்காங்கே கிறிஸ்து தமது சபையை உருவாக்க வல்லவராயிருக்கிறாரே. நம்மைப் பாவத்திலிருந்து மீட்க இரத்தம் சிந்தி மரித்த இயேசுவுக்காக நீ என்ன செய்யப்போகிறாய்? என்பதை சிந்தித்துப்பார். முதலாவது மீட்பின் செய்தியை யூதர்களுக்கு அறிவித்த அன்னாளைப் போலவும், முதல் ஜெபக்கூட்டத்தில் கலந்து கொண்ட ஸ்திரீகளைப் போலவும், இயேசுவுக்காக இயேசுகிறிஸ்துவின் ராஜ்யத்திற்காக எதையும் செய்ய முதலாவதாக இருப்போம். கர்த்தர் தாமே அவருக்குப் பிரியமானதைச் செய்ய நமக்கு உதவிசெய்வாராக!



## கேள்விகள்

1. எருசலேமில் மீட்பு உண்டாக காத்திருந்த யாவருக்கும் இயேசுவைக்குறித்து பேசினவள் யார்?
2. எல்லாவற்றிற்காகவும் என்ன செய்யவேண்டும்?
3. யார் தன் வீட்டைக்கட்டுகிறாள்?
4. பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறக் காத்திருந்த அப்போஸ்தலர்களுடன் முதல் ஜெபத்தில் கலந்துகொண்ட ஸ்திரீகள் எப்படிப்பட்டவர்களாய் தரித்திருந்தார்கள்?
5. கர்த்தர் கொடுத்தார் கர்த்தர் எடுத்தார் என்று கூறியது யார்?

# *சத்தியத்தைப்பற்றி...*
# About the Truth...

## *11*

**அ**ன்பான சகோதரிகளே, சத்தியபரராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துகள் கூறுவதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

நாட்களும், வருடங்களும் நெய்கிறவனின் நாடாவைப் போல் கடந்தோடுகின்றன. என்ன ஆச்சரியம்! கடந்த நாட்களில் கண்மணியைப் போலக் காத்த தேவன் இனிமேலும் காத்து வழிநடத்துவாராக!

உயிரோடும், சுகத்தோடும் இருக்கிற நாம் ஒவ்வொரு நாளும் மரித்துக் கொண்டிருக்கிற ஆத்துமாக்களை சற்றே நினைத்துப் பார்ப்போம். கூடுமானால் அழிந்து கொண்டிருக்கிற ஆத்துமாக்களை நித்திய ஜீவனுக்கென்று ஆதாயப்படுத்துவோம். ஆத்துமாக்களை ஆதாயப்படுத்துகிறவன் ஞானமுள்ளவன் என வேதம் கூறுகிறது. இவ்வுலகில் ஒவ்வொரு நிமிடமும் 107 பேர் மரிக்கின்றனர், ஒரு நாளில் 1,53,000 மனிதர்கள் மரிக்கின்றனர் என ஒரு ஆய்வு தெரிவிக்கின்றது. எனவே அசதியாயிராமல் இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியை மரித்துக்கொண்டிருக்கிற மற்றும் தங்கள் ஆத்மாக்களை இழந்து ஆக்கினையை நோக்கிச் சென்று கொண்டிருக்கிற சகோதரிகளுக்குக் கூறுவோம்.

ஏனென்றால், இயேசு "சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்றார்" (யோவா.8:32). இவைகள் வல்லமையான வார்த்தைகள். அநேகருக்கு சத்தியம் என்றால் என்னவென்றே தெரியாது. பலர் பல்வேறு கருத்துக்களைக் கூறுவர். ஆனால் சத்தியம் என்பது சத்தியமே!

இங்கு இயேசு, **முதலாவது** நாம் சத்தியத்தை அறிந்து கொள்ளவேண்டும் என போதித்தார். சத்தியம் நிலைத்திருக்கிறது, அது உண்மையானது. இயேசு இவ்வார்த்தைகளை யாரிடம் கூறினார்? தம்மை விசுவாசித்த யூதர்களை நோக்கிக் கூறினார். அதற்கு யூதர்கள் "...அவருக்குப் பிரதியுத்தரமாக: நாங்கள் ஆபிரகாமின் சந்ததியாயிருக்கிறோம், நாங்கள் ஒருக்காலும் அடிமைகளாயிருக்கவில்லை; விடுதலையாவீர்களென்று நீர் எப்படிச் சொல்லுகிறீர் என்றார்கள்" (யோவா.8:31,33). நாமும் இவ்வாறே நாங்கள் கிறிஸ்தவர்கள் தான், எங்களுக்கு சத்தியம் என்றால் என்னவென்று தெரியும், நாங்கள் எதற்கும் அடிமைகளல்ல, யாருக்கும் அடிமைகளல்ல என்று நினைக்கலாம். பிரியமானவர்களே நாம் சத்தியத்தை வெறுமனே விசுவாசிக்கலாம். உண்மையாக நடக்கிறேன் என்று கூறலாம். ஆனால் சத்தியம் என்பது என்றென்றும் நிலைத்திருக்கிற ஒன்றாகும்.

**இரண்டாவது,** நாம்சத்தியம் என்பது என்னவென்று அறிந்து கொள்வதுமட்டுமல்ல, ஆனால் சத்தியம் நம்மை விடுதலையாக்குகிறது என்பதையும் அறிந்து கொள்ள வேண்டும். சத்தியமானது நம்மை பாவக்கட்டிலிருந்து விடுதலையாக்குகிறது. இயேசு, "...பாவஞ்செய்கிற எவனும் பாவத்திற்கு



அடிமையாயிருக்கிறான்..." (யோவா.8:34) என்று சொன்னார். ஒருவேளை நீங்கள் விசுவாசிகளாயிருந்த போதிலும் ஏதேனும் பாவத்திற்கு அடிமைகளாயிருக்கிறீர்களா? பணத்திற்கு, சொத்து சுகங்களுக்கு, பொன் பொருளுக்கு அடிமைகளா? உங்கள் கணவரோடு தேவன் விரும்புகிறபடி நல்லுறவு கொண்டிருக்கிறீர்களா அல்லது ஓயாது சண்டையிடுகிறீர்களா? அவருக்குச் செய்ய வேண்டிய உங்கள் கடமையிலிருந்து தவறியிருக்கிறீர்களா? உங்கள் வாழ்க்கை கசப்பு கோபம், காரணமில்லாத வெறுப்பு, பொறாமையினால் நிறைந்துள்ளதா? அப்படியானால் அவைகள் நமக்கு மிகுந்த பாரத்தைக் கொடுக்கும். ஆனால் நமக்கு ஒரு நம்பிக்கையுண்டு, ஏனென்றால் சத்தியம் நம்மை இவையெல்லாவற்றினின்றும் விடுதலையாக்கும்.

**சத்**தியம் இவ்வகை அநீதியான நடக்கையிலிருந்து மட்டும் விடுதலையாக்குவதில்லை. ஆனால் நம்மை தவறான மத பழக்க வழக்கங்களிலிருந்தும், மனித பாரம்பரியத்திலிருந்தும் விடுதலையாக்குகிறது. முதல் நூற்றாண்டில் அநேகர் மனிதனால் ஏற்படுத்தப்பட்ட மார்க்க பாரம்பரியங்களுக்கும் கற்பனைகளுக்கும் அடிமைப்பட்டிருந்தார்கள் என்று மத்தேயு 23:1-33 மற்றும் மாற்கு 7:1-13-ல் வாசித்து அறிந்து கொள்ளலாம். இன்றும் கூட மக்கள் பலவித மார்க்கக் கோட்பாடுகளுக்கு, பாரம்பரியங்களுக்கு, வழிபாடுகளுக்கும் அடிமைகளாகயிருக்கின்றனர். இவ்வகையான எந்த பழக்க வழக்கங்களும் வேதாகமத்தில் குறிப்பிடவுமில்லை, தேவனால் அங்கிகரிக்கப்படவுமில்லை. மத்தேயு 15:9-ல் இயேசு பரிசேயருடைய உபதேசங்களைக் குறித்து, "மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறீர்கள்" என்றார்.

நாம் எப்படியிருக்கிறோம்? இவ்விதமான மத பாரம்பரியங்களும், மனிதக் கோட்பாடுகளும் நம்மை அடிமைப்படுத்தியிருக்கிறதா? தேவன் ஒருபோதும் நீங்கள் செய்யும்படி கேட்காத மனித போதனைகள், கற்பனைகளுக்கும் அடிமையாயிருக்கிறீர்களா? நமக்கு ஒரு நம்பிக்கை உண்டு ஏனென்றால் சத்தியம் நம்மை இவ்வகையான கட்டுகளிலிருந்து விடுதலையாக்கும்.

சாத்தான் பொய்க்குப் பிதாவாயிருக்கிறான் (யோவா.8:44) ஆனால் சத்தியத்தோடுகூட நம்பட்சத்தில் சர்வத்தையும் ஆளுகிற இயேசு நமக்குத் தலைவராகவும் கர்த்தாதி கர்த்தராகவுமிருக்கிறார். இயேசுவும் அவருடைய வார்த்தையும் நம்மை விடுதலையாக்கும்.

**மூன்றாவது,** நாம் சத்தியத்தை அறிந்து கொள்வது மாத்திரமல்ல மேலும் சத்தியம் நம்மை விடுதலையாக்குவது மட்டுமல்ல, நாம் அனைவரும் அந்த சத்தியம் இயேசுவுக்குள் காணப்படுகிறது என்பதையும் அறிந்து கொள்ளவேண்டியது அவசியம். இயேசு, "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" (யோவா.14:6) என்றார்.

நாம் சத்தியத்தைத் தேடுவோமானால், இயேசுவே சத்தியமானால் பிறகு அந்த சத்தியத்தைக் கண்டு இயேசுவினிடத்திற்குச் செல்லவேண்டும்.

இயேசு "...நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என்

சீஷராயிருப்பீர்கள்; சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்றான்" இவ்வார்த்தைகள் நம்மை விடுதலையாக்கும். ஆனபடியால் சத்தியம் என்பது விலையேறபெற்ற ஒன்று. சத்தியம் மிகவும் முக்கியமான ஒன்றாக வேதாகமத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. 1பேது.1;22 ஐ வாசிக்கையில் சத்தியம் நம் ஆத்துமாக்களை சுத்தமாக்குகிறது என அறிந்து கொள்கிறோம். மேலும் 2தெச.1:7-9 ஐ வாசிக்கையில் நித்திய ஆக்கினைக்கு நாம் நீங்க வேண்டுமென கற்றுக் கொள்கிறோம். நாம் அனைவரும் நம்முடைய உண்மை, நேர்மையின்படியல்ல வேதசத்தியத்தின்படியே நியாயந்தீர்க்கப்படுவோம்.

அன்பு சகோதரிகளே, சத்தியத்தை அறிவோம், சத்தியம் நம்மை விடுதலையாக்கும், நம்மை மாத்திரமல்ல சத்தியத்தை அறியாமல் அன்றாடம் மாண்டுகொண்டிருக்கிற மற்றவர்களையும் சத்தியம் விடுதலையாக்கும்படி சத்தியத்தை அறிவிப்போம். கர்த்தர் நம் முயற்சிகளை ஆசீர்வதிப்பாராக!

### கேள்விகள்

1. எதை அறியும்போதும், எது உங்களை விடுதலையாக்கும்?
2. பொய்க்குப் பிதா யார்?
3. சத்திமாயிருப்பவர் யார்?
4. எப்போது நாம் இயேசுவின் மெய்யான சீஷர்களாயிருப்போம்?
5. பரிசேயர் எப்படிப்பட்ட ஆராதனை செய்தார்கள் எனக்கூறப்படுகிறது?



## நமக்காக வேண்டுதல் செய்கிறவர் ஒருவர் உண்டு
## There is an Intercesser for us

**12**

இனிக்காலம் செல்லாது! தேவனற்றவர்களைப் போல் கிறிஸ்தவர்களாகிய நாம் அசதியாய் இருக்கக் கூடாது. கண்ணுக்குத் தெரியாத ஒரு நோய்கிருமி உலகையே உலுக்கிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் நாம் எப்போது பார்த்தாலும் நம்மைப் பற்றியும், நம் பிள்ளைகளைக் குறித்தும், நம் பேரப்பிள்ளைகளைக் குறித்தும் பெருமை பாராட்டிக்கொண்டு, ஏதோ இவ்வுலகில் யாருக்குமே கிடைக்காத பொக்கிஷம் நமக்கு கிடைத்திருப்பதைப் போல இருப்போமென்றால் தேவன் நம்மைக் குறித்து வேதனை கொள்ளமாட்டாரா? இன்னும் அநேக ஸ்திரீகள், இந்த **Lockdown** காலம் கொடுமையான ஒன்றாக இருக்கிறதே என்று மனஉளைச்சலுக்கும், மன அழுத்தத்திற்கும் உள்ளாகி இருப்பர். போதாகுறைக்கு தங்கள் புருஷனைக்குறித்தும், உறவுகளைக் குறித்தும் குறைசொல்லிக் கொண்டு தங்களையே உருவக் குத்திக் கொண்டு, எங்களுக்காக வேண்டிக்கொள்ளுங்கள் எனக் கதறுகிறவர்களும் உண்டு. இப்படியே சொல்லிக் கொண்டு போனால் இன்னும் எத்தனை எத்தனையோ பிரச்சனைகள்!

வேதம் சொல்லுகிறது இவையெல்லாம் இப்பூமிக்குரியவைகள். "...மனுஷருடைய மகிமையெல்லாம் புல்லின் பூவைப்போலவுமிருக்கிறது; புல் உலர்ந்தது, அதின் பூவும் உதிர்ந்தது" (1பேது.1:24). "....பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம்" (2பேது.3:10) என்று சொல்லுகிறது. இப்படியிருக்க அழிந்து போகாத நித்திய ஜீவனை எதிர்நோக்கி ஆனந்தமாய் வாழப்பிரயாசப்படுவோம். நாம் மாம்சந்தானே பலவீனமுள்ளவர்கள்தான் நாம் அதிகமாய் நேசிக்கும் ஒருவர் நம்மை வெறுத்து ஒதுக்கி விடுவார்களென்றால் இந்த பூமியே இருண்டது போல் காணப்படலாம். தேவன் நாம் சமாதானமுள்ளவர் களாகவும் எப்போதும் சந்தோஷமுள்ளவர்களாகவும் இருக்கவே விரும்புகிறார்.

மேலும் ஸ்திரீகளாகிய நாம் நம்முடைய கணவனுக்கு ஏற்றதுணையாக இருக்கவும், புத்தியுள்ள ஸ்திரீகளாய் இருந்து கொண்டு வீட்டைக் கட்டவும், வீட்டிலே தரிந்திருந்து பிள்ளைகளை கர்த்தருக்குள் வளர்க்கவும் தேவபக்தியுள்ள ஸ்திரீகளாக அடக்கமுடையவர்களாகவும் அமைதலுள்ள ஆவியை உடையவர்களாய் இருக்க வேண்டுமென்பதே தேவ ஆவியானவரின் விருப்பமாக இருக்கிறது என்பதை வேதாகமத்தில் பல இடங்களில் வாசிக்கிறோம்.

ஒருவேளை, போதனை செய்வதற்கு இது எளிதாக இருக்கலாம், ஆனால் வாழ்க்கையில் பலவிதமான ஏமாற்றங்கங்களை அநுபவிக்கிறவர்களுக்குத் தான் இதன் வலியும் வேதனையும் தெரியும் என்று நினைக்கலாம். இருக்கட்டுமே! எல்லா மனுஷருக்கும் ஏற்படுகிற சோதனை தானே! இதையே 1கொரி.10:13-ல் மனுஷருக்கு நேரிடுகிற சோதனையேயல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை,

தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார்..." என்று வாசிக்கிறோம். நமக்கொருவர் உண்டு, நம்மை உண்டாக்கினவர் நம்மை நேசிக்கிறார், அவர் ஒருபோதும் நம்மை மறக்கிறவருமல்ல, நம்மை புறம்பாக்குகிறவருமல்ல, நம்மைக் கைவிடுகிறவருமல்ல, நம்மை விட்டு விலகுகிறவருமல்ல என்பதை நாம் மறக்கக்கூடாது.

நாம் கிறிஸ்தவர்களாயிருப்போமானால், நமக்கு ஒருவர் இருக்கிறார் என்பதை எப்போதும் மறந்துவிடாதிருப்போம். வேதம் சொல்லுகிறதைக் கவனிப்போம். "அந்தப்படியே ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவிசெய்கிறார் நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ள வேண்டியதின்னதென்று அறியாமலிருக்கிறபடியால், ஆவியானவர்தாமே வாக்குக் கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார்" என்று எழுதப்பட்டுள்ளது (ரோம.8:26). இவ்வசனம் கூறுகிறபடி அநேக வேளைகளில் அநேக ஸ்திரீகள் தேவனை நோக்கி ஏற்றபடி வேண்டிக் கொள்வதில்லை, எப்படி வேண்டிக் கொள்வது என்று அறியாமலுமிருக்கின்றனர். ஆனபடியால் தங்களுடைய இக்கட்டான சூழ்நிலைகளில் தங்களுக்காக ஜெபிக்கும்படி மற்றவர்களை நாடுகின்றனர். அத்தோடு தேவனிடத்தில் மாத்திமே சொல்ல வேண்டிய காரியங்களை உலக ஜனங்களிடம் பகிர்ந்து கொள்ளுகின்றனர். ஆவியானவர்தாமே வாக்குக் கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறவராயிருக்கும் போது, அவரைவிட்டு விட்டு மனுஷரை நாடிச் செல்லுகின்றனர். மனுஷரை நம்பி முடிவிலே மோசம் போய்விட்டேன் என்கின்றனர்.

கிறிஸ்தவ ஸ்திரீகளுக்கு ஒரே ஒரு பெரிய நம்பிக்கை, நமக்காக ஜீவனையே கொடுத்த இயேசு மாத்திரமே. இயேசு "என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன்" என்றார் (யோவா.14:14). என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை என்கிறார். இப்படியிருக்கும் போது நாம் ஏன் மனுஷரிடம் சென்று முறையிடவேண்டும். மேலும் "...கிறிஸ்துவே மரித்தவர்; அவரே எழுந்துமிருக்கிறவர்; அவரே தேவனுடைய வலது பாரிசத்திலும் இருக்கிறவர்; நமக்காக வேண்டுதல் செய்கிறவரும் அவரே" (ரோம.8:34) என்று வாசிக்கின்றோம். இவ்வசனங்களெல்லாம் ஜீவனாகவும் உண்மையாகவும் இருக்கிறது. நாம் ஆவிக்குரியவர்களாக இருப்போமானால் ஆவிக்குரிய காரிங்களை சிந்திப்போம்.

தேவசித்தமும் அதுவே! அஞ்ஞானிகளைப்போல அதாவது தேவனற்றவர் களைப்போல சுயநலமாக வாழ்வதை விட்டுவிட்டு பிறர் நலனுக்காக வாழக் கற்றுக்கொள்வோம். வேதம் சொல்லுகிறது, "அவனவன் தனக்கானவைகளையல்ல, பிறருக்கானவைகளையும் நோக்குவானாக" (பிலி.2:4).

இயேசு கிறிஸ்து பிதாவை நோக்கி ஏறெடுத்த ஜெபத்தைக் குறித்து யோவான் 17ம் அதிகாரத்தில் வாசிக்கலாம். "பிதாவே,...நீர் உலகத்தில் தெரிந்தெடுத்து எனக்குத் தந்த மனுஷருக்கு உம்முடைய நாமத்தை வெளிப்படுத்தினேன். அவர்கள் உம்முடையவர்களாயிருந்தார்கள், அவர்களை எனக்குத் தந்தீர் அவர்கள் உம்முடைய வசனத்தைக் கைக்கொண்டிருக்கிறார்கள்....... நான் அவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறேன்; ...நீர் எனக்குத் தந்தவர்களுக்காக வேண்டிக் கொள்ளுகிறேன்; ... நீர் அவர்களை உலகத்திலிருந்து எடுத்துக்கொள்ளும்படி நான்



வேண்டிக்கொள்ளாமல், நீர் அவர்களைத் தீமையினின்று காக்கும்படி வேண்டிக் கொள்ளுகிறேன்" என்று ஜெபித்தார் (யோவா.17:5-15). இவ்வசனங்களில் "நீர் எனக்குத் தந்தவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறேன்" என்கிறார். நம்மை மீட்கும் பொருளாகத் தம்மைத் தாமே ஒப்புக்கொடுத்த கிறிஸ்து இயேசுவை விசுவாசித்து ஏற்றுக்கொண்டு நம்முடைய பாவங்களின் மன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றவர்களாக இருப்போமென்றால் நாம் கிறிஸ்துவுக்குரியவர்களாகவும் இருப்போம். அப்படியிருக்கும்போது நமக்காக அவர் வேண்டிக்கொள்வார் அல்லவா? இது மாத்திரம் அல்ல வசனம் 20ல் "நான் இவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறது மல்லாமல், இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர் களுக்காகவும் வேண்டிக் கொள்ளுகிறேன்" என்றார்.

அவருடைய சீஷர்களுக்கும் சீஷர்கள் மூலமாக தேவனுடைய வார்த்தைகளை விசுவாசித்து அவரை ஏற்றுக்கொள்ளுகிறவர்களுக்காகவும் வேண்டிக்கொள்ளு கிறேன் என்றார். இப்படி நமக்காக வேண்டுதல் செய்ய இயேசுவானவரும், பரிசுத்த ஆவியானவரும் இருக்கும் போது நாம் ஏன் மற்றவர்களை நோக்கிச் செல்லவேண்டும். இன்னும் பால் குடிக்கிற குழந்தைகளைப் போல் இல்லாமல் விசுவாசித்து சந்தோஷத்துடனும் சமாதானத்துடனும் வாழுவோம். அவர் சகலத்தையும் நன்மையாக முடிசூட்டுவார்.

தேவன் கிறிஸ்தவ ஸ்திரீகளாகிய நமக்குக் கொடுத்திருக்கிற பொறுப்புகள் அதிகம். இன்று உலகெங்கும் நிமிடத்திற்கு நிமிடம் ஜீவனுள்ள தேவனையும் கிறிஸ்துவின் மீட்பையும் பெற்றுக்கொள்ளாமலும் அறியாமலும் மரித்துக் கொண்டிருக்கிற ஜனங்களைக் குறித்து ஒரு நிமிடம் சிந்திப்போம். அவர்கள் படும் வேதனையை அறிவோமானால் நமக்காக அல்ல, அவர்களுக்காக வேண்டிக் கொள்ளுவோம். 1தீமோ.2:1ம் வசனம், "நான் பிரதானமாய்ச் சொல்லுகிற புத்தியென்னவெனில், எல்லா மனுஷருக்காகவும் விண்ணப்பங்களையும் ஜெபங்களையும் பண்ணவேண்டும்" என்று சொல்லுகிறது. ஏனென்றால் "நாம் எல்லாபக்தியோடும் நல்லொழுக்கத்தோடும் கலகமில்லாமல் அமைதலுள்ள ஜீவனம் பண்ணும்படிக்கு ராஜாக்களுக்காகவும், அதிகாரமுள்ள யாவருக்காகவும் அப்படியே செய்ய வேண்டும் நம்முடைய இரட்சகராகிய தேவனுக்கு முன்பாக அது நன்மையும் பிரியமுமாயிருக்கிறது" (1தீமோ.2:2-3) என்றெழுதப்பட்டுள்ளது.

மேலும் "எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும் சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும் அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்" (வச.4) கிறிஸ்தவ மார்க்கம் என்பது பிறர் நலம் கருதும் மார்க்கமாகும். நம் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து எல்லாரையும் இரட்சிக்கும்படிக்கு மீட்கும் பொருளாகத் தம்மை தாமே ஒப்புக்கொடுத்தார். அவர் இவ்வுலகத்திற்கு மாம்சத்தில் வந்தபோது தனக்காகவும் தம்மைப் பெற்றெடுத்த இவ்வுலக பெற்றோருக்காகவும், அந்தப் பெற்றோருக்குப் பிறந்த பிள்ளைகளாகிய சகோதர சகோதரிகளுக்காகவும் மட்டும் வாழ்ந்ததாகவோ, ஜெபித்ததாக வேதத்தில் எங்கும் சொல்லப்படவில்லை. எனவே தான் நாமும் அவரைப் போல பிறருக்கானவைகளையும் நோக்க வேண்டும்.

கிறிஸ்துவானவர் கிறிஸ்தவர்களுக்கு மட்டும் உரியவர் அல்ல. உலகத்தின் அத்தனை ஜீவஜந்துக்களுக்கும் அனைத்து மொழி, நிறம், மதம், தேசம் சார்ந்த ஜனங்களுக்கும் ஒரே வழியானவர், மீட்பருமானவர். பிதாவினால் வானத்தின் கீழே அவருடைய நாமமே அல்லாமல் வேறொரு நாமம் கொடுக்கப்படவில்லை. இதையெல்லாம் தெரிந்த, கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொள்ளுகிற ஸ்திரீகள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், தனக்காகவே வாழாமல், தனக்காகவே ஜெபிக்காமல் எல்லா மனுஷருக்காகவும் ஜெபங்களையும் வேண்டுதல்களையும் பண்ண வேண்டும். இதுவே நம்முடைய இரட்சகராகிய தேவனுக்கு முன்பாக நன்மையும் பிரியமுமாயிருக்கிறது (1தீமோ.2:3) இவ்வாறு செய்வோமா?

கொரோனா போன்ற கொள்ளை நோயினால் சாவதைக் காட்டிலும் இயேசுவை அறிந்து கொள்ளாமல் சாவதே பெரியஇழப்பும், நித்திய இழப்புமாகும். சிந்திப்போம்! ஜெபிப்போம்!! நமக்காக வேண்டுதல் செய்கிறவர் தாமே நமக்கு உதவிசெய்வாராக!!! ஆமென்.

### கேள்விகள்

1. பூமியும் அதிலுள்ள எவைகளும் எறிந்து அழிந்துபோம்?
2. ஆவியானவர்தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு ஏன் நமக்காக வேண்டுதல் செய்கிறார்?
3. எல்லா மனுஷரும் என்ன செய்யப்படவும் எதை அடையவும் அவர் (தேவன்) சித்தமுள்ளவராயிருக்கிறார்?
4. நமக்காக மரித்தும் எழுந்தும் தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருப்பவரும் யார்?
5. எல்லா மனுஷருக்காக நாம் என்ன என்ன செய்யவேண்டும்?



## எத்தனை நன்மை! எத்தனை இன்பம்!!
## How Good! How Pleasant!!

**13**

**எ**த்தனை நன்மை, எத்தனை இன்பம் சகோதரர் ஒருமித்து வாசம்பண்ணும் போது என்று சங்கீதக்காரனாகிய தாவீது 133-ம் சங்கீதம் 1-ம் வசனத்தில் மிக அழகாய் பாடியுள்ளார். அன்பு சகோதரிகளே, இந்த நன்மையும் இந்த இன்பமும் எப்போது வரும்? ஒருமித்து வாசம்பண்ணும் போது. ஏக சிந்தையுள்ளவர்கள் அதாவது ஒரே காரியத்தைக் குறித்த விருப்பமுள்ளவர்கள் தான் ஒருமித்து இருக்கமுடியும். இவ்விதமான ஒருமித்த சிந்தனை ஆவிக்குரிய அல்லது தேவனுக்கடுத்த சிந்தனையாயிருக்கும் போது நிச்சயமாகவே நன்மையும் இன்பமும் நம்மை சூழ்ந்து கொள்ளும். இத்தகைய சிந்தைகொண்டிருந்த இரு சகோதரிகளைக் குறித்து லூக்.1:36-56 வரை வாசிக்கலாம்.

**மரியாளும் எலிசபெத்தும்** ஒரே இனத்தைச்சேர்ந்தவர்கள். ஆனால் இவர்கள் தங்கள் இனம் ஜனத்தைக் குறித்த சம்பாஷனையில் ஈடுபடவில்லை. இனத்தைக் குறித்த பெருமைகளையோ அல்லது வேறு எந்த உலகப்பிரகாரமான காரியத்தை பற்றியோ சம்பாஷிக்கவில்லை மாறாக இருவரும் தேவபக்தியுள்ளவர்களாய் தேவனையே புகழ்ந்து பேசிக் கொண்டிருந்ததை இவ்வசனங்களில் வாசிக்கிறோம். தேவதூதனால் அறிவிக்கப்பட்டபடி தன் இனத்தாளாகிய எலிசபெத்து தன் முதிர்வயதிலே ஒரு புத்திரனைக் கர்ப்பந்தரித்திருக்கிறாள் எனக் கேள்விப்பட்டு யூதாவிலுள்ள ஒரு பட்டணத்திற்குத் தீவிரமாய்ப் போய், சகரியாவின் (எலிசபெத்தின் கணவன்) வீட்டிற்குள் பிரவேசித்து, எலிசபெத்தை வாழ்த்தினாள் என வாசிக்கிறோம். எப்பேர்பட்ட அன்பு! முதிர்வயதாகி மலடியாயிருந்த எலிசபெத்தைக் கர்த்தர் கடாட்சித்துள்ளார் என்று கேள்விபட்டு தீவிரமாய் போய் அவளை வாழ்த்தியிருக்கிறாள்.

அன்பு சகோதரியே, சற்றே இக்காலத்து சகோதரிகளைக் குறித்து சிந்தித்துப்பார்ப்போம். இன்றைய நாட்களில் கிறிஸ்துவுக்குள்ளிருக்கிறேன் எனச் சொல்லிக் கொள்ளுகிற சகோதரிகள் கூட கர்த்தர் மற்றவர்களுக்கு அருளிச் செய்யும் ஆசீர்வாதங்களைக் குறித்து பொறாமைப்படுகின்றனர். பொறுக்க அவர்களுக்கு மனதில்லாது போகிறது. பவுலுங்கூட 'என் இனத்தானாகிய ஏரோதியோனை வாழ்த்துங்கள்' என்று ரோமர்16:11-ல் எழுதுகிறார். ஆனால் அநேகர் இனத்தாரையும் வாழ்த்துவதில்லை கிறிஸ்துவுக்குள்ளிருக்கிற சகோதரிகளையும் வாழ்த்துவதில்லை. மற்றவர்கள் வாழ பொறுக்காதவர்களாகவே இருக்கின்றனர். ஆனால் கர்த்தர், "எவன்மேல் இரக்கமாயிருக்கச் சித்தமாயிருக்கிறாரோ அவன் மேல் இரக்கமாயிருக்கிறேன்" என்கிறார் (ரோமர்9:18) அப்படியிருக்க கிறிஸ்துவுக்குள் ஏக சிந்தையாயிருக்கிற யாவரும் நம் சகோதரிகளிடத்தில் உண்மையான அன்புகூரக்கடவோம். நம் இனம், ஜனம் என்று சொல்லி சுயநலமாய்

வாழாதிருப்போம். கிறிஸ்து, யார் எனக்கு சகோதரர்கள், யார் எனக்குத் தாயார், "பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவன் எவனோ, அவனே எனக்குச் சகோதரனும் சகோதரியும் தாயுமாய் இருக்கிறான் என்றார்" (மத்.12:50) இந்த சிந்தை நமக்குள்ளும் இருக்கட்டும்.

பாருங்கள், எலிசபெத்து மரியாளின் வாழ்த்துதலைக் கேட்டபொழுது, அவளுடைய வயிற்றிலிருந்த பிள்ளை துள்ளிற்று; எலிசபெத்து பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு, உரத்தசத்தமாய்; ஸ்திரீகளுக்குள்ளே நீ ஆசீர்வதிக்கப்பட்டவள், உன் கர்ப்பத்தின் கனியும் ஆசீர்வதிக்கப்பட்டது. என் ஆண்டவருடைய தாயார் என்னிடத்தில் வந்தது எனக்கு எதினால் கிடைத்தது. இதோ, நீ வாழ்த்தின சத்தம் என் காதில் விழுந்தவுடனே, என் வயிற்றிலுள்ள பிள்ளை களிப்பாய்த் துள்ளிற்று. விசுவாசித்தவளே பாக்கியவதி, கர்த்தராலே அவளுக்குச் சொல்லப்பட்டவைகள் நிறைவேறும் என்றாள்" (லூக்.1:41-45). ஒருவருக்கொருவர் எப்படி வாழ்த்திக் கொள்ளுகிறார்கள்! முதிர்வயதாகிய எலிசபெத்து இளையவளாகிய மரியாளை என் ஆண்டவருடைய தாயார் என்றும், பாக்கியவதி என்றும் சொல்லி வாழ்த்துகிறாள். மூத்தவளாகிய தனக்கு இந்த பாக்கியம் கிடைக்கவில்லையே, நாமும் தானே கர்த்தரிட்ட சகல கற்பனைகளின்படியேயும் நியமங்களின்படியேயும் குற்றமற்றவர் களாய் நடந்து, தேவனுக்கு முன்பாக நீதியுள்ளவர்களாயிருந்தோம் (வச.6) என்று பொறாமைப்படவில்லை. 'அன்புக்குப் பொறாமையில்லை' என்ற வசனத்திற்கேற்ப இருவரும் மாறி மாறி வாழ்த்துவதோடுகூட தேவனையும் மகிமைப்படுத்துகிறார்கள்.

அது மாத்திரமல்ல, "மரியாள் ஏறக்குறைய மூன்று மாதம் அவளுடனே இருந்து, தன் வீட்டுக்குத் திரும்பிப்போனாள்" (வச.56) என்று வாசிக்கிறோம். அப்படியானால் கர்ப்பந்தரித்திருக்கிற எலிசபெத்துக்கு மூன்றுமாதம் உதவியாக இருந்திருக்கிறாள். அப்படி உதவியாகயிருந்த நாட்களில் தேவனைக் குறித்தும், அவருடைய மகத்துவங்களைக் குறித்தும் பேசி, தேவனை மகிமைப்படுத்தி யிருக்கிறாள். "என் ஆத்துமா கர்த்தரை மகிமைப்படுத்துகிறது.... வல்லமையுடையவர் மகிமையானவைகளை எனக்குச் செய்தார்; அவருடைய நாமம் பரிசுத்தமுள்ளது..... தம்முடைய புயத்தினாலே பராக்கிரமஞ் செய்தார்;" (வச.46-54) என்றெல்லாம் சொல்லி தேவனைத் துதித்து மகிமைப்படுத்துகிறாள்.

அன்பு சகோதரிகளே, நீங்கள் கிறிஸ்துவுக்குள்ளிருக்கிற உங்கள் சகோதரிகள் யாரையாவது கண்டால் இவ்வாறு கர்த்தருக்கடுத்த காரியங்களைப் பற்றி பேசுகிறீர்களா? அல்லது உலகக் காரியங்களையும், வீணான பேச்சுகளையும் பேசி ஆவியானவரைத் துக்கப்படுத்துகிறீர்களா? காலஞ் செல்லாததாயிருக்கிறபடியால் காலத்தைப்பயன்படுத்திக் கொள்வோம், கர்த்தர் நமக்குச் செய்த நன்மைகளுக் காகவும், நம்முடைய சகோதரிகளுக்குச் செய்த நன்மைகளுக்காகவும் ஒருமித்தவர்களாயிருந்து கர்த்தரை மகிமைப்படுத்துவோம். கர்த்தருடைய மகத்துவங்களை ஒருவருக்கொருவர் சொல்லிக் கொண்டு ஒருவரை ஒருவர் ஆவிக்குரிய ஜீவியத்தில் தாங்கி பலப்படுத்துவோம். அநேக நேரங்களில் ஞானஸ்நானம் பெற்று, தேவனுடைய குடும்பத்தில் பிறந்து, தேவனுடைய



பிள்ளைகளாயிருக்கிறவர்கள் கூட சோதனை நேரங்களில் சோர்ந்து போய்விடுகின்றனர். இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் நம்முடைய சகோதரிகளிடம் கர்த்தருடைய மகத்துவங்களையும் அன்பையும் சொல்லி ஸ்திரப்படுத்துவோம். கர்த்தர் நம்முடைய அன்பு சகோதரிகளுக்குச் செய்யும் நன்மையான காரியங்களுக்காக ஒருமனதோடுகூட கர்த்தரை மகிமைப்படுத்துவோம். சகோதரிகள் ஒருமித்து வாசம் பண்ணும்போது நன்மையும் இன்பமும் சூழ்ந்துகொள்ளும். இருதயங்களை ஆராய்ந்து அறிகிற கர்த்தருக்கு முன்பாக நம் இருதயம் செம்மையாக இருக்கட்டும். கர்த்தர் தம்முடைய நன்மையினாலும் இன்பத்தினாலும் நம்மை திருப்திப்படுத்துவாராக!

## கேள்விகள்

1. மரியாளும் எலிசபெத்தும் எதைக்குறித்து பேசிக்கொண்டு இருந்ததாக லூக்கா 1:36-51 சொல்லுகிறது?
2. இயேசுவுக்கு சகோதரரும் சகோதரியும் தாயுமாய் இருக்கிறவர்கள் யார்?
3. மரியாள் ஏறக்குறை எத்தனை மாதம் எலிசபெத்துடன் இருந்தாள்?
4. வல்லமையுடையவர் மகிமையானவைகளை எனக்குச் செய்தார் என்றவள் யார்?
5. எது நன்மையும் இன்பமும் என்று தாவீது சொல்லுகிறான்?

# <u>நீங்கள் உயர்த்தப்பட வேண்டுமா?</u>
# <u>Should You Be Exalted?</u>

**14**

**அ**ன்பான சகோதரிகளே, இவ்வருடத்தில் நீங்கள் உயர்த்தப்பட வேண்டுமா? அப்படியானால் ஒன்று செய்யுங்கள் "மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையுள்ளவர்களாக எண்ணக்கடவீர்கள்" (பிலி.2:3) என்ற அன்பின் கட்டளையை நம் முன் வைக்கிறது பரிசுத்தவேதாகமம். இக்கட்டளையானது கைக்கொள்ளுவதற்குச் சற்றுக்கடினமாயிருக்கலாம். வீட்டிலும் சரி, வேலைபார்க்கும் இடங்களிலும் சரி, ஆவிக்குரிய உலகிலும் சரி, எங்குபார்த்தாலும் 'பெருமை' மனமேட்டிமை, அகந்தை போன்ற ஆகாத பிசாசின் குணங்கள் தலைவிரித்தாடுகிறது. கிறிஸ்துவுக்குள்ளிருக்கும் நமக்கு இக்குணங்களைக் கொண்ட ஜனங்கள் மத்தியில் வாழ்வது சிலவேளைகளில் மிகக்கடினமாக இருக்கலாம். கிறிஸ்துவை அறியாத, அல்லது ஏற்றுக்கொள்ளாத மற்றவர்களைக் குறித்து, ஆதியும் அந்தமுமானவர் சொல்லுகிறார்; "அநியாயஞ் செய்கிறவன் இன்னும் அநியாயஞ்செய்யட்டும் அசுத்தமாயிருக்கிறவன் இன்னும் அசுத்தமாயிருக்கட்டும்....." (வெளி.22:11) எனக் கூறும் வேளையில், இயேசுவின் இரத்தத்தால் கழுவப்பட்டு, தேவனுடைய குடும்பத்தில் பிறந்து, தேவனுடைய பிள்ளையாய் ஜீவிக்கிற நம்மைப் பார்த்து ".....நீதியுள்ளவன் இன்னும் நீதிசெய்யட்டும்; பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தமாகட்டும்" (வெளி.22:11) எனக் கூறுகிறார். அன்பு சகோதரியே நாம் உயர்த்தப்படவேண்டுமானால் மற்றவர்களை மேன்மையுள்ளவர்களாக எண்ணுவோம்.

இன்று கிறிஸ்தவ வட்டாரங்களில் இஸ்ரவேலருக்குக் கொடுக்கப்பட்ட சில வாக்குத்தத்தங்களைப் பிடித்துக்கொண்டு கர்த்தர் என்னை வாலாக்காமல் தலையாக்குவார் கீழாக்காமல் மேலாக்குவார் என உரிமைபாராட்டி அநேக நேரங்களில் ஏமாற்றம் அடைகின்றனர். நிச்சயமாகவே தேவன் நம்மை இவ்விதமாய் உயர்த்த வல்லவர். ஆனபோதிலும் தேவனால் உயர்த்தப்பட வேண்டுமானால் இயேசுவின் அடிச்சுவடை பின்பற்றவேண்டியது அதிமுக்கியமானது. இயேசு நமக்கு மாதிரியை வைத்துச்சென்றார். நம்முடைய ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசுவை நோக்கிப் பாருங்கள். "அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், .......அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார். ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி.... எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்" (பிலி.2:6-11). இயேசுவானவர் தம்மைத் தாமே தாழ்த்தினார் ஆதலால் தேவனால் உயர்த்தப்பட்டார். நீங்களும் நானும் எவ்வாறிருக்கிறோம்? சற்றே நம்மை நாமே நிதானித்து அறிவோம். மனமேட்டிமை, பெருமை, அகந்தை போன்றவைகள் நம்மிடம் காணப்படுகிறதா? அல்லது



மனத்தாழ்மை நம்மில் உள்ளதா? இல்லையென்றால் நாம் தேவனுடைய பிள்ளைகள், இவ்வுலகத்தில் பிசாசின் பிள்ளைகளுக்குமுன் நாம் எப்படி தாழ்ந்து போவது என எண்ணுகிறீர்களா?

அண்டசராசரங்களை உண்டாக்கினவர் தேவனுடைய மடியிலிருந்தவர் தம்மை தாழ்த்தவில்லையா? தன்னைத் தான் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான் என்ற வசனத்தை நினைவுகூருவோம். மேலும் தேவனுடைய குமாரன் இழிவாய் நடத்தப்பட்டார், துப்பப்பட்டார், ஏளனம்செய்யப்பட்டார். அவரை உயர்த்தின தேவன், அவருடைய பலத்த கைக்குள் நாம் அடங்கியிருப்போமானால் நம்மையும் உயர்த்துவார். இல்லை இது **Prestige Issue,** என்னால் விட்டுக்கொடுக்க முடியாதென்றால், நாம் மிகுந்த வேதனைப்பட வேண்டியிருக்கும். நாம் பிடிவாதமாய் இருக்கும்போது வெற்றியைப்பெறுவது கூடாத காரியம். ஒன்றையும் வாதினாலாவது வீண்பெருமையினாலாவது செய்யாமல், மனத்தாழ்மையினாலே ஒருவரை யொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள் (பிலி.2:3).

சிலவேளைகளில் நம்முடைய கிறிஸ்தவ ஓட்டத்தில் பிரச்சனைகள் வரலாம். நம்முடைய பக்தியின் ஜீவியத்தையும், உண்மையான நடக்கையினையும் உலகத்தார் பார்த்து பொறுக்கக் கூடாமல் பொறாமை கொண்டு நம்மை குற்றப்படுத்திக் கொண்டேயிருக்கலாம். அப்பொழுது நம்மால் மனத்தாழ்மையுடன் நடந்துகொள்ள முடியாமல் நம்முடைய கோபத்தினை வெளிப்படுத்திவிடுவோம். ஆனால் நாமோ கிறிஸ்துவின் ஆவியை உடையவர்களாக நம்முடைய ஆவியை அடக்குகிறவர்களாக இருக்கவேண்டும். தேவனுடைய வசனங்களை நினைவு கூர்ந்து இயேசு வார்த்தையினாலே பிசாசை ஜெயித்ததுபோல நாமும் தேவவசனங்களால் பிசாசின் கிரியைகளை மேற்கொள்ளவேண்டும். நம்மை இவ்வுலகம் வேதனைப் படுத்தும்போது, இயேசுவையும் வேதனைப்படுத்தியது என்பதை நினைத்து பொறுமையோடிருப்போம்.

வேதபாரகர், பிரதான ஆசாரியர், சதுசேயர், பரிசேயர் அனைவரும் இயேசுவை குற்றப்படுத்தும்படியே வகைதேடினார்கள். சிலுவையின் கடைசிபரியந்தமும் ஏளனம் செய்தனர். "மற்றவர்களை ரட்சித்தான், தன்னைத் தான் ரட்சித்துக்கொள்ளத் திராணியில்லை, இவன் இஸ்ரவேலின் ராஜாவானால் இப்பொழுது சிலுவையிலிருந்து இறங்கிவரட்டும், அப்பொழுது இவனை விசுவாசிப்போம், தன்னைத் தேவனுடைய குமாரனென்று சொல்லி, தேவன் மேல் நம்பிக்கையாயிருந்தானே; அவர் இவன்மேல் பிரியமாயிருந்தால் இப்பொழுது இவனை இரட்சிக்கட்டும் என்றார்கள்" (மத்.27:42-43) ஆனால் இயேசுவோ, ".....பிதாவே இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே என்றார்..." (லூக்.23:34) முடிவில் என்னநடந்தது? "...தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி... எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தைத் அவருக்குத் தந்தருளினார் (பிலி.2:9-11). சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார் (பிலி.2:8) தேவனால் உயர்த்தப்பட்டார்.

அன்பு சகோதரியே, கிறிஸ்துவின் சிந்தை நம்மில் இருக்குமானால், கிறிஸ்துவினிமித்தம் மனத்தாழ்மையாயிருப்போமானால், தேவனுக்குக் கீழ்ப்படிந்திருப்போமானால், மேலும் அவருடைய பலத்தகைக்குள் அடிங்கியிருப் போமானால், நாமும் உயர்த்தப்படுவோம். ஆவிக்குரிய பெருமை மற்றும் சரீரத்திற்குரிய பெருமைகளை இப்புத்தாண்டில் நம்மைவிட்டு அகற்றுவோம். “கர்த்தருக்கு முன்பாகத் தாழ்மைப்படுங்கள், அப்பொழுது அவர் உங்களை உயர்த்துவார்” (யாக். 4:10).

### கேள்விகள்

1. எதினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையுள்ளவர்களாக எண்ணவேண்டும்?
2. எல்லா நாமத்திற்கும் மேலான நாமம் எவருக்குத் தந்தருளப்பட்டது?
3. இயேசு எது பரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி தம்மைத்தாமே தாழ்த்தினார்?
4. பிதாவே இவர்களுக்கு மன்னியும் என்று சொல்லி யாருக்காக இயேசு வேண்டிக்கொண்டார்?
5. நாம் எப்போது உயர்த்தப்படுவோம்?



# மகதலேனா மரியாள்
# Mary Magdalene

**15**

மரியாள் என்பதற்கு ‘கண்ணீர்’ என்று அர்த்தமாம். எபிரெய பாஷையில் (பழைய ஏற்பாட்டு காலத்தில்) மிரியாம் என்பதும் கிரேக்க பாஷையில் (புதிய ஏற்பாட்டு காலத்தில்) மரியாள் என்பதும் ஒன்றுதான் என்று கூறப்படுகிறது.

புதிய ஏற்பாட்டு புத்தகத்தில் மரியாள் என்ற பெயரைத் தரித்திருந்த பல மரியாள்களை பார்க்கமுடிகிறது. அவர்களில்

1. கன்னிமரியாள் - இயேசுவின் தாய்

2. பெத்தானியா மரியாள் - லாசருவின் சகோதரி

3. மகதலேனா மரியாள் - உயிர்த்தெழுந்த இயேசுவை முதல் முதலில் தரிசித்தவள்.

4. கிலெயோப்பா மரியாள் - யாக்கோபு மற்றும் யோசேப்பின் தாய்

5. மாற்கு என்னும் பேர்கொண்ட யோவானின் தாய் மரியாள்.

இவர்கள் அனைவரையும் பல காரியங்களில் விசேஷித்தவர்களாகக் காணமுடிகிறது. புதிய ஏற்பாட்டில் இந்த மரியாள்களைப் பற்றி வாசிக்கும்போது நம்முடைய ஆவிக்குரிய வாழ்வுக்கென்று அநேகக் காரியங்களைக் கற்றுக் கொள்ள முடியும். அவ்வகையில் மகதலேனா மரியாளைப் பற்றி வாசிக்கும் போது என்ன கற்றுக்கொள்ளலாம் என தியானிப்போம்.

இவளைப் பற்றி லூக்கா 8:2, "...ஏழு பிசாசுகள் நீங்கின மகதலேனாள் என்னப்பட்ட மரியாள்" என்று அடையாளப்படுத்துகிறது. அப்படியானால், இவள் ஏழு பிசாசுகளின் பிடியில் மிகுதியாய் அவதிப்பட்டிருந்திருப்பாள். இயேசு கிறிஸ்துவின் வல்லமையினால் அவளைப் பிடித்திருந்த ஏழு பிசாசுகளும் நீங்கின பிசாசுகளின் பிடியிலிருந்து நீங்கி சுகமடைந்த இவள், சுகத்தைப் பெற்றுவிட்டோமே, இனி சமுதாயத்திலும், உற்றார் உறவினர் மத்தியிலும் சுகமாய் வாழுவோம் என்று சென்றுவிடவில்லை. இயேசு கிறிஸ்துவுக்கு ஊழியஞ்செய்ய ஆரம்பித்தாள். இயேசு பட்டணங்கள் தோறும் கிராமங்கள் தோறும் பிரயாணம்பண்ணி தேவனுடைய ராஜ்யத்திற்குரிய நற்செய்தியைக் கூறிப் பிரசங்கித்து வந்தபோது அவருடனே இருந்த மற்ற ஸ்திரீகளோடுகூட அவருக்கு ஊழியஞ்செய்து வந்தாள். தான் பெற்ற சுகத்திற்காக முடிவுபரியந்தம் நன்றியுள்ளவளாக வாழ்ந்தாள்.

இந்நாட்களில் வாழ்ந்து வருகின்ற நாமும்கூட இயேசுகிறிஸ்துவின் கிருபையினாலும் இரக்கத்தினாலும் அநேக நன்மைகளைப் பெற்றிருக்கிறோம்.

எல்லாவற்றிற்கும் மேலாக பாவப் பிசாசுகளின் பிடியிலிருந்து அவருடைய இரத்தத்தினால் நீங்கினவர்களாகவும் கழுவப்பட்டவர்களாகவுமிருக்கிறோம். நம்முடைய வாழ்க்கையில் எவ்வித சோதனையும், வேதனையும் இல்லாமல் சகலமும் சுமூகமாய் இருக்கின்ற போது கர்த்தருக்காய் அதைச் செய்வேன் இதைச் செய்வேன் என்று உற்சாகமாய் காணப்படுவோம். ஆனால் ஏதேனும் கஷ்டங்கள், வியாதிகள், சோதனைகள் வந்துவிட்டால் போதும், அவ்வளவுதான் இயேசுவாவது, சபையாவது, ஜெபமாவது என்று சொல்லி நன்றியறியாதவர்களாக மாறிவிடுகிறோம். யோபு தன் மனைவியைப் பார்த்து, "...நீ பயித்தியக்காரி பேசுகிறதுபோலப் பேசுகிறாய்; தேவன் கையில் நன்மையைப் பெற்ற நாம் தீமையையும் பெறவேண்டாமோ என்றான்" ...(யோபு.2:10). அன்பு சகோதரிகளே, சிந்திப்போம். மகதலேனா மரியாளைப்போல நன்றியுள்ளவர்களாக அவருக்கு ஊழியஞ்செய்வோம்.

மேலும் அவள் இயேசுவின் சிலுவை மரணம் வரைக்கும் சென்றாள். சீஷர்கள் எல்லாரும் தங்களுக்கும் இதுபோன்ற மரண ஆக்கினை வந்துவிடுமோ என்று பயந்து ஓடி ஒளிந்து கொண்டனர் ஆனால் மகதலேனா மரியாளோ தூரத்திலிருந்து பார்த்துக் கொண்டிருந்தாள். யோவா.19:25 ல் "இயேசுவின் சிலுவையினருகே அவருடைய தாயும், அவருடைய தாயின் சகோதரி கிலெயோப்பா மரியாளும், மகதலேனா மரியாளும் நின்றுகொண்டிருந்தார்கள் என வாசிக்கிறோம்.

இது மட்டுமல்லாது, இயேசுவின் சரீரத்தை யோசேப்பு என்ற ஓர் அந்தரங்க சீஷன், அவரை சிலுவையிலிருந்து இறக்கி, மெல்லிய துப்பட்டியில் சுற்றி, கன் மலையில் வெட்டியிருந்த கல்லறையிலே அவரை வைத்து, கல்லறையில் வாசலில் ஒரு கல்லைப் புரட்டிவைத்தான். அவரை வைத்த இடத்தை மகதலேனா மரியாளும் யோசேயின் தாயாகிய மரியாளும் பார்த்தார்கள் என்று மாற்கு 15:45-47 வசனங்களில் வாசிக்கிறோம். இயேசுவைப் பின்சென்று அவருக்கு ஊழியஞ்செய்துவந்தவள் இப்போது இயேசுவைப் பிடித்துச் சென்றுவிட்டது ரோம அரசு, அவரும் சிலுவையில் மரித்துவிட்டார் எல்லாம் முடிந்துவிட்டது என்றிருக்கவில்லை. அவரை வைத்த இடம் வரை சென்று தூரத்திலிருந்து அந்த இடத்தைப் பார்த்தாள். பொதுவாக நம்முடைய கலாச்சாரத்தின்படி ஸ்திரீகள் கல்லறைவரைக்கும் செல்ல அனுமதிக்கப்படமாட்டார்கள்.

ஆனால் இவளோ இயேசுவை விட்டு நீங்காதிருந்தாள் எப்பேர்பட்ட அன்பு! அன்பு சகோதரிகளே, நாம் எப்படியிருக்கிறோம். இயேசுவை பின்பற்றி அவருடைய அடிச்சுவடுகளைப் பற்றிக்கொள்ளவும் அதன்படி நடக்கவும் விரும்புகிறோமா? இல்லை, அப்போஸ்தலர்களைப் போல நம்மை ஒளித்துக்கொண்டு நான் ஒரு கிறிஸ்தவள் என்று சொல்ல பயந்து நம்முடைய சமூகத்திற்கு முன்பு உலகத்திற்கு ஒத்த வேஷந்திரித்தவர்களாகக் காணப்படுகிறோமா? சிந்திப்போம். தேவன் நம் இருதயங்களை அறிந்திருக்கிறார். அவருக்கு மறைவானது ஒன்றுமில்லை.

அடுத்ததாக மகதலேனா மரியாளின் அன்பிற்கு ஆதாரமாக இன்னொரு



காரியத்தையும் பார்ப்போம். இயேசு அடக்கம் செய்யப்பட்ட அன்றையதினம் பெரிய ஓய்வுநாளுக்கு முந்தின ஆயத்தநாள் (அடுத்த நாள் ஓய்வுநாள்). யூதர்களின் முறைமைப்படி ஓய்வுநாளிலே (சனிக்கிழமை ஆறாவது நாள்) எந்த ஒரு வேலையும் செய்யக்கூடாது. எனவே மகதலேனா மரியாளும் மற்ற ஸ்திரீகளும் சரீரம் வைக்கப்பட்ட விதத்தையும் பார்த்து, திரும்பிப்போய், கந்தவர்க்கங்களையும் பரிமள தைலங்களையும் ஆயத்தம் பண்ணி, கற்பனையின்படியே ஓய்வுநாளில் ஓய்ந்திருந்தார்கள் (லூக்.23:55,57). அப்படியானால் வாரத்தின் முதல் நாளில் கர்த்தரை வைத்த இடத்திற்குச் செல்ல ஓய்வுநாளுக்கு முந்தைய நாளிலேயே சுகந்தவர்க்கங்களையும் பரிமளதைலத்தையும் ஆயத்தம் செய்துவிட்டனர். கர்த்தர்மேல் கொண்ட அன்பு அவர்களை அவ்விதமாக ஆயத்தப்படுத்தியிருக்கிறது. இன்றைய கிறிஸ்தவ ஸ்திரீகளாகிய நாம் வாரத்தின் முதல் நாளில் கர்த்தருடைய மரணத்தை நினைவுகூரும்படி எத்தகைய ஆயத்தமுள்ளவர்களாயிருக்கிறோம்? சிந்திப்போம்.

மேலும் அவளும் மற்ற ஸ்திரீகளும் ஆயத்தம் பண்ணின சுகந்த வர்க்கத்துடன் (மாற்.16:1, லூக்.24:1) வாரத்தின் முதல் நாளில் அதிக இருட்டோடே, (யோவா.20:1) அதிகாலையில் (மாற்.16:1) சூரியன் உதயமாகியபோது (மாற்.16:2) விடிந்து வருகையில் (மத்.28:1) கல்லறையைப் பார்க்க வந்தார்கள். கன்மலையில் வெட்டப்பட்ட கல்லறைக்கு பெண்கள் இருட்டோடே செல்லுவார்களா? இல்லை பயப்படுவர்கள். ஆனால் இந்த ஸ்திரீகளோ பயப்படவில்லை காரணம் அவர்கள் இயேசுவின் மேல் கொண்ட அன்பு. அன்பிலே பயமில்லை. கிறிஸ்தவ ஸ்திரீகளாகிய நாம் எந்த அளவு இயேசுவினிடத்தில் அன்புகூருகிறோம்? வாரத்தின் முதல் நாளில் சபை கூடிவருதலில் எவ்வாறு பங்குகொள்ளுகிறோம்? சபையின் நேரத்திற்காவது வந்து சேருகிறோமா? உங்களுடைய ஆயத்தம் எப்படிப்பட்டதாயிருக்கிறது என்று சற்றே சிந்தியுங்கள். ஆவியானவரைத் துக்கப்படுத்தாதீர்கள்.

கடைசியாக, இந்த மகதலேனா மரியாளுக்கு யாருக்கும் கிடைக்காத ஒரு பாக்கியம் கிடைத்தது. "வாரத்தின் முதலாம் நாள் அதிகாலையிலே இயேசு எழுந்திருந்தபின்பு மகதலேனா மரியாளுக்கு முதல் முதல் தரிசனமானார்" (மாற்கு16:9). இவளோடுகூட மற்ற ஸ்திரீகளும் இயேசுவை வைத்த இடத்தைப் பார்க்க வந்தனர். இருந்தபோதிலும் இவளுக்கு மாத்திரமே இயேசு முதல் முதல் தரிசனமானார் என்ற நிகழ்வு இவளுக்குக் கிடைத்த ஒரு பெரிய பாக்கியமல்லவா! இதற்கு காரணம் என்ன? யோவான் சுவிசேஷத்தில் இவ்விதமாக வாசிக்கிறோம். "வாரத்தின் முதல்நாள் காலையில் அதிக இருட்டோடே மகதலேனா மரியாள் கல்லறையினிடத்திற்கு வந்து கல்லறையை அடைத்திருந்த கல் எடுத்துப்போடப் பட்டிருக்கக் கண்டாள்" உடனே அவள் ஓடி சீமோன் பேதுருவினிடத்திலும் இயேசுவுக்கு அன்பாயிருந்த மற்ற சீஷனிடத்திலும் போய்: கர்த்தரைக் கல்லறையிலிருந்து எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள், அவரை வைத்த இடம் எங்களுக்குத் தெரியவில்லை என்றாள்" (யோவா.20:1-2). இதைக் கேட்ட சீஷர்களும்

ஓடிவந்து பார்த்துவிட்டு, பின்பு தங்களுடைய இடத்திற்குத் திரும்பிபோனார்கள். ஆனால் இந்த மரியாளோ திரும்பிப் போகவில்லை. கல்லறையினருகே வெளியே அழுதுகொண்டிருந்தாள்.

அப்பொழுது அங்கிருந்த இரண்டு தூதர்கள் அவளை நோக்கி, ஸ்திரீயே ஏன் அழுகிறாய் என்றார்கள். அதற்கு அவள்: என் ஆண்டவரை எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள் அவரை வைத்த இடம் எனக்குத் தெரியவில்லை என்றாள். இவைகளைச் சொல்லிப் பின்னாகத் திரும்பி, இயேசு நிற்கிறதைக் கண்டாள்; ஆனாலும் அவரை இயேசு என்று அறியாமல் அவரைத் தோட்டக்காரர் என்று எண்ணி: "ஐயா, நீர் அவரை எடுத்துக்கொண்டு போனதுண்டானால், அவரை வைத்த இடத்தை எனக்குச் சொல்லும் நான் போய் அவரை எடுத்துக்கொள்வேன் என்றார்" (யோவா.20:10-15). இயேசுவின் சரீரத்தை யாரோ எடுத்துச் சென்றுவிட்டனர் என்று எண்ணின அவளுடைய இருதயம் என்னமாய் சஞ்சலப்பட்டிருக்கும்! மேலும் இயேசுவையே பார்த்து நீர் எடுத்துக்கொண்டு போனதுண்டானால், அவரை வைத்த இடத்தைச் சொல்லும் ஐயா, நான் போய் அவரை எடுத்துக் கொள்ளுகிறேன் என்று சொல்லுகிறாள்.

இந்த சம்பாஷணையைக் குறித்து சிந்திக்கும்போது அவள் இயேசுவினிடத்தில் கொண்டிருந்த அன்பு அளவிற்கு எட்டாதது என நினைக்கத்தோன்றுகிறது. உடன் வந்த அனைவருமே போய்விட்டனர், சீஷர்கள் கூட திரும்பிச் சென்றுவிட்டனர். இவளோ, கல்லறையை விட்டு அகன்று போகாமல் அழுதுகொண்டிருந்திருக்கிறாள்.

இயேசுவின் சரீரத்தைக் காணவில்லை, அதை எடுத்துச் சென்றவர்களிட மிருந்து எப்படியாவது அதைத் திரும்பப் பெற்றுவிட வேண்டுமென்றும் மிகுந்த பயத்தோடும, அழுகையுடனும் அந்த இடத்தை விட்டு அகலாது நின்றுகொண்டிருந்த அவளுடைய மாறாத அன்பு அவளை உயிர்த்தெழுந்த இயேசுவை முதல் முதலாகத் தரிசிக்கச் செய்தது என்றுதான் கூறவேண்டும். லாசருவின் சகோதரி மரியாள் தன்னைவிட்டு எடுபடாத நல்லபங்கை தெரிந்து கொண்டதுபோல, மகதலேனா மரியாளும் இயேசுவை விட்டு தன்னை விடுவித்துக்கொள்ளவில்லை. நாமும் இப்பேர்பட்ட அன்பு கொண்டுள்ளோமா? இயேசுவின் மேலுள்ள நமது அன்பு பூரணப்பட்டதாக இருக்கிறதா? நம்மை நாமே சோதித்துக் பார்ப்போம். இயேசுவே நமது ஆண்டவராக நம்மை ஆளுபவராக இருக்கட்டும்.

அன்பு சகோதரிகளே, மகதலேனா மரியாளின் அற்புத குணாதிசயங்கள் நமக்கு பல பாடங்களை புகட்டுவதாக இருக்கிறது. நம்மிடமிருந்த பாவப்பிசாசுகளின் பிடியிலிருந்து நம்மை விடுவித்து காத்த நம் இயேசுவை நாம் எப்படிப் பற்றிக் கொண்டிருக்கிறோம். இவளைப்போல் நம்முடைய வாழ்விலும் நம்மை மீட்ட இயேசுவுக்கே முதலிடம் தருவோம். கிறிஸ்துவுக்காகவே வாழ்ந்து இந்த கடைசிநாட்களில் மீண்டும் வரப்போகிற இயேசுவை சந்திக்க ஆயத்தமாவோம். கர்த்தரின் நற்செய்தியை வெட்கப்படாமல் அனைவருக்கும் அறிவிப்போம்.



கிறிஸ்துவை நம்வாழ்வில் பிரதிபலிப்போம். உயிர்த்தெழுந்த இயேசுவை இவள் தரிசித்தது போல நாமும் ஆயத்தத்துடனிருந்து மீண்டும் வரப்போகிற இயேசுவை தரிசிப்போம். கர்த்தர் தாமே நமக்கு உதவிசெய்வாராக! ஆமென்.

## கேள்விகள்

1. இப்பாடப்பகுதியில் குறிப்பிடப்பட்ட மரியாள்கள் யாவர்? ஏழுபிசாசுகள் நீங்கன மரியாள் என்னப்பட்டவளின் பெயர் என்ன?
2. நீ பைத்தியக்காரி பேசுவதுபோல பேசுகிறாய் என்று தன் மனைவியைப் பார்த்துச் சொன்னவன் யார்?
3. எந்த மரியாள் கல்லறையின் அருகே அழுதுகொண்டிருந்தாள்?
4. எந்த மரியாள் தன்னைவிட்டு எடுபடாத நல்ல பங்கைத் தெரிந்துகொண்டாள்?
5. இயேசுகிறிஸ்து யாருக்கு முதல் முதல் தரிசனமானார்?

# அவர் இங்கே இல்லை
# He is not here

**16**

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இன்று கல்லறையில் இல்லை. அவர் மரித்தோர் இருக்கிற இடத்திலும் இல்லை. அப்படியானால் அவர் எங்கேயிருக்கிறார்?

அன்று மகதலேனா மரியாளும், யாக்கோபின் தாயாகிய மரியாளும், சலோமே என்பவளும் இயேசுவைத் தேடி கல்லறைக்குச் சென்றனர். அப்போது ஒரு தூதன் சிலுவையில் அறைப்பட்ட இயேசுவைத் தேடுகிறீர்கள் என்று அறிவேன். அவர் இங்கே இல்லை என்றான் (மத்.28:5,6). மேலும் அவன் அவருடைய சீஷர்களுக்குச் சொல்லுங்கள் அவர் உங்களுக்கு முன்னே கலிலேயாவுக்குப் போகிறார்; அங்கே அவரைக் காண்பீர்கள் என்றான் (மத்.28:7). இயேசுவும்கூட என் சகோதரர் கலிலேயாவுக்குப் போகும்படி அவர்களுக்குச் சொல்லுங்கள், அங்கே அவர்கள் என்னைக் காண்பார்கள் என்றார் (மத்.28:10). அப்படியே 'பதினொரு சீஷர்களும், கலிலேயாவிலே இயேசு தங்களுக்குக் குறித்திருந்த மலைக்குப் போனார்கள். அங்கே அவர்கள் அவரைக் கண்டு, பணிந்துகொண்டார்கள், சிலரோ **சந்தேகப்பட்டார்கள்'** (மத்.28:16).

மேலும் மகதலேனா மரியாளுக்கு முதல் முதல் கர்த்தர் தரிசனமானார். அவள் சீஷர்களிடத்தில் போய் அந்த செய்தியை அறிவித்தாள். அவர் உயிரோடிருக்கிறா ரென்றும் அவளுக்குக் காணப்பட்டார் என்றும் அவர்கள் கேட்டபொழுது **நம்பவில்லை.** அதன்பின் அவர்களில் இரண்டு பேர் ஒரு கிராமத்துக்கு நடந்துபோகிற பொழுது அவர்களுக்கு மறுரூபமாய்த் தரிசனமானார். அவர்களும் போய், அதை மற்றவர்களுக்கு அறிவித்தார்கள்; **அவர்களும் நம்பவில்லை.**

அன்பு சகோதரிகளே, இன்றைய நாளிலும் கூட அநேகர் இவ்வாறு நம்பாதவர்களாகவே இருக்கின்றனர். இயேசு சொன்னதையும் தூதன் சொன்னதையும் நம்பினவர்கள் அவரைக் கண்டார்கள். அதுவும் இயேசுவின் நாமத்தில் விசுவாசம் கொண்டிருந்த ஒருமனமுள்ளவர்களாகிய அந்த சீஷர்கள் அவரைக்கண்டார்கள். முன்னே தியானித்த வசனத்தில் அவருடைய நாமத்தில் கலிலேயாவில் ஒன்றுகூடினவர்கள் அவரைக் கண்டு பணிந்துகொண்டார்கள் எனக் கண்டோம். ஆம், அன்பானவர்களே, இன்னும் நீங்கள் இயேசுவே மெய்யான தேவனும், நித்தியஜீவனுமாயிருக்கிறார் (2யோவா.20) என்று நம்பவில்லை என்றால் நிச்சயமாகவே அவரைக் காணமாட்டீர்கள். இயேசுவின் நாமத்திலே கூடியிருக்கிறவர்களிடத்திற்குச் சென்று அவர்களோடே கூட நீங்கள் இயேசுவைக் கண்டுகொள்ளுங்கள். மாம்சபிரகாரமாக அல்ல.

மேலும் தேவனைக் காணமுடியாத எத்தனையோ ஸ்தலங்களுக்குச் சென்று தேவனைத் தேடிக் கொண்டிருக்கிற ஸ்திரீகளாகிய உங்களுக்குச் சொல்லுகிறேன், நீங்கள் ஆண்டவராகிய இயேசுவை விசுவாசித்தால் நீங்களே தேவனுடைய ஆலயம். "நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா? ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால், அவனைத் தேவன் கெடுப்பார்; தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது; நீங்களே அந்த ஆலயம்" (1கொரி.3:16,17) என வேதம் கூறுகிறது.



ஆம், தேவனுடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து அவரை ஏற்றுக்கொள்வீர்களானால் ஞானமும், நீதியும், பரிசுத்தமும், மீட்புமாகிய அவர் உங்களில் வாசம்பண்ணுவார். அவர் உங்களில் வாசம்பண்ணுகிறபோது நீங்கள் தேவன் தங்கும் ஆலயமாகிறீர்கள். தேவனுடைய ஆலயமாகிய நீங்கள், இன்னும் சந்தேகங்கொண்டு தேவனை மரித்தோரிடத்தில் தேடாமல், ஜீவனுள்ள தேவனுடைய ஜனங்களோடேகூட தேடி அவரைக் கண்டுகொள்ளுங்கள்.

தேவன் கைகளால் கட்டப்பட்ட ஆலயத்தில் வாசமாயிரார். நீங்கள் அவருக்காக எப்பேர்பட்ட ஆலயத்தைக் கட்டப்போகிறீர்கள் என வேதம் கேள்வி எழுப்புகிறது. அப்படியிருக்க தேவனைக் காணும்படி புண்ணிய ஸ்தலங்களுக்கும், தேவாலயம் என அழைக்கப்படுகிற பெரிய பெரிய கட்டடங்களை நோக்கியும் நீங்கள் செல்வீர்களானால் உங்களை நீங்களே வஞ்சிக்கிறவர்களாயிருப்பீர்கள். காலத்தை விரயமாக்காதீர்கள். நிச்சயமாகவே அங்கே தேவன் இல்லை. "இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்; ஒருவன் என் சத்தத்தைக் கேட்டு, கதவைத் திறந்தால்,அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம்பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம் பண்ணுவான்" (வெளி.3:20) என்று உங்கள் இதயக் கதவை தட்டிக்கொண்டிருக்கும் இயேசுவின் சத்தத்திற்குச் செவிகொடுத்து அவர் வந்து உங்களில் வாசஞ்செய்ய இடங்கொடுத்தால் அங்கே இயேசுவைக் காண்பீர்கள்.

இயேசுவுக்கு என் இதயத்தில் இடங்கொடுத்து எந்த சமாதானத்தைப் பெற்றேன் என்பீர்களாகில் நீங்கள் அவர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரன் என்பது குறித்தும், அவர் உயிர்த்தெழுந்து உங்களுக்குள்ளே வாசம்பண்ணுகிறார் என்பது குறித்தும் சந்தேகப்படுகிறீர்கள் என்று தான் அர்த்தம். அன்றைய நாளில், அப்போஸ்தலர்களும், சீஷர்களும் இயேசுவை உயிர்த்தெழுந்தவராகக் கண்டோம் என்று பல முறைகூறியும் அநேகர் சந்தேகங்கொண்டனர். அவர்கள் சந்தேகங்கொண்டதினால் இயேசு உயிர்த்தெழுந்து, அவர் நாமத்தில் கூடினவர்கள் மத்தியில் இருந்ததும், இருப்பதும் பொய்யாகிவிட்டதா? ஏமாந்து போகாதீர். தேவனைத் தேட வேண்டிய இடத்தில் தேடி அவரைக் கண்டு பணிந்துகொள்ளுங்கள்.

இயேசு கிறிஸ்துவோடு நித்திய நித்தியமாய் வாழும்படி அவரை விசுவாசித்து, அவரை ஏற்றுக்கொண்டு, அவருக்காய் காத்திருப்போரை அழைத்துச்செல்ல இயேசு மீண்டும் வருகிறார். அவர் நம்முடைய பாவங்களுக்காக மரித்து, உயிர்த்தெழுந்து இன்றும் உயிரோடிருப்பது எவ்வளவு உண்மையோ அந்த அளவிற்கு அவர் மீண்டும் வரப்போவதும் உண்மை, உண்மை, உண்மை. அவரை சந்தித்து எதிர்கொண்டு போக ஆயத்தப்படுவோமாக!

அவர் நாமத்தினாலே கூடியிருக்கிறவர்கள் மத்தியிலும், அவரை தன் சொந்த இரட்சகராக தன் இருதயத்தில் ஏற்றுக்கொண்டு இப்பூமியில் வாழுகிறவர்கள் மத்தியிலும், தேவன் இருக்கிறார். "இரண்டுபேராவது மூன்றுபேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்றார்" (மத்.18:20). மரித்தோரிடத்தில் அல்ல!

### கேள்விகள்

1. சிலுவையில் அறையப்பட்ட இயேசு இப்போது எங்கே இல்லை?
2. எவர் மெய்யான தேவனும் நித்திய ஜீவனுமாயிருக்கிறவர்?
3. யார் தேவனுடைய ஆலயம், ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால் தேவன் என்ன செய்வார்?
4. தேவன் கைகளினால் கட்டப்பட்ட ஆலயத்தில் வாசமாயிருப்பாரா?
5. இயேசு கிறிஸ்து எவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்றார்?



# வேதாகமத்தில் சில ஸ்திரீகள்
# A Few Women In The Bible

**17**

உலகில் ஸ்திரீகளின் பங்கு அதிகரித்துக் கொண்டே வருகிறது. எல்லாத் துறைகளில் ஸ்திரீகள் சாதனை ஸ்திரீகளாக விளங்குகின்றனர். அரசும் ஸ்திரீகளுக்கென பலப்பல திட்டங்களை வகுத்து, நடைமுறைப் படுத்தி ஊக்குவிக்கின்றது. ஆனால் நாம் பார்க்கப்போகிற வேதாகம ஸ்திரீகளோ ஆவிக்கேற்ற ரீதியில் நமக்கெல்லாம் நல்மாதிரிகளாக இருக்கின்றனர்.

அப்போஸ்தலர் 17:4 ல் சில கனமுள்ள ஸ்திரீகளைக் குறித்து எழுதப்பட்டுள்ளது. 'அவர்களில் ...கனம் பொருந்திய ஸ்திரீகளில் அநேகரும் விசுவாசித்து, பவுலையும் சீலாவையும் சேர்ந்து கொண்டார்கள்". இங்கே பவுல் கிறிஸ்துவின் பாடு, மரணம் மற்றும் உயிர்த்தெழுதலைக் குறித்து பிரசங்கித்து இயேசுவே கிறிஸ்து என்றும் காண்பித்து திருஷ்டாந்தப்படுத்தினான் என வாசிக்கிறோம் (வச.2-3) மேலும் அதே அதிகாரம் வசனம் 12 ல் கனம் பொருந்திய அநேக ஸ்திரீகளும் விசுவாசித்தார்கள் என எழுதப்பட்டுள்ளது. கனம் பொருந்திய ஸ்திரீகள் கிறிஸ்துவை விசுவாசித்தனர். அப்படியானால் இவர்கள் நல்ல வசதி வாய்ப்புடனிருந்திருக்க வேண்டும். கல்வியறிவுள்ளவர்களாக, நல்ல பதவி வகிக்கிறவர்களாக இருந்திருக்க வேண்டும் எனவே தான் இவர்கள் கனம் பொருந்திய ஸ்திரீகளெனக் குறிப்பிடப்பட்டுள்ளனர். ஒரு முறை எனக்கு அறிமுகமான ஒரு பெண் என்னிடம் ஏன் கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவைக் குறித்து ஏழை எளியவர், கல்வியறிவு அற்றவர், சிறுமையானவர்களுக்கு மட்டுமே அறிவிக்கின்றனர்? இப்பேர்பட்டவர்கள் தான் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்கின்றனர் என இழிவான நோக்கத்தோடு கேட்டாள்.

இன்றும் அநேகர் குறிப்பாக புறமார்க்கத்தார் இப்படித்தான் எண்ணுகின்றனர். கிறிஸ்து இயேசு இவ்வுலகத்தையே இரட்சிக்க வந்தவர். உலகில் பலதரப்பட்ட மக்கள் தான் வாழ்கின்றனர். இதில் ஏழை பணக்காரர் என்றோ கற்றவர் கல்லாதவர் என்றோ, உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்றோ வித்தியாசமில்லை. கிறிஸ்துவை அனைவருமே விசுவாசிக்க வேண்டும். வேறு வழியே கிடையாது. அவர் எல்லா மனுஷரின் பாவத்தைப் போக்கும் பலியாக வந்தவர். மரித்தார், உயிர்த்தெழுந்தார். இன்றும் உயிரோடிருக்கிறார். இச்செய்தியினைத் தான் கிரேக்க நாட்டு பெண்மணிகளாகிய அந்த கனம்பொருந்திய ஸ்திரீகள் விசுவாசித்தார்கள்.

"அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனை பேர்களோ அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார்" (யோவா.1:12). பாவத்தின் விளைவாக பிசாசின் மக்களாக மாறிப்போன நாம் தேவனுடைய பிள்ளையாக மாறவேண்டுமானால் இயேசுகிறிஸ்துவை விசுவாசித்தே ஆக வேண்டும். போக்குச் சொல்ல இடமில்லை.

இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறோம், அதன்பின் என்ன செய்யவேண்டும்? யோசுவா புத்தகம் 2 ம் அதிகாரம் 10-12 வசனங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு ஸ்திரீயைப் பார்த்து தெரிந்துகொள்வோம். "நூனின் குமாரனாகிய யோசுவா சித்தீமிருந்து வேவுகாரராகிய இரண்டு மனுஷரை இரகசியமாய் வேவுபார்க்கும்படி அனுப்பி; நீங்கள் போய் தேசத்தையும் எரிகோவையும் பார்த்து வாருங்கள் என்றான். அவர்கள் போய் ராகாப் என்னும் பெயர்கொண்ட வேசியின் வீட்டுக்குள் பிரிவேசித்து, அங்கே தங்கினார்கள். பாருங்கள்; இவள் ஒரு வேசி, ஆனால் இவள் வேவுக்காரர்களை தன் வீட்டில் ஏற்றுக்கொண்டு, ஒளித்து வைத்து எரிகோ ராஜாவின் கைக்குத் தப்புவித்தாள் (வச.3:6). ஏன் தெரியுமா? இவள் தேவனையும், அவரது அற்புதங்களையும் கேள்விப்பட்டு அவரை விசுவாசித்தாள். ".... உங்கள் தேவனாகிய கர்த்தரே உயர வானத்திலும் கீழே பூமியிலும் தேவனானவர்" (யோசு.2:11) என்றாள். இவளுக்குள் இருந்த விசுவாசம் தேவ ஜனங்களை தன் வீட்டில் ஏற்றுக் கொள்ளப்பண்ணினது. இவளுடைய செயல் இவளையும் இவள் தகப்பன், தாய், சகோதர, சகோதரிகளையும் இவளுக்குண்டான எல்லாவற்றையும் தப்புவிக்கப் பண்ணியது (வச.13).

புதிய ஏற்பாட்டு புத்தகத்தில் இவளைப் போன்ற இன்னொரு சகோதரியைக் காணலாம். அப்.16:14-15 ல் கர்த்தருடைய ஜனங்களை ஏற்றுக் கொண்ட லீதியாள் ஒரு செல்வ சீமாட்டி "அப்பொழுது தியத்தீரா ஊராளும் இரத்தாம்பரம் விற்கிறவளும் தேவனை வணங்குகிறவளுமாகிய லீதியாள் என்னும் பேருள்ள ஒரு ஸ்திரீ கேட்டுக் கொண்டிருந்தாள்; பவுல் சொல்லியவைகளைக் கவனிக்கும்படி கர்த்தர் அவள் இருதயத்தைத் திறந்தருளினார். அவளும், அவள் வீட்டாரும் ஞானஸ்நானம் பெற்ற பின்பு, அவள் எங்களை நோக்கி: நீங்கள் என்னைக் கர்த்தரிடத்தில் விசுவாசமுள்ளவளென்று எண்ணினால் என் வீட்டிலே வந்து தங்கியிருங்கள் என்று எங்களை வருந்திக் கேட்டுக்கொண்டாள்" (அப்.16:14-15) என பவுல் கூறுவதை வாசிக்கிறோம். கர்த்தரிடத்தில் விசுவாசமுள்ள இந்த ஸ்திரீ தானும் தன் வீட்டாரும் ஞானஸ்நானம் பெற்ற பின்பு கர்த்தருடைய ஊழியரை கனம்பண்ணவிரும்புகிறாள். அவர்களை தன் வீட்டிலே தங்கவேண்டுமென வருந்திக் கேட்டுக் கொள்கிறாள். இதை வாசிக்கும் அன்பு சகோதரியே, நீ என்றாவது கர்த்தருடைய ஊழியர்களை உன் வீட்டில் ஏற்றுக்கொண்டுள்ளாயா? நீங்கள் உண்மையாகவே கர்த்தரிடத்தில் விசுவாசமுள்ளவர்களானால் கள்ளங்கபடமின்றி கர்த்தருடைய ஊழியர்களை உங்கள் வீட்டில் ஏற்றுக்கொள்வீர்கள். அப்படிச் செய்யும்போது அதற்கேற்ற பலனை அல்லது ஆசீர்வாதத்தைப் பெறுவீர்கள்.

இப்படியாக கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்று இரட்சிக்கப்பட்டு, கர்த்தர் நிமித்தம் அவருடைய ஊழியர்களை ஏற்றுக் கொள்ளும் சகோதரியாக இருப்பீர்களென்றால் அடுத்ததாக செய்ய வேண்டியது என்னவென்று தெரிந்து கொள்வோமா? நாம் பெற்ற இன்பம் பெருக இவ்வையகம் என்று சொல்லுவார்கள். அவ்வண்ணமே நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுடைய மார்க்கத்தை விவரித்துக் காண்பித்த ஒரு



ஸ்திரீயைக் குறித்து பார்ப்போம். ஆக்கில்லா என்ற ஒரு யூதனுடைய மனைவி பிரிஸ்கில்லாள் என்பவள் தன் புருஷனோடு கூட ஊழியத்தில் உதவியாக இருந்தாள். இவள் தன் புருஷனோடுகூட தேவனுடைய மார்க்கத்தை அறிந்தவளாயிருந்தபடியால் அதைக் குறித்து மற்றவர்களோடு பகிர்ந்து கொள்கிறாள். அப்.18:24-26 ல் அப்பொழுது அலெக்சந்திரியா பட்டணத்தில் பிறந்தவனும் சாதுரியவானும் வேதாகமங்களில் வல்லவனுமான அப்பொல்லோ என்னும் பேர்கொண்ட ஒரு யூதன் எபேசு பட்டணத்துக்கு வந்தான். அவன் கர்த்தருடைய மார்க்கத்தில் உபதேசிக்கப்பட்டு யோவான் கொடுத்த ஸ்நானத்தை மாத்திரம் அறிந்தவனாயிருந்து, ஆவியில் அனலுள்ளவனாய்க் கர்த்தருக்கு அடுத்தவைகளைத் திட்டமாய்ப் போதகம் பண்ணிக் கொண்டு வந்தான். அவன் ஜெப ஆலயத்தில் தைரியமாய்ப் பேசத் தொடங்கின போது, ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் அவன் பேசுகிறதைக் கேட்டு அவனைச் சேர்த்துக்கொண்டு, தேவனுடைய மார்க்கத்தை அதிகத் திட்டமாய் அவனுக்கு விவரித்துக் காண்பித்தார்கள்" என்று வாசிக்கிறோம்.

வேதாகமங்களில் வல்லவனாகிய அப்பொல்லோவுக்கு தேவனுடைய மார்க்கத்தைக் குறித்து பிரிஸ்கில்லாள் தன் புருஷனோடுகூட அதிக திட்டமாய் அவனுக்கு விவரித்துக் காண்பித்தார்கள் என்று வாசிக்கிறோம். உதவியாயிருக்க வேண்டியது அவசியமாகக் காணப்படுகிறது. புருஷனோடு அவர்களது மனைவிமார்களும் செல்லும்போது அநேகர் ஏற்றுக்கொண்டு குடும்பத்தோடுகூட தேவனுடைய மார்க்கத்தைக் கற்றுக்கொள்ள வாய்புண்டாகும். எனவே தேவனுடைய மார்க்கம் எதுவென்று அறிந்த நாம் மார்க்க பேதங்கள் மலிந்து கிடக்கும் இன்றைய நாட்களில் இதைக் குறித்து மற்றவர்ளுக்கு விவரித்துக் காண்பிக்க வேண்டியவர்களாயிருக்கிறோம்.

அன்பான சகோதரிகளே, இந்த வேதாகம ஸ்திரீகள் நமக்கு நல்ல மாதிரிகளாக இருக்கிறார்களா? அப்படியானால் நாமும் கூட கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்று, கர்த்தரின் ஊழியர்களை மனமுவந்து நம்முடைய வீட்டில் ஏற்றுக்கொண்டு, தேவனுடைய மார்க்கத்தை அதிகத்திட்டமாய் விவரித்துக் காண்பிக்க நம்மை ஆயத்தப்படுத்துவோம். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபை நம்மோடுகூட இருப்பதாக!

## கேள்விகள்

1. கனப்பொருந்திய ஸ்திரீகள் என்ன செய்தார்கள்?
2. யாரெல்லாம் தேவனுடைய பிள்ளைகளாகும்படிக்கு அதிகாரம் பெற்றார்கள்?
3. ராகாப் என்ற வேசி தன் வீட்டாரோடுங்கூட எதினால் தப்பிவிக்கப்பட்டாள்?
4. கர்த்தருடைய ஊழியர்களை தன் வீட்டில் தங்கியிருங்கள் என்று விரும்பி கேட்டுக்கொண்ட ஸ்திரீ யார்?
5. அலெக்சந்தரியா பட்டணத்தில் பிறந்து சாதுரியவானும் வேதாகமத்தில் வல்லவனுமாயிருந்தவன் யார்?

# <u>பாவியாகிய ஒரு ஸ்திரீ</u>
# A Woman, Who was a sinner

**18**

**அ**ன்பான சகோதரிகளே, இவ்வுலக ஜீவியத்தில் நம் அனைவருக்கும் அநேக தேவைகள் உண்டு அன்றாட வாழ்க்கையில் நாம் அநேக காரியங்களை சார்ந்தே வாழ்கிறோம். உண்ணவும், உடுக்கவும் வாழவும் நமக்கு என்னென்ன தேவையோ அவைகளெல்லாவற்றைக் காட்டிலும் நம்முடைய ஆன்மீக வாழ்வுக்கு இயேசு கிறிஸ்து மிக மிக தேவயானவராக, அவசியமானவராக இருக்கிறார். இயேசு உலகத்திலுள்ள அனைவருக்குமே தேவை! தேவை!! தேவை!!!.... இயேசுவை தம்முடைய மெய்தேவனாகப் பெறாமல் மரிக்கிற எந்த நபரின் முடிவும் பரிதாபமே! கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராகப் பெற்றுக்கொள்ள வேண்டுமானால், நாமனைவரும் பாவிகள் தான், பாவிகளின் பரிகாரி இயேசு ஒருவர் தான், அவர் நமக்குத் மிக மிகத் தேவை என்று உணரவேண்டும்.

இப்படி உணர்ந்து கொண்ட ஒரு ஸ்திரீயைப் பற்றிதான் இப்போது ஆராயப்போகிறோம். வேதாகமத்தில் இவளுடைய பெயர் குறிப்பிடப்படவில்லை, ஆனால் இவள் நாயீன் என்ற ஊரில் எல்லாராலும் பாவியாகிய ஒரு ஸ்திரீ என்று அறியப்பட்டவளாக இருந்தாள். இவளைப் பற்றி வேதாகமம் லூக்கா 7ம் அதிகாரம் வசனங்கள் 37-50 வரை விளக்கிச் சொல்லுகிறது. இவளுடைய ஐந்து கிரியைகள் நமக்கு என்ன பாடத்தினைக் கற்றுக் கொடுக்கிறது எனக் காண்போம்.

லூக்கா 7:37-38 ல் "அப்பொழுது அந்த ஊரிலிருந்த பாவியாகிய ஒரு ஸ்திரீ அவர் (இயேசு) பரிசேயன் வீட்டிலே பந்தியிருக்கிறதை அறிந்து, ஒரு பரணியில் பரிமளதைலம் கொண்டு வந்து, அவருடைய பாதங்களின் அருகே பின்னாக நின்று அழுது கொண்டு, அவருடைய பாதங்களைத் தன் கண்ணீரினால் நனைத்து தன் தலைமயிரினால் துடைத்து அவருடைய பாதங்களை முத்தஞ்செய்து, பரிமளதைலத்தைப் பூசினாள்" என வாசிக்கிறோம்.

**முதலாவது,** பாவியாகிய இந்த **'ஸ்திரீ இயேசுவின் பாதங்களின் அருகே பின்னாக நின்று அழுதுகொண்டு'** என வாசிக்கிறோம். ஏன் அழுது கொண்டு நின்றாள்? ஒருவேளை தான் பாவியென்று அந்த ஊருக்கே தெரியும், தான்பாவியென்பதால் அங்கிருந்த ஜனங்கள் இவளை ஏற்றுக் கொள்ளாமல் புறம்பே தள்ளியிருக்கலாம் அல்லது தன்னுடைய பாவ வாழ்க்கையை நினைத்து மனம் வருந்தினவளாக இருந்திருக்கலாம் அல்லது தான் பாவியாக இருந்ததால் இயேசுவும் தன்னை ஏற்றுக்கொள்ளாமல் போய்விடுவாரோ என்று நினைத்திருக்கலாம் அல்லது ஒட்டுமொத்தமாக தன் பாவங்களுக்காக மனம்வருந்தி இயேசுவுக்கு முன்பாக வரத்துணியாமல் அவருடைய பாதங்களின் அருகே பின்னாக நின்று அழுது கொண்டிருக்கலாம். எப்படியோ தன்னை தாழ்த்தி அழுதுகொண்டிருந்தாள் என்று தான் நினைக்கத் தோன்றுகிறது. பூமியில் ஒருவரும் நீதிமான் அல்ல என்பது நமக்கு



நன்றாகத் தெரியும். வேதம் கூறுகிறபடி ஆதாமின் கீழ்ப்படியாமையினாலே பாவம் நமக்குள் பிரவேசித்துவிட்டது (ரோம.5:12,19) நாம் பாவிகளாக்கப்பட்டோம். பாவிகளாகிய நம்மெல்லாருக்கும் பரிசுத்தராகிய இயேசு தேவை. பொதுவாக யூதர்கள், கிரேக்கர், ரோமர்கள் உணவு உண்ணும்போது தாங்கள் அமர்ந்திருக்கும் இருக்கையிலிருந்து தங்கள் கால்களை பின்புறமாக நீட்டி உட்கார்ந்து உணவு உண்பார்கள் என வேத ஆராச்சியாளர்கள் கூறுகின்றனர் இவளோ இயேசுக்கு பின்னாக வந்தது மட்டுமல்லாது கண்ணீர் சிந்தி அழுதுகொண்டு நின்றிருக்கிறாள். இது இவளுடைய தாழ்மையையும் மனந்திரும்புதலையும் வெளிப்படுத்துகிறது. நமக்கும் இப்பேர்பட்ட தாழ்மை வேண்டாமா?

**இரண்டாவதாக,** பாவியாகிய **'ஸ்திரீ இயேசுவின் பாதங்களைத் தன் கண்ணீரினால் நனைத்து'** என்று வாசிக்கிறோம். இயேசுவின் பாதங்கள் நனையுமளவிற்கு இவள் கண்ணீர் சிந்தியிருக்கிறாள். அப்போஸ்தலனாகிய பேதுருவும் கூட இயேசுவை மறுதலித்து அவரை தனக்குத் தெரியாது என்று சொல்லி ஆணையிடவும், சபிக்கவும் சத்தியம் பண்ணவும் தொடங்கி, பின்பு தான் சொன்னதை நினைத்துக் கொண்டு வெளியே போய் மனங்கசந்து அழுதான் என்று மத்தேயு 26:69-75 ல் வாசிக்கலாம். தான் செய்த செயலுக்காக மனங்கசந்து அழுதான். நாம் எத்தனை பேர் இவ்விதமாக கர்த்தருக்கு விரோதமாக செய்த பாவங்களுக்காக மனங்கசந்து அழுது மனந்திரும்பியிருக்கிறோம்? இயேசுவுக்கும், தேவனுக்கும் விரோதமாக பாவங்களை செய்து, அதனை தண்ணீரைப் போல பருகி, ஏனோ தானோவென்று இயேசு எனக்குத் தேவை என்று சொல்லி இயேசுவை கடையில் விற்கும் ஒரு பொருளைப் போல எண்ணி அவரைப் பெற விழைகிறோமா? பயத்தோடும் நடுக்கத்தோடும் அவரிடமாய் சேருவோம். இந்த பாவியாகிய ஸ்திரீயைப் போலவும் பேதுருவைப்போலவும் கண்ணீர் சிந்தி மனங்கசந்து அழுது மனந்திரும்புவோம். இவள் செய்த இச்செயலைக் குறித்து இயேசு, தனக்கு விருந்தளித்த பரிசேயனாகிய "...சீமோனை நோக்கி: நான் உன் வீட்டில் பிரவேசித்தேன், நீ என் கால்களுக்குத் தண்ணீர் தரவில்லை, இவளோ, கண்ணீரினால் என் கால்களை நனைத்தாள்..." என்றார் (வச.44).

நீ எனக்குச் செய்யாமல் விட்டதை இவள் எனக்குச் செய்தாள் என்றார். பொதுவாக அந்நாட்களில் வீட்டிற்கு வருவோர்க்கு தன்னுடைய பணிவன்பினைக் காண்பிக்கத் தக்க வகையில் கால்களைக் கழுவிட தண்ணீர் தருவர், சிலவேளைகளில் அந்த வீட்டாரே கால்களைக் கழுவிவிடுவர். இதைத் தான் இயேசு இவ்விதமாகக் கூறி அவளுடைய பணிவன்பினை சுட்டிக்காண்பிக்கிறார். இவ்விதமான உபசரணை அந்நாட்களில் கடைபிடிக்கப்பட்டது. ஆபிரகாம் கூட தன்னிடம் வந்த மூன்று புருஷர்களுக்கு எதிர்கொண்டு ஓடித் தரைமட்டும் குனிந்து... கொஞ்சம் தண்ணீர் கொண்டு வரட்டும், உங்கள் கால்களைக் கழுவி, மரத்தடியில் சாய்ந்துகொண்டிருங்கள் என்றான் என ஆதி.18:2-4ல் வாசிக்கிறோம். லாபானும் கூட தன்னிடம் வந்த ஆபிரகாமின் ஊழியக்காரனுக்கும் அவனோடு வந்த மற்றவர்களுக்கும் கால்களைக் கழுவிக்கொள்ளத் தண்ணீர் கொடுத்தான்

(ஆதி.24:32) இவ்வாறான வழக்கம் அந்நாட்களில் கடைபிடிக்கப்பட்ட போதும் இந்த பரிசேயனாகிய சீமோன் இயேசுவுக்கு இந்த கனத்தை செய்யத் தவறினான். ஆனால் இவளோ இயேசுவின் பாதங்களை தன் கண்ணீரினால் நனைத்தாள் எனக் காண்கிறோம்.

**மூன்றாவதாக,** அவளுடைய செயலைக் குறித்துப் பார்க்கையில், தன்னுடைய கண்ணீரினால் நனைத்த, **'இயேசுவின் 'பாதங்களை' அப்படியே விட்டு விடாமல் தன் தலைமயிரினால் துடைத்தாள்'** என வாசிக்கிறோம் (வச.7:37). ஸ்திரீகளுக்குத் தலைமயிரானது முக்காடாகவும் மகிமையாகவும் கொடுக்கப்பட்டிருக்கிறது என 1கொரிந்தியர் 11:15 சொல்லுகிறது. மகிமையான தன் தலைமயிரினால் இயேசுவின் பாதங்களைத் துடைத்ததாள் என வாசிக்கும் போது, அவள் இயேசுவை அதிக மேன்மையுள்ளவராக கருதியிருக்கிறாள் என்று தெரிகிறது. பல மைல்கள் பிரயாணத்தில் இயேசுவின் கால்களும் பாதரட்சைகளும் கழுவப்படவும் துடைக்கப்படவும் வேண்டுமென்ற அவசியத்தை அவள் அறிந்திருந்தாள். சுவிசேஷகனுடைய பாதங்கள் எவ்வளவு அழகானது! "....பரிசுத்த வான்களுடைய கால்களைக் கழுவி" நற்கிரியைகளைச் செய்கிற ஸ்திரீகளைப் பற்றி 1தீமோ.5:10 ம் கூட கூறுகிறது. இக்கிரியைகள் புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவ ஸ்திரீகளுக்கு நல்ல எடுத்துக்காட்டாக உள்ளது.

அடுத்ததாக, அவள் என்ன செய்தாள்? **'இயேசுவின் பாதங்களை முத்தஞ்செய்தாள் அதுவும் ஓயாமல் முத்தம் செய்தாள்'** (வச.37,45). இயேசு இது குறித்து பரிசேயனிடம் சொல்லும்போது, "நீ என்னை முத்தஞ்செய்யவில்லை, இவளோ, நான் உட்பிரவேசித்தது முதல் என் பாதங்களை ஓயாமல் முத்தஞ்செய்தாள்" (லூக்.7:45) என்றார். அந்நாட்களில் யூதர்கள், கிரேக்கர்கள் மேலும் ரோமர்கள் தங்கள் வீட்டிற்கு வரும் உறவினர் மற்றும் அயலாரை வாழ்த்தி முத்தஞ்செய்வது வழக்கம். இதையே பவுல் "ஒருவரையொருவர் பரிசுத்த முத்தத்தோடு வாழ்த்துங்கள்... என்று ரோமர் 16:16 ல் எழுதியுள்ளார். ஒருமுறை நாங்கள் ஒரு ஊழிய சகோதர தம்பதியாரால் அழைக்கப்பட்டிருந்தோம்.

நாங்கள் அவர்களது வீட்டு நுழைவாயிலை சென்றடைந்த போது அந்த சகோதரி அச்சமயம் வீட்டின் வெளியே வந்து எங்களைப் பார்த்தும் ஒன்றுமே கூறாமல் உள்ளே போய்விட்டார்கள் இப்படியும் சிலர் இன்றும் இருக்கிறார்கள். ஆனால் இயேசுவின் போதனையும் அப்போஸ்தலரின் போதனையும் முத்தஞ் செய்து வாழ்த்தும் இச்செயல்பாட்டினை எவ்வளவாய் அங்கிகரிக்கிறது என்பதைப் பாருங்கள். எனவே தான் இயேசு பரிசேயனாகிய சீமோனைப் பார்த்து தம்மை வாழ்த்தி முத்தஞ்செய்யவில்லை, அவளோ ஓயாமல் என் பாதங்களை முத்தஞ்செய்தாள் என்றார். அவளது அன்பு பெரிதாகக் காணப்பட்டது. கிறிஸ்தவர்களாகிய நாம் எப்படி நடந்து கொள்ளுகிறோம்? வீட்டிற்கு வரும்படி அழைக்கப்பட்ட ஸ்திரீகளை இவ்விதமாக வரவேற்கிறோமா? அல்லது ஏன்தான் இவர்கள் வருகிறார்கள் என்கிறோமா? சிலர் வாயினால் சமீபித்து இருதயத்தினால் தூரமாயிருப்பார்கள். இது கிறிஸ்தவ அன்பு கிடையாது என்பதை மறவாதிருப்போம்.



**கடைசியாக,** அந்த ஸ்திரீ **'இயேசுவின் பாதத்தில் பரிமளதைலத்தைப் பூசினாள்'** என வாசிக்கிறோம். இந்தப் பரிமளதைலம் விலையேறப்பெற்ற தைலமாகும். இது புத்துணர்வை ஏற்படுத்தக் கூடிய ஒன்று. எனவே இயேசு அந்த பரிசேயனைப் பார்த்து: நீ என் தலையில் எண்ணெய் பூசவில்லை, இவளோ என் பாதங்களில் பரிமளதைலம் பூசினாள்" என்றார் (லூக்.7:45). மேலும் வேத ஆராய்ச்சியாளர்கள் இது குறித்து கூறுகையில் " நான் உபதேசம் பண்ணி, அநேகரை சுகமாக்கும் என் ஊழியத்திற்குப் பிறகு 21 மைல்கள் நீண்ட பயணம் மேற்கொண்டு உன்னிடத்திற்கு வந்தும், நீ என் தலையில் எண்ணெய் பூசவில்லை என்று சொல்லியதாக கூறப்படுகிறது. இவ்விடத்தில் இயேசு களைப்புடன் வந்திருக்கும் தமக்கு தலையில் எண்ணெய் பூசி புத்துணர்வு ஏற்படுத்தவில்லை என்பதாக விவரிக்கப்படுகிறது. அத்தோடு கூட "ஆதலால் நான் உனக்குச் சொல்லுகிறேன்; இவள் மிகவும் அன்புகூர்ந் தாளே, .... என்று சொல்லி; அவளை நோக்கி: உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டது என்றார்" (லூக்.7:47,48).

எப்பேர்பட்ட அற்புதம் இது! அழிந்து போகும் இவ்வுலகத்தின் ஆசீர்வாதங்களைக் காட்டிலும் பாவத்திலிருந்து விடுதலைகிடைப்பது என்பது அற்புதம் அல்லவா! இதைக்காட்டிலும் வேறே அற்புதத்தை எதிர்பார்க்கிறீர்களா? வேண்டாம். இனிமேலாவது இயேசு கொடுக்கும் ஆவிக்குரிய ஆசீர்வாதத்தைப் பெற முயற்சிப்போம். நாம் பாவிகள் தான், இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும் என்று விசுவாசித்து அவரிடத்தில் அன்பு கூருவோம். "நமக்குப் பாவமில்லையென்போமானால், நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம், சத்தியம் நமக்குள் இராது. நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திரிப்பதற்குஅவர் உண்மையுள்ளவராயிருக்கிறார்" (1யோவான் 1:7-9). வசனத்தினால் அல்ல கிரியையினால் நம் இயேசுவிடம் அன்பு கூருவோம். தேவ ஆசீர்வாதம் பெறுவோம். உங்கள் சந்தோஷம் நிறைவாய் இருக்கும்படி உங்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறேன். சமாதானத்தின் கர்த்தர் தாமே எப்பொழுதும் சகலவிதத்திலும் உங்களுக்குச் சமாதானத்தைத் தந்தருளுவாராக. கர்த்தர் உங்களளைவரோடுங்கூட இருப்பாராக! ஆமென்.

## கேள்விகள்

1. பாவியான ஒரு ஸ்திரீ எந்த ஊரில் எல்லாராலும் அறியப்பட்டவளாயிருந்தாள்?
2. இப்பாடத்தில் சொல்லப்பட்டுள்ளபடி பாவியான அந்த ஸ்திரீயின் குணாதிசயங்கள் எவை எவை?
3. பரிசேயனாகிய சீமோனை நோக்கி இயேசு என்ன சொன்னார்?
4. ஆபிரகாம் தன்னிடம் வந்த மூன்று புருஷர்களிடம் என்ன சொன்னான்?
5. நமக்குப் பாவம் இல்லையென்போமால் நமக்குள் எது இராது?

# லீதியாள்
# Lydia

**19**

**அ**ன்பான சகோதரிகளே உங்கள் யாவருக்கும் இயேசுகிறிஸ்துவின் வல்லமையான நாமத்தில் வாழ்த்துகள்! வானத்தையும் பூமியையும் படைத்த நம்முடைய ஒரே மெய்யான தேவன் ஒவ்வொருநாளையும் ஒவ்வொரு ஆண்டையும் கூட்டிவழங்கி நம்மனைவருக்கும் கிருபை செய்துவருகிறார். இந்த தேவனுக்கே என்றென்றைக்கும் சதா காலமும் மகிமையும் கனமும் உண்டாவதாக. நாம் நம் ஜீவனுள்ள நாள்பரியந்தம் கர்த்தர் செய்த எல்லா நன்மைகளுக்காக நன்றியுள்ளவர்களாயிருந்து தேவனை அறியா ஜனங்களுக்கு மத்தியில் சாட்சியாக வாழுவோம். கர்த்தர் தாமே தொடர்ந்து நம்மை வழி நடத்துவாராக! இப்போதும் லீதியாள் என்ற பெண்மணியைக் குறித்து ஆராய்ந்து நம்முடைய ஆவிக்குரிய வளர்ச்சிக்கென்று சிலபாடங்களைக் கற்றுக்கொள்வோம்.

லீதியாள் என்ற இந்த பெண் தியத்தீரா ஊரைச் சேர்ந்தவள். வேதப்புத்தகத்தின் புதிய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள இவள் ஐரோப்பாவில் கிறிஸ்தவத்திற்கு மாறிய முதல் பெண் என்று அறியப்படுகிறாள். இன்று துருக்கி என்றழைக்கப்படுகிற ஆசியா மைனரில் உள்ள ஒரு நகரம் தான் இவளுடைய ஊர். "…. இரத்தாம்பரம் விற்கிறவளும் தேவனை வணங்குகிறவளுமாகிய லீதியாள் என்னும் பேருள்ள ஒரு ஸ்திரீ கேட்டுக்கொண்டிருந்தாள்…" என அப்.16:14 ல் அறிமுகப்படுத்தப்படுகிறாள்.

லீதியாள் தன்னுடைய பகுதியில் புகழ்பெற்ற தொழிலாகிய இரத்தாம்பரம் விற்கிற ஒரு வசதிபடைத்த விற்பனையாளராகவும் விசாலமான பெரிய வீட்டில் பிலிப்பி பட்டணத்தில் குடியிருந்து வருபவளாகவுமிருந்தாள். இவ்வளவு ஆஸ்திகளைப் பெற்றிருந்த இந்த லீதியாள் "தேவனை வணங்குகிறவளாக" இருந்திருக்கிறாள். இவளைப் பற்றி வரலாறு கூறும்போது இவள் ஜீவனுள்ள தேவனையே, அதாவது யூதர்களின் தேவனையே வணங்குகிறவளாக இருந்தாள் எனக் கூறுகிறது. மேலும் ஆற்றினருகே வழக்கமாய் ஜெபம்பண்ணுகிற இடத்தில் ஸ்திரீகளோடே கூட கூடி வந்து பவுலின் பிரசங்கத்தைக் கேட்டுக்கொண்டிருந்தாள். அப்படியானால் யாக்கோபு 1:19 ல் கூறப்பட்டுள்ளபடி 'கேட்கிறதற்கு தீவிரமாய்' இருந்திருக்கிறாள். எனவே தான் வழக்கமாகக் கூடி வந்து ஜெபம்பண்ணுகிற இடத்தில் கூடி வந்துள்ளாள். இவள் ஒரு பிரபல்யமான தொழில் பண்ணின போதிலும் ஜெபம்பண்ணுவதற்குக் கூடி வருவதிலும், வசனம் கேட்பதிலும் தீவிரம் காட்டி இருந்திருக்கிறாள்.

நம்மில் எத்தனை பேர் இவளைப் போல் ஆர்வமுள்ளவர்களாக இருக்கிறோம். சபை கூடிவருவதிலும் வேத வகுப்பில் கலந்து கொள்வதிலும் ஆர்வமாக இருக்கிறோமா அல்லது நமக்கு அந்த வேலை வந்துவிட்டது, இந்த வேலை வந்துவிட்டது, தவிர்க்க முடியாத காரணத்தால் ஜெபிக்க வரமுடியவில்லை, ஆராதிக்க வரமுடியவில்லை என்று சாக்குப்போக்கு சொல்லுகிறவர்களாக இருக்கிறோமா? சிந்திப்போம்



லூக்.18:19-25 வரையில் ஒரு ஐசுவரியவானைக் குறித்து வாசிக்கிறோம். இவன் தேவனை வணங்குகிறவனாகவும் கற்பனைகளை சிறுவயது முதல் கைக்கொள்ளுகிறவனாகவும் இருந்தான். ஆனால் வசனம் 23 ல் "அவன் அதிக ஐசுவரியமுள்ளவனானபடியினால் இதைக் கேட்டபொழுது (இயேசுவின் உபதேசத்தை) மிகுந்த துக்கமடைந்தான். அவன் மிகுந்த துக்கமடைந்ததை இயேசு கண்டு: ஐசுவரியவான் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பது எவ்வளவு அரிதாயிருக்கிறது… என்றார்". ஆனால் இவளோ தேவனுடைய ராஜ்யத்தில் பிறந்த முதல் அநேகருக்கு உதவும் பெண்மணியாகக் கருதப்படுகிறாள்.

பவுல் சொல்லியவைகளைக் கேட்டுக் கொண்டிருந்த லீதியாளின் இருதயத்தைக் கர்த்தர் திறந்திருளினார் என அப்.16:14 ல் வாசிக்கிறோம். இவள், வசதிப்படைத்தவளாய் இருந்தபோதிலும் ஐசுவரியத்தின் மயக்கத்தில் இல்லை. கர்த்தருடைய வார்த்தையைக் கேட்க கூடிவந்தபடியால் பவுல் சொல்லியவைகளைக் கவனிக்கும்படி கர்த்தர் இவளுடைய இருதயத்தைத் திறந்தார். தங்களை கிறிஸ்தவ ஸ்திரீகள் எனச் சொல்லிக்கொண்டிருக்கிற அநேகர் நாங்கள் தேவனை வணங்குகிறவர்கள் தான், சபைக்குச் செல்லுகிறோம், ஜெபக்கூட்டங்களுக்குச் செல்லுகிறோம், சிறுவயதிலிருந்தே கற்பனைகளைக் கைக்கொண்டுவருகிறோம் என்று சொல்லி சத்தியத்திற்குச் செவி சாய்க்காமல் இருதயத்தைக் கடினப்படுத்திக் கொண்டு பாரம்பரியக் கட்டுகளால் கட்டப்பட்டவர்களாக, எங்களுக்கும் வசனம் தெரியும், தெரியாதவர்களுக்குத் தான் உபதேசம் தேவை என்று சொல்லி காலத்தைக் கடத்துகிறார்கள். நம்மில் ஒருவரும் கெட்டுப் போவதை தேவன் விரும்புகிறதில்லை. தேவனை வணங்குகிற இஸ்ரவேல் ஜனங்கள் தங்கள் இருதயங்களைக் கடினப்படுத்திக் கொண்டிருப்பதைப் போலநாம் இருக்கவேண்டாம்.தேவன் தம்முடைய வார்த்தைகளை நாம் கேட்கத்தக்கதாக நம் இருதயங்களைத் திறக்கும்படி ஆர்வமாய் வேத வசங்களைக் கேட்போம். "எல்லா வற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதைப் பிடித்துக்கொள்ளுங்கள்" (1தெச.5:21). கர்த்தர் நம்முடைய இருதங்களையும் திறந்தருளுவாராக!

அடுத்ததாக, லீதியாள் வசனத்துக்கு செவிமடுத்ததோடு நின்றுவிடாமல் பவுலின் உபதேச வசனங்களுக்குக் கீழ்ப்படிந்தாள். தேவனை வணங்கிக் கொண்டிருந்தவர்களுக்கு ஞானஸ்நானம் என்பது அவசியமானதாக இருந்தது. தேவனை வணங்கிவந்தால் மட்டும் போதாது, ஒவ்வொருவரும் தங்களுடைய பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று வேதாகமத்தில் அநேகந்தரம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

பேதுரு அப்போஸ்தலன் தேவபக்தியுள்ள யூதர்கள் மத்தியில் பிரசங்கிக்கையில் "…நீங்கள் மனந்திரும்பி பாவமன்னிப்புகென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்" (அப்.2:38) என்றான். இயேசு கிறிஸ்துவும் "விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்" (மத்.16:16) என்றார். இவ்வசனங்களுக்

கேற்ப "அவளும் (லீதியாளும்) அவள் வீட்டாரும் ஞானஸ்நானம் பெற்றபின்பு, ..." (அப்.16:15) என வாசிக்கின்றோம். பூலோகத்தில் தாய், தகப்பன், சகோதர, சகோதரிகள் மற்றும் கணவன், பிள்ளைகள் என அனைவரும் ஒன்றாக ஒரே இடத்தில் இருக்க விரும்புகிற நாம் பரலோகத்திலும் அவ்விதமாக இருக்க வேண்டாமா? அப்படியிருப்போமானால் எவ்வளவு ஆனந்தமாக இருக்கும்! அங்கே கண்ணீர் இல்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை! அன்றைய நாளில் ராகாப் தன் வீட்டாரோடே கூட இரட்சிக்கப்பட்டது போல, இவளும் இவள் குடும்பத்தாரும் இரட்சிக்கப்பட்டார்கள்.

மேலும் லீதியாளைக் குறித்து வாசிக்கையில் "...அவள் எங்களை நோக்கி: நீங்கள் என்னைக் கர்த்தரிடத்தில் விசுவாசமுள்ளவளென்று எண்ணினால் என் வீட்டிலே வந்து தங்கியிருங்கள் என்று எங்களை வருந்திக் கேட்டுக்கொண்டாள்" (அப்.16:15) என வாசிக்கிறோம். இந்த வார்த்தைகள் அவளுடைய விருந்தோம்பும் குணத்தை வெளிப்படுத்துகிறது. இவ்விதமாக ஊழியர்களை உபசரித்திருக்கிறாள். இவளைப் பற்றிய குறிப்பில் இவள் ஒரு நேர்மையான உலகத் தொழில் செய்து கொண்டு தன் ஆஸ்திகளால் சுவிசேஷம் பரம்புவதற்கும் உதவியாயிருக்கிறாள் எனக் கூறப்பட்டுள்ளது. அன்பு சகோதரியே, கர்த்தருடைய பணியைச் செய்யும் ஊழியர்களை உங்கள் இல்லங்களில் ஏற்றுக்கொள்ளுகிறீர்களா? அல்லது உங்களுடைய பெரிய பங்களாவிற்கு முன்பாக நாய் ஒன்றை கட்டிப்போட்டு ஒருவரும் உங்கள் இல்லத்திற்குள் பிரவேசிக்கவிடாமல் தடுத்துக் கொண்டிருக்கிறீர்களா? கர்த்தருடைய பணியைச் செய்கிற எளிமையான ஊழியர்கள் தேவனுடைய பார்வையில் மேன்மையானவர்கள். இவ்வுலகின் உயர்ந்த உத்தியோகத்தில் இருப்பவரிலும் மேலானவர்கள். தேவனுக்குச் சேவை செய்கிறவர்கள்.

ஆம்! சூனேம் என்ற ஊரிலிருந்த ஒரு கனம் பொருந்திய ஸ்திரீ தேவனுடைய மனுஷனாகிய எலிசாவுக்கு தன்னுடைய மெத்தையின் மேல் ஒரு சிறிய அறைவீட்டைக் கட்டி, அதில் அவருக்கு ஒரு கட்டிலையும், மேஜையையும், நாற்காலியையும் குத்துவிளக்கையும் வைத்து தேவனுடைய ஊழியரை தன்னுடைய வீட்டில் ஏற்றுக்கொண்டாள். அதனிமித்தம் தேவன் அவளை ஆசீர்வதித்து, பிள்ளை இல்லாதிருந்த அவளுக்குக் கர்ப்பத்தின் கனியைக் கொடுத்தார் (2இரா.4:8-17).

அன்பு சகோதரியே, இயேசு "சீஷன் என்னும் நாமத்தினிமித்தம் இந்தச் சிறியரில் ஒருவனுக்கு ஒரு கலசம் தண்ணீர்மாத்திரம் குடிக்கக் கொடுக்கிறவனும் தன் பலனை அடையாமற்போகான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்" (மத்.10:42). அநேகர் தேவ ஊழியர்களைக் குறித்து தவறான எண்ணங் கொண்டவர்களாய் அவருக்குச் செலுத்த வேண்டிய கனத்தைச் செலுத்துவதில்லை 'உனக்கு நன்மை உண்டாகும் பொருட்டு, அவன் தேவஊழியக்காரனாயிருக்கிறான்' ரோம.13:4 என்ற வசனத்தை மறந்து போகக்கூடாது. இந்தப் பண்பு நம்மெல்லாருக்கும் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

இன்றும் அநேக ஸ்திரீகள் பலவிதமான நேர்மையான உலகவேலை செய்கின்றார்கள். இதில் கிடைக்கும் வருமானத்தை கர்த்தருடைய சுவிசேஷப்



பணிக்கென்று கொடுத்து உதவலாம் அல்லவா? நம்மில் எத்தனை பேர் நம்மிடமுள்ள கொஞ்சத்திலிருந்தோ அல்லது அதிகமானவற்றிலிருந்தோ சுவிசேஷப்பணிக்கென்று கொடுத்து உதவுகிறோம்? இயேசுவின் நாட்களில் அநேக ஸ்திரீகள் தங்கள் ஆஸ்திகளால் அவருக்கு ஊழியஞ்செய்தார்கள் என்று லூக்.8:3 ல் வாசிக்கிறோம். நம்மை நாமே சோதித்துப் பார்ப்போம். இவ்வுலகத்தில் அல்ல, பரலோகத்தில் நம் பொக்கிஷங்களை சேர்த்து வைப்போம். நமக்கு உலக வேலைகள் இருந்தபோதிலும் லீதியாளைப்போல கர்த்தருடைய வசனத்தைக் கேட்டு, அதன்படி நடந்து ஊழியங்களைத் தாங்குவோம். ஓர் தீர்மானம் எடுப்போம்! சபை வளர பாடுபடுவோம்!! கர்த்தர் தாமே நம்முடைய ஆவிக்குரிய தீர்மானங்களை ஆசீர்வதிப்பாராக! ஆமென்!

## கேள்விகள்

1. ஐரோப்பாவில் கிறிஸ்தவத்திற்கு மாறிய முதல் பெண் என்று யார் அறியப் படுகிறாள்?
2. பவுலின் பிரசங்கத்தைக் கேட்டுக்கொண்டிருந்த எந்த ஸ்திரீயின் இருதயத்தை கர்த்தர் திறந்தருளினார்?
3. எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நாம் எதைப்பிடித்துக் கொள்ளவேண்டும்?
4. நாம் எதற்கென்று ஞானஸ்நானம் பெறவேண்டும்?
5. இயேசுவின் நாட்களில் ஸ்திரீகள் அவருக்கு எப்படி ஊழியம் செய்தார்கள்?

# <u>ரெபெக்காள்</u>
# <u>Rebekah</u>

**20**

**ரெ**பெக்காள், ஓர் ஆசீர்வதிக்கப்பட்ட மகாரூபவதியான பெண். கிறிஸ்தவ ஸ்திரீகள் அநேகருக்கு இவளைப் பற்றிய காரியங்கள் நன்றாகத் தெரிந்திருக்கும். இவள் ஆபிரகாமின் குமாரனாகிய ஈசாக்கின் மனைவி மேலும் இஸ்ரவேல் சந்ததி உருவாக கருவியாக இருந்தவள். இவளுடைய குணாதிசயங்களும் அற்புதமானவைகள். இவைகள் நமக்கும் நம்முடைய பிள்ளைகளுக்கும் பிரயோஜனமானவைகளாக இருக்குமென நம்புகிறேன்.

பழைய ஏற்பாட்டு புத்தகத்தில் ஆதியாகமம் 24 ம் அதிகாரம் முழுமையும் வாசித்தோமானால், பெண்பார்ப்பது, பெண்ணின் நடவடிக்கைகள், பெண் வீட்டாரின் உபசரணைகள், மாப்பிள்ளை வீட்டாரின் அன்பளிப்புகள் போன்ற அனைத்து முறைமைகளும் நம்முடைய பண்டைய தமிழ் கலாச்சாரத்தினை பிசகில்லாமல் பிரதிபலிக்கிறதாகவே இருக்கும். இங்கே ஆபிரகாம் தன் மகன் ஈசாக்குக்குப் பெண்பார்க்கும்படி தன் இனத்தாரிடத்திற்கு தன்னுடைய ஊழியக்காரனை அனுப்புகிறான் அப்படி அனுப்பும் போது "நான் குடியிருக்கிற கானானியருடைய குமாரத்திகளில் நீ என் குமாரனுக்குப் பெண் கொள்ளாமல்; நீ என் தேசத்துக்கும் என் இனத்தாரிடத்திற்கும் போய், என் குமாரனாகிய ஈசாக்குக்குப் பெண்கொள்வேன் என்று வானத்துக்கும் பூமிக்கும் தேவனுமாகிய கர்த்தர்பேரில் எனக்கு ஆணையிட்டுக்கொடுக்கும்படி, நீ என் கையை என்தொடையின்கீழ் வை என்றான்" ஆதி24:3-4). ஆபிரகாமோ, வானத்துக்கும் பூமிக்கும் ஒரே தேவனாகிய கர்த்தரைத் தெய்வமாகக் கொண்டவன், ஆனபடியினால் பல தெய்வங்களையும், தேவதைகளையும், அவைகளின் விக்கிரகங்களையும், உருவங்களையும் உருவாக்கி அவைகளுக்கு மனிதர்களையும், விலங்குகளையும் பலிசெலுத்தி வணங்கி வந்த கானானியரிடம் பெண் கொள்ள விரும்பவில்லை. பாருங்கள் இந்த கானானியர் வானத்தையும் பூமியையும் படைத்த ஒரே மெய் தேவனை வணங்காமல் தங்கள் இஷ்டம் போல தேவனற்ற பலவற்றை வணங்கி பலிசெலுத்தி எப்பேர்பட்ட பாவங்களைச் செய்திருக்கிறார்கள்! எனவே தான் ஆபிரகாம் தன் மகனுக்குப் பெண்பார்க்கும் விஷயத்தில் மிகவும் ஜாக்கிரதையுள்ளவனாகவும் வைராக்கியமுள்ளவனாகவும் இருந்திருக்கிறான்.. கர்த்தருக்கேற்ற வைராக்கியத்தைக் கர்த்தர் கண்டு ஆசீர்வதிப்பாரல்லவா? ஆம்! ஆசீர்வதிக்கவே ஆசீர்வதிக்க சித்தங்கொண்டார் நம் தேவன்.

அன்பு சகோதரிகளே, உங்கள் பிள்ளைகளின் திருமணவிஷயத்தில் எத்தகைய வைராக்கிமுடையவர்களாக இருக்கிறீர்கள்? உங்கள் பிள்ளைகளுக்கு அவர்கள் இஷ்டம்போல் வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுக்கும்படி சுதந்தரம்



கொடுத்துவிட்டீர்களா? இவ்விஷயத்தில் தேவன் ஆதியிலிருந்தே அவருக்குப் பிரியமானபடி, அவருடைய சித்தத்தின்படியே ஆதாமுக்கு ஏவாளை ஏற்படுத்தினார். பல பெண்களை சிருஷ்டித்து ஏதோ ஒரு பெண்ணைத் தெரிந்துகொள்ளும்படி அனுமதிக்கவில்லை. சிந்திப்போம். இதே காரியத்தையே கிறிஸ்தவர்களாகிய நமக்கும் புதியஏற்பாடு மிகத்தெளிவாக வலியுறுத்துகிறது. 2கொரி.6:14-16 வசனங்களில் "அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருப்பீர்களாக... கிறிஸ்துவுக்கும் பேலியாளுக்கும் (விக்கிரகாராதனைக்காரர்கள்) இசைவேது? அவிசுவாசியுடனே விசுவாசிக்குப் பங்கேது? தேவனுடைய ஆலயத்துக்கும் விக்கிரகங்களுக்கும் சம்பந்தமேது?...." என்று சொல்லப்பட்டுள்ளது. இதற்கு மிஞ்சி செயல்பட்டோமானால் அது நமக்கு மனநோவாக மாறிவிடும். ஜாக்கிரதையாய் இருப்போம்.

மேலும் ஆபிரகாம், "அவர்: நான் வழிபடும் கர்த்தர் உன்னோடே தம்முடைய தூதனை அனுப்பி, உன் பிரயாணத்தை வாய்க்கப் பண்ணுவார்; ..." (ஆதி.24:40) என்றான். இவனுடைய விசுவாசத்தின்படியே கர்த்தர் காரியத்தை வாய்க்கப்பண்ணினார். அந்தபடியே ஆபிரகாமின் ஊழியக்காரனும் "என் எஜமானாகிய ஆபிரகாமுக்கு தேவனாயிருக்கிற கர்த்தாவே, இன்றைக்கு நீர் எனக்குக் காரியம் சித்திக்கப்பண்ணி, என் எஜமானாகிய ஆபிரகாமுக்கு தயவு செய்தருளும்" (ஆதி.24:12-15) என்று வேண்டியதோடல்லாமல், தன் எஜமானனின் குமாரனுக்கென்று தேவனால் நியமிக்கப்பட்ட பெண் இன்னின்ன விதமாக நடந்து கொள்ள வேண்டுமென்று தனக்குள்ளே சொல்லிக் கொண்டான். இவ்வாறு சொல்லி முடிக்கும் முன்பே தேவன் காரியத்தை வாய்க்கப்பண்ணத் தொடங்கினார். "கர்த்தருக்குச் சித்தமானது அவர் கையினால் வாய்க்கும்" என வேதம் கூறுகிறது. சகோதரிகளே, உங்களுடைய பிள்ளைகளின் திருமணக் காரியங்களில் உங்களுடைய **Choice** என்னவாயிருக்கிறது? ஜெபிக்கும் போது, உம்முடைய சித்ததின்படி ஆகக்கடவது என ஜெபித்துவிட்டு, உள்ளத்தின ஆழத்தில் கர்த்தருக்குச் சித்தமில்லாத அநேக ஆசைகளையும், விருப்பங்களையும், எதிர்பார்ப்புகளையும் வைத்துக் கொண்டிருப்பீர்களானால் உங்கள் உதடுகளினால் தேவனிடத்தில் நெருக்கமாகவும் உள்ளத்தினால் மிகத் தூரமாகவும் இருக்கிறீர்கள் என்று தான் பொருள். தேவனுக்கு மறைவானது ஒன்றுமில்லை. நாம் கிறிஸ்துவின் சந்ததியாராக இருப்போமானால் **ABC** வகையில், அதாவது **A-Age, B-Beauty, C-Caste** என்ற வட்டத்திற்குள் உங்களுடைய பிள்ளைகளுக்கான வாழ்க்கைத் துணையைத் தேடாமல் கிறிஸ்துவின் சந்ததியில் தேடுங்கள் அப்போது நலமானதைப் பெற்றுக் கொள்வீர்கள்.

ஆபிரகாமின் ஊழியக்காரன், "அவன் இப்படிச் சொல்லி முடிக்கும் முன்னே, இதோ, ஆபிரகாமுடைய சகோதரனாகிய நாகோரின் மனைவி மில்க்காளுடைய குமாரனாயிருக்கிற பெத்துவேலுக்குப் பிறந்த ரெபெக்காள் குடத்தைத் தோள்மேல் வைத்துக்கொண்டு புறப்பட்டு வந்தாள். அந்தப் பெண் மகா ரூபவதியும் புருஷனை அறியாத கன்னிகையுமாய் இருந்தாள்; அவள் துரவில் இறங்கி, தன் குடத்தை

நிரப்பிக்கொண்டு ஏறிவந்தாள். அப்பொழுது அந்த ஊழியக்காரன், அவளுக்கு எதிர்கொண்டோடி; உன் குடத்திலிருக்கிற தண்ணீரில் கொஞ்சம் குடிக்கத் தரவேண்டும் என்றான். அதற்கு அவள்: குடியும் என் ஆண்டவனே என்று சீக்கிரமாய்க் குடத்தைத் தன் கையில் இறக்கிக்கொண்டு, அவனுக்குக் குடிக்கக் கொடுத்தாள். கொடுத்தபின், உம்முடைய ஒட்டகங்களும் குடித்துத் தீருமட்டும் அவைகளுக்கும் மொண்டு வார்ப்பேன் என்று சொல்லி; சீக்கிரமாய்த் தன் குடத்துத் தண்ணீரைத் தொட்டியிலே ஊற்றிவிட்டு, இன்னும் மொண்டுவரத் துரவண்டையில் ஓடி, அவனுடைய ஒட்டகங்களுக்கெல்லாம் மொண்டு வார்த்தாள்" (ஆதி.24:25-20) என வாசிக்கிறோம். இவ்வசனங்களிலிருந்து ரெபெக்காளின் நற்குணங்களைக் கண்டு கொள்ள முடிகிறது.

முதலாவது, அவள் ஒரு சுறுசுறுப்பான வாலிபப் பெண் என அறிய முடிகிறது. அத்தோடுகூட தன் பெற்றோரின் வீட்டு வேலைகளில் உதவிசெய்யக்கூடியவளாகவும் இருந்திருக்கிறாள். மேலும் அந்நியரையும் மதித்து அவர்களின் தேவையை அறிந்து தாகம் தீர்க்கக் கூடிய பண்பினையும் பெற்றுள்ளாள். எனவே தான் சிறிதளவும் தாமதிக்காமல், ஆபிரகாமின் ஊழியக்காரன் குடிப்பதற்குத் தண்ணீர் கேட்டவுடனே, குடியும் என் ஆண்டவனே, என்று சீக்கிரமாய் தன் தோளிலிருந்த குடத்தை இறக்கி அவனுக்குக் குடிக்கக் கொடுத்தாள். அதுமாத்திரமல்லாது அவனுடைய ஒட்டகங்களுக்கும் அவைகள் குடித்துத் தீருமட்டும் தண்ணீர் தொட்டியை நிரப்ப ஆரம்பித்தாள் என்ன சுறுசுறுப்பு! எப்பேர்பட்ட நற்குணம்! இன்றைய வாலிபப் பிள்ளைகள் இப்படி இருக்கிறார்களா? **Tv** முன்பும் செல்போன் வைத்துக்கொண்டும் மற்றவர்கள் பெயர் சொல்லி கூப்பிட்டால் கூட செவிசாய்க்காதவர்களாய் இருக்கிறார்களா? அல்லது உங்கள் பெண்பிள்ளைகளை வீட்டில் ஒரு வேலையும் செய்ய வேண்டாமென்று செல்லமாக வளர்க்கிறீர்களா? நாம் எப்படி நம் பிள்ளைகளை வளர்க்கவேண்டுமென அறிந்து கொள்ள வேதாகமத்திற்குத் திரும்புங்கள் அதின்படி பழக்குவியுங்கள்.

ரெபெக்காள் ஆபிரகாமின் ஊழியக்காரன் ஒரு அந்நியன் தானே என்று அலட்சிமயாக இருக்கவில்லை அல்லது இவருக்குத் தண்ணீர் கொடுத்தது போதாதா, ஒட்டகங்களுக்கும் கொடுக்க வேண்டுமா என்றும் அவள் நினைக்கவில்லை. ஒட்டகங்களுக்கும் தண்ணீர் மொண்டு வார்த்தாள் ஒரு ஒட்டகம் ஒரே நேரத்தில் கிட்டத்தட்ட 100 லிட்டர் தண்ணீர் குடிக்கும் என்று சொல்லுகின்றனர் அப்படியானால் இவள் அந்த ஊழியனோடு வந்த ஒட்டகங்கள் அனைத்திற்கும் அநேக குடங்கள் மொண்டு வார்த்திருக்க வேண்டும். இவளுடைய இச்செயல் இவளுடைய சுறுசுறுப்பான பரபரப்புடன் செயல்படும் குணத்தைக் காட்டுகிறதல்லவா! இவ்வாறு தான் ஆபிரகாமும் அந்நியரை உபசரித்திருக்கிறார் என்பதை வாசித்திருப்போம். இவளுடைய இச்செயலுக்குக் கிடைத்த பரிசு அரைச்சேக்கல் எடையுள்ள பொற்காதணி மற்றும் இரண்டு கடகங்கள்.

மேலும் ஆபிரகாமின் ஊழியன், நாங்கள் உன் தகப்பன் வீட்டில் தங்கவேண்டும் என்று கேட்டவுடன் எந்தத் தயக்கமுமின்றி. "எங்களிடத்தில் வைக்கோலும் தீவனமும் வேண்டிய மட்டும் இருக்கிறது; இராத்தங்க இடமும் உண்டு



என்றாள்" (ஆதி.24:2). அதன்படி அந்தப் பெண் ஓடி, இந்தக் காரியங்களைத் தன் தாயின் வீட்டிலுள்ளவர்களுக்கு அறிவித்தாள்" (வச.28). ஒரு வாலிபப் பெண் அந்நிய மனிதனுக்கும் அவன் ஒட்டகங்களுக்கும் தண்ணீர் வார்த்தது, அந்த ஊழியக்காரன் அவளுக்கு அணிவித்த பொற்காதணிகள், கடகங்கள், மற்றும் அந்த மனிதன் விசாரித்த அத்தனை விஷயங்களையும் ஒன்றையும் தன் தாயின் வீட்டிலுள்ள அனைவருக்கும் ஒழிவு மறைவில்லாமல் அறிவித்தாள். இந்த வசனத்தை வாசிக்கும் போது அவளுடைய வெளிப்படைத் தன்மை விளங்குகிறது. தன் வீட்டாரிடம் எதையும் மறைக்கக்கூடாது என அறிந்திருந்திருக்கலாம்.

இன்றைய நாளில் நம்வீட்டில் திருமணமாகாத பெண்பிள்ளைகள் எப்படி நடந்து கொள்கின்றனர்? உங்கள் பிள்ளைகள் உங்களிடம் எதையும் மறைக்காமல் எல்லாவற்றையும் பகிர்ந்து கொள்ளுகிறார்களா? உங்கள் பிள்ளைகள் யாவரும் கர்த்தரால் உங்களுக்குக் கிடைத்த சுதந்தரம். அவர்களுடைய எல்லா காரிங்களுக்கும் நீங்கள் தான் பொறுப்பாளி. கர்த்தர் ஒருநாளில் உங்களிடத்தில் தாம் ஒப்புவித்த அனைத்திற்கும் கணக்குக் கேட்பார் என்பதை மறவாமல் சிறுவயது முதற் கொண்டே 'பிள்ளையாண்டான் நடக்க வேண்டிய வழியிலே நடத்துங்கள்' மற்றவர்களை குறிப்பாக பெரியவர்களை மதித்து நடக்கவும் அவர்களை கனம் பண்ணவும் கற்றுக் கொடுங்கள்.

அடுத்ததாக, ரெபெக்காளின் இன்னொரு குணாதிசயம் கர்த்தரின் சித்தத்திற்கேற்ப நடப்பதற்குத் திட்டமிடுகிறவளாக இருந்தாள் எனக்கூறலாம். ஆபிரகாமின் ஊழியக்காரன் ரெபெக்காளை தன் எஜமானின் மகன் ஈசாக்குக்கு மனைவியாகும்படி அவளுடைய தகப்பன் பெத்துவேலிடமும், சகோதரன் லாபானிடமும் கேட்ட போது "அப்பொழுது லாபானும் பெத்துவேலும் பிரதியுத்தரமாக: இந்த காரியம் கர்த்தரால் வந்தது உமக்கு நாங்கள் நலம் பொலம் ஒன்றும் சொல்லக்கூடாது. இதோ, ரெபெக்காள் உமக்கு முன்பாக இருக்கிறாள்; கர்த்தர் சொன்னபடியே அவள் உமது எஜமானுடைய குமாரனுக்கு மனைவியாகும்படிக்கு அவளை அழைத்துக் கொண்டுபோம் என்றார்கள். ஆபிரகாமின் ஊழியக்காரன் அவர்கள் வார்த்தைகளைக் கேட்டபோது, தரைமட்டும் குனிந்து, கர்த்தரைப் பணிந்து கொண்டான். பின்பு அந்த ஊழியக்காரன் வெள்ளியுடைமைகளையும், பொன்னுடைமைகளையும், வஸ்திரங்களையும் எடுத்து, ரெபெக்காளுக்குக் கொடுத்ததுமன்றி, அவளுடைய சகோதரனுக்கும் தாய்க்கும் சில உச்சிதங்களையும் கொடுத்தான்" (ஆதி.24:50-53). தொடர்ந்து வாசிப்போமானால் இது ஒரு அழகிய ஒழுங்குப் படுத்தப்பட்ட திருமண ஏற்பாடாக இருந்ததை அறிந்துகொள்ளலாம்.

"அப்பொழுது அவர்கள்: பெண்ணை அழைத்து, அவள் வாய்ப்பிறப்பைக் கேட்போம் என்று சொல்லி, ரெபெக்காளை அழைத்து; நீ இந்த மனிதனோடே கூடப் போகிறாயா என்று கேட்டார்கள். அவள்: போகிறேன் என்றாள்" (வச.57,58). இது இவளுடைய தீர்க்கமான பதிலாக இருக்கிறது. நடந்த எல்லாவற்றையும் கண்டு அறிந்து கொண்டவள், இது கர்த்தரால் வந்த காரியம், தேவனுடைய அநாதி தீர்மானம் என்பதையும் அறிந்து தேவசித்தம் செய்ய திட்டமிட்டுள்ளாள். இவள் குடியிருந்து வந்த

பகுதி மெசொப்பொத்தாமியா (இப்போதிருக்கிற சிரியா தேசத்தின் வடதேசம்) (வச.10). ஈசாக்கு தென்தேசத்தில் லாகாய்ரோயீ என்ற பகுதியில் குடியிருந்தான். மெசொப்பொத்தாமியாவுக்கும் லாகாய்ரோயீ என்ற பகுதிக்கும் இடையேயுள்ள தூரம் 800 அல்லது 900 கிலோமீட்டர் எனச் சொல்லப்படுகிறது.

ரெபெக்காளோ இதைப் பற்றியெல்லாம் கவலைப்படவில்லை, தன் தாயின் வீட்டாரைவிட்டு இவ்வளவு தூரம் செல்லுகிறோமே என்ற பயமும் அவளிடம் காணப்பட்டதாகத் தெரியவில்லை. இவ்வாறாக தெளிவான திட்டமிடக்கூடியவளாக மட்டுமல்லாது அதனை நிறைவேற்றும்படி கிரியை நடப்பிப்பவளாக ஆபிரகாமின் ஊழியக்காரனோடு புறப்பட்டு ஒட்டகத்தில் தன் பயணத்தை மேற்கொண்டாள். "அப்படியே அவர்கள் தங்கள் சகோதரியாகிய ரெபெக்காளையும், அவள் தாதியையும், ஆபிரகாமின் ஊழியக்காரனையும், அவன் மனிதரையும் அனுப்புவித்து, ரெபெக்காளை வாழ்த்தி: எங்கள் சகோதரியே, நீ கோடாகோடியாய்ப் பெருகுவாயாக; உன் சந்ததியார் தங்கள் பகைஞருடைய வாசல்களைச் சுதந்தரித்துக் கொள்வார்களாக என்று ஆசீர்வதித்தார்கள்" (வச.9-60).

கடைசியாக, அவள் ஒரு அடக்கமுடைய பெண்மணியாகவும் திகழ்ந்தாள் என வசனங்கள் 63 முதல் 65 வசனங்களில் வாசிக்கிறோம். "ரெபெக்காளும் தன் கண்களை ஏறெடுத்து ஈசாக்கைக் கண்டபோது, ஊழியக்காரனை நோக்கி: அங்கே வெளியிலே நமக்கு எதிராக நடந்து வருகிற அந்த மனிதன் யார் என்று கேட்டாள். அவர்தான் என் எஜமான் என்று ஊழியக்காரன் சொன்னான். அப்பொழுது அவள் ஒட்டகத்தை விட்டிறங்கி முக்காடிட்டுக்கொண்டாள். "ஸ்திரீயானவள் எல்லாவற்றிலும் அடக்கமுடையவளாயிருந்து அமைதலோடு கற்றுக்கொள்ளக்கடவள்" என 1தீமோ.2:11 ல் வாசிக்கிறோம். "அந்தபடியே சாராள் ஆபிரகாமை ஆண்டவன் என்று சொல்லி, அவனுக்குக் கீழ்ப்படிந்திருந்தாள்..." (1பேது.3:6) என வாசிக்கிறோம். இவள் மகா ரூபவதி என வர்ணிக்கப்பட்டுள்ளாள்.

ஆனால் இன்றைய நாளில் காணப்படும் வாலிபப் பிள்ளைகளைப் போலல்லாது அல்லது எந்த மேட்டிமையும் இல்லாதவளாக, தன் மாமனார் ஆபிரகாமைப் போல அந்நியரை உபசரிக்கிறவளாகவும் தேவனுடைய தீர்மானத்தின்படி, இன்றுவரை கடற்கரை மணலத்தனையான வாக்குத்தத்தமுள்ள பிள்ளைகளுக்கு சுயாதீனமுள்ளவளாகவும் இருக்கிறாள் (கலா.4:22,31; ரோம.9:7-13). "ஈசாக்கு ரெபெக்காளைத் தன் தாய் சாராளுடைய கூடாரத்துக்கு அழைத்துக்கொண்டுபோய், அவளைத் தனக்கு மனைவியாக்கிக்கொண்டு, அவளை நேசித்தான். ஈசாக்கு தன் தாய்க்காகக் கொண்டிருந்த துக்கம் நீங்கி ஆறுதல் அடைந்தான்" (ஆதி.24:67).

அன்பான சகோதரிகளே, நம்முடைய பிள்ளைகள் இவ்வாறான குணாதிசயங்களை உடையவர்களாகக் காணப்படுகின்றனரா அல்லது இக்காலத்தில் தன் புருஷனை வாடா, போடா என அழைத்துக் கொண்டு வரும் பெண்களைப் போலிருக்கின்றார்களா? எப்போதுமே, ஸ்திரீகள் தன் குடும்பத்தை நடத்தும் பொறுப்புடையவர்கள். எனவே நம்முடைய பண்புகள் கிரியைகள்தான் நம்முடைய



பிள்ளைகளுக்கு மாதிரியாக இருக்கின்றன. நாம் எப்படியோ, நம்முடைய பிள்ளைகளும் அப்படியே! ‘தாயைப் போல பிள்ளை நூலைப்போல சேலை’ என்பது பழமொழி. நாம் பக்தியுள்ள ஸ்திரீகளுக்கேற்றபடி நடப்போம் (1 தீமோ. 2:10-13). நம் பிள்ளைகளையும் கர்த்தர் தம்முடைய ஆசீர்வாங்களுக்கு நேராக நடத்துவாராக! ஆமென்!

## கேள்விகள்

1. ஆபிரகாம் தன் மகன் ஈசாக்குக்கு பெண்பார்க்கும்படி தன் ஊழியக்காரனை யாரிடத்தில் அனுப்பினான்? ஏன்?
2. ஆபிரகாமின் ஊழியக்காரன் ரெபெக்காளிடம் குடிக்க தண்ணீர் கேட்டபோது அவள் என்ன சொன்னாள்?
3. ஆபிரகாமின் ஊழியக்காரன் ரெபெக்காளுக்கும் அவளது தாய் மற்றும் சகோதரனுக்கும் கொடுத்த உச்சிதங்கள் யாவை?
4. இந்த காரியம் கர்த்தரால் வந்தது என்று சொல்லியவர்கள் யாவர்?
5. ரெபெக்காள் ஈசாக்கைக் கண்டவுடன் என்ன செய்தாள்?

# <u>பயப்படாதே</u>

## Fear Not

**21**

**பு**திய ஆண்டு எவ்வாறு இருக்குமோ? பழைய ஆண்டின் வருத்தங்களும், சஞ்சலங்களும் தொடருமோ என பயந்து, புதிய ஆண்டில் தேவ ஆசீர்வாதம் கிடைக்காதோ என ஏங்கிக் காத்திருக்கும் சகோதரிகளே பயப்படாதீர்கள்.

கர்த்தரை தெய்வமாகக் கொண்டிருக்கும் சகோதரிகள் பயப்படத் தேவையில்லை. அண்டசராசரங்களை உண்டாக்கி அனைத்தும் தன் தன் வேலைகளை தேவசித்தத்தின்படி தவறாமல் செய்து கொண்டிருக்கப்பண்ணுகின்ற தேவன் உங்களையும் என்னையும் வழிநடத்துவது அதிகநிச்சயமல்லவா? ஆபிரகாம் கர்த்தரை விசுவாசிக்கிற அனைவருக்கும் தகப்பன் அவனை அருமையாக நடத்தின தேவன் அவன் விசுவாசித்த வண்ணமாய், விசுவாசிக்கிற ஒவ்வொருவரையும் அவ்விதமே நடத்தவல்லவர். புத்தாண்டுக்குள் நுழைய இருக்கிற நாம் நம்மை சீர்தூக்கிப்பார்த்து ஆசீர்வாதங்களை இழந்து போகாதிருப்போமாக!

ஆபிரகாமை நோக்கி,....நீ பயப்படாதே, நான் உனக்குக் கேடகமும், உனக்கு மகாபெரிய பெலனுமாயிருக்கிறேன் என்றார் (ஆதி.15:1). இவ்விதமான வாக்குத்தத்தினை பெற அவனிடம் இருந்தது விசுவாசமட்டுமல்ல, நற்கிரியை, பிறனுக்குள்ள யாதொன்றையும் இச்சியாதிருத்தல். ஆம், ஆதி.14:22ல் சோதோம் ராஜாவை பார்த்து அவன் கூறியதை கவனியுங்கள். “ ....நான் ஒரு சரட்டையாகிலும் பாதரட்சையின் வாரையாகிலும், உமக்கு உண்டானவைகளில் யாதொன்றை யாகிலும் எடுத்துக்கொள்ளேன்” என்றான். அப்படியென்றால், இவன் பிறனுக்குள்ள எதையும் இச்சிக்கவில்லை என்றுதானே பொருள். அன்பு சகோதரிகளே, ஸ்திரீகளாகிய நாம் இவ்விஷயத்தில் பெலவீனர்கள் என்றே சொல்ல வேண்டும். ஏனெனில் நமது ஆதித்தாய் ஏவாளிடம் இச்சிக்கிற குணமிருந்ததே. நாமும்கூட அநேக நேரங்களில் நவநாகரிக உலகின் பொருட்களையோ, அல்லது பிறருக்குள்ள ஏதோ சிலவற்றை இச்சித்து இப்பொருள் நமக்கிருந்தால் நன்றாக இருக்குமென யோசிக்க ஆரம்பித்துவிடுகிறோம். பிறனுக்குள்ள யாதொன்றையும் இச்சியாதிருங்கள் என்ற கட்டளையை மறக்க கூடாது. அது பொருட்களாயிருந்தாலும் சரி, வேறெதுவாயிருந்தாலும் சரி. இச்சையை தவிர்க்கும்போது நம் தேவன் நமக்கு கேடகமும், மகாபெரியபெலனுமாயிருப்பார் என்பது அதிக நிச்சயம்.

ஆபிரகாமின் தேவன், ஈசாக்கின் தேவனுமல்லவா! ஈசாக்குக்கு கர்த்தர் தரிசனமாகி “...பயப்படாதே, நான் உன்னோடேகூடஇருந்து என் ஊழியக்காரனாகிய ஆபிரகாமினிமித்தம் உன்னை ஆசிர்வதித்து, உன் சந்ததியைப் பெருகபண்ணுவேன் என்றார் ”(ஆதி.26:24). ஈசாக்கு இவ்வாசீர்வாத வாக்குத்தத்தை எச்சூழலில் பெற்றான்? இவனுடைய வேலைக்காரருக்கும் கேராரூர் மேய்ப்பருக்கும் இடையே



துரவு வெட்டின விஷயத்தில் பலமுறை வாக்குவாதம் ஏற்பட்டது. ஈசாக்கோ வாக்குவாதம் பண்ணாதபடி அவ்விடத்தைவிட்டு பெயர்ந்து வேறொரு இடத்திற்கு சென்ற போது கர்த்தர் அவனுக்கு தரிசனத்தில் இந்த ஆசீர்வாதத்தை வாக்குப் பண்ணினார்.அநேக சமயங்களில் தேவனை அறியாத சிலரோடு நாமும் வாக்குவாதம் பண்ணவேண்டியசூழ்நிலை உருவாகிவிடுகின்றது. வேதம் ‘வாக்குவாதம் எழும்பும் முன் அதை விட்டு விடு’ என்று கூறுகிறது . ஆம், நாமும் இவ்விதமாக அதை விட்டு விலகும்போது நம்மைஆசீர்வதித்து நம் சந்ததியைப் பெருகப்பண்ணுவார். எனவே அன்பு சகோதரிகளே, கர்த்தரை அறிந்துள்ள நாம் மற்றவர்களோடு வீண் வாக்குவாதங்களைத் தவிர்ப்போமாக!

யோசுவாவை பார்த்து மோசே, கர்த்தர்தாமே உனக்கு முன்பாகப் போகிறவர், அவர் உன்னோடே இருப்பார், அவர் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கை விடுவதுமில்லை; நீ பயப்படவும் கலங்கவும் வேண்டாமென கர்த்தருக்குள் திடப்படுத்தினான். சகோதரிகளே, நம்மை எப்போதும் கலங்கப் பண்ணுகிறவன் பிசாசு தான். நம்முடைய வாழ்வில் எத்தனையோ கோணங்களில் பிசாசு நம்மைக் கலங்கப்பண்ணுகிறவனாய் இருக்கிறான் என அங்கலாயிக்கிறீர்களா?, வேதம், பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள் அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான் எனக் கூறுகிறது. ஆம், நாம் தைரியமாய் நின்று பிசாசுக்கு எதிர்த்து நிற்போம். உலகின் எக்காரியமும் நம்மை மேற்கொள்ளவிடாது எதிர்த்து நிற்போமானால் நிச்சயமாய் பிசாசு நம்மை விட்டு ஓடிப்போவான். பிசாசு கொண்டுவருகிறதான சோதனைகளைக் கண்டு நாம் பயப்படவேண்டாம், யூதாசுக்குள் சாத்தான் புகுந்ததுபோல் நமக்குள்ளும் புகுந்துவிட இடமளிக்காமல் கர்த்தருடைய ஆவியானவருக்கு இடமளிக்கும் போது நிச்சயமாய் நாம் பயப்பட வேண்டிய அவசியமில்லை. சத்துருவாகிய பிசாசை ஜெயித்து பரம கானானுக்குள் பிரவேசிப்போம்.

இயேசுவின் கல்லறையைப் பார்க்க வந்த ஸ்திரீகள், இயேசுவின் சரீரத்தைக் காணாமல் கலக்கமடைந்து பயத்துடன் காணப்பட்டனர் (லூக் 24 : 15). ஏன் தெரியுமா? மாம்சசிந்தையில் இயேசுவை மரித்தோரிடத்தில் தேடினதால் பயப்பட்டார்கள் அன்பான சகோதரிகளே, இன்று நீங்கள் இயேசுவை மாம்சபிரகாரமாகவே எண்ணிக் கொண்டு இருக்கிறீர்களா? இயேசுவை மரித்தோரிடத்தில் தேடிக்கொண்டிருக்கிறீர்களா? அவர் அப்போஸ்தர்களைப் பார்த்து உங்களை திக்கற்றவர்களாய் விடேன் உங்களிடத்தில் வருவேன் சத்திய ஆவியாகிய தேற்றரவாளனை உங்களுக்கு தருவேன் என்று கூறினாரே. அவ்வாறு இருக்க, நம்மை தேற்றி ஆற்றி இம்மானுவேலனாக நம்மோடு கர்த்தர் இருக்கும்போது நாம் உலக காரியங்களை கண்டு பயப்பட வேண்டாம்.

கர்த்தராகிய இயேசுவின் பிறப்பின் போது, தேவதூதன் பயப்படாதிருங்கள் -- எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். ( லூக் 2:10) என்றான். ஆம், இயேசுவின் பிறப்பு நமக்கு சமாதானத்தையும் சந்தோஷத்தையும் உண்டாக்கும் நற்செய்தி , இயேசுவின் மரணம்

நமக்கு இரட்சிப்பின் சந்தோஷத்தை உண்டாக்கும் மீட்பின் செய்தி, இயேசுவின் பரமேறிய சம்பவம் நம்மை தேற்றும்படிக்கு தேற்றரவாளனை அனுப்பிய ஆறுதலின் செய்தி, இயேசுவின் இரண்டாம் வருகை நம்மை நித்திய மகிழ்ச்சிக்குள்ளாக்கும் நித்திய செய்தி. பாருங்கள் ,இயேசுவினிடத்தில் எத்தனை இன்பமுண்டு! அவரிடம் நாம் அன்பு கொண்டிருப்போமானால் வரும் நாட்களைக் குறித்த பயம் நம்மை வாட்டாது. “அன்பிலே பயமில்லை; பூரண அன்பு பயத்தைப் புறம்பே தள்ளும்; பயமானது வேதனையுள்ளது, பயப்படுகிறவன் அன்பில் பூரணப்பட்டவன் அல்ல'' என யோவான் 4:18 மிக அழகாய் கூறுகின்றார்.

அன்பான சகோதரிகளே; பயப்படாதேயுங்கள் நம்முடைய உள்ளத்தில் பயமிருக்குமானால் நிச்சியமாவே நாம் இயேசுவினிடத்தில் பூரண அன்பு கொண்டிருக்கவில்லை என்று தான் பொருள். வருகின்ற ஆண்டிலிருந்தாவது நம்மை சீர்தூக்கிப்பார்த்து கர்த்தருக்குப் பிரியமானது இன்னதென்று வேதாகமத்தின் உதவியுடன் அறிந்து பயத்தை புறம்பே தள்ளி, ஜீவசனத்தைப் பிடித்துக் கொண்டு சுடர்களைப் போல் பிரகாசிப்போம் “ ...நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை உன்னைக் கைவிடுவதுமில்லையென்று அவர்சொல்லியிருக்கிறாரே. அதினாலே நாம் தைரியங்கொண்டு; கர்த்தர் எனக்கு சகாயர், நான் பயப்படேன் மனுஷன் எனக்கு என்ன செய்வான் என்று சொல்லலாமே'' (எபி.13:5,6). நாம் கர்த்தருடையவர் களாயிருந்து வரும் புத்தாண்டில் கர்த்தரின் அசீர்வாதத்தை பெறுவோமாக!

### கேள்விகள்

1. ஒரு சரட்டையாகிலும் பாதரட்சையின் வாரையாகிலும் இச்சித்து எடுத்துக்கொள்ளாதவன் யார்?
2. வாக்குவாதம் எழும்பும்முன் நாம் என்ன செய்யவேண்டுமென வேதம் கூறுகிறது?
3. இயேசுவின் கல்லறையைப் பார்க்க வந்த ஸ்திரீகள் எதினால் கலக்கமடைந்தார்கள்?
4. எல்லா ஜனத்திற்கும் உரிய நற்செய்தி எது?
5. எதிலே பயமில்லை எது பயத்தை புறம்பே தள்ளும்?



## வஞ்சிக்கப்படாதிருங்கள்
## Be Not Deceived

**22**

**இ**ன்றைய உலகம் அநேகரை வஞ்சிக்கின்றதாக காட்சியளிக்கிறது. இப்படிப்பட்ட உலகில் ஸ்திரீகளாகிய நாம் அநேகவிஷயங்களில் வஞ்சிக்கப்படுகின்றோம். நமது ஆதித்தாயாகிய ஏவாளும் கூட கண்களின் இச்சைக்கு இடமளித்து வஞ்சிக்கப்பட்டு மீறுதலுக்குட்பட்டாள், நாமும் கூட இந்த மாய உலகை இச்சித்து மாய்ந்து போய்விடக்கூடாது. கிறிஸ்தவ சகோதரிகளுக்கு வேதாகமத்தின் மூலம் எச்சரிப்பின் சத்தம் ஒலித்துக் கொண்டேயிருக்கிறது. இச்சத்தத்திற்குச் செவிசாய்ப்போமா?

**சாத்தானால் வஞ்சிக்கப்படுதல்:** சாத்தான் நம்மை வஞ்சிக்கிறவனா யிருக்கிறபடியால் சாத்தானால் நாம் வஞ்சிக்கப்படுகிறோம். ஏவாளை சர்ப்பம் வஞ்சித்தது என ஆதி.3:13-ல் வாசிக்கிறோம். ஏவாளின் பார்வைக்கு இன்பமாய் காட்சியளித்தது அந்த விலக்கப்பட்ட கனி. அதைப் புசித்தாள், மீறுதலுக்குட்பட்டாள் (1தீமோ.2:14). அவளுடைய கண்களின் இச்சை சாத்தானுக்கு இடமளிக்கச் செய்தது முடிவில் சர்ப்பம் வஞ்சித்தது, நான் புசித்தேன் என்றாள் (ஆதி.3:13). இதைப்போலவே பொருளாசையாகிய பிசாசு நம்மை வஞ்சிக்கிறது. ஆம், நமக்கு உலகப்பொருட்களின் மேல் அளவில்லா ஆசை ஏற்படுகிறது, அதை வாங்கலாமா? இதை வாங்கலாமா? என ஸ்திரீகள் அழிந்து போகும் பொருட்களின் மீது கண்களைப் பறக்கவிட்டு பொருளாசையில் பழகிபோய்விடுகின்றனர். இப்படி பொருளாசையில் பழகின இருதயமுடையவர்களை வேதம் சாபத்தின் பிள்ளைகள் (2பேது.2:14) என அழைக்கிறது.

அன்பு சகோதரிகளே, நாம் ஆசீர்வதிக்கப்படவே அழைக்கப்பட்டுள்ளோம். பிசாசு நம்மை வஞ்சிக்க இடம் கொடாதிருப்போம். நம்முடைய நாட்டில் கறிக்கோழி வளர்ப்பது போல சில வெளிநாடுகளில் மாம்சத்திற்கென்று வெள்ளை பன்றி வளர்ப்பார்களாம். அவைகளை கசாப்புக் கடைக்குப் பிடித்து செல்லுவது மிகக்கடினமாம். எனவே அவைகளுக்குப்பிடித்தமான பீன்ஸ் பயிர்களை அவைகளுக்கு முன் அள்ளி இறைப்பார்கள், அந்த பன்றிகள் பீன்ஸ் பயிர்களால் ஈர்க்கப்பட்டு கசாப்பு கடைவரை இறைக்கப்பட்ட பயிர்களைத் தின்னும் ஆர்வத்தில் தங்களுடைய நிலையை அறியாமல் கசாப்பு கடைக்கே வந்து சேர்ந்துவிடுமாம். பார்த்தீர்களா! சகோதரிகளே உலகம் இப்படித்தான் பல பொருட்களின் மேல் ஆசைகொள்ளச்செய்து நம்மை சாபத்திற்குள்ளாக்கிவிடும். சாத்தான் நம்மை வஞ்சிக்க இடங்கொடாது அவனுக்கு எதிர்த்து நிற்போமாக!

**நம்மை நாமே வஞ்சித்தல்:** சில வேளைகளில் நம்மைநாமே வஞ்சித்துக் கொள்ளுகிறவர்களாயிருக்கிறோம். எப்போது தெரியுமா? நாம் திருவசனத்தைக்

கேட்டும் அதின்படி செய்யாத போது வஞ்சித்துக்கொள்ளுகிறோம். "--நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்குத் திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதின் படி செய்கிறவர்களாயும் இருங்கள்" (யாக்.1:22). சிலர் வசனம் இப்படியா இருக்கிறது என மனோவாஞ்சையாயிராமல், எங்களுக்குக் கர்த்தர் அதை வெளிப்படுத்தினார் இதை வெளிப்படுத்தினார் என தங்களுடைய இருதயத்தின் எண்ணங்களுக்கே இடமளித்து வஞ்சிக்கப்படுகிறார்கள். நம்முடைய நினைவுகள் கர்த்தருடைய நினைவுகள் அல்ல என்பதை மறந்து விடக்கூடாது, திருவசனம் சபை கூடிவருதலை வலியுறுத்துகிறது (எபி 10:25). ஆனால் நம்மில் எத்தனைபேர் இவ்வசனத்திற்குக் கீழ்ப்படிந்து வாரந்தோறும் சபைக்குச் சென்று தேவனை ஆராதிக்கிறோம்? போதாகுறைக்கு முகூர்த்தங்களெல்லாம் ஞாயிற்றுகிழமையிலே நடக்கிறது. போகாவிட்டால் உறவினர்கள் கோபித்துக்கொள்வார்கள் என கர்த்தருடைய நாளை தங்கள் சொந்த நாளாக மாற்றிவிடுகின்றோமா? நாளானது சமீபித்து வருகிறதை பார்த்து சத்தியத்தை அறிந்து பின் மனப்பூர்வமாக பாவஞ்செய்து மோசம் போனால், நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம்.

மேலும் கர்த்தருக்கு செலுத்த வேண்டியதை சபையில் செலுத்தாமலிருந்தாலும் நம்மை நாமே வஞ்சித்து அழிவை சம்பாதித்துக் கொள்வோம். சப்பீராள் என்ற ஸ்திரீ கர்த்தருடைய சமூகத்திற்குக் கொண்டு வந்து கொடுக்கவேண்டிய கிரயத்தில் ஒரு பங்கை வஞ்சித்து கணவனோடு சேர்ந்து கர்த்தருடைய ஆவியை சோதித்தபடியால் மரித்துப்போனாள். அன்பு சகோதரியே, நீ இன்று வாழும் வாழ்வு, உன்னுடைய சம்பத்துக்கள் எல்லாமே கர்த்தர் உனக்கு கொடுத்தவை என அறிவாயா? பரலோக ராஜ்யத்தின் பணிக்கென நீ கொடுக்காமல் பொருளாசைக்கு இடமளித்து உன்னை நீயே வஞ்சித்துக் கொள்ளாதே "சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான் பெறுக விதைக்கிறவன் பெறுக அறுப்பான்" (2கொரி.9:6).

**மற்றவர்களை வஞ்சித்தல்:** கிறிஸ்தவர்களாகிய நாம் கிறிஸ்துவைப்போல ஜீவிக்கிறவர்களாயிருக்கவேண்டும். ஆனால் கிறிஸ்துவின் நாமத்தைத் தரித்துக் கொண்டிருக்கிற அநேகர் மற்றவர்களை வஞ்சித்து தேவநாமத்தை பரிசுத்த குலைச்சலாக்குகின்றனர். வேதாகமத்தில் லாபான் என்றவன் யாக்கோபை வஞ்சித்தான் என வாசிக்கிறோம் (ஆதி.29:25). யாக்கோபு லாபானின் மகள் ராகேலை திருமணம் செய்யும்படி அவளுக்காக ஏழு வருஷம் லாபானிடம் வேலை செய்தான். ஏழு வருடம் முடிந்ததும் லாபான் ராகேலுக்கு பதிலாக தன் மூத்த மகள் லேயாளை மனைவியாகக் கொடுத்து வஞ்சிக்கிறான்.

நம்முடைய தேவனோ வாக்குமாறாதவர். அப்படியிருக்க நாமும் மற்றவர்களுக்கு ஏதாவது ஒரு காரியத்தில் செய்வேன் என வாக்களித்துவிட்டு செய்யாமலிருப்போமானால் இந்த லாபானைப் போலும் "கொடுப்பேன் என்று சொல்லியும் கொடாமலிருக்கிற வஞ்சகன் மழையில்லாத மேகங்களுக்கும் காற்றுக்கும் சரி" (நீதி.25:14) என்ற வசனத்திலுள்ளபடியும் இருப்போம். இப்படியிருப்பவர்களை வசனம் வஞ்சகன் என அழைக்கிறது. எனவே நாம் மற்றவர்களை வஞ்சியாதிருப்போமாக!



அன்பு சகோதரிகளே, வேதம் எச்சரிக்கிறபடி சாத்தான் நம்மை வஞ்சிக்க இடம் கொடாமலும், நம்மைநாமே வஞ்சித்துக்கொள்ளாமலும், மற்றவர்களை வஞ்சியாமலுமிருந்து நித்திய ஜீவனை சுதந்தரிக்கும்படி கிரியை நடப்பிப்போமாக!

## கேள்விகள்

1. ஏவாள் எவ்வாறு மீறுதலுக்கு உட்பட்டாள்?
2. வேதம் யாரை சாபத்தின் பிள்ளைகள் என்று கூறுகிறது?
3. நம்மை நாமே வஞ்சிக்காதபடி எப்படியிருக்க வேண்டும்?
4. யார் வஞ்சகன்?
5. தன் கணவனோடு சேர்ந்து கிரயத்தில் ஒரு பங்கை வஞ்சித்த ஸ்திரீ யார்?

# ஞான இருதயமுள்ள ஸ்திரீகள்
# The Women That Were Wise Hearted

**23**

**இ**ன்றைய நாட்களில் ஞானமே பிரதானமென ஞானத்தைத்தேடி உலகம் சென்று கொண்டிருக்கிறது. ஞானத்தினால் மனிதன் பலவற்றைக் கண்டுபிடித்துக் கொண்டேயிருக்கிறான். **John Lehmann** என்ற கவிஞர் இவ்வாறாக தன் கவிதையில் எழுதியுள்ளார்.

**"This excellent machine will illustrate**
**The modern world divided into nations;**
**So neatly planned, that if you merely tap it**
**The armaments will start their devastations"**

**அதாவது "இந்த அற்புத எந்திரம் காட்டுவதெல்லாம்**
**இன்றைய நவீன உலகின் பிரிந்துபட்ட தேசங்களையே,**
**அத்துணை அற்புதமாக வடிவமைக்கப்பட்டுள்ளன;**
**சற்றே தட்டினால் போதும்**
**அழிவுக் கருவிகள் ஆகாயத்தில் சீறிப்பாய்ந்து அழித்துவிடும்".**

ஆம், உலக ஞானம் அழிவை நோக்கிச் செல்கின்றது. வேதவாக்கியத்தில் "யூதர்கள் அடையாளத்தைத் தேடுகிறார்கள், கிரேக்கர் ஞானத்தைத் தேடுகிறார்கள். நாங்களோ சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறோம். அவர் யூதருக்கு இடறலாயும் கிரேக்கருக்குப் பைத்தியமாயும் இருக்கிறார்" (1கொரி.1:22,23) என பவுல் கூறுகிறார். மேலும் இந்த பவுல் தன்னைக் குறித்து கூறுகையில் "...கிறிஸ்துவின் சிலுவை வீணாய்ப் போகாதபடிக்கு, சாதுரிய ஞானமில்லாமல் பிரசங்கிக்கவே அனுப்பினார்" (1கொரி.1:17) என்றார். அதாவது தான் பேச்சாற்றலில் சிறந்தவனல்ல என்கிறார். ஏனெனில் உலக ஞானம் தேவனுக்கு முன்பாக பைத்தியமாயிருக்கிறது ஆனால் உலகத்தையும் அதிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின தேவன் தம்முடைய ஜனங்கள் தம்முடைய ஞானத்தைப் பெற்றுக்கொள்ளவிரும்புகிறார். "... நான் ஞானத்தின் ஆவியால் நிரப்பின விவேகமான இருதமுள்ள யாவரோடும் நீ சொல்லுவாயாக" (யாத்.28:3) என்றார்

உங்களில் ஞான இருதயமுள்ள அனைவரும் வந்து கர்த்தர் கட்டளையிட்டவைகளையெல்லாம் செய்வார்களாக (யாத்.35:10) என்று மோசே சபையாரை நோக்கி கூறினான். இவ்வாறாக தேவ ஞானத்தைப் பெற்றவர்கள் என்ன செய்தார்கள்?



**கூடாரத்தை அலங்கரித்தார்கள் (Beautifying the Tabernacle):** தங்களுடைய கைகளின் பிரயாசத்தினால் ஆசாரிப்பு கூடாரத்தை அலங்கரித்திருக் கிறார்கள். "ஞான இருதயமுள்ள ஸ்திரீகள் எல்லாரும் தங்கள் கைகளினால் நூற்று, தாங்கள் நூற்ற இளநீலநூலையும் இரத்தாம்பர நூலையும் சிவப்பு நூலையும் மெல்லிய பஞ்சு நூலையும் கொண்டு வந்தார்கள். எந்த ஸ்திரீகளுடைய இருதயம் ஞான எழுப்புதல் அடைந்ததோ, அவர்கள் எல்லாரும் வெள்ளாட்டு மயிரைத்திரித்தார்கள் ...தங்கள் இருதயத்தில் உற்சாகமடைந்த ஸ்திரீ...யாவரும் கர்த்தருக்குக் காணிக்கையை மனப்பூர்வமாய்க் கொண்டுவந்தார்கள்" (யாத்.35:25-29). இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தரைத் தொழுது கொள்ளும்படி வானாந்தரத்திலே ஓரிடத்திலிருந்து ஓரிடத்திற்கு எடுத்துச்செல்லக்கூடிய ஆசரிப்புக் கூடாரத்தைக் கொண்டிருந்தனர். தேவனை ஆராதிக்கும் இந்தக் கூடாரத்தைத் தான் அந்த ஸ்திரீகள் அலங்கரித்தார்கள்.

யாத்திராகமம்35:23,26-ம் வசனத்திலே தங்களின் கைகளில் நூற்று அதன்பின் தாங்கள் நூற்ற நூலையும் மெல்லிய பஞ்சு நூலையும் கர்த்தருக்குக் காணிக்கையாகக் கொண்டுவந்தார்கள் என்றும் மேலும் எந்த ஸ்திரீகளுடைய இருதயம் ஞான எழுப்புதல் அடைந்ததோ அவர்கள் வெள்ளாட்டு மயிரைத் திரித்து காணிக்கையாக கொண்டுவந்தார்களெனவும் வாசிக்கிறோம். ஆக, கர்த்தருக்குக் காணிக்கையை செலுத்துவதில் அதிகமாக பிரயாசமெடுத்து கடினமாக உழைத்து கர்த்தருக்கென்று செலுத்தியுள்ளனர். இன்றைய எந்திர உலகில் இயந்திரங்களே நூல் நூற்று விடுகிறது. ஆனால் அவர்களோ தங்கள் கைகளினால் நூற்றிருக்கிறார்கள். நிச்சயமாக மிகவும் கஷ்டப்பட்டு நூல் நூற்றிருப்பார்கள். கஷ்டப்பட்டுதான் வெள்ளாட்டு மயிரையும் திரித்திருப்பார்கள். இவ்வாறாக தங்களுடைய உற்சாகத்தை வெளிப்படுத்தியுள்ளனர். அதுவும் மனப்பூர்வமாய் செய்துள்ளனர் என வாசிக்கிறோம்.

இன்று கிறிஸ்தவர்கள் என்று அழைத்துக்கொள்ளுகிற அன்பு சகோதரியே, சற்றே உங்கள் இருதயம் ஞானமுள்ளதாகவும் ஞான எழுப்புதல் அடைந்துள்ளதாகவும் இருக்கிறதா என சோதித்துப்பாருங்கள். வெறுமனே மனக்கிளர்ச்சிக்கும் சரீர உற்சாகத்திற்கும் இடமளித்து வருகிறீர்களா? அன்றைய நாட்களில் ஆசரிப்பு கூடாரத்தை அலங்கரித்த ஸ்திரீகளைப்போல இன்றைய நாளில் கர்த்தருடைய கட்டளையை நிறைவேற்றும்படி உங்கள் கைகளின் பிரயாசத்தை செலவு செய்கிறீர்களா? அல்லது யூதர் அடையாளத்தைத் தேடினது போல நீங்களும் இன்னும் கர்த்தரிடத்தில் வேலைகிடைத்துவிட்டால் அல்லது என் பிள்ளைகளுக்கு வேலைகிடைத்துவிட்டால் அல்லது திருமணம் நடந்துவிட்டால் அல்லது என் நோய்தீர்ந்துவிட்டால் அல்லது என் கடன் பிரச்சனை தீர்ந்துவிட்டால் அல்லது எனக்குக் குழந்தை பாக்கியம் கிடைத்துவிட்டால் கர்த்தரை விடாது பின்பற்றுவேன் என்று அடையாளங்களையே தேடிக்கொண்டிருக்கிறீர்களா?

அன்பு சகோதரியே, கர்த்தர் சர்வ வல்லவர், ஐசுவரியசம்பன்னனர் என்று விசுவாசிக்காத வரை நிச்சயமாக நீங்கள் எதையுமே பெற்றுக் கொள்ள முடியாது.

அப்படியே ஏதேனும் பெற்றுக்கொண்டாலும் அவைகள் அநித்தியமானவைகள். அழிந்துபோகக் கூடியவைகள் சமாதானத்தையும், சந்தோஷத்தையும் மறுமையில் நித்திய வாழ்வையும் கொடுக்கமாட்டாதவைகள் என்பதை நீங்கள் அறிந்துகொள்ள விரும்புகிறேன். உங்கள் வாழ்வில் இதையே முன்வைப்பீர்களென்றால் நிச்சயமாகவே நீங்கள் ஞான இருதயமுள்ள ஸ்திரீகளாக இருக்க முடியாது. கர்த்தரிடத்திலிருந்து ஞானத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள். கர்த்தருடைய சபை வளர்ச்சிக்கென்று கொடுத்து சபையை அலங்கரியுங்கள். மனப்பூர்வமாகக் கொடுக்கிறவனிடத்தில் கர்த்தர் பிரியமாயிருக்கிறார்.

**தாய்க்குரிய கடமைகள் (Motherly Duties):** அன்னாளும் கூட ஒரு ஞானமுள்ள ஸ்திரீதான். தன்னுடைய முதற்கனியைக் கர்த்தருக்கென்று ஒப்புக்கொடுத்தவள். கஷ்டப்பட்டு உழைத்து, பிரயாசப்பட்டு அதன் பலனைக் கர்த்தருக்குக் காணிக்கையாக கொடுத்துவிடலாம். எங்கள் பிள்ளைகளை எப்படி கர்த்தருக்கென்று ஒப்புக்கொடுக்கமுடியும் என்கிறீர்களா? இந்த அன்னாள் மிகவும் துன்பப்பட்டு, துக்கமடைந்து, கர்த்தருடைய சமூகத்தில் அழுது மன்றாடி சாமுவேல் என்ற ஒரு மகனை அநேக வருஷங்களுக்குப்பின் பிள்ளையாக பெற்றெடுத்தாள். ஆனால் அவள் தன் முதற்கனியை கர்த்தருக்கென்றே ஒப்புக்கொடுத்து விட்டாள் என (1சாமு.1:27,28) வாசிக்கின்றோம். எல்லா ஆத்துமாக்களும் கர்த்தருடையது. கர்த்தரிடத்திலிருந்தே உங்களுக்குக் கிடைத்துள்ளது. அவர்களில் எந்த பிள்ளை மந்தமாகவும், படிப்பறிவில் குறைந்தவனாகவும் அல்லது இவன் எதற்கும் லாயக்கானவன் அல்ல, இவனை ஊழியத்திற்கு அனுப்பிவிடுவோம் என்று எண்ணுகிறீர்களா? அன்னாள், இவ்விதமான இழிவான எண்ணம் கொண்டவளல்ல, அநேக இக்கட்டு, ஏச்சு பேச்சு, மனக்கசப்பு, போன்றவற்றின் மத்தியில் ஒரே ஒரு மகனைப் பெற்றாள். அவளுக்கு அதுவே முதல் பிள்ளை. அவனை முதலாவதாக தேவனுக்குக் கொடுத்தாள். அது மாத்திரமல்ல, ஒரு தாயுக்குரிய கடமையைச் செய்துவந்தாள். “சாமுவேல் என்னும் பிள்ளையாண்டான் சணல்நூல் ஏபோத்தைத் தரித்தவனாய்க் கர்த்தருக்கு முன்பாகப் பணிவிடைசெய்தான். அவனுடைய தாய் வருஷந்தோறும் செலுத்தும் பலியைச் செலுத்துகிறதற்காக, தன் புருஷனோடே கூட வருகிறபோதெல்லாம், அவனுக்கு ஒரு சின்னச் சட்டையைத் தைத்துக் கொண்டு வருவாள் (1சாமு.2:18,19).

பாருங்கள் ஒரு தாய் தன் மகனுக்குச் செய்ய வேண்டிய கடமையை மட்டுமே செய்தாள். கர்த்தருக்கு முன்பாக அவன் பணிவிடை செய்ததில் இவள் குறுக்கிடவே இல்லை. ஆனால் இன்றோ சில தாய்மார்கள் தங்கள் பிள்ளைகளுக்கு கர்த்தருக்குப் பயப்படுதலைக் கற்றுக்கொடுப்பதே இல்லை. தாங்கள் தான் கற்றுக்கொடுக்கவில்லையென்றால், சபையில் நடைபெறும் சிறுவர் வகுப்பிற்கு அனுப்பியாவது கர்த்தருக்கேற்ற சிட்சையிலும், போதனையிலும் வளர்க்கலாமே! இவ்விஷயத்தில் அக்கரை கொள்ளாத ஸ்திரீ நிச்சயமாகவே ஒரு ஞான இருதயமுள்ள ஸ்திரீயாக இருக்க முடியாது, கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்.



**தன் குடும்பத்தைக் காப்பாற்றியவள் (Saved her household):** ஞான இருதயமுள்ள ஸ்திரீகளின் வரிசையில் அடுத்து வருவது அபிகாயில். தீவிரமாகக் கவனிக்க வேண்டிய அவசரக் காரியத்தைக் கவனித்து தன் குடும்பத்தாரைக் காப்பாற்றுகிறாள் **(Meeting an emergency and saving her household).** ஞான இருதயத்தைக் கொண்டிருந்த இவள் வரவிருக்கும் பொல்லாப்பிற்கு தன் கணவனையும் தன் வீட்டார் அனைவரையும் தப்புவிக்கிறாள். அபிகாயிலின் கணவன் நாபால். இவன் பேலியாளின் மகனாயிருந்தான். அதாவது யோக்கிதையற்ற மகனாயிருந்தான். 2சாமு.23:6-ல் “பேலியாளின் மக்கள் அனைவருமோ, கையினால் பிடிக்கப்படக்கூடாததாய் எறிந்துபோடப்படவேண்டிய முள்ளுக்குச் சமானமானவர்கள்” என்று வாசிக்கிறோம்.

இப்பேர்பட்ட நபர்களை நெருங்கினால் முள்ளைப் போல குத்தி பதம் பார்க்கக் கூடியவர்களாயிருப்பார்கள். இந்த நாபால் பேலியாளின் மகன் என அழைக்கப்பட காரணமென்ன? 1சாமு.25:14-17 வரை உள்ள வசனங்களில் இவனைக் குறித்து எழுதப்பட்டுள்ளது. “அப்பொழுது வேலைக்காரரில் ஒருவன் நாபாலுடைய மனைவியாகிய அபிகாயிலை நோக்கி: இதோ, நம்முடைய எஜமானுடைய சுகசெய்தி விசாரிக்கத் தாவீது வனாந்தரத்திலிருந்து ஆட்களை அனுப்பினான்; அவர்கள் பேரில் அவர் சீறினார். அந்த மனுஷரோ எங்களுக்கு மிகவும் உபகாரிகளாயிருந்தார்கள்; நாங்கள் வெளிகளில் இருக்கும்போது, அவர்கள் எங்களிடத்தில் நடமாடின நாளெல்லாம் அவர்கள் எங்களை வருத்தப்படுத்தினதுமில்லை; நமது பொருளில் ஒன்றும் காணாமற் போனதுமில்லை.

நாங்கள் ஆடுகளை மேய்த்து, அவர்களிடத்தில் இருந்த நாளெல்லாம் அவர்கள் இரவும் பகலும் எங்களைச் சுற்றிலும் மதிலாயிருந்தார்கள். இப்போதும் நீர் செய்ய வேண்டியதைக் கவனித்துப்பாரும்; நம்முடைய எஜமான்மேலும் நிச்சயமாய் ஒரு பொல்லாப்பு வருகிறதாயிருக்கிறது; இவரோ, ஒருவரும் தம்மோடே பேசக்கூடாதபடிக்கு, பேலியாளின் மகனாயிருக்கிறார் என்றான்”. பாருங்கள் தன்னிடத்தில் சுகசெய்தியை விசாரிக்க வந்த மனுஷரிடம் சீறினார் என வாசிக்கிறோம். அதுமாத்திரமல்ல, அந்த மனுஷர் இந்த நாபாலின் வேலைக்காரர்களுக்கு உபகாரிகளாகவும், மதிலாகவுமிருந்திருக்கிறார்கள். எனவே முள்ளுக்குச் சமானமாயிருந்த இந்த நாபாலுக்கு எதிராக தாவீதும் அவன் கூட்டதாரும் புறப்பட்டனர்.

இதை அறிந்த நாபாலின் வேலைக்காரன் நாபாலின் மனைவி அபிகாயிலிடம் ‘நம் எஜமான் மேலும்.... பொல்லாப்பு வருகிறதாயிருக்கிறது’ என்றான். இதைக் கேட்ட அபிகாயில் தன் கணவன் மேலும் தன்னுடைய குடும்பத்தார் மேலும் வரவிருந்த பொல்லாப்பை தடுக்கும் பொருட்டு அவசரமாய் புறப்பட்டு தாவீதினிடத்தில் ஞானமாய் பேசி தன் குடும்பத்தார் மேல் வரவிருந்த பொல்லப்பை தடுத்து நிறுத்தினாள். இது இவளுடைய ஞானமல்லவா! அன்பு சகோதரிகளே, “புத்தியுள்ள (ஞானமுள்ள) ஸ்திரீ தன் வீட்டைக் கட்டுகிறாள், புத்தியில்லாத ஸ்திரீயோ தன் கைகளினால் அதை

இடித்துப்போடுகிறாள்'' (நீதி.14:1) என வாசிக்கிறோம். ஒரு மனிதனுடைய (தாவீதின்) கையில் விழுவது இந்தகுடும்பத்திற்கு தீங்கிழைக்கவிருந்தால், தேவனுடைய கைகளில் விழுவது பயங்கரமாயிருக்குமென வேதம்கூறுவதை அறியீர்களா?

தாவீதின் குமாரனாகிய இயேசு நன்மை செய்கிறவராகவே சுற்றித் திரிந்தார். நேற்றும், இன்றும், என்றும் மாறாதவராகிய இயேசு இன்றும் நன்மைசெய்கிறவராக இருக்கிறார். நமக்காக ஜீவனையே கொடுக்கவந்த இயேசுவை உன் கணவனும், உம் குடும்பமும் அறிந்து கொள்ளவில்லையா? இயேசு என்றாலே சில குடும்பத்தலைவர்கள் நாபாலைப் போல சீறிவிழுகிறவர்களாகவும், முள்ளைப்போல் குத்துகிறவர்களாகவும் இருக்கலாம். அன்பு சகோதரியே, ஒருவேளை நீங்கள் அப்படிப்பட்ட சூழ்நிலையில் இருப்பீர்களென்றால் இயேசுவின் மூலம் பிதாவை நோக்கி வேண்டிக்கொள்ளுங்கள், இயேசுவையும், பிதாவையும் பிரியப்படுத்தக்கூடிய வற்றையே செய்யுங்கள். கர்த்தருடைய கற்பனைகளின் படி நடந்து வீட்டை கட்டுங்கள். ஞானமுள்ளவர்களாயிருப்பீர் களென்றால் நிச்சயமாகவே உங்கள் வீட்டை அதாவது குடும்பத்தைக் கட்டமுடியும். புத்தியற்றவர்களாயிருந்தால் நிச்சயமாக உங்களாலேயே உங்கள் குடும்பத்துக்கு, பொல்லாப்பும் தீமையும் வரும்.

சகோதரியே, ஒருவேளை நீங்கள் கர்த்தருடைய சமாதானத்திற் கேற்றவைகளை நாடாமல் நீங்களே உங்கள் குடும்பத்தின் மேல் வரவிருக்கும் பொல்லாப்பிற்கும், தீமைக்கும் காரணமாயிருப்பீர்களானால், இன்றே மனந்திரும்புங்கள். அந்த அபிகாயில் புத்தியாய் தாவீதினிடத்தில் சமாதான வார்த்தைகளை பேசியதைப் போல (1சாமு.25:23-35). இயேசுவை ஏற்றுக்கொண்டு நீங்களும் உங்கள் குடும்பத்தாரும் பொல்லாப்புக்கு நீங்கலாகும்படி தேவனோடே ஒப்புரவாகுங்கள். இயேசு சீக்கிரமாய் திரும்ப வரப்போகிறார். அவர் உங்களுக்காகவே ஜீவனைக் கொடுத்து உங்களுக்கு நன்மை செய்தாரே.

நீங்கள் இதுவரை கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளாதவராய் இருந்தால் இன்றே அவரை விசுவாசித்து, அவரே தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிட்டு பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது இயேசு தம்முடைய சபையில் உங்களைச் சேர்த்துக்கொள்ளுவார். நீங்கள் பொல்லாப்புக்கு நீங்கலாகி காக்கப்படுவீர்கள்.

ஒருவேளை உங்கள் கணவனும் குடும்பத்தாரும் இயேசுவை ஏற்றுக்கொள்ளாவிட்டால் அவர்களுக்காக இயேசுவின் மூலம் தேவனை நோக்கிக் கெஞ்சுங்கள். அந்த அபிகாயிலைப்போல மிகக் கவனமாக அவசரமாக இரட்சிப்பின் செய்தியை அவர்களுக்கு அறிவித்து உங்கள் கணவனையும் உங்கள் குடும்பத்தையும் வரவிருக்கும் பொல்லாப்பிற்கும் ஆக்கினைக்கும் தப்புவியுங்கள். ''தேவனை அறியாதவர்களுக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும் படிக்கு, கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும், ஜீவாலித்து எரிகிற அக்கினியோடும், வானத்திலிருந்து வெளிப்படும்போது அப்படியாகும்'' (2தெச.1:7,8).



தாவீதைக் குறித்து, அவர் செய்த நன்மைகளைக் குறித்தும் அறியாது பொல்லாப்புக்கும் தீமைக்கும் உள்ளாகவிருந்த நாபாலையும் அவன் குடும்பத்தாரையும் காப்பாற்றிய செயல் ஒரு ஞானமுள்ள செயலல்லவா! அந்த ஞான இருதயமுள்ள ஸ்திரீயாகிய அபிகாயிலைப் போல நாமும் ஞான இருதயமுள்ள ஸ்திரீகளாக செயல்படுவோம். மேலே நாம் தியானித்த 'தேவனுடைய கூடாரத்தை அலங்கரித்த' ஞானமுள்ள ஸ்திரீகளைப்போலவும், 'தாயுக்குரிய கடமை' செய்த ஞான முள்ள ஸ்திரீயைப் போலவும், 'தன் குடும்பத்தைக் காப்பாற்றிய ஞானமுள்ள ஸ்திரீயைப் போலவும் நாமும் ஞானமுள்ள ஸ்திரீகளாக செயல்பட கர்த்தர் தாமே நமக்கு உதவிசெய்வாராக! ஆமென்.

## கேள்விகள்

1. கிறிஸ்துவின் சிலுவை வீணாய்ப்போகாதபடிக்கு எவ்விதமாக பிரசங்கிக்கவே அனுப்பினார் என்று பவுல் சொல்லுகிறார்?
2. தங்கள் இருதயங்களில் உற்சாகமடைந்த ஸ்திரீகள் என்னசெய்தார்கள்?
3. எல்லா ஆத்துமாக்களும் யாருடையது?
4. அபிகாயிலின் புருஷன் நாபால் எப்படிப்பட்டவனாயிருந்தான்?
5. புத்தியுள்ள ஸ்திரீயும் புத்தியில்லாத ஸ்திரீயும் என்னசெய்கிறார்கள்?
6. அபிகாயில் எவ்வாறு தன் குடும்பத்திற்கு வரவிருந்த பொல்லாப்பைத் தடுத்தாள்?
7. தேவனை அறியாதவர்களுக்கும் இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படியாதவர்களுக்கும் என்ன சம்பவிக்கும்?

# <u>சபைக்கு ஊழியஞ்செய்தல்</u>
# <u>Serving The Church</u>

**24**

**ச**பை என்பது என்ன? இந்த வானத்தையும் பூமியையும் படைத்த ஒரே தேவனுடைய ஒரேபேறான குமாரனாகிய இயேசு கிறிஸ்து தம்முடைய இரத்தம் முழுவதையும் சிந்தி சம்பாதித்த ஜனக்கூட்டமே சபை. ஆம், இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தால் பாவமற கழுவப்பட்டு ஒரே சிந்தையோடு கூட தேவனை தொழுது கொண்டு வருகிற அந்த மக்களின் கூட்டம் தான் சபை. அன்பு சகோதரியே, நீங்கள் இந்த ஜனக்கூட்டத்தில் ஒருவராயிருப்பீரென்றால், இந்த முழு சபைக்கும் ஊழியஞ்செய்ய உங்களை அர்ப்பணிப்பீர்களா? இந்த சபையில் உங்களை அங்கமாக்க இயேசு உங்களுக்காக மரித்தாரே! மரித்து உயிரோடிருக்கிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இன்றும் ''சபையைப் போஷித்துக் காப்பாற்றுகிறார்'' (எபே.5:29). கிறிஸ்துவே தலையாயிருக்கிற இந்தச் சபை பலுகிபெருகி விருத்தியடைய இதற்கு ஊழியஞ்செய்ய உங்களை அன்புடன் வேண்டிவிரும்பிக்கேட்டுக்கொள்கிறேன். கி.பி. முதல் நூற்றாண்டில் சபைக்கு ஆதரவாகவும், சபைக்காகப் பிரயாசப்பட்டவர் களாகவும், சுவிசேஷவிஷயத்தில் பிரயாசப்பட்டவர்களுமான சில ஸ்திரீகள் இருந்திருக்கின்றனர். அப்பேர்பட்ட ஸ்திரீகளை நமக்கு மாதிரியாக நோக்குவோம்.

கெங்கிரேயா ஊரிலிருந்த கிறிஸ்துவின் சபைக்கு பெபேயாள் என்ற சகோதரி ஊழியக்காரியாக இருந்தாள். அவளை பற்றி பவுல் கூறும்போது ''......அவள் அநேகருக்கும் எனக்குங்கூட ஆதரவாயிருந்தவள்'' (ரோம.16:1,2) என்கிறார். **She was a succored. ஒத்தாசையாக, ஆபத்துக்காலத்தில் உதவுகிறவளாக, தேவையான பொழுது உதவுகிறவளாக இருந்திருக்கிறாள் என்று பொருள்.** அன்பு சகோதரியே, இன்றைய தேவை என்ன? ஆபத்துக்காலத்தில், அதாவது பாவப்பிடியிலும், உலக சிற்றின்பங்களிலும், உலகக்கவலையிலும் சிக்குண்டு கொஞ்சம் கொஞ்சமாக தங்களுடைய சரீரங்களையும், தங்கள் ஆத்துமாக்களையும் அழித்துக்கொண்டு ஆபத்தான சூழ்நிலையில் அல்லற்பட்டுக் கொண்டிருக்கிறவர் களுக்கு உதவி செய்ய வேண்டியதல்லவா உண்மையான தேவையாயிருக்கிறது. **'A friend in need is a friend in deed' என்ற ஆங்கிலப் பழமொழியை நாம் நன்கு அறிவோம். ஆபத்தில் உதவுபவனே நண்பன்.** மனிதநேயம் வேண்டுமென்று வாயளவில் சொல்லிக்கொண்டு கிரியை செய்யாமல் இருப்போமானால் வஞ்சகர்களாக இருப்போம்.

இன்று கிறிஸ்துவின் சபை வளர்ச்சியடையாமலிருப்பதற்கு நம்மிலுள்ள கிரியையில்லாத விசுவாசமே காரணம் என்று தான் சொல்லவேண்டும். ''கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள



சபையாக அதைத் தமக்குமுன் நிறுத்திக் கொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார்'' (எபே.5:27) என வாசிக்கிறோம். இயேசுவானவர் தம்முடைய சபைக்காக தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்து நம்மை கறைதிரையற்றவர்களாக, பிழையற்றவர்களாக, பரிசுத்தமுள்ளவர்களாக நிலைநிறுத்தவே இவ்வுலகத்திற்குக் கடந்து வந்தார். இந்த நற்செய்தியை கிறிஸ்துவை பெற்றிராதவர்களுக்கு அறிவித்து அவர்களை வரவிருக்கும் ஆபத்திற்கு, நரகாக்கினைக்குத் தப்புவிக்க ஒத்தாசையாக இருப்போம். பவுல் மற்றும் அநேக ஊழியர்களுக்கு பெபேயாள் ஆதரவாயிருந்ததைப் போல கிறிஸ்துவின் சுவிசேஷத்தை உபதேசிக்கிற பரிசுத்தவான்களுக்கு உதவியாயிருப்போம்.

மேலும் பவுல் மரியாள் என்ற சகோதரியைக் குறித்து ரோமர்16:6-ம் வசனத்தில் குறிப்பிடுகிறார். ''எங்களுக்காக மிகவும் பிரயாசப்பட்ட மரியாளை வாழ்த்துங்கள்''. பவுலுக்கும் அவரோடே கூட இருந்த உடன் ஊழியர்களுக்காகவும் மிகவும் பிரயாசப்பட்டிருக்கிறாள் இந்த மரியாள். ஆங்கிலத்தில் **Mary bestowed much labour on us** என்றெழுதபட்டுள்ளது. அவர்களை அதிகமாகத் தாங்கியிருக்கிறாள் அல்லது கஷ்டப்பட்டு அவர்களுக்காக உழைத்திருக்கிறாள். பாருங்கள், அன்றைய நாளில் ஒரு பெண் தனித்தவளாக கர்த்தருடைய ஊழியத்தில் பிரசங்கியார்களுக்காகப் பிரயாசப்பட்டிருக்கிறாள். இவளைப் போல திரிபேனாள், மற்றும் திரிபோசாள் என்பவர்களும் கர்த்தருக்குள் பிரயாசப்பட்டிருக்கிறார்கள் என்று ரோமர்16:12-ல் வாசிக்கிறோம்.

எனது அன்பு சகோதரியே, நீங்கள் எப்படி? கர்த்தருடைய ஊழியர்களுக்கு சபை வளர்ச்சிக்கென்று உதவியாயிருக்கிறீர்களா? உங்களுக்காக மரித்த கிறிஸ்துஇயேசுவுக்காகவும் அவருடைய சபைக்காகவும் பிரயாசப்படுகிறீர்களா? சற்றே உங்களைக் குறித்து சிந்தித்துப்பார்க்கும்படியாக உங்களை கேட்டுக்கொள்கிறேன்.

பவுல், இன்னும் சில ஸ்திரீகளைக் குறித்து பிலிப்பியர்4:2,3 வசனங்களில் குறிப்பிடுகிறார். எயோதியாள், மற்றும் சிந்திகேயாள் இருவரும் கிலேமெந்தோடும் மற்ற என் உடன் வேலையாட்களோடுங் கூடச் சுவிசேஷ விஷயத்தில் என்னோடே கூட மிகவும் பிரயாசப்பட்டார்கள். அவர்களுடைய நாமங்கள் ஜீவ புஸ்தகத்தில் இருக்கிறது என்கிறார். சுவிசேஷ விஷயத்திலுங்கூட நாம் மிகவும் பிரயாசப்படவேண்டியவர்களாக இருக்கிறோம். அன்பு சகோதரியே, ஒருவேளை உங்களுடைய கணவன் ஒரு சுவிசேஷகராயிருந்தால், சுவிசேஷ விஷயத்தில் அவர்களோடு கூட நீங்களும் பிரயாசப்பட முடியும். வீட்டிலிருக்கிற வேலைகளைப் பார்க்கவே நமக்கு நேரமில்லை, பின் எப்படி கணவனோடு கூட சுவிசேஷ விஷயத்தில் ஒத்துழைக்க முடியும் என நினைக்கலாம். கிறிஸ்துவுக்குள் பவுலுக்கு உடன்வேலையாட்களாக பிரிஸ்கில்லாள், ஆக்கில்லா என்ற தம்பதியினர் இருந்திருக்கிறார்கள்.

இவர்கள் நமக்கு நல்ல மாதிரிகளல்லவா! ஒருமுறை இந்தத் தம்பதியினர் கர்த்தருடைய மார்க்கத்தில் உபதேசிக்கப்பட்டு, யோவான் கொடுத்த ஸ்நானத்தை

மாத்திரம் அறிந்தவனாயிருந்து, ஆவியில் அனலுள்ளவனாய்க் கர்த்தருக்கு அடுத்தவைகளைத் திட்டமாய்ப் போதகம்பண்ணிக் கொண்டுவந்த அப்பொல்லோ என்பவனைச் சேர்த்துக் கொண்டு, தேவனுடைய மார்க்கத்தை அதிக திட்டமாய் அவனுக்கு விவரித்துக் காண்பித்தார்கள் (அப்.18:25,26). இந்த பிரிஸ்கில்லாள் தன் கணவன் ஆக்கில்லாவோடு சுவிசேஷ விஷயத்தில் பிரயாசப்பட்டிருப்பது நம்மை உற்சாகப்படுத்தவில்லையா? நமக்காக மரித்து நம்மை பரிசுத்தமாக்கியவருடைய சுவிசேஷ விஷயத்தில் நாமும் பிரயாசமெடுத்துக்கொள்வோம். அப்பொழுது கர்த்தருடைய சபைக்கு ஊழியஞ்செய்கிறவர்களாயிருப்போம்.

இயேசுகிறிஸ்து இப்பூமியில் மனுஷனாக வாழ்ந்தபோது, பொல்லாத ஆவிகளின் பிடியிலிருந்தும் வியாதிகளின் பிடியிலிருந்தும் நீங்கி குணமான சில ஸ்திரீகளும், ஏழு பிசாசுகளின் பிடியிலிருந்து நீங்கின மகதலேனாள் என்னப்பட்ட மரியாளும், ஏரோதின் காரியக்காரனான கூசாவின் (அரண்மனையில் வேலைசெய்தவனின்) மனைவியாகிய யோவன்னாளும், சூசன்னாளும், தங்கள் ஆஸ்திகளால் இயேசுவுக்கு ஊழியஞ்செய்து கொண்டுவந்த மற்ற அநேகம் ஸ்திரீகளும் அவரோடு இருந்தார்கள்.

அன்பு சகோதரியே, உங்களால் ஒருவேளை ஊழியர்களுக்கு ஆதரவாகவும், சுவிசேஷ விஷயத்தில் பிரயாசப்படவும் முடியவில்லையென்றால் நீங்கள் சேர்த்துவைக்கும் பொருட்களையும், பணத்தையும், பூச்சியும் துருவும் அழித்துப் போட்டுவிடும். அழிந்துபோகிற உங்கள் பொக்கிஷங்களால், கர்த்தருக்கும் அவருடைய சபைக்கும் ஊழியஞ்செய்யக்கூடாதா? வாயிருந்தும் பேசாத, கண்களிலிருந்தும் காணாத, கால்களிருந்தும் நடவாத தேவனற்ற எத்தைனையோ காரியங்களுக்கு கோடி கோடியாக காணிக்கை செலுத்தும் இந்த பூமியில், அண்டசராசரங்களுக்கெல்லாம் ஒரே தேவனாயிருக்கிறவர் வாசஞ்செய்யும் பரலோகத்திற்கு உங்களை கொண்டு செல்லும் ஒரே சபையாகிய கர்த்தருடைய சபைக்கு உங்கள் ஆஸ்திகளால் ஊழியஞ்செய்யுங்கள்.

ஸ்திரீகளாகிய நாம் சபையில் பேசவும், உபதேசம் பண்ணவும் அனுமதிக்கப்படவில்லை, என்ற போதிலும் சபைக்கு ஊழியஞ்செய்யும்படி சபைக்கும், ஊழியர்களுக்கும் ஆதரவாகவும், அவர்களுக்காகப் பிரயாசப்படவும் சுவிசேஷத்திற்காக மிகவும் பிரயாசப்படவும் நம்முடைய ஆஸ்திகளால் இயேசுவுக்கு ஊழியஞ்செய்யவும் நமக்கு ஏதுக்கள் உண்டு. அவகைளைப் பயன்படுத்தி கர்த்தருடைய சபை பலுகிப்பெருக நம்மை அர்ப்பணிப்போம். கிறிஸ்துவை அறியாதவர்களுக்கு கிறிஸ்துவையும், அவரால் உண்டாகும் நித்திய ஜீவனையும் பற்றி அறிவிப்போம். கிறிஸ்துவின் இரத்தத்தால் கழுவப்பட்டு அவருடைய சபையில் அங்கமாயிருப்பவர்களாகிய நாம் அவருடைய சபைக்கு ஊழியஞ்செய்ய தீவீரமாய் புறப்படுவோம். கர்த்தர் தாமே நம்மைப் பெலப்படுத்துவாராக! அதற்குரிய ஞானத்தையும் புத்தியையும் தேவன் உங்களுக்கு அருளும்படி நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.



## கேள்விகள்

1. கெங்கிரேயா சபைக்கு ஊழியக்காரியாக இருந்தவள் யார்?

2. எவர் சபையைப் போஷித்துக் காப்பாற்றுகிறார்?

3. கர்த்தருடைய ஊழியத்தில் பிரயாசப்பட்ட ஸ்திரீகளின் பெயர்களைக் குறிப்பிடுக.

4. அப்பொல்லோவுக்கு தேவனுடைய மார்க்கத்தை அதிக திட்டமாக விவரித்துக் காண்பித்த தம்பதியர் யார்?

5. இயேசு கிறிஸ்துவினால் ஏழு பிசாசுகளின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டவள் யார்?

# <u>கர்த்தரைக் குறித்தே மேன்மை பாராட்டுவோம்</u>
# <u>Lets` Boast in the Lord</u>

**25**

**அ**ன்பு சகோதரிகளே, நாம் எப்போதும் கர்த்தரைக் குறித்தே மேன்மைபாராட்டக்கடவோம். கர்த்தர் நமக்கு செய்த நன்மைகள் ஏராளம் எனவே அவரைக் குறித்தும், அவரது மீட்பைக் குறித்தும், அவரது வல்லமையைக் குறித்தும், அவரது மகத்துவங்களைக் குறித்தும், கர்த்தருடைய சிலுவையைக் குறித்தும் மேன்மைபாராட்டுவோம். ஏனெனில் அவரே நமக்கு எல்லாமுமாக இருக்கிறவர்.

பொதுவாக ஸ்திரீகளாகிய நமக்குள்ளே நம்மைக் குறித்தும், நம்முடைய உயர்வான வாழ்க்கைத் தரம், நம்முடைய குடும்பம், சில வேளைகளில் நம்முடைய ஆவிக்குரிய வளர்ச்சி போன்றவைகளைக் குறித்தும் மேன்மையான எண்ணம் கொண்டவர்களாக இருப்போம். ஆனால் தேவன் இவ்விதமான மேட்டிமையான எண்ணங்களை விரும்புகிறதில்லை. ஏரேமியா தீர்க்கன் கூறுவதை கவனிப்போம், "ஞானி தன் ஞானத்தைக் குறித்து மேன்மைபாராட்டவேண்டாம்! ஐசுவரியவான் தன் ஐசுவரியத்தைக்குறித்து மேன்மைபாராட்டவேண்டாம்; மேன்மை பாராட்டுகிறவன் பூமியிலே கிருபையையும் நியாயத்தையும் நீதியையும் செய்கிற கர்த்தர் நான் என்று என்னை அறிந்து உணர்ந்திருக்கிறதைக் குறித்தே மேன்மைபாராட்டக்கடவன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; இவைகளின்மேல் பிரியமாயிருக்கிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (எரே.9:23,24).

ஞானி தன் ஞானத்தைக் குறித்து மேன்மைபாராட்டாதே என கர்த்தர் குறிப்பாகக் கூறுவதைக் காணலாம். ஞானிகளை குறித்து ரோமர் 12:16-ல் "...உங்களையே புத்திமான்களென்று எண்ணாதிருங்கள்" என மேட்டிமையான எண்ணம் கொண்டவர்களைக் குறித்து பவுல் எச்சரிக்கிறார். நாம் புத்திமான்கள் அல்ல. "கர்த்தர் ஞானத்தைத் தருகிறார்; அவர் வாயின்று அறிவும் புத்தியும் வரும்" (நீதி.2:6). அவரே தேவனால் நமக்கு ஞானமும் நீதியும் பரித்தமும் மீட்புமானார் (1கொரி.1:31). ஒருவேளை நாங்கள் ஆத்துமாக்களை ஆதாயம் பண்ணுகிற ஞானிகள் எனக்கூறி மேன்மைபாராட்டலாம். ஆனால் ஆத்துமாக்களை ஆதாயப்படுத்துகிற ஞானம் கர்த்தரிடத்திலிருந்து தான் வருகிறது என்பதை மறந்து விடக்கூடாது. எனவே நமக்கு ஞானத்தைக் கொடுத்துள்ள கர்த்தரைக் குறித்தே மேன்மைபாராட்டுவோம்.

பராக்கிரமன் தன் பராக்கிரமத்தைக் குறித்து மேன்மைபாராட்ட வேண்டாம் என்று கர்த்தர் சொல்லுகிறார். யார் பாராக்கிரமன்? தான் ஒரு பெரிய ஆள். என்னால் தான் என் குடும்பமே நன்றாக இருக்கிறது. நான் நினைத்தால் எதையும் சாதித்துவிடுவேன் என்று தன்னைக்குறித்து பெருமைப்படுகிறவர்கள். இங்கே இயேசுவுக்கு முன்னோடியாக வந்த யோவான் ஸ்நானகன் இயேசுவைக் குறித்து



கூறும்போது "அவன்; என்னிலும் வல்லவர் ஒருவர் எனக்குப்பின் வருகிறார், அவருடைய பாதரட்சைகளின் வாரைக் குனிந்து அவிழ்க்கிறதற்கும் நான் பாத்திரன் அல்ல" (மாற்.1:8) என்று கர்த்தரை மேன்மைப்படுத்துகிறான். இதைப்போலவே மரியாளும், "வல்லமையுடையவர் மகிமையானவைகளை எனக்குச் செய்தார்; அவருடைய நாமம் பரிசுத்தமுள்ளது... தம்முடைய புயத்தினாலே பராக்கிரமஞ் செய்தார்; இருதய சிந்தையில் அகந்தையுள்ளவர்களைச் சிதறடித்தார். பலவான்களை ஆசனங்களிலிருந்து தள்ளி, தாழ்மையானவர்களை உயர்த்தினார்" (லூக்.1:49-52) என கர்த்தர் ஒருவரே வல்லமையுடையவர் என்றும் பராக்கிரமசாலி என்றும் மகிமைப்படுத்துகிறாள். ஆம், நாம் ஒன்றுமில்லை மண் என்று நினைவுகூர வேண்டும். கர்த்தர் ஒருவரே பராக்கிரமசாலி என மேன்மை பாராட்டக்கடவோம்.

அடுத்ததாக ஐசுவரியவான் தன் ஐசுவரியத்தைக்குறித்து மேன்மைபாராட்ட வேண்டாம் எனப் பார்த்தோம். ஏனென்றால் ஐசுவரியவானுடைய பொருள் அவனுக்கு அரணான பட்டணம்; அது அவன் எண்ணத்தில் உயர்ந்த மதில்போலிருக்கும் என்று நீதி.18:11-ல் வாசிக்கிறோம். அநேக ஸ்திரீகள் தங்களுடைய ஐசுவரியத்தைக் குறித்து பெருமையாகப் பேசியனதைக் கேட்டிருக்கிறேன். தலைமுறை தலைமுறைக்கும் போதிய சொத்து சுகங்கள் உண்டு. எங்களுக்கு ஒரு கவலையுமில்லை என்பர். இப்பேர்பட்டவர்களைப் பார்த்துதான் கர்த்தர் உன் ஐசுவரித்தைக் குறித்து மேன்மைபாராட்டாதே என்கிறார். உங்கள் எண்ணத்தில் மதிலைப்போலிருக்கிற ஐசுவரியம் ஒருநாளில் அழிந்துபோகும்.

லூக்கா12:16-21ல் ஒரு ஐசுவரியவானைக் குறித்து வாசிக்கலாம். அவன் தன் தானியங்களையும் பொருள்களையும் சேர்த்து வைக்க தன் களஞ்சியங்களை இடித்து, பெரிதாகக் கட்டுவேன், பின்பு; ஆத்துமாவே, உனக்காக அநேக வருஷங்களுக்கு அநேகம் பொருள்கள் சேர்த்து வைக்கப்பட்டிருக்கிறது. நீ இளைப்பாறி, புசித்துக் குடித்து, பூரிப்பாயிரு என்று சொன்னான். தேவனோ அவனை நோக்கி: மதிகேடனே, உன் ஆத்துமா உன்னிடத்திலிருந்து இந்த இராத்திரியிலே எடுத்துக்கொள்ளப்படும் என்றார். இதுதான் ஒவ்வொரு ஐசுவரியவானின் முடிவு. அப்படியிருக்க மேன்மைபாராட்டுவது எப்படி?

அன்பு சகோதரிகளே, கர்த்தருடைய கிருபை பெரியது. அவருடைய கிருபையினாலே பாவத்தின் பிடியிலிருந்து இரட்சிக்கப்பட்டிருக்கிறோம். இது தேவனுடைய ஈவு. அவர் நமக்கு நியாயத்தையும் நீதியையும் செய்கிற கர்த்தர் என்பதை அறிந்து உணர்ந்து கொள்ளவேண்டும். இயேசு கிறிஸ்து நமக்கும் தேவனுக்குமிடையே பகையாக நின்ற பிரிவினையாகிய நடுச்சுவரைத் தகர்த்து நம்மை புதிய மனுஷியாக சிருஷ்டித்து தேவனோடு ஒப்புரவாக்கியுள்ளார். தூரமாயிருந்த நாம் கிறிஸ்துவின் சிலுவை மரணத்தினால் பிதாவினிடத்தில் சேரும் சிலாக்கியத்தை அவர் மூலமாய்ப் பெற்றிருக்கிறோம் (எபே.2). ஆகவே இந்தக் கிருபையைக் குறித்து, அவரது சிலுவையைக் குறித்து, அவரது மீட்பின் சுவிசேஷத்தைக் குறித்து மேன்மைபாராட்டுவோம். நம்மைக் குறித்தல்ல! "சிலர்

இரதங்களைக்குறித்தும், சிலர், குதிரைகளைக் குறித்தும் மேன்மைபாராட்டுகிறார்கள்; நாங்களோ எங்கள் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தைக் குறித்தே மேன்மைபாராட்டுவோம்" (சங்.20:7) என்போமா?.

### கேள்விகள்

1. நாம் எதைக்குறித்து மேன்மைபாராட்ட வேண்டும்?
2. வல்லமையுடையவர் மகிமையானவைகளை எனக்குச் செய்தார் என்று கூறியது யார்?
3. ஞானிகளின் ஞானத்தைக்குறித்தும் ஐசுவரியவானின் ஐசுவரியத்தைக்குறித்தும் என்ன செய்யவேண்டாம் என கர்த்தர் சொல்லுகிறார்?
4. இயேசுகிறிஸ்து நம்மை எவ்வாறு புதிய மனுஷியாக சிருஷ்டித்து ஒப்புரவாக்கினார்?
5. அவருடைய (இயேசுவுடைய) பாதரட்சைகளின் வாரைக் குனிந்து அவிழ்க்கிறதற்கும் நான் பாத்திரனல்ல என்றவன் யார்?



# புத்தியுள்ள ஸ்திரீ
# The Wise Woman

**26**

**ஒ**ரு புத்தியுள்ள ஸ்திரீ வீட்டைக்கட்டுவாள் என வேதம் கூறுகிறது. குடும்பமாகிய வீடு கட்டப்பட வேண்டுமானால் அது ஒரு புத்தியுள்ள ஸ்திரீயினால் மட்டுமே கூடும். அன்பு சகோதரியே, உங்கள் குடும்பம் எப்படியுள்ளது? என்ன வந்தாலும் அசைக்கப்படமுடியாத கன்மலை கிறிஸ்துவின் மேல் கட்டப்பட்ட குடும்பமாக உள்ளதா? அல்லது இடிந்து சின்னாபின்னமாக கிடக்கும் ஒரு கட்டடத்தைப் போல் ஆளுக்கொரு பக்கமாக சிதறிப்போய் கணவன் ஒரு வழியிலும், மகன் இன்னொருவழியிலும் மகள் மற்றொரு வழியிலும் மனம் போல் வாழ்வு என நாட்களைக் கழிக்கின்ற குடும்பத்தைப்போலிருக்கிறதா? சகோதரியே, நம் குடும்பம் நோவாவின் குடும்பத்தைப் போல் ஒரே பேழையில் பயணம் செய்து நித்திய ராஜ்யத்தை சுதந்தரித்துக் கொள்ள வேண்டும் என்பதே தேவசித்தமாயிருக்கிறது.

அநேக கிறிஸ்தவ ஸ்திரீகள் கூட தாங்கள் இரட்சிக்கப்பட்டு விட்டால் அத்துடன் திருப்தியடைந்தவர்களாகவோ அல்லது தன் குடும்ப அங்கத்தினர்கள் குறித்து கவலையற்றவர்களாகவோ இருந்து விடுகின்றனர். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மாசற்ற இரத்தம் நம்மை பாவமறக்கழுவி சுத்திகரித்து நமக்கு ராஜமேன்மையைக் கொடுத்திருக்கிறது. "நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக் கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்" (1பேது.2:9) என வேதம் கூறுகிறது.

யூதர்கள் அழிவின் விளிம்பில் இருந்தபோது மொர்தெகாய் எஸ்தருக்கு அதைத் தெரியப்படுத்தவும், அவள் அகத்தியமாய் ராஜாவினிடத்திற் போய், அவனிடத்தில் தன் ஜனங்களுக்காக விண்ணப்பம் பண்ணவும், மன்றாடவும் வேண்டுமென்று அவளுக்குச் சொல்லச் சொன்னான் (எஸ்.4:8). அன்று யூதர்களுக்கு நியமிக்கப்பட்டது சரீர அழிவு. அந்த அழிவிலிருந்து யூதர்கள் காக்கப்பட வேண்டுமென எஸ்தர் ராஜாவிடம் விண்ணப்பம் பண்ணவும் மன்றாடவும் வேண்டியவளாக இருந்தாள். மேலும் மொர்தெகாய் எஸ்தருக்கு, "நீ இந்தக்காலத்திலே மவுனமாயிருந்தால் யூதருக்குச் சகாயமும் இரட்சிப்பும் வேறொரு இடத்திலிருந்து எழும்பும், அப்பொழுது நீயும் உன் தகப்பன் குடும்பத்தாரும் அழிவீர்கள்; நீ இப்படிப்பட்ட காலத்துக்கு உதவியாயிருக்கும்படி உனக்கு ராஜமேன்மை கிடைத்திருக்கலாமே, யாருக்குத்தெரியும், என்று சொல்லச் சொன்னான்" (எஸ்.4:14).

ஆனால் இன்று, "தேவனை அறியாதவர்களுக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள

ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும் ஜுவாலித்து எரிகிற அக்கினியோடும், வானத்திலிருந்து வெளிப்படும்போது ….. நித்திய அழிவாகிய தண்டனையை அடைவார்கள்" (1தெச.1:7-10) என வேதம் கூறுகிறது. அன்பு சகோதரிகளே, அன்று அந்த புத்தியுள்ள எஸ்தர், நான் செத்தாலும் சாகிறேன் எனக் கூறி ராஜாவினிடத்தில் விண்ணப்பம் பண்ணி, மன்றாடி யூதருக்கு விடுதலையும், களிப்பும், மகிழ்ச்சியும் உண்டாகப்பண்ணினாள். யூதருக்கு வெளிச்சமும், விடுதலையும் உண்டாகும்படி ராஜமேன்மை அவளுக்குக் கிடைத்திருந்தது. இன்று நமக்கோ ஆவிக்குரிய ராஜமேன்மை கிடைத்துள்ளது. இந்த ராஜமேன்மை நம்முடைய குடும்பத்தாரின் வெளிச்சத்திற்கும், விடுதலைக்கும், மகிழ்ச்சிக்கும் காரணமாயிருக்கக் கூடாதா?. 1தெச.1:7-10-ல் கூறப்பட்டுள்ளபடி தேவனை அறியாத நம்முடைய குடும்பத்தாரை நித்திய அழிவிலிருந்து காப்பாற்ற நம்முடைய ராஜாதிராஜாவும் தேவாதி தேவனுமானவரை நோக்கி விண்ணப்பம் பண்ணுவதும், மன்றாடுவதும் மிகவும் அவசியமல்லவா? அன்பு சகோதரியே, உங்கள் கணவனின் இரட்சிப்பைக்குறித்தும், பிள்ளைகளின் இரட்சிப்பைக் குறித்தும் கவலையற்றவர்களாய் இருக்க வேண்டாம்.

ஐயோ, இரட்சிப்பைக் குறித்து பேசினாலே வீட்டில் ரகளை தான் ஏற்படும் என்கிறீர்களா? தேவசமூகத்தில் தரித்திருந்து வேதாகமத்தின் மூலம் கர்த்தரிடத்திலிருந்து வரும் அறிவையும் புத்தியையும் பெற்றுக் கொண்டு குடும்பத்தைக் கட்ட ஆரம்பியுங்கள். உங்கள் பயபக்தியோடு கூடிய உங்கள் கற்புள்ள நடக்கையை உங்கள் கணவர் பார்த்து போதனையின்றி உங்கள் நடக்கையினாலேயே ஆதாயப்படுத்திக்கொள்ளப்படுவார் (1பேது.3:1,2). தேவவசனம் தூஷிப்பப்படாதபடிக்கு உங்கள் புருஷரிடத்திலும், உங்கள் பிள்ளைகளிடத்திலும் அன்புள்ளவராகவும், தெளிந்த புத்தியுள்ளவராகவும், கற்புள்ளவராகவும், வீட்டில் தரித்திருக்கிறவராகவும், நல்லவராகவும், உங்கள் புருஷருக்குக் கீழ்ப்படிகிறவராகவு மிருங்கள் (தீத்.2:4,5). இப்படி நடந்து கொள்ளும்போது தேவன் உங்களுக்கு உதவிசெய்வார். நீங்களும் புத்தியாய் உங்கள் குடும்பத்தை கிறிஸ்துவாகிய பேழையில் ஏறப்பண்ணுவீர்கள்.

எஸ்தரைப்போல துணிச்சல் கொண்டு, "நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள். அப்பொழுது, எல்லாப்புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும்" (பிலி.4:6,7).

இதோ, கர்த்தர் சீக்கிரமாய் வருகிறார். "…… கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக் குறித்துத் தாமதமாயிராமல்; ஒருவரும் கெட்டுப் போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்" (2பேது.3:9). எனவே நம்முடைய குடும்பத்தைக் குறித்து பாரமுள்ளவர்களாய் தேவனை நோக்கி வேண்டிக்கொள்ளுவோம். "தேவனுக்கேற்ற துக்கம் பின்பு



மனஸ்தாபப்படுகிறதற்கு இடமில்லாமல் இரட்சிப்புக்கேதுவான மனந்திரும்புதலை உண்டாக்குகிறது ………" (கொரி.7:10) என வேதம் கூறுகிறது.

ராஜமேன்மையைப் பெற்றுள்ள நாம், சிலர் கவலையற்றவர்களாயிருப்பது போல நாமும் இல்லாதபடி நம்முடைய குடும்பத்தாரை, நம் ஜனத்தை அழிவிலிருந்து காப்பாற்றி அவர்களுக்கு வெளிச்சமும், மகிழ்ச்சியும், விடுதலையும் உண்டாக ஆத்தும பாரங்கொண்டு நம்முடைய தேவாதி தேவனுமாயிருக்கிறவரை நோக்கி, மன்றாடுவோம். வேதம் நம்மில் எதிர்பார்க்கிறபடி புத்தியாய் கிரியை நடப்பிப்போம். நம்முடைய விசுவாசத்தின் கிரியைகளைக் கர்த்தர் பார்த்து நம்முடைய குடும்பம் கட்டப்படவும் கிறிஸ்துவின் சபையாகிய பேழையில் குடும்பத்தார் அனைவரும் சேர்க்கப்பட்டு நித்திய அழிவிலிருந்து காக்கப்படவும் உதவிசெய்வாராக!.

## கேள்விகள்

1. யூதருக்கு சகாயமும் இரட்சிப்பும் வரக்காரணமாயிருந்தவள் யார்?
2. யாரெல்லாம் நித்திய அழிவாகிய தண்டனையை அடைவார்கள்?
3. தேவவசனம் தூஷிக்கப்படாதபடிக்கு ஸ்திரீகள் என்ன செய்யவேண்டும்?
4. எப்பொழுது எல்லா புத்திக்கும்மேலான சமாதானம் நம் இருதயங்களையும் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக காத்துக்கொள்ளும்?
5. தேவனுக்கேற்ற துக்கம் எதை உண்டாக்குகிறது?

# <u>பதிலளிக்கப்படாத ஜெபங்களுக்கான காரணங்கள்</u>
# <u>Reasons for Unanswered Prayers</u>

**27**

**நா**ம் ஒவ்வொரு நாளும் காலையில் எழுந்தவுடன் ஜெபிக்கிறோம், இரவு படுக்கைக்குச் செல்லுமுன் ஜெபிக்கிறோம், இடைப்பட்ட நேரங்களிலும் ஜெபிக்கிறோம். ஆனால் நம்முடைய சில ஜெபங்களுக்கு எளிதாக பதில் கிடைத்து விடுகிறது, சில ஜெபங்களுக்கு வருடங்கள் கடந்தோடினாலும் பதில் கிடைப்பதில்லை. காரணமென்ன? சில வேதவசனங்கள் துணைகொண்டு ஆராய்வோம்.

✦ **அவிசுவாசத்தினாலே நம்ஜெபங்களுக்கு பதில் கிடைப்பதில்லை.** இயேசு சொல்லுகிறார்; "...உங்கள் அவிசுவாசத்தினாலேதான்; ... (மத்.17:20). அது என்ன அவிசுவாசம். நாம் அவரிடம் கேட்டால் கிடைக்குமென்று தானே கேட்கிறோம் என நினைக்கலாம். நாம் தேவனிடத்தில் அழுது புலம்பி அநேகக் காரியங்களுக்காக ஜெபிப்போம், ஆனால் மறுபடியும் அதே காரியங்களுக்காகத் தொடர்ந்து அழுது கொண்டிருப் போம். மலடியாயிருந்த அன்னாள், "... நான் கர்த்தருடைய சந்நிதியில் என் இருதயத்தை ஊற்றி விட்டேன்" (1சாமு.1:15) என்றாள். "....அப்புறம் அவள் துக்கமுகமாயிருக்கவில்லை" (1சாமு.1:18) ஏனெனில் தன்னுடைய ஜெபத்திற்குப் பதில் கிடைக்குமென்ற விசுவாசம். நாம் இவளைப்போலில்லையே துக்கத்துடனே அல்லவா தொடர்ந்து பயணிக்கிறோம். இயேசு "...நீங்கள் விசுவாசமுள்ளவர்களாய் ஜெபத்திலே எவைகளைக் கேட்பீர்களோ அவைகளையெல்லாம் பெறுவீர்கள் என்றார்" (மத்.21:22). ஆம், நாம் எதைக் கேட்டாலும் விசுவாசத்துடன் கேட்போம். பெற்றுக் கொள்வோம்!

✦ **நாம் மாயக்காரரைப் போலவும் அஞ்ஞானிகளைப் போலவும் ஜெபித்தால் நம் ஜெபங்களுக்குப் பதில் கிடைக்காது என வேதம் கூறுகிறது.** வாசிப்போம் மத்தேயு 6:5,7 "அன்றியும் நீ ஜெபம்பண்ணும்போது மாயக்காரரைப்போலிருக்க வேண்டாம்: மனுஷர் காணும்படியாக அவர்கள் ஜெப ஆலயங்களிலும் வீதிகளின் சந்திகளிலும் நின்று ஜெபம்பண்ண விரும்புகிறார்கள்; அவர்கள் தங்கள் பலனை அடைந்து தீர்ந்ததென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்... அன்றியும் நீங்கள் ஜெபம்பண்ணும்போது, அஞ்ஞானிகளைப் போல வீண்வார்த்தைகளை அலப்பாதேயுங்கள்; அவர்கள், அதிக வசனிப்பினால் தங்கள் ஜெபம் கேட்கப்படுமென்று நினைக்கிறார்கள்" என்றார்.

இன்றும் கூட அநேகர் மற்றவர்களுக்கு முன் தன்னை பக்திமான் எனக் காட்டிக்கொள்ளும்படி அடுக்கு வார்த்தைகளாலும், அதிக வசனிப்போடும், அழகாகவும் வர்ணனையாகவும் அலப்புகிறதைப் பார்த்திருக்கிறோம். நம்முடைய ஜெபங்களை மற்றவர்கள் கண்டு புகழும்படி நாம் ஜெபிப்பதால் நமக்கு எந்த நன்மையும் வராது.



நம்முடைய ஜெபம் நம்முடைய பிதாவை நோக்கினதாக இருதயத்திலிருந்து வருகிறதாக இருக்கவேண்டும். இயேசு, "...உங்கள் பிதாவை நோக்கி நீங்கள் வேண்டிக்கொள்ளுகிறதற்கு முன்னமே உங்களுக்கு இன்னது தேவை என்று அவர் அறிந்திருக்கிறார்" (மத்.6:8) என்கிறார். எனவே நாமும் மற்றவர்கள் பார்க்கும்படியாக ஜெபிக்காமல் பிதா நம்மைப் பார்க்கிறார், ஜெபத்தை அவர்தான் கேட்கிறார், அவர் தான் பதிலளிக்க முடியும் என்ற நோக்கத்தோடு ஜெபிக்கவேண்டும். அஞ்ஞானிகளைப் போலவும் மாயக்காரரைப்போலவும் ஜெபிக்கும்போது நம்முடைய ஜெபத்திற்குப் பதில் கிடைக்காமல் போகிறது.

✦ **சிலர் தன்னைத் தானே நீதிமான் என்றும் மற்றவர்கள் எல்லோரும் பாவிகள் என்றும் நினைத்து ஜெபிப்பார்கள்.** லூக்கா18:9-14ல் இயேசு இவ்வாறாகச் சொல்கிறார் "அன்றியும், தங்களை நீதிமான்களென்று நம்பி, மற்றவர்களை அற்பமாயெண்ணின சிலரைக்குறித்து, அவர் ஒரு உவமையைச் சொன்னார்: இரண்டு மனுஷர் ஜெபம்பண்ணும்படி தேவாலயத்துக்குப் போனார்கள்; ஒருவன் பரிசேயன், மற்றவன் ஆயக்காரன். பரிசேயன் நின்று: தேவனே! நான் பறிகாரர், அநியாயக்காரர், விபசாரக்காரர் ஆகிய மற்ற மனுஷரைப்போலவும் இந்த ஆயக்காரனைப்போலவும் இராததனால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன். வாரத்தில் இரண்டுதரம் உபவாசிக்கிறேன் என்று தனக்குள்ளே ஜெபம்பண்ணினான். ஆயக்காரன் தூரத்திலே நின்று, தன் கண்களையும் வானத்துக்கு ஏறெடுக்கத் துணியாமல், தன் மார்பிலே அடித்துக்கொண்டு: தேவனே! பாவியாகிய என்மேல் கிருபையாயிரும் என்றான். அவனல்ல; இவனே நீதிமானாக்கப்பட்டவனாய்த் தன் வீட்டுக்குத் திரும்பிப்போனான் ... என்றார்". இவ்வுவமையில் காண்பது போல் நாமும் நம்மை நாமே நீதிமான் என்றும், நான் தேவ வசனத்தின்படி நடக்கிறேன், ஜெபிக்கிறேன், பக்தியாய் வாழுகிறேன், அவர்களைப்போல் நானில்லை என நினைத்து, மேட்டிமையுள்ளவர்களாய் தேவனை நோக்கி ஜெபிப்போமானால் நம்முடைய ஜெபங்களுக்குப் பதில் கிடைக்காது.

கிறிஸ்தவ வட்டாரங்களில் அநேகர் இப்படித்தான் இருக்கிறார்கள். நாங்கள் பரம்பரைக் கிறிஸ்தவர்கள், எங்கள் குடும்பம் போதகர் குடும்பம், எங்களுக்கு ஜெபிக்கத் தெரியும். நாங்கள் வாரம் ஒருமுறை உபவாசித்து ஜெபிக்கிறோம். நாங்களும் எங்கள் பிள்ளைகளும் ஒழுங்காக சபைக்குச் செல்லுகிறோம். வேத வாக்கியங்களெல்லாம் எங்களுக்கு நன்றாகத் தெரியும் என்று கூறிக்கொண்டு பரிசேயனைப்போல பேசுவார்கள். பரிசேயர் என்பவர்கள் நியாயப்பிரமாணத்தோடுகூட வேறே போதனைகளையும் சேர்த்து பின்பற்றியவர்கள்.

தன்னைத்தான் தாழ்த்துவதற்குப் பதிலாக தங்களுடைய சுயநீதியைக் கொண்டு நன்மை அடையலாமென்று போதித்தவர்கள் எனக் கூறப்படுகிறது. இவர்களைப்போல் நாமும் நம்மைத் தாழ்த்தாமல் மேட்டிமையான எண்ணத்தில் ஜெபிக்கும்போது நீ அல்ல, நீ அற்பமாக எண்ணின அவனே நீதிமான் என்று தேவன்

கூறினால் நாம் தாழ்த்தப்பட்டவர்களாக, ஜெபத்திற்குப் பதிலைப் பெறாதவர்களாகக் காணப்படுவோம்.

✧ **ஜெபிக்கிற நாம் சந்தேகப்படாமல் விசுவாசத்தோடே கேட்கவேண்டும்** என திருமறை போதிக்கிறது. யாக்கோபு 1:6ல் "ஆனாலும் அவன் எவ்வளவாகிலும் சந்தேகப்படாமல் விசுவாசத்தோடே கேட்கக்கடவன்; சந்தேகப்படுகிறவன் காற்றினால் அடிபட்டு அலைகிற கடலின் அலைக்கு ஒப்பாயிருக்கிறான் அப்படிப்பட்ட மனுஷன் தான் கர்த்தரிடத்தில் எதையாகிலும் பெறலாமென்று நினையாதிருப்பானாக. இருமனமுள்ளவன் தன் வழிகளிலெல்லாம் நிலையற்றவனாயிருக்கிறான்" என்று சொல்லப்பட்டுள்ளது. இயேசு, "....நீங்கள் ஜெபம்பண்ணும் போது எவைகளைக் கேட்டுக் கொள்வீர்களோ, அவைகளைப் பெற்றுக்கொள்வோம் என்று விசுவாசியுங்கள் அப்பொழுது அவைகள் உங்களுக்கு உண்டாகும் என்று சொல்கிறேன்" (மாற்.11:24) என்றார்.

மேலும் "நாம் எதைக் கேட்டாலும் அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்று நாம் அறிந்திருந்தோமானால், அவரிடத்தில் நாம் கேட்டவைகளைப் பெற்றுக் கொண்டோமென்றும் அறிந்திருக்கிறோம்" 1யோவா.5:15ல் வாசிக்கிறோம். நாமோ, தேவனை நோக்கி ஜெபித்துவிட்டு பின்பு, நாம் ஜெபித்தவற்றிற்கு பதில் வருமோ அல்லது வராதோ என்று சந்தேகப்பட்டால் யாக்கோபில் சொல்லப்பட்டுள்ளபடி கர்த்தரிடத்தில் எதையாகிலும் பெறக்கூடுமா? கூடாதே சாதாரணமாக உலகத்தில் நம்மை பெற்றெடுத்த உலக பெற்றோர்களே தங்கள் பிள்ளைகள் தங்களை சந்தேகப்படுவதை விரும்பமாட்டார்கள்.

மத்தேயு 7:9-11ல் உங்களில் எந்த மனுஷனானாலும் தன்னிடத்தில் அப்பத்தைக் கேட்கிற தன் மகனுக்குக் கல்லைக் கொடுப்பானா? ஆகையால், பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா? என்று வினா எழுப்புகிறார் நம்மை உண்டாக்கினவர் தம்மை நோக்கி வேண்டிக்கொள்ளுகிற தம்முடைய பிள்ளைகளுக்கு பரம பிதா நன்மையானவைகளை கொடுப்பார் என்று சந்தேகப்படாமல் ஜெபிக்கும் ஜெபத்திற்கு பதில் கிடைப்பது அதிக நிச்சயம். ஜெபித்து விட்டு அவர் கொடுப்பாரா, கிடைக்குமோ, கிடைக்காதோ, என சந்தேகப்பட்டு இருமனதுடன் காணப்பட்டால் எவ்வித நன்மையும் பெறப்போவதில்லை.

✧ **தகாதவிதமாய் விண்ணப்பம் பண்ணினாலும் நாம் தேவனுடைய சமூகத்திலிருந்து எதையும் பெற்றுக்கொள்ளமுடியாது.** "நீங்கள் விண்ணப்பம் பண்ணியும், உங்கள் இச்சைகளை நிறைவேற்றும்படி செலவழிக்கவேண்டுமென்று தகாதவிதமாய் விண்ணப்பம் பண்ணுகிறபடியினால், பெற்றுக் கொள்ளாமலிருக் கிறீர்கள்" என்று யாக்கோபு 4:3 ல் சொல்லப்படுகிறது. இதற்கு முந்தின வசனத்தில்



"நீங்கள் இச்சித்தும் உங்களுக்குக் கிடைக்கவில்லை; நீங்கள் கொலைசெய்தும், பொறாமையுள்ளவர்களாயிருந்தும், அடையகூடாமற்போகிறீர்கள்; நீங்கள் சண்டையும் யுத்தமும்பண்ணியும், நீங்கள் விண்ணப்பம் பண்ணாமலிருக்கிற தினாலே, உங்களுக்குச் சித்திக்கிறதில்லை" என்று சொல்லுகிறது. இவ்வசனத்தின்படி நம்முடைய சுய இச்சைகள் நிறைவேற வேண்டுமென்று ஜெபித்தால் நம்முடைய ஜெபங்களுக்குப் பதில் கிடைக்காது. இப்படி தகாதவிதமாய் ஜெபிக்கும்போது பெற்றுக் கொள்ளாமலிருக்கிறோம்.

பலவருடங்களுக்கு முன்பாக சபைக்கு வந்துகொண்டிருந்த ஒரு ஸ்திரீ தன்னுடைய மகன் தான் சேர்த்துக்கொண்ட மனைவியை விட்டு பிரியவேண்டுமென ஜெபியுங்கள் என்று சொன்னார்கள். நாங்கள் அந்த ஸ்திரீக்கு சில ஆலோசனைகளை வேதாகம அடிப்படையில் கூறினோம். அவர்களோ தன்னுடைய இச்சையின்படி தன் மகன் தன்னிடம் வந்துவிடவேண்டும், அவனது மனைவியை விட்டுவிடவேண்டும் என்று ஜெபித்தார்கள். ஜெபம் கேட்கப்படவில்லை. தேவன் தன் ஜெபத்தைக் கேட்கவில்லையென்று சொல்லி சபைக்கு வருவதை நிறுத்திக்கொண்டார்கள். இப்படி அநேக ஸ்திரீகள் இன்றும் தங்கள் இருதயத்தில் சில விரும்பங்களை வைத்துக்கொண்டு "உம்முடைய சித்தத்தின்படி ஆகட்டும் தேவனே" என்று ஜெபிப்பார்கள். ஆனால் அவர்கள் இருதயத்திலோ தான் இச்சித்தபடி நடைபெற வேண்டும் என்று எண்ணம். இப்பேர்பட்ட ஜெபத்தைத்தான் "...தகாதவிதமாய் விண்ணப்பம் பண்ணுகிறபடியினால், பெற்றுக்கொள்ளாமலிருக்கிறீர்கள்" என்று வேதம் சொல்லுகிறது. தேவன் நம் இருதயத்தைப் பார்க்கிறார். "மனுஷருள்ளத்திலிருப்பதை அவர் (இயேசு) அறிந்திருந்தபடியால், மனுஷரைக் குறித்து ஒருவரும் அவருக்குச் சாட்சி கொடுக்கவேண்டியதாயிருக்கவில்லை" (யோவா.2:25). நம்முடைய இருதயங்கள் கொள்ளையினாலும் இச்சைகளினாலும் நிறைந்திருக்கிறபோது நம்முடைய ஜெபங்களுக்குப் பதில் கிடைப்பதில்லை. வேதம் தேவன் பாவிகளுக்குச் செவிகொடுப்பதில்லை என்று சொல்லுகிறது.

அன்பு சகோதரிகளே, நம்முடைய அநேக ஜெபங்கள் பதிலளிக்கப்படாத ஜெபங்களாக இருப்பதற்குக் காரணத்தை மேற்குறிப்பிடப்பட்ட வசனங்களின் மூலம் அறிந்துகொண்டோம். பதிலளிக்கப்படாத ஜெபங்களுக்கு நாமே காரணமாயிருக்கிற படியால், ஜெபங்களுக்குப் பதிலைப் பெற்றுக்கொள்ளும்படிக்கு நம்மை நாமே வசனத்தின்படி சரிசெய்துகொள்ளுவோம். "நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்பதே அவரைப் பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம்" (1யோவா.5:14). எனவே பதில் கிடைக்கப்பெறாத ஜெபங்களுக்குத் தடையாயிருக்கிற காரியங்களைக் களைந்து போட்டு தேவனுடைய சித்தத்தின்படி ஜெபித்து நம்முடைய ஜெபங்களுக்குப் பதிலைப் பெற்றுக்கொள்வோம். பரிசுத்த ஆவியானவர்தாமே நாம் "...ஏற்றபடி வேண்டிக்கொள்ள உதவிசெய்வாராக! (ரோம.8:26). ஆமென்!

## கேள்விகள்

1. எதினால் நம்முடைய ஜெபங்களுக்குப் பதில் கிடைப்பதில்லை?
2. மாயக்காரரும் அஞ்ஞானிகளும் எவ்வாறு ஜெபிக்கிறார்கள் என இயேசு சொல்கிறார்?
3. தங்களை நீதிமான்கள் என்று எண்ணி மற்றவர்களை அற்பமாய் எண்ணின சிலரைக்குறித்து வேதம் என்ன சொல்லுகிறது?
4. நாம் எவ்வாறு ஜெபித்தால் நாம் கேட்டவைகள் உண்டாகும் என்று இயேசு சொல்லுகிறார்?
5. நாம் எவ்விதமாய் ஜெபிக்கும்போது பெற்றுக்கொள்ளாமல் இருக்கிறோம் என்று யாக்கோபு கூறுகிறார்?



# முள் – Thorn

**28**

**ஆ**சீர்வாதங்களையே நோக்கி காத்திருக்கும் அநேக ஸ்திரீகளுக்கு இத்தலைப்பு அதிர்ச்சியைக் கொடுக்கக்கூடும். "...கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாக நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்" (2தீமோ.3:12) என வேதம் கூறுகிறது. இக்காலப்பாடுகள் இனிவரும் மகிமைக்கு ஒப்பானதல்ல எனவே வரவிருக்கும் ஆசீர்வாதத்தை நினைத்து இத்தலைப்பின் செய்தியை தியானிப்போம்.

முள் என்பதற்கு தொடர்ச்சியான பிரச்சனை அல்லது எரிச்சலூட்டுகின்ற காரியங்கள், துக்கம், கவலை,தாங்கொண்ணா வேதனை என விவரிக்கப்படுகின்றது. முள் என்ற சொல் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நம்மேல் கொண்ட அன்பிற்கு அடையாளச் சின்னமான அவர்மேல் சூட்டப்பட்ட முள்முடியை நமக்கு நினைப்பூட்டுகிறது. பவுலுக்கும் கூட ஒரு முள் கொடுக்கப்பட்டிருந்ததாக 2கொரி.12:7ல் வாசிக்கின்றோம். அதைக் குறித்து பவுல் கூறுகையில் "அன்றியும் எனக்கு வெளிப்படுத்தப்பட்டவைகளுக்குரிய மேன்மையினிமித்தம் நான் என்னை உயர்த்தாதபடிக்கு, என் மாம்சத்திலே ஒரு முள் கொடுக்கப்பட்டிருக்கிறது; என்னை நான் உயர்த்தாதபடிக்கு, அது என்னைக் குட்டும் சாத்தானுடைய தூதனாயிருக்கிறது" என்கிறார்.

பவுல் தனக்கு வெளிப்படுத்தப்பட்ட மேன்மையான காரியங்களினிமித்தம் தன்னை உயர்த்தாதபடிக்கு இந்த முள் கொடுக்கப்பட்டுள்ளது எனவும், இது குட்டும் சாத்தானுடைய தூதனாயிருக்கிறது எனவும் சொல்லுகிறார். மேலும் 2கொரிந்தியர்12:1ல் "மேன்மைபாராட்டுகிறது எனக்குத் தகுதியல்லவே;...." என்கிறார் வசனம் 11ல் "மேன்மைபாராட்டி, புத்தியீனனாயினேன்; நீங்களே இதற்கு என்னைப் பலவந்தப்படுத்தினீர்கள். நான் ஒன்றுமில்லையென்றாலும், மகா பிரதான அப்போஸ்தலருக்கும் நான் எவ்வளவும் குறைந்தவனாயிராதபடியால், உங்களாலே மெச்சிக்கொள்ளப்படவேண்டியதாயிருந்ததே" என்கிறார். பவுலுக்கு ஆவிக்குரிய ரீதியில் தன்னை மேன்மைபாராட்டிக்கொள்ள ஏதுவிருந்தும் அது தனக்குத் தகுதியில்லை என்று கூறுவதோடல்லாமல், தன்னை உயர்த்தாதபடிக்கு தன் மாம்சத்தில் கொடுக்கப்பட்டிருந்த முள் குட்டும் சாத்தானுடைய தூதனாயிருந்ததாகவும் கூறுகிறார்.

நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கையிலும் அநேக விஷயங்களில் மேன்மைபாராட்டுவதற்கேதுவான அநேகக் காரியங்கள் இருக்கலாம். ஒருவேளை நான் பக்தியாகயிருக்கிறேன், ஜெபத்தில் அதிகமாகத் தரித்திருக்கிறேன், வேதம் வாசிக்கிறேன், அநேகருக்கு கர்த்தருடைய வார்த்தையை பகிர்ந்துகொடுக்கிறேன், நான் ஜெபித்தால் பெரிய பெரிய அற்புதங்களும் அதிசயங்களும் நடக்கின்றன என்று அடுக்கிக்கொண்டே நம்மை நாமே மேன்மைபாராட்டிக் கொண்டிருக்கலாம் அல்லது

நம்முடைய சரீரத்திலுள்ள பலவீனங்களைக் கூட ஒப்புக்கொள்ளாதபடி மேன்மையாகப் பேசிக்கொண்டும் கருதிக் கொண்டுமிருக்கலாம். ஆனால் கிறிஸ்துஇயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்கிற ஒவ்வொரு உண்மையுள்ள ஸ்திரீக்கும் நிச்சயமாகவே ஒரு முள் கொடுக்கப்பட்டிருக்கும். ஏனெனில் நம்மை நாமே உயர்த்திக் கொள்ளாதபடிக்கு அது நம்மைக் குட்டும் சாத்தானுடைய தூதனாகக் கொடுக்கப்பட்டுள்ளது. நாம் அழிந்து போகாதபடிக்கு கொடுக்கப் பட்டுள்ளது. "அழிவுக்கு முன்னானது அகந்தை; விழுதலுக்கு முன்னானது மனமேட்டிமை" (நீதி.16:18) என்ற வசனத்தை நினைத்துக்கொள்வோம். நம்முடைய பலவீனங்களைக் குறித்து சோர்ந்துபோகாதிருப்போம்.

பவுலுக்குக் கொடுக்கப்பட்டிருந்த முள் பலவிதங்களில் அவனைக் குட்டும் சாத்தானுடைய தூதனாயிருந்ததாகக் கூறப்படுகிறது. கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிற விஷயத்தில் யூதர்கள் பவுலுக்கு அநேக உபத்திரவங்களை கொடுக்கும் முள்ளாகவும் குட்டும் சாத்தானுடைய தூதராகவும் இருந்திருக்கின்றனர். **குட்டுவது (buffet)** என்பது கொடூரமாகத்தாக்குவது, சரீரத்தின் எப்பக்கத்திலும் காயம் ஏற்படுத்தும் வகையில் அடிப்பது என விவரிக்கப்படுகிறது. பவுல் அநேக முறைகளில் இவ்வாறாக குட்டப்பட்டுள்ளார். "யூதர்களால் ஒன்றுகுறைய நாற்பதடியாக ஐந்துதரம் அடிக்கப்பட்டேன்; மூன்றுதம் மிலாறுகளால் அடிக்கப்பட்டேன், ஒருதரம் கல்லெறியுண்டேன்..." (2கொரி.11:23-25) என்கிறார்.

நமதாண்டவராகிய இயேசு கிறிஸ்துவும் நம்மேல் கொண்ட அன்பினிமித்தம் நம்மை மீட்கும் பொருட்டு சுவிசேஷத்தை அறிவித்தபடியினால் யூதர்களால் குட்டப்பட்டார் என மாற்.14:64-65 மற்றும் மத்.26:67ல் வாசிக்கிறோம். "அப்பொழுது சிலர் அவர்மேல் துப்பவும், அவருடைய முகத்தை மூடவும், அவரைக் குட்டவும்... தொடங்கினார்கள். நம்மையெல்லாம் உண்டாக்கின தெய்வம், பிதாவின் மடியிலிருந்தவர் வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரம் படைத்தவர் குட்டப்பட்டார் என்ற வார்த்தை நம் இருதயங்களைக் கிழிக்கிறதாக இல்லையா? சாதாரணமாக முள் குத்துகிறது அல்லது குத்திவிட்டது என்று தான் நாம் கூறுவது வழக்கம். இங்கே அவ்விதமாக குறிப்பிடாமல் குட்டும் சாத்தானுடைய தூதன் எனக்குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்விதமாக இயேசுவும் கொடூரமாக அடிக்கப்பட்டார் பவுலும் கொடூரமாக அடிக்கப்பட்டார் பவுலுக்கு சரீரத்திலும் கூட சில பிரச்சனைகள் அதாவது தீடீரென்று தாக்கக் கூடிய நரம்பு சம்பந்தமான வியாதி இருந்ததாக வேத ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். இதுவும் முள் போல குட்டக்கூடியதாக இருந்திருக்கும் எனக் கூறப்படுகிறது. இவ்வாறாக தொடர்ச்சியாகக் குட்டப்பட்டுக் கொண்டேயிருந்த பவுல் சோர்ந்து போய்விட்டாரா? இல்லை.

அடுத்த வசனத்தில் அவன் கர்த்தரிடத்தில் வேண்டிக்கொண்டான் என வாசிக்கிறோம். "அது என்னைவிட்டு நீங்கும்படிக்கு, நான் மூன்றுதரம் கர்த்தரிடத்தில் வேண்டிக் கொண்டேன்" (2கொரி.12:8). என எழுதப்பட்டுள்ளது. நமதாண்டவராகிய இயேசுவும் மூன்று முறை ஜெபித்தார் என வாசிக்கிறோம். இயேசு கிறிஸ்து தாம் படப்போகிறபாடுகளினிமித்தம் துக்கமடையவும் வியாகுலப்படவும் தொடங்கினார்.



'அப்பொழுது, அவர்: என் ஆத்துமா மரணத்துக்கேதுவான துக்கங்கொண்டிருக்கிறது; நீங்கள் இங்கே தங்கி, என்னோடேகூட விழித்திருங்கள் என்று சொல்லி சற்று அப்புறம்போய், முகங்குப்புறவிழுந்து என் பிதாவே, இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கக்கூடுமானால் நீங்கும்படி செய்யும்; ஆகிலும் என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்று ஜெபம்பண்ணினார்.... அவர் மறுபடியும் **இரண்டாம் தரம் போய்:** என்பிதாவே, இந்தப் பாத்திரத்தில் நான் பானம்பண்ணினாலொழிய இது என்னைவிட்டு நீங்கக்கூடாதாகில், உம்முடைய சித்தத்தின்படி ஆகக்கடவது என்று ஜெபம்பண்ணினார்.... அவர் மறுபடியும் அவர்களை விட்டுப்போய் **மூன்றாந்தரமும்** அந்த வார்த்தைகளையே சொல்லி ஜெம்பண்ணினார்" (மத்.26:39-44) என வாசிக்கிறோம். இயேசுவைப் போலவே பவுலும் தனக்குக் கொடுக்கப்பட்ட முள் நீங்கும்படி கர்த்தரிடத்தில் மூன்றுதரம் வேண்டிக்கொண்டான். இருவரும் ஜெபித்தபடி அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட பாடுகளும் முள்ளும் அவர்களை விட்டு நீங்கினதா? இல்லை!

நமக்கும் நம்முடைய வாழ்வில் பாடுகளும் முள்ளும் கொடுக்கப்பட்டிருக்கலாம் நாமும் பலமுறை நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் முள் நீங்கும்படி ஜெபித்திருப்போம். எத்தனை வருடங்கள் ஜெபித்தாலும் தொடர்ச்சியாக நம்மை குட்டிக்கொண்டேயிருக்கும் சாத்தானுடைய தூதனாகிய அந்த முள் நம்மைவிட்டு நீங்குவதில்லை. ஆனாலும் "...நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடவதுமில்லை என்று அவர் சொல்லியிருக்கிறாரே (எபி.13:5). நாம் தைரியம் கொண்டு திடமனதாயிருப்போம்.

பவுலுக்குக் கர்த்தர் கொடுத்த பதில், "அதற்கு அவர்: என்கிருபை உனக்குப்போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும் என்றார்" (2கொரி.12:9). ஆம், நமக்கும் இதுவே பதில். கர்த்தருடைய கிருபை நமக்குப் போதும்; பலவீனத்திலே அவருடைய பலம் பூரணமாய் விளங்கும். இயேசு கிறிஸ்துவை நினைத்துக்கொள்வோம். அவரும் பிதாவை நோக்கி, தமக்குக் கொடுக்கப்பட்ட பாத்திரம் நீங்கும்படி ஜெபித்தபோது தேவதூதன் தோன்றி அவரை பலப்படுத்தினான் "அப்பொழுது வானத்திலிருந்து ஒரு தூதன் தோன்றி, அவரைப் பலப்படுத்தினான்" (லூக்.22:43) என வசிக்கிறோம். பாருங்கள், இந்த வசனங்களும், நிகழ்வுகளும் நம்மை எவ்வளவாய் ஆறுதல்படுத்துகிறது! "ஆகையால், கிறிஸ்துவின் வல்லமை என்மேல் தங்கும்படி, என் பலவீனங்களைக்குறித்து நான் மிகவும் சந்தோஷமாய் மேன்மைபாராட்டுவேன்" (2கொரி.12:9) என்று பவுல் கூறுவது போல நாமும் கூறுவோம்.

நம்முடைய பலவீனங்கள், வேதனைகள், தொடர்ச்சியான துக்கங்களாகிய முள் நம்மை குட்டும் சாத்தானுடைய தூதர்கள் என நினைத்து, கிறிஸ்துவின் வல்லமை நம்மேல் தங்கும்படி ஜெபிப்போம். நம்முடைய மேன்மையைக் குறித்து நம்மை உயர்த்தாதபடிக்கு நம் பலவீனங்களைக் குறித்தே மேன்மைபாராட்டுவோம். "அவரோடேகூட (இயேசுவோடுகூட) பாடுகளைச் சகித்தோமானால் அவரோடேகூட ஆளுகையும் செய்வோம்;...." (2தீமோ.2:12). இயேசுவையும் வேதாகமத்தில்

குறிப்பிட்டப்பட்டுள்ள அவருடைய சீஷர்களையும் நமக்கு மாதிரிகளாகக் கொள்ளுவோம். "ஆதலால் இக்காலத்துப்பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்லவென்று எண்ணுகிறேன்" (ரோம.8:18). தேவன் தாமே நம்மை பலப்படுத்துவாராக! ஆமென்!

### கேள்விகள்

1. பவுலுக்கு மாம்சத்தில் கொடுக்கப்பட்ட முள் என்னவாயிருந்தது?
2. அழிவுக்கு முன்னானதும் விழுதலுக்கு முன்னானதும் எவைகள்?
3. பவுல் தனக்குக் கொடுக்கப்பட்ட முள் நீங்கும்படி எத்தனை முறை வேண்டிக் கொண்டான்?
4. இயேசு தமக்குக் கொடுக்கப்பட்ட பாத்திரம் தம்மை விட்டு நீங்கும்படிசெய்யும் என்று சொல்லி எத்தனை முறை ஜெபம்பண்ணினார்?
5. வானத்திலிருந்து ஒரு தூதன் தோன்றி யாரை பெலப்படுத்தினான்?



# அழிவை நோக்கி ....
# Towards Destruction

**29**

**அ**ன்பு சகோதரிகளே, இன்றைய உலகம் அழிவை நோக்கிச் செல்கிறது என்பதை எப்போதாவது சிந்தித்ததுண்டா? புறஜாதியார் கூறுகின்றனர் இது 'கழியுக காலம்' என்று நாமோ இது 'கடைசி காலம்' என்கிறோம். ஆம், உண்மையிலும் உண்மை இது கடைசி காலமே! செய்தித்தாளை புரட்டினால் அங்கே சில அழிவின் சம்பவங்கள், வானொலி செய்திக்குச் செவிமடுத்தோமானால் அங்கே சில நாசச் செய்திகள், தொலைக்காட்சிப் பெட்டியின் செய்தி நேரத்திற்குக் கவனத்தைத் திருப்பினால் அங்கேயும் சில கோரச்சம்பவங்கள். இப்படி மனிதருக்கு விரோதமாக மனிதனின் செயல்பாடுகள், இயற்கைச் சீற்றங்கள், பாவத்தின் விளைவால் வரும் அழிவுகள் என அழிவுகள் அதிகரித்துக்கொண்டே செல்கிறது.

வேதாகமும் கடைசிக்காலச் சம்பவங்கள் குறித்து அழகாய் விவரித்துள்ளது. எது எப்படியிருப்பினும், நோவாகாலத்தில் வாழ்ந்து வந்த மனுஷரைப் போலவே இன்றும் மனுஷன் நிர்விசாரமாகவே வாழ்கிறான். அன்பு சகோதரிகளே, நாம் எப்படி? அழிவின் பாதையில் அகந்தையாய் நடக்கிறோமா? அல்லது ஜீவனுக்குப் போகும் பாதையில் பொறுமையாய் நடந்து கொண்டிருக்கிறோமா?

நீதிமொழிகள் 16:18 கூறுகிறது, "அழிவுக்கு முன்னானது அகந்தை". சகோதரிகளாகிய நாம் இங்கு சற்று நின்று நிதானிக்க வேண்டியது அவசியம். நம்மில் ஏதேனும் அகந்தையான எண்ணம் உள்ளதா? நம்முடைய சுகபோக வாழ்வு, நம்முடைய பிள்ளைகளின் பராக்கிரமம், நம்முடைய செல்வம், சமுதாயத்தில் நம்முடைய செழுமை, இன்னும் வேறெதைக் குறித்தாவது நமக்குள் பெருமையான, அகந்தையான எண்ணமுண்டா? நம்முடைய மனமேட்டிமை நம்மை விழச்செய்யும் என வேதம் கூறுகிறது (நீதி.16:18).

மேலும் "மனமேட்டிமையுள்ளவனெவனும் கர்த்தருக்கு அருவருப்பானவன்...." (நீதி.16:5) எனவும் வேதம் கூறுகிறது. இவையெல்லாம் எனக்குள் இல்லை என்கிறீர்களா? நல்லது. அப்படியென்றால் நீங்கள் எப்போதாவது உன் சகோதரியைக் குறித்தோ, அல்லது தோழியைக் குறித்தோ அல்லது உடனிருப்பவரைக் குறித்தோ அற்பமாக எண்ணியிருக்கிறாயா? இன்றைய உலகில் பெருமை தலைவிரித்தாடுவதோடு, மற்றவர்களை அற்பமாக எண்ணி அலட்சியம் செய்து மனமுடையச் செய்வதும் அதிகமாகக் காணப்படுகிறது. உண்மையில் இவர்களெல்லாரும் அழிவை நோக்கிச் செல்பவரே! "இந்தச் சிறியரில் ஒருவனையும் அற்பமாய் எண்ணாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; அவர்களுக்குரிய

தேவதூதர்கள் பரலோகத்திலே என் பரமபிதாவின் சமூகத்தை எப்போதும் தரிசிக்கிறார்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" (மத்.18:10) என இயேசு சொல்கிறார். இதை வாசிக்கும் அன்பு சகோதரியே, உன்னை நீயே நிதானித்து அறிந்து கொள். இப்பேர்பட்ட குணமெல்லாம், அழிவை நோக்கிச் செல்லுகின்ற உலகத்தாரின் குணம். நீங்கள் உண்மையாகவே கிறிஸ்துவுக்குள்ளிருப்பீர்களென்றால், "...... ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள்" (பிலி.2:3). பெருமையுள்ளவர்களுக்குத் தேவன் எதிர்த்து நிற்கிறார்(1பேது5:5).

மேற்கூறியவை இருக்கப்பட்டவர்களின் மன நிலை; ஆனால் இல்லாதவர் மனநிலையோ அதிலும் மேலானதாயுள்ளது. ஆம், நவநாகரீக உலகம் ஏழ்மையில் இருப்பவர்களையும் நிம்மதியாக இருக்கவிடுவதில்லை. இப்பேர்பட்டவர்கள் தங்களின் இயலாமையை மறந்து, உள்ளவைகள் போதுமென்றிருக்கக் கடவோம் என்ற சத்தியத்தின் சத்தத்திற்குச் செவிமடுக்காமல் ஐசுவரியவான்களாக விரும்புகிறார்கள். இவர்களைப் பார்த்து வேதம், "ஐசுவரியவான்களாக விரும்புகிறவர்கள் சோதனையிலும் கண்ணியிலும், மனுஷரைக் கேட்டிலும் அழிவிலும் அமிழ்த்துகிற மதிகேடும் சேதமுமான பலவித இச்சைகளிலும் விழுகிறார்கள்"(1தீமோ.6:7) என்கிறது. மனுஷரைக் கேட்டிலும் அழிவிலும் அமிழ்த்துகிற மதிகெட்ட பலவித இச்சைகளிலும் விழச்செய்கிறது. காரணம் ஐசுவரியவானாக வேண்டும் என்ற விருப்பம்.

நேற்றுவரை என்னோடே படித்தவள், வேலை பார்த்தவள், இன்றோ அடேங்கப்பா எப்பேர்பட்ட செல்வாக்கு, கார், பங்களோ, என அடிக்கிக் கொண்டே போய் மற்றவர்களைப் பார்த்து அழிவை அறுவடை செய்கிறவர்கள் இவர்கள். அன்பு சகோதரியே உலகத்தைப் பாராதே. அது உன்னை உருக்குலையப்பண்ணும். இன்று காண்கின்ற இந்த உலகம் அக்கினிக்கு இரையாகும். அழிந்து போகப்போகிற இவ்வுலகம் உன்னையும் அழித்துவிடும். "உண்ணவும் உடுக்கவும் நமக்கு உண்டாயிருந்தால் அது போதுமென்றிருக்கக் கடவோம்"(1தீமோ.6:8). "உலகத்திலும், உலகத்திலுள்ளவைகளிலும் அன்புகூராதிருங்கள்....."(1யோவா.2:15) ஏனெனில் "உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம்"(யோவா.2:17). ஆம், நாம் காண்கின்ற அனைத்தும் அழிவை நோக்கிச் செல்கிறது. நாம் அதன்பின்னே செல்லலாமா?

சில தினங்களுக்கு முன் செய்தித்தாளின் இலவச இணைப்பில் 'மிரட்டும் தண்ணீர் பஞ்சம்' என்ற தலைப்பின் கீழ் ஓர் செய்தியினை வாசித்தேன். இயற்கையெல்லாம் இறைவனின் கட்டுப்பாட்டில் உள்ளது என்பதை மறந்து அனுதினமும் மனிதன் இயற்கையோடு கடுமையாக போராடி புது புது செய்தியினை வெளியிட்டுக் கொண்டேயிருக்கிறான். "விஞ்ஞானிகள் ஆராய்ச்சியின் அடிப்படையில் இனிவரும் நாட்களில் தண்ணீருக்கு கடும் பஞ்சம் ஏற்படும் என்கின்றனர். இமயலைப்பகுதியில் பனி உருகுவது அதிகமாகிறது. தற்போது ஆண்டுக்கு 10 முதல் 15



மீட்டர் உயரத்துக்குப் பனி உருகுகிறது. அந்த அளவுக்கு பனியின் அளவு அதிகரிப்பதில்லை. இது நீடித்தால் இமயமலை முழுவதுமாக பனி இல்லாத வறண்ட மலையாக மாறிவிடும். தற்போது இமயமலையிலிருந்து உருவாகி ஓடிவரும் நதிகளும் வறண்டு விடும். அதே போல் தென்துருவத்தில் மனிதர் வாழ முடியாத அண்டார்டிகா கண்டத்திலும் பனிமலையின் அளவு குறைந்து சுமார் 3,250 ச.கி.மீ. அளவும் 200 மீட்டர் அளவு ஆழமும் கொண்ட பனி பாறைகள் உடைந்து கடலில் கலந்துள்ளது இதனால் கடல்வாழ் உயிரினங்கள் மற்றும் கடல் வெப்ப நிலை மாறுபட்டு மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் ஆபத்துள்ளது என எச்சரித்துள்ளனர். காரணம் ஓசோன் படலத்தில் ஏற்பட்டுள்ள ஓட்டைதான் என்கின்றனர்". இதை யெல்லாம் அறியும் போது சோதோம் கொமோரா பட்டணங்களைப் பற்றிய நினைவுதான் வருகிறது. ஐயோ! அழியப் போகிறது நம்முடைய ஆஸ்திகள் என நினைத்தாளோ என்னமோ, லோத்தின் மனைவி உலகத்தைத் திரும்பிப் பார்த்து உப்புத்தூண் ஆனாள்.

அன்பு சகோதரிகளே, சற்று சிந்தியுங்கள். நீங்கள் எவைகளைக் குறித்து அகந்தை கொண்டுள்ளீர்களோ, அவைகள் அழிவை நோக்கிச் செல்கின்றன. நீங்கள் எதன் மீது இச்சை கொண்டு ஐசுவரியவானாக விரும்புகிறீர்களோ அவைகள் அழிவை நோக்கிச் செல்கின்றன. தேமா என்பவன் இப்பிரபஞ்சத்தின் மீது ஆசை வைத்து ஆவிக்குரிய நண்பன் பவுலை விட்டு பிரிந்து போனான். இன்றும் அநேகர் இப்பிரபஞ்சத்தின் மீது ஆசை வைத்து அருமையான கர்த்தருக்குப் பிரியமான சகோதர சகோதரிகளின் ஐக்கியத்தை விட்டு பிரிந்து செல்கின்றனர். கிறிஸ்துவுக்குள் மிகப்பிரியமான சகோதரியே, நீயும் இவ்வாறு இருப்பாயானால் சந்தேகமேயில்லை நீ அழிவை நோக்கிச் செல்கிறாய்!

இயேசு, "வானமும் பூமியும் ஒழிந்துபோம் என் வார்த்தைகளோ ஒழிந்து போகாது" என்றார். ஆம், அழிந்து போகிற இந்த உலகத்திற்கு ஒத்த வேஷந்தரியாதிருங்கள். உங்களுடைய நடை, உங்களுடைய உடை, உங்களுடைய நடக்கைகள் எல்லாம் 1தீமோ.2:9-10-ல் கூறப்பட்டுள்ளபடி "........தகுதியான வஸ்திரத்தினாலும், நாணத்தினாலும், தெளிந்த புத்தியினாலும், தேவபக்தியுள்ளவர் களென்று சொல்லிக் கொள்ளுகிற ஸ்திரீகளுக்கு ஏற்றபடியே நற்கிரியைகளினாலும், தங்களை அலங்கரிக்கவேண்டும்" என்பதற்கேற்ப அமைவதாக!

அழிவை நோக்கி செல்வதும், ஜீவனை நோக்கிச் செல்வதும் உங்கள் சாய்ஸ். இதோ மரண வழியையும் ஜீவ வழியையும் கர்த்தர் உங்கள் முன் வைக்கிறார். இடுக்கமான வாசல் வழியாய் உட்பிரவேசியுங்கள்; கேட்டுக்குப் (அழிவுக்கு) போகிற வாசல் விரிவும், வழி விசாலமுமாயிருக்கிறது......ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது....." வானமும் பூமியும் அக்கினிக்கு 'இரையாக வைக்கப்பட்டுள்ளது.

இன்னும் காலம் கடத்தாதீர். இன்றே இரட்சண்ய நாள், அழிவை நோக்கிச்

செல்லும் அன்பு சகோதரியே, சற்றே உன் பாதையை மாற்றி ஜீவனுக்குள் பிரவேசிக்க முற்படு. என்றென்றும் ஒழிந்து போகாத வேத வசனத்தைக் கேட்டு, விசுவாசித்து, இயேசுவை அறிக்கையிட்டு, ஞானஸ்நானம் பெற்றுக்கொள் அப்பொழுது இரட்சிக்கப்படுவாய். நித்திய ஜீவனை அடையும் சிலாக்கியத்தையும் பெறுவாய். கர்த்தர் தாமே உன்னை தம்மிடமாய் இழுத்துக் கொள்வாராக!

### கேள்விகள்

1. கர்த்தருக்கு அருவருப்பானவன் யார்?
2. ஒருவரையொருவர் தங்களிலும் எப்படிப்பட்டவர்களாக எண்ணவேண்டும்?
3. ஐசுவரியவான்களாக விரும்புகிறவர்கள் எதில் விழுகிறார்கள்?
4. எவைகளிலெல்லாம் அன்புகூராதிருங்கள் என வேதம் கூறுகிறது?
5. வானமும் பூமியும் ஒழிந்துபோம் எவைகளோ ஒழிந்துபோகாது?



## கசந்த மாரா மதுரமாகும்
## Bitterness Will Become Sweetness

**30**

இப்புத்தாண்டு மதுரமான ஆண்டாக இருக்க வாழ்த்துகிறேன். அநேக ஸ்திரீகள் தங்கள் வாழ்க்கையில் ஏற்பட்ட கசப்பான நிகழ்வுகளைக் குறித்து அதிகமதிகமாக சிந்தித்து தங்கள் வாழ்க்கையையே கசப்பாக்கிக் கொள்கின்றனர். உங்களுக்கும் கூட கடந்த ஆண்டில் பல கசப்பான அநுபவங்கள் ஏற்பட்டிருக்கலாம். நடந்தது கடந்ததாக இருக்கட்டும். இங்கே தன் வாழ்க்கையில் தனக்கு நேரிட்ட கசப்பினை மதுரமாக்கிக் கொண்ட அந்நிய தேசத்து, அதாவது தேவனை அறியாத மோவாப் தேசத்துப் பெண்ணாகிய ரூத் என்பவளிடமிருந்து நாம் சில பாடங்களைக் கற்றுக்கொள்வோம்.

இவள் தன் கணவனை இழந்த பெண்மணி இவளுடைய மாமி நகோமியும் கணவனை இழந்தவளாய் கசப்பான அநுபவத்தினூடே வாழ்ந்தவள். இவள் கூறும்போது, "...நீங்கள் என்னை நகோமி என்று சொல்லாமல், மாராள் என்று சொல்லுங்கள்; சர்வவல்லவர் எனக்கு மிகுந்த கசப்பைக் கட்டளையிட்டார்" (ரூத் 1:20) என்று சொன்னாள். இப்பேர்பட்ட கசப்பான சூழ்நிலையில் ரூத்தின் தீர்மானத்தைப் பாருங்கள். தன் மாமியைப் பற்றிக் கொண்டாள் என வாசிக்கிறோம். "...ரூத்தோ அவளை (நாகோயை) விடாமல் பற்றிக்கொண்டாள்" (ரூத் 1:14). அதற்கு நகோமி இதோ உன் சகோதரி தன் ஜனத்தினிடத்திற்கும் தன் தேவர்களிடத்திற்கும் திரும்பிப்போய்விட்டாள் நீயும் திரும்பிப் போ என்றாள். "அதற்கு ரூத் நான் உம்மைப் பின்பற்றால் உம்மைவிட்டுத் திரும்பிப் போவதைக் குறித்து என்னோடே பேச வேண்டாம்; நீ போகும் இடத்திற்கு நானும் வருவேன்; நீர் தங்கும் இடத்திலே நானும் தங்குவேன்; உம்முடைய ஜனம் என்னுடைய ஜனம்; உம்முடைய தேவன் என்னுடைய தேவன்..." (ரூத் 1:16) என்றாள்.

ஒவ்வொரு புத்தாண்டு தினத்தன்றும் கிறிஸ்தவ சகோதரிகள்கூட பல தீர்மானங்களை தேவ சமூகத்தில் எடுப்பார்கள். நாம் அதைச் செய்யவேண்டும், அப்படியிருக்க வேண்டும் என பல பல தீர்மானங்களையும் திட்டங்களையும் வகுப்பர். ஆனால் ஆண்டின் முடிவில் தீர்மானங்கள் அனைத்தும் நிறைவேற்றப்பட்டனவா என்றால், அது கேள்விக்குறியாக காணப்படும்.

அநேக ஸ்திரீகள் தங்களது திருமணத்திற்கு முன்பு பல தெய்வங்களை வழிபட்டவர்களாயிருந்து திருமணத்திற்குப்பின் ஜீவனுள்ள மெய்யான தேவனை அறிந்து கொண்டிருப்பார்கள். அதைப்போலவே இந்த ரூத்தும் பல தெய்வங்களை வழிபட்டவளாயிருந்த போதும், தன் வாழ்க்கை கசந்து விட்ட போதும், "உம்முடைய ஜனம் என்னுடைய ஜனம் உம்முடைய தேவன் என்னுடைய தேவன் என்று உறுதியுடன் கூறுகிறாள். நாமும் ஜீவனுள்ள மெய்யான தேவனைக் கண்டுகொண்டால் அதன் பின் என்ன கஷ்டம் வந்தாலும், அவரையே பற்றிக்கொண்டு

அவருடைய ஜனமே நம்முடைய ஜனம் என்று உறுதியுடனிருக்க வேண்டும். இதைவிட்டு, விட்டு என் ஜனம், ஜாதியை எல்லாம் விட்டு விடமுடியுமா என்போமானால், மிகவும் பரிதபிக்கக் கூடியவர்களாய் மாறுவோம். நாம் ஒரு விசை ஒப்புவிக்கப்பட்ட விசுவாசத்தில், அதாவது இயேசுவை தேவனுடைய குமாரன் என்று விசுவாசித்து அறிக்கையிட்ட பின் அதில் உறுதியாக இருக்கவேண்டும்.

மேலும் இந்த ரூத்தின் மன உறுதியைக் குறித்து தியானிப்போம் ரூத் 1:17,18ல் "...மரணமேயல்லாமல் வேறொன்றும் உம்மை விட்டு என்னைப் பிரித்தால், கர்த்தர் அதற்குச் சரியாகவும் அதற்கு அதிகமாகவும் எனக்குச் செய்யக்கடவர் என்றாள்" என வாசிக்கிறோம். இப்படிப்பட்ட வாக்குறுதிகளை கிறிஸ்தவ திருமணங்களில் மணவாளனும் மணவாட்டியும் மரணம் நம்மைப் பிரிக்கும் வரை துன்பத்திலும் இன்பத்திலும், சுகத்திலும் சுகவீனத்திலும் பிரியாதிருப்போம் என்று தேவசமூகத்தில் வாக்களிப்பார்கள். ரூத் மேலும் சொல்லுகிறாள் உம்மை விட்டு வேறொன்றும் என்னைப் பிரித்தால் கர்த்தர் அதற்குச் சரியாகவும் அதிகமாகவும் எனக்குச் செய்யக்கடவர், அதாவது என்னைத் தண்டிக்கக்க கடவர் என்று சொன்னாள்.

நம்மில் எத்தனை பேர் கிறிஸ்துவோடு இதற்கும் மேலான அன்புடன் எது வந்தபோதிலும் அவருடைய பிரசன்னத்தை விட்டு பிரியாமல் இணைக்கப்பட்டவர் களாய் மன உறுதியுனிருக்கத் தீர்மானிக்கிறோம்? கிறிஸ்துவை விட்டு எவ்வித சக்தியும் நம்மைப் பிரிக்காதிருக்க ஜாக்கிரதையாய் இருக்கவேண்டும். இதைக் குறித்து பவுல் சொல்லும்போது "கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப் பிரிப்பவன் யார்?... மரணமானலும், ஜீவனானாலும் ... உயர்வானாலும் தாழ்வானாலும் வேறெந்தச் சிருஷ்டியானலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பை விட்டு நம்மைப் பரிக்கமாட்டாதென்று நிச்சயிருத்திருக்கிறேன்" (ரோம.8:36-39) என்றார். நாமும் இப்பேர்பட்ட மனஉறுதியைக் கொண்டிருப்போம். கிறிஸ்துவின் ஆவியானவர் நம்மோடிருப்பாரானால் கசப்பும் மதுரமாகும்.

வேதம் சொல்லுகிறது கிரியையில்லாத விசுவாசம் செத்தது என்று. ரூத் மோவாப் தேசத்தைவிட்டுப் புறப்பட்ட போது தம் மாமியைப் பார்த்து உம்மை விட்டு பிரியமாட்டேன் உம் ஜனம் என் ஜனம் உம்முடைய தேவன் என் தேவன் என்று கூறினாள். அதைப்போலவே பெத்தலகேமிற்கு வந்த பின்பு நகோமியின் ஜனத்தோடு வாழ ஆரம்பித்தாள். இதைக் குறித்து போவாஸ் என்பவன், ".... உன் புருஷன் மரண மடைந்த பின்பு, நீ உன் மாமியாருக்குச் செய்ததும், நீ உன் தகப்பனையும் உன் தாயையும், உன் ஜந்மதேசத்தையும் விட்டு முன்னே நீ அறியாத ஜனங்களிடத்தில் வந்ததும் எல்லாம் எனக்கு விவரமாய்த் தெரிவிக்கப்பட்டது" (ரூத் 2:11) என்றான். ரூத்தின் இந்த செய்கை நமக்கெல்லாம் ஒரு மாதிரி என்றுதான் கூறவேண்டும். யாராவது தன் தாய், தகப்பன், ஜெந்ம தேசம் போன்றவற்றை விட்டு போவார்களா? ஆபிரகாமை தேவன் இவ்விதமாகவே போகச் சொன்னார். ஆபிரகாமோடு கூட அவன் மனைவி சாராளும் தங்கள் இனம், ஜனம் தேசத்தை விட்டு சென்றார்கள். ஆசீர்வதிக்கப்பட்டார்கள். விசுவாசிகளின் பெற்றோர் என அழைக்கப்பட்டார்கள். இவ்விதமாகவே ரூத்தும் ஆசீர்வதிக்கப்பட்டாள். கசப்பு மதுரமானது!



ரூத்தின் தாழ்மையைப் பார்ப்போம். ரூத்தைக் குறித்து போவாஸ், "உன் செய்கைக்குத் தக்க பலனைக் கர்த்தர் உனக்குக் கட்டளையிடுவாராக; இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருடைய செட்டைகளின்கீழ் அடைக்கலமாய் வந்த உனக்கு அவராலே நிறைவான பலன் கிடைப்பதாக என்றான் அதற்கு அவள்: என் ஆண்டவனே, உம்முடைய கண்களில் எனக்குத் தயை கிடைக்கவேண்டும்; நான் உம்முடைய வேலைக்காரிகளில் ஒருத்திக்கும் சமானமாயிராவிட்டாலும்..." (ரூத்.2:13) என்றாள். தன்னை வேலைக்காரிகளிலும் கீழானவள் என்று தாழ்த்துகிறாள். இதனால் போவாஸின் கண்களில் இவளுக்கு தயை கிடைத்தது. அவனுடைய அப்பமும் அவனுடைய வயலில் கோதுமைக் கதிர்களைப் பொறுக்கிக் கொள்ளும் அனுமதியும் கிடைத்தது. வயலில் தனக்குக் கிடைத்த அப்பத்தைப் புசித்து மீதமுள்ளதை தன் மாமிக்கும் எடுத்துச் சென்றாள்.

ரூத்தினிடத்தில் காணப்பட்ட தாழ்மை நம்மிடத்திலும் காணப்பட்டால் தேவனுடைய கண்களில் நமக்கும் தயை கிடைக்கும். இயேசுவினிடத்தில் தன் மகள் பிசாசின் பிடியிலிருந்து சுகம்பெற வேண்டுமென்று வந்த கானானிய ஸ்திரீ கூட தன்னை நாய்க்குட்டிகளுக்குச் சமமாக்கி/ இயேசுவின் பாரட்டுதலையும் மகளுக்கு சுகத்தையும் பெற்றுக்கொண்டாள் (மத்.15:22-28). இவ்விதமாய் தன்னை தாழ்த்திய போது " இயேசு அவளுக்குப் பிரதியுத்தரமாக ஸ்திரீயே, உன் விசுவாசம் பெரிது; நீ விரும்புகிறபடி உனக்கு ஆகக்கடவது என்றார். அந்நேரமே அவள் மகள் ஆரோக்கியமானாள்" என்று மத்தேயு 15:28ல் வாசிக்கிறோம். நாமும் இவ்விதமாக நம்மைத் தாழ்த்துவோம். தேவ ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளுவோம். பெருமையுள்ளவர்களுக்குத் தேவன் எதிர்த்து நிற்கிறார்.

மேலும் இவள் ஒரு குணசாலியான பெண் என்று போவாஸ் ரூத்தைப் பாராட்கிறான். ரூத்3:10,11ல் "அதற்கு அவன்: மகளே, நீ கர்த்தரால் ஆசீர்வதிக்கப்படுவாயாக; நீ தரித்திரரும் ஐசுவரியவான்களுமான வாலிபர்களின் பிறகே போகாததினால், உன் முந்தின நற்குணத்தைப் பார்க்கிலும் உன் பிந்தின நற்குணம் உத்தமமாயிருக்கிறது. இப்போதும் மகளே, ...நீ குணசாலி என்பதை என் ஜனமாகிய ஊராரெல்லாரும் அறிவார்கள்" என்றான். என்ன அருமையான சாட்சி இது! இளம் விதவைகளைக் குறித்து வேதம் தெளிவாகக் கூறுகிறது. நாமும் அநேகரை சமுதாயத்தில் பார்த்திருக்கலாம். ரூத்தைக் குறித்து போவாஸ் கூறும்போது வாலிபர்களுக்குப் பிறகே போகாததினால், உன் முந்தின நற்குணத்தைப் பார்க்கிலும் பிந்தின நற்குணம் உத்தமம் என்கிறான். அப்படியானால் அவள் தான் இளம் விதவையாயிருந்த போதும் பாவஞ்செய்யாதவளாக தன் உத்தமத்தைக் காத்து நடந்திருக்கிறாள் என்று பொருள். இந்த நற்குணம் நம்முடைய இளம் சகோதரிகளுக்கு நற்போதனையாக இருக்கட்டும்!

மோவாபிய ஸ்திரீயாகிய இந்த ரூத்தின் தீர்மானம், மனஉறுதி, மாமியின் மேலிருந்த அன்பு, தேவனையும் தேவனுடைய ஜனத்தையும் தனதாக்கிக் கொண்ட வைராக்கியம், தாழ்மை, நற்குணம் ஒரு மாபெரும் ஆசீர்வாதத்தைக் கொண்டுவந்தது. இவளுடைய கசந்த மாரா மதுரமானது. போவாஸ் இவளைத்

திருமணம் செய்தான். இவள் ஓபேத் பெற்றாள். ஓபேத் தாவீதின் தகப்பன் ஈசாயைப் பெற்றான். இயேசு இந்த வம்சத்தின் வழியாக மாம்சத்தில் பிறந்தார். உலகத்தை மீட்கும் இரட்சகர் இயேசு கிறிஸ்துவின் வம்ச வரலாற்றில் இவள் பேர் பட்டியலிடப்பட்டுள்ளது (மத்.1:1,5-6) என்பது மதுரமான செய்தி அல்லவா! இவளுடைய குணாதிசயங்கள் நமக்குப் பாடமாக இருக்கட்டும். இஸ்ரவேல் வீட்டைக் கட்டுவித்த இரண்டுபேராகிய ராகேலைப் போலவும், லேயாளைப் போலவும், ரூத்தை வாழ்ந்திருக்கப்பண்ணினார் (ரூத் 4:1) கர்த்தர் நம்மையும் ஆசீர்வதிப்பாராக! நம் வாழ்வின் கசப்பை மதுரமாக்குவாராக!

## கேள்விகள்

1. சர்வவல்லவர் எனக்கு மிகுந்த கசப்பைக் கட்டளையிட்டார் என்றவள் யார்?
2. உம்முடைய தேவன் என்னுடைய தேவன் என்று உறுதியுடன் சொன்னவள் யார்?
3. தன்னை நாய்க்குட்டிகளுக்குச் சமமாக்கி தன் மகளுக்கு சுகத்தை பெற்றுக் கொண்ட ஸ்திரீ யார்?
4. குணசாலியான பெண் என்று யார் யாரைப் பாராட்டினான்?
5. தாவீதின் தகப்பன் ஈசாயைப் பெற்றவன் யார்?



# மனைவி
# Wife
# 31

அன்பான சகோதரிகளே, தேவன் ஏற்படுத்திய முதல் குடும்பத்தில் ஆதாமுக்கு ஏற்றதுணையாக உருவாக்கப்பட்டவள் ஏவாள். மனைவி என்ற அந்தஸ்தைப் பெற்ற முதல் பெண்மணி ஆதாமின் மனைவி. ஆதாம் தன் மனைவிக்கு ஏவாள் என்று பேரிட்டாள் (ஆதி.22:20). மனைவி என்ற அந்தஸ்தைப் பெற்றவள் எப்படியிருக்க வேண்டுமென்பதை வேதாகமத்தின் உதவியுடன் பார்க்கலாம்.

⏩ **ஏற்றதுணையாகயிருக்கவேண்டும்.** ஏனெனில் கர்த்தர் ஏற்ற துணையை அவனுக்கு (ஆதாமுக்கு) உண்டாக்குவேன் என்றார் (ஆதி.2:18). தேவனால் உண்டாக்கப்பட்ட ஒரு அழகான கிரியை இவள். ஜீவனுள்ளோருக் கெல்லாம் தாயானவள் என அழைக்கப்பட்டாள் (ஆதி.3:20).

⏩ **ஏற்றதுணையாகயிருந்தாளா?** இல்லை. தான் கீழ்ப்படியாமல் போனதுமில்லாமல் தன் புருஷனையும் விழச்செய்தாள். தேவனுடைய கட்டளையை மீறி பாவஞ்செய்யத் துணிந்தாள். காரணம் என்ன? இச்சை தான். ஸ்திரீகள் இச்சைகளினால் இழுக்கப்பட்டுப் போவார்கள் என்பதை பிசாசு நன்கு அறிந்தவனாயிருக்கிறான். ''அப்பொழுது ஸ்திரீயானவள், அந்த விருட்சம் (தேவன் விலக்கியது) புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும், புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்க விருட்சமாய் இருக்கிறது என்று கண்டு, அதின் கனியைப் பறித்து, புசித்து, தன் புருஷனுக்கும் கொடுத்தாள். அவனும் புசித்தான்'' (ஆதி.3:6). பூமி சபிக்கப்படகாரணமானாள் (ஆதி.3:17). அதைப்போல லோத்தின் மனைவி சாபத்திற்குள்ளானாள் (ஆதி.19:26). காரணமென்ன இவள் தேவன் தனக்குக் கொடுத்திருந்த தன் புருஷனைப் பின்தொடரவில்லை. தன் புருஷனும் தன் பிள்ளைகளும் தேவதூதரின் கட்டளைக்கு இணங்கித் திரும்பிப் பார்க்காமல் ஓடினார்கள், பிழைத்துக்கொண்டார்கள். இவளோ தன் புருஷனையும் பின்தொடரவில்லை, தேவதூதரின் எச்சரிப்பினையும் பின்பற்றவில்லை. திரும்பிப் பார்த்து உப்புத்தூண் ஆனாள். இது இன்றுவரை நமக்குத்திருஷ்டாந்தமாக இருக்கிறது.

⏩ **மனைவியானவள் கீழ்ப்படிதலுள்ளவளாக இருக்கவேண்டுமென்பது** தேவனுடைய விருப்பமாயிருக்கிறது. ''அந்தப்படியே சாராள் ஆபிரகாமை ஆண்டவன் என்று சொல்லி, அவனுக்குக் கீழ்ப்படிந்திருந்தாள்...'' (1பேது.3:6). இவ்வாறு நடக்கவேண்டியது மனைவியானவளுக்கு மிக மிக அவசியம். ''அப்பொழுது திருவசனத்திற்குக் கீழ்ப்படியாத புருஷர்களிருந்தால், பயபக்தியோடுகூடிய மனைவியின் கற்புள்ள நடக்கையை அவர்கள் பார்த்து போதனையின்றி, மனைவியின் நடக்கையினாலேயே ஆதாயப்படுத்திக் கொள்ளப்படுவார்கள்.'' (1 பேது.3:1) சில மனைவிமார்கள் தங்களுடைய புருஷனை ஆண்டவனாக அதாவது

தன்னை ஆள்பவராக எண்ணுவதில்லை. தன் புருஷனைக்காட்டிலும் தாங்கள் அதிகம் படித்தவராகவோ, அறிவில் மேற்பட்டவராகவோ, அதிவிசுவாசியாகவோ, தங்களை நினைத்து அநேக குடும்பங்களில் தன் புருஷனை அற்பமாக எண்ணுகிற மனைவிமார்கள் உண்டு. புருஷனானவர் எப்படிப்பட்டவராக இருந்தாலும் அவர் தேவனால் நமக்குக் கொடுக்கப்பட்டவர். அவருக்குக் கீழ்ப்படிந்து இருக்க வேண்டும். பயபக்தியுடன் கூடிய கற்புள்ள நடக்கையினால் அவரை ஆதாயப்படுத்திக்கொள்ள வேண்டும். அந்தப்படியே சாராளும் தன் கணவனை ஆண்டவனே என்று சொல்லி அவனுக்குக் கீழ்ப்படிந்திருந்தாள். "மனைவிகளே, கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறதுபோல உங்கள் சொந்த புருஷருக்குங் கீழ்ப்படியுங்கள்" (எபே.5:22) என்ற வசனத்திற்கேற்ப நாம் நடந்துகொள்ளுவோம்.

▶▶ **மனைவிக்குத் தலையாயிருப்பவர் யார்?** புருஷன். ஆம், புருஷருடைய இவ்வதிகாரத்தை மனைவிமார்கள் தங்கள் கைகளில் எடுத்துக்கொள்ளுகிறார்கள். அதனால் இன்றைய நாட்களில் பிரச்சனைகளும், பிரிவினைகளும் வருகிறது. பவுல் தீமோத்தேயுக்கு எழுதும்போது; "உபதேசம்பண்ணவும், புருஷன்மேல் அதிகாரஞ்செலுத்தவும் ஸ்திரீயானவளுக்கு நான் உத்தரவு கொடுக்கிறதில்லை..." என்றெழுதுகிறார் (1தீமோ.2:12). ஏனெனில் ஆதாம் (புருஷன்) முதலாவது உண்டாக்கப்பட்டான். நாம் நம்முடைய குடும்பத்தில் எவ்வாறு இருக்கிறோம்? யோபுவின் மனைவி யோபுக்கு உபதேசம்பண்ணி தேவனை துஷித்து ஜீவனை விடு என்றாளே, அவ்விதமாக இருக்கிறோமா? (யோபு 2:9-10). அநேக குடும்பங்களில் மனைவியானவள் தன் புருஷனுக்குக் கட்டளையிடுகிறவளாக இருக்கிறதை நான் பார்த்திருக்கிறேன். இதற்கும் மேலாக தன் புருஷனை தகாத வார்த்தைகளால் திட்டுகிறதையும், வைகிறதையும் கேட்டிருக்கிறேன். கிறிஸ்தவ மனைவிமார்கள்கூட இவ்விதமாக நடந்துகொள்கிறார்கள். 'அம்மா சொல்லுகிறபடிதான் அய்யா இருப்பார்' என்ற நிலைகூட உருவாகிவிடுகிறது. அன்பு சகோதரியே தேவன் இதை விரும்புகிறதில்லை ஏனென்றால் தேவன் புருஷனை ஸ்திரீக்கு (மனைவிக்கு) தலையாக சிருஷ்டித்துள்ளார். "ஒவ்வொரு புருஷனுக்கும் கிறிஸ்து தலையாயிருக்கிறாரென்றும் **ஸ்திரீக்கு புருஷன் தலையாயிருக்கிறானென்றும்,** கிறிஸ்துவுக்கு தேவன் தலையாயிருக்கிறாரென்றும் நீங்கள் அறியவேண்டுமென்று விரும்புகிறேன்" (கொரி.11:3) என வேதம் கூறுகிறது. மேலும் "புருஷன் ஸ்திரீக்காக சிருஷ்டிக்கப்பட்டவன் அல்ல ஸ்திரீயே புருஷனுக்காகச் சிருஷ்டிக்கப்பட்டவள்" (1கொரி.11:9) என்ற வசனத்தையும் மறவாதிருப்போம்.

▶▶ **மனைவியைக் கண்டடைகிறவன் நன்மையானதைக் கண்டடைகிறான்.** கர்த்தரால் தயையும் பெற்றுக்கொள்ளுகிறான் (நீதி.18:22). ரோம.16:3-ல் ஆக்கில்லாவோடு இணைந்து ஏற்ற துணையாக செயல்பட்ட பிரிஸ்கில்லாளைப்போல செயல்படுங்கள். பிரிஸ்கில்லாள் ஒரு அருமையான மனைவியாக ஏற்ற துணையாக ஆக்கில்லாவோடு ரம்மியமாக வாழ்ந்து வந்த ஒரு ஸ்திரீயாவாள். இவளைக்குறித்து வேத ஆராய்ச்சியாளர்கள் பல விதங்களில் மேன்மையாக குறிப்பிடுகின்றனர். இவள் எப்போதும் தன் புருஷனோடு ஒன்றிணைந்து கிறிஸ்துவை தமக்கு முன்பாக வைத்தவள் என்றும், ஊழியத்திலும் தன் புருஷனோடு ஒருமித்த இருதயம் உடையவளாய் இருந்தவள் என்றும், இருவரும்



ஒரே மாம்சமாயிருந்தார்கள் என்றும் கூறிப்பிடுகின்றனர். வேதாகமத்திலும் கூட ஆறு முறைகள் ஆக்கில்லா - பிரிஸ்கில்லாள் மற்றும் பிரிஸ்கில்லாள் - ஆக்கில்லா என்றும் இருவரையும் இணைத்தே குறிப்பிடப்பட்டுள்ளதை அப்.18:2; 18:18; 18:26; ரோம.16:3; 1கொரி.16:19 மற்றும் 2தீமோ.4:19 ஆகிய வசனங்களிலும் பார்க்க முடிகிறது. இது எவ்வளவு அருமையான உறவு! நம்முடைய உறவு எப்பேர்ப்பட்டதாயிருக்கிறது என்பதை சிந்தித்துப்பார்ப்போம். "ஆகையால் சபையானது கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிறதுபோல மனைவிகளும் தங்கள் சொந்த புருஷருக்கு எந்தக்காரியத்திலேயும் கீழ்ப்படிந்திருக்க வேண்டும்" என்ற வசனத்தின்படி நாமும் கிரியை நடப்பிப்போம்.

▶▶ **மனைவியானவளுக்கு இன்னொரு மாபெரும் பொறுப்பும் உண்டு** அதாவது நம்முடைய பிள்ளைகளை கர்த்தருக்கு ஏற்றவிதத்தில் வளர்க்கவேண்டியதும் நம்முடைய கடமைதான். நம்முடைய நடக்கைகள் நம்முடைய பிள்ளைகளுக்கு நல் மாதிரியாக இருக்கவேண்டும். ஒருவேளை நீங்கள் உங்கள் பிள்ளைகளைப் பற்றி எவ்வித அக்கறையும் இல்லாமல், அவர்களுக்கு உலக சம்பத்துக்கள் அனைத்தையும் கொடுத்து அவர்கள் இஷ்டம்போல் நடக்க அனுமதிப்பீர்களென்றால், முடிவில் மிக மிக வேதனைப்படவேண்டிய சூழல் ஏற்படும் என்பதை மறந்துபோகவேண்டாம். வேதம் "பிரம்பும் கடிந்துகொள்ளுதலும் ஞானத்தைக்கொடுக்கும்; தன் இஷ்டத்திற்கு விடப்பட்ட பிள்ளையோ தன் தாய்க்கு வெட்கத்தை உண்டுபண்ணுகிறான்" (நீதி.29:15) என்று சொல்லுகிறது. நீங்கள் எவ்வளவு தான் சொத்து சுகங்களை சம்பாதித்து வைத்திருந்தாலும் அவர்களைக் கர்த்தருக்கு ஏற்றவிதத்தில் வளர்க்கவில்லையென்றால் தாய்க்குத்தான் வெட்கத்தை உண்டுபண்ணுவார்கள். தகப்பனுக்கு என்று இங்கே குறிப்பிடவில்லை என்பதைக் காணும்போது பிள்ளைகளை கர்த்தருக்குள் வளர்க்கவேண்டிய பொறுப்பு மனைவியைச் சார்ந்துள்ளது என்பதை நாம் புரிந்துகொள்ளுகிறோம். நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம் என்பர். மனைவி அல்லது புருஷனுக்கு ஏற்ற துணையாக சிருஷ்டிக்கப்பட்டுள்ள நாம் "குணசாலியான ஸ்திரீ தன் புருஷனுக்குக் கிரீடமாக இருக்கிறாள்" நீதி.12:4 என்பதைப்போலவும் "அவள் பிள்ளைகள் எழும்பி அவளைப் பாக்கியவதி என்கிறார்கள்" நீதி.31:28 என்பதைப்போலவும் நடந்து நம் குடும்பத்தை நல்லதொரு பல்கலைக்கழகமாக மாற்றுவோம். குடும்பமாக கர்த்தரை மகிமைப்படுத்துவோம். ஆமென்.

## கேள்விகள்

1. யார் ஜீவனுள்ளோருக்கெல்லாம் தாயானவள் என அழைக்கப்பட்டாள்?
2. சாராள் ஆபிரகாமை என்ன சொல்லி, அவனுக்குக் கீழ்ப்படிந்திருந்தாள்?
3. ஸ்திரீக்குத் தலையாய் இருப்பவர் யார்?
4. மனைவியைக் கண்டடைகிறவன் எதை கண்டடைகிறான்?
5. மனைவிகள் யாருக்குக் கீழ்ப்படிகிறதுபோல தங்கள் சொந்த புருஷருக்கு எந்தக் காரியத்திலேயும் கீழ்ப்படிந்திருக்க வேண்டும்?

# அன்றும் இன்றும்
# Yesterday and Today

**32**

**கி**றிஸ்துவுக்குள் அன்பான சகோதரிகளே வாழ்க! ஒருவர் இன்னொருவரை மனதார வாழ்த்தும் போது அது மிகுந்த மனமகிழ்ச்சியைக் கொடுக்கும். பொதுவாக ஜனங்கள் தங்கள் தங்கள் விசேஷநாட்களில் ஒருவரை ஒருவர் வாழ்த்திக் கொள்வர். ஆனால் அவர்களெல்லோரும் தங்கள் மனங்குளிர வாழ்த்துகிறார்களா என்பது கேள்விக்குறியே! காரணம் உண்மையான அன்பு அவர்களிடம் காணப்படுவதில்லை. சிலர், தங்கள் வாயினால் ஆசீர்வதித்து தங்கள் உள்ளத்தில் சபிக்கிறவர்களாயிருக் கிறார்கள். பரிசுத்த வேதாகமம் இவ்வாறான மாய்மாலமான காரியத்தை விரும்புவதில்லை. மாறாக "ஆசீர்வதிக்க வேண்டியதேயல்லாமல் சபியாதிருங்கள்" என்ற கிறிஸ்துவின் வசனத்தைத் தாங்கியே இருக்கிறது. வாழ்க! வாழ்க! என்று வாழ்த்தினவர்களின் பட்டியலில் இதோ...

* **தேவதூதனின் வாழ்த்து:** "...கிருபை பெற்றவளே, வாழ்க, கர்த்தர் உன்னுடனே இருக்கிறார், ஸ்திரீகளுக்குள்ளே நீ ஆசீர்வதிக்கப்பட்டவள் என்றான்" காபிரியேல் என்னும் தேவதூதன் (லூக்.1:28) என்ன அருமையான வார்த்தை இது! 'வாழ்க' என்ற ஒரே ஒரு வார்த்தை மரியாளுக்கு தேவகிருபையைக் கொண்டு வந்தது. அன்று வந்த அந்த கிருபையினாலே இன்று நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம். கிருபாசனத்தண்டை சேரும் சிலாக்கியம் பெற்றிருக்கிறோம். அந்த கிருபாசனத்தண்டைக்கு வந்து சேரும்படி இன்று மற்றவர்களை வாழ்க என வாழ்த்தி வரவழைப்போமா?

* **மரியாளின் வாழ்த்து:** தேவதூதனால் ஆசீர்வதிக்கப்பட்ட மரியாள், "...எலிசபெத்தை வாழ்த்தினாள்" (லூக்.1:41). இந்த வாழ்த்துதல் எலிசபெத்துக்கு மனமகிழ்ச்சியைக் கொண்டு வந்ததா? ஆம், அவளுடைய வயிற்றிலிருந்த பிள்ளை கூட துள்ளுமளவிற்கு மரியாளின் வாழ்த்துதல் ஆசீர்வாதத்தைக் கொண்டுவந்தது. அதுமாத்திரமல்ல, "...எலிசபெத்து பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு, உரத்த சத்தமாய்: ஸ்திரீகளுக்குள்ளே நீ ஆசீர்வதிக்கப்பட்டவள்..." என்று மரியாளை நோக்கி கூறி, மேலும், "விசுவாசித்தவளே பாக்கியவதி, கர்த்தராலே அவளுக்குச் சொல்லப்பட்டவைகள் நிறைவேறும் என்றாள்" (லூக்.1:42-45). பாருங்கள், ஒருவருக்கொருவர் மனதார வாழ்த்தியிருக்கிறார்கள். ஸ்திரீகளாகிய அவர்களிடையே ஸ்திரீகளுக்கேயுரிய பொறாமை குணம் காணப்படவில்லை. 'அன்புக்குப் பொறாமையில்லை' (1கொரி.13:4). எனவே அன்று வாழ்த்துதல் சொல்லுவதில் முந்திக்கொண்டாள் மரியாள். இன்று நாம் எப்படியிருக்கிறோம்? சிந்திப்போம்!

* **இயேசுவின் வாழ்த்து:** "...இயேசு தாமே அவர்களுக்கு எதிர்ப்பட்டு: வாழ்க என்றார்..." (மத்.28:9). வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரம் படைத்த ராஜாதி ராஜா தம்மைத் தேடி வந்த ஸ்திரீகளுக்கு வாழ்த்துக் கூறியிருக்கிறாரென்றால் நாம் எம்மாத்திரம்! என்பதை சிந்தித்துப் பார்க்கவேண்டியவர்களாயிருக்கிறோம். ஆம், இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுகிற சகோதரிகளாகிய நாம் நம்மைச் சுற்றியிருக்கிற கிறிஸ்துவுக்குள்ளான நம்முடைய சகோதரிகளை மனங்குளிர, கள்ளங்கமில்லா இதயத்துடன் வாழ்த்த வேண்டியது தேவனுடைய சித்தமாயிருக்கிறது. ஆனால் அநேக நேரங்களில் சபை அங்கங்களாகிய நம்முடைய சகோதரிகளை நாம் மனதார வாழ்த்துவது கிடையாது. காரணம், நமக்குள் வாசஞ்செய்கின்ற பல்வேறு பாவங்கள். இன்னும் சில நேரங்களில் மற்றவர்கள் மேலுள்ள ஆசீர்வாதங்களைக் கண்டு பொறமைப்பட்டு வாழ்த்துதல் சொல்லுவதில்லை. வருகிற நாட்களிலாவது நம்முடைய சுயத்தை சுட்டெரித்துவிட்டு இயேசுவின் சுபாவத்தைப் பற்றிக்கொண்டு வாழ்த்துவோமா?

* **சீஷர்களின் வாழ்த்து:** இயேசுவின் பின்னே சென்ற சீஷர்கள் இயேசுவின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்திருந்தார்கள். இயேசு சீஷர்களை ஊழியத்திற்கு அனுப்பினபோது அவர்களை நோக்கி: "ஒரு வீட்டில் பிரவேசிக்கிறபோது இந்த வீட்டுக்குச் சமாதானம் உண்டாவதாகவென்று முதலாவது சொல்லுங்கள்" (லூக்.10:5) என்று சொல்லி அனுப்பினார். கிறிஸ்துவுக்குள்ளான நாம் எங்கு சென்றாலும் மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாகவே இருக்கவேண்டும். அன்று ஒரு அடிமைப் பெண்ணின் மூலம் சீரிய தேசத்திற்கு இரட்சிப்புவந்தது. கர்த்தரை தெய்வமாகக் கொண்டிருந்த அந்த அடிமைப் பெண் தன் எஜமானின் குஷ்டம் நீங்க வழியைக் காண்பித்தாள். அவள் தன் எஜமாட்டியைப் பார்த்து தன் எஜமான், எலிசா தீர்க்கதரிசியினிடத்திற்குப் போனால் அவனுடைய குஷ்டரோகத்தை தீர்க்கதரிசி நீக்கிவிடுவார் என்று (2இராஜா.5:3) கூறினாள்.

தன் அடிமைத்தனத்தை நினைத்து பயந்து கொண்டிருக்கவில்லை. கர்த்தருக்கு நேராக நாகமானை வழிநடத்தி அதனிமித்தம் சீரியாவுக்கு இரட்சிப்பு வரக்காரணமானாள். நாகமானின் குஷ்டரோகம் நீங்கி அவன் "...உமது அடியேன் கர்த்தருக்கே அல்லாமல், அந்நிய தேவர்களுக்குச் சர்வாங்க தகனத்தையும் பலியையும் செலுத்துவதில்லை" (2இரா.5:17) என்றான். அன்று அந்த அடிமைப்பெண் நாகமானின் வீட்டிற்கு சமாதானத்தைக் கொண்டு சென்றாள். இன்று நாம் எப்படியிருக்கிறோம்? சிந்திப்போம். இயேசுவின் கட்டளையை நிறைவேற்றுவோம். பிறர் வாழ வாழ்த்துவோம்.

## கேள்விகள்

1. தேவதூதன் மரியாளை எவ்வாறு வாழ்த்தினான்?
2. மரியாள் எலிசபெத்தை வாழ்த்தியபோது என்ன நடந்தது?
3. எலிசபெத் மரியாளை எவ்வாறு வாழ்த்தினாள்?
4. இயேசுதாமே யாருக்கு எதிர்பாட்டு வாழ்க என்றார்?
5. இயேசு சீஷர்களை ஊழியத்திற்கு அனுப்பியபோது அவர்களை என்ன சொல்லி அனுப்பினார்?

# என் பிரியமே, உன்னில் பழுதொன்றுமில்லை
# My Darling, There is No Flow in You

**33**

**அ**ன்பு சகோதரியே, மணவாளன் தன் மணவாட்டியின் அழகை (உள்ளான அழகை) புகழ்ந்து கூறுவதே மேற்குறிப்பிடப்பட்ட தலைப்பு. இப்படி ஒரு கணவன் தன் மனைவியை நோக்கி: "என் பிரியமே, நீ பூரண ரூபவதி; உன்னில் பழுதொன்றுமில்லை" உன்.4:7 என்று கூறும் போது அந்த மனைவிக்கு எத்தனை மகிழ்ச்சியாயிருக்கும்! திருமணமான புதிதில் என் பிரியமே, "என் சகோதரியே! என் மணவாளியே! நீ அடைக்கப்பட்ட தோட்டமும், மறைவு கட்டப்பட்ட நீரூற்றும், முத்தரிக்கப்பட்ட கிணறுமாயிருக்கிறாய்" உன்.4:12 என்று கூறும் கணவன்மார்கள் நாளடைவில் 'என் பிசாசே' என்று கூறினால் அந்தமனைவிக்கு எத்தனை வேதனையாயிருக்கும் இன்று அநேக மனைவிமார்கள் இவ்விதமாகவே வேதனைப்படுவதாக எங்களுக்குத் தெரியப்படுத்தி ஜெபிக்கக் கேட்டுக் கொள்ளுகின்றனர்.

சமீபத்தில் ஒரு நாள் ஓரிடத்தில் சகோதரிகள் மத்தியில் கர்த்தருடைய வார்த்தைகளைக் குறித்துப் பேசிக்கொண்டிருந்தேன் சகோதரிகள் மிக ஆர்வத்துடன் கேட்டுக் கொண்டிருந்தார்கள். சிலர் கண்ணீருடன் கவனித்துக்கொண்டிருந்தனர். கூட்டம் முடிந்தபின் அநேக சகோதரிகள் தங்களுடைய வேதனைகளையும், குடும்பத்தில் படும் கஷ்டங்களையும் கூறி கண்ணீர்வடித்து ஜெபிக்கும்படி கேட்டுக்கொண்டார்கள். உண்மையாகவே கர்த்தர் ஏவாளை நோக்கி கூறினபடி "...உன் ஆசை (ஸ்திரீயினுடைய) உன் புருஷனைப் பற்றியிருக்கும்.." (ஆதி.3:16). இப்படியாக மனைவியினுடைய ஆசை புருஷனைப் பற்றியிருக்கும்போது புருஷனுடைய கடுஞ்சொற்களையோ, கடுமையான நடத்துதலையோ மனைவியினால் தாங்கிக் கொள்ளமுடிவதில்லை. ஏனென்றால் "...மனைவியானவள் பெலவீன பாண்டமாயிருக்கிறபடியினால்.." (1பேது.3:7) மிகவும் சிறிய சிட்சையைக் கூட தாங்கிக் கொள்ளமுடியாமல் தங்களையே வாழ்நாளெல்லாம் வருத்திக்கொண்டே காலத்தைக் கழிக்கின்றனர். அன்பு சகோதரியே; நாம் ஏன் நம்மை நாமே வருத்திக் கொள்ளவேண்டும்? நம் அருமை சகோதரி மரியாள் நமக்கு மாதிரியல்லவா! "தேவையானது ஒன்றே, மரியாள் தன்னை விட்டெடுபடாத நல்ல பங்கைத் தெரிந்துகொண்டாள் (லூக்.10:42). ஆம், நாம் நம் இயேசு ராஜாவை விட்டு விலகாத நல்ல பங்கை தெரிந்துகொண்டால் மார்த்தாளைப்போல அநேகக் காரியங்களைக் குறித்துக் கவலைப்பட்டு கலங்க வேண்டியதில்லை. இச்செய்தியினைக் கூறுவது எளிது, செயல்படுத்துவது கடினம் என நீங்கள் நினைக்கலாம். ஆம், நாம் அனைவருமே பெலவீனபாண்டங்கள் தானே, நான் மட்டும் என்ன விதிவிலக்கா?

ஆனால், ஒன்று சொல்வேன், நாம் கர்த்தருடைய பாதத்தில் அமரும் பழக்கத்தை ஏற்படுத்திக்கொண்டால் எல்லாமே நமக்கு எளிதாகி விடும். தேவாதி தேவன் அவருடைய சமூகத்தில் நாம் அதிக நேரம் செலவு செய்யும்போது தம்முடைய



வசனங்கள், இன்னும் ஆவிக்குரிய பாடங்கள் மூலம் நமக்கு போதித்து நினைப்பூட்டி நம்மை சரிசெய்வார், ஆறுதல்படுத்துவார், நாசியில் சுவாசமுள்ள யாவரையும் நாம் நம்பி கலங்க வேண்டியதில்லை. எல்லாம் மாயை. இதை எழுதிக் கொண்டிருக்கிற எனக்கு ஒருபாடல் ஞாபகத்திற்கு வருகிறது.

**"மனிதர்கள் அன்பு மாறலாம்**
**மனதார தீங்கும் பேசலாம்**
**அன்பு காணா இதயமே**
**அன்பர் இயேசுவை அண்டிக்கொள்**
**கலங்கும் கர்த்தர் உண்டல்லோ**
**கவலை ஏன்? கலக்கம் ஏன்?**
**கர்த்தர் இயேசு அழைக்கிறார்**
**எண்ணி எண்ணி உள்ளம் நொந்து**
**அணைக்க இயேசு துடிக்கிறார்"**

இப்பேர்ப்பட்ட மணவாளன் நமக்கிருக்க புல்லைப்போல் ஒழிந்துபோகவிருக்கும் இந்த கொஞ்சகால வாழ்வின் சோதனையை மேற்கொள்ள நம்மால் முடியாதா? ஆவிக்குரிய மணவாளனாகிய நம் இயேசு கிறிஸ்து நம்மை நோக்கி 'என் பிரியமே , நீ பூரணவதி; உன்னில் பழுதொன்றுமில்லை' என அழைத்தால் போதும். நியாயத்தீர்ப்பின் நாள் நமக்கு நல்லநாளாக அமைய வேண்டும். அந்நாளில் நாம் குற்றமற்றவர்களாக நியாயாசனத்திற்கு முன் நிற்க வேண்டும். ஏனென்றால் சத்தியபரராகிய இயேசு நம்மை சத்தியத்தின்படியே நியாயந்தீர்ப்பார்.

சத்தியம், சத்தியம் சத்தியத்தையே கடைப்பிடிக்கிறோம் என்று கூறிக் கொண்டு கிரியையில்லாதிருப்போமானால் மிகவும் பரிதபிக்கப்படுவோம். "அப்படியே, ஆவியில்லாத சரீரம் செத்ததாயிருக்கிறதுபோல, கிரியைகளில்லாத விசுவாசமும் செத்ததாயிருக்கிறது" என்று யாக்கோபு தனது நிருபத்தில் (யாக்.2:26) எழுதியிருக்கிறதை நாம் அறிவோம். கிறிஸ்தவ ஸ்திரீகளாகிய நம்மை உலக ஜனங்கள் மட்டுமல்ல, சத்தியத்தைக் கைக்கொள்ளுகிறோம், சத்தியத்தையே போதிக்கிறோம் என்கிறவர்களும்கூட நம் குடும்பங்களில் எப்பொழுது, குழப்பம் வரும், எப்போது நம்முடைய விசுவாசக்கப்பல் உடையும் என ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்களெல்லாம் கொசுயில்லாதபடி வடிகட்டி ஒட்டகத்தை விழுங்குகிறவர்களாயிருக்கிறார்கள். எனவே, இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினாலே கிரயத்துக்குக் கொள்ளப்பட்டவர்களாகிய நாம் கர்த்தருக்கு முன்பாக மன உண்மையுள்ளவர்களாகவும், நம் ஆவி, ஆத்மா, சரீரத்தில் குற்றமற்றவர்களாகவும் நம்மைக் காத்துக்கொள்ள ஜாக்கிரதையாயிருப்போம். எந்த நிலைமையிலிருந்தாலும் மனரம்மியமாயிருக்க கற்றுக் கொள்வோம்.

கடைசியாக, சகோதரிகளே, உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ, நீதியுள்ளவைகளெவைகளோ, நற்கீர்த்தி

யுள்ளவைகளெவைகளோ, புண்ணிம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளையே சிந்தித்துக்கொண்டிருப்போம். நிச்சயமாகவே ஆவிக்குரிய நம் மணவாளனாகி இயேசு கிறிஸ்து "என் பிரியமே, ... உன்னில் பழுதொன்றுமில்லை" என்று சொல்லி, "நித்திய விவாகத்துக்கென்று உன்னை எனக்கு நியமித்துக் கொள்வேன்; நீதியும் நியாயமும் கிருபையும் உருக்க இரக்கமுமாய் உன்னை எனக்கு நியமித்துக்கொள்ளுவேன். உண்மையாய் உன்னை எனக்கு நியமித்துக் கொள்ளுவேன்; நீ கர்த்தரை அறிந்துகொள்ளுவாய்" (ஓசி.2:19,20) என்று சொல்லி நியாயத்தீர்ப்பின் நாளிலே நம்மை மகிழ்விப்பார்.

"சிறுமையானவர்கள் கர்த்தருக்குள் மிகவும் மகிழ்ந்து, மனுஷரில் எளிமையானவர்கள் இஸ்ரவேலின் பரிசுத்தருக்குள் களிகூருவார்கள்" (ஏசா.29:19). தேவன் தாமே சிறுமையும் எளிமையுமான நம்மை ஸ்திரப்படுத்தி வழிநடத்துவாராக!

## கேள்விகள்

1. ஸ்திரீயினுடைய ஆசை யாரைப்பற்றியிருக்கும்?
2. மனைவியானவள் எப்பேர்பட்ட பாண்டமாயிருக்கிறாள்?
3. கிரியைகள் இல்லாத விசுவாசமும் எப்படிப்பட்டதாயிருக்கிறது?
4. "என் பிரியமே, உன்னில் பழுதொன்றுமில்லை" என்று வேதாகமத்தில் எங்கே குறிப்பிடப்பட்டுள்ளது?
5. சிறுமையானவர்கள் கர்த்தருக்குள் மிகவும் மகிழ்ந்து மனுஷரில் எளிமை யானவர்கள் என்ன செய்வார்கள்?



# நீ சிறியதாயிருந்தாலும்
# Though You be Little...

**34**

இயேசு கிறிஸ்து பெத்லகேம் என்னும் ஒரு சிறிய ஊரில் பிறந்தாரென நாம் அனைவரும் அறிவோம். அந்த பெத்லகேமைப் பார்த்து தான் இந்தத் தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டது, "எப்பிராத்தா என்னப்பட்ட பெத்லகேமே, நீ யூதேயாவிலுள்ள ஆயிரங்களுக்குள்ளே சிறிதாயிருந்தும், இஸ்ரவேலை ஆளப்போகிறவர் உன்னிடத்திலிருந்து புறப்பட்டு என்னிடத்தில் வருவார்; அவருடைய புறப்படுதல் அநாதிநாட்களாகிய பூர்வத்தினுடையது" (மீகா.5:2). மேலும் மத்தேயு2:6-லும் கூட, "யூதேயா தேசத்திலுள்ள பெத்லகேமே, யூதாவின் பிரபுக்களில் நீ சிறியதல்ல; என் ஜனமாகிய இஸ்ரவேலை ஆளும் பிரபு உன்னிடத்திலிருந்து புறப்படுவார் என்று, தீர்க்கதரிசியினால் எழுதப்பட்டிருக்கிறது" என்று வாசிக்கிறோம். அன்பு சகோதரிகளே, இவ்வசனத்திலிருந்து நாம் ஒரு பாடத்தைக் கற்றுக்கொள்ளப்போகிறோம்.

யூதேயாவிலுள்ள ஆயிரம் பட்டணங்களுக்குள்ளே சிறியதாக எண்ணப்பட்டிருந்த பெத்லகேம் என்னப்பட்ட ஊரில் தான் உலகத்தையே இரட்சிக்கவந்தவரும், தன்னைத் தான் தாழ்த்துகிறவர்களை உயர்த்த வந்தவருமான இயேசு கிறிஸ்து மானிடராய் பிறந்தார். இஸ்ரவேலை ஆளுகிறவராய் புறப்பட்டு இன்று வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரம் படைத்தவராய் உலகத்தையே ஆளுகிறவராய் இருக்கிறார். மிகவும் சிறியதாக எண்ணப்பட்ட அந்த இடத்தில் இயேசு பிறந்தார். இந்த பிறப்பு அநாதிநாட்களாகிய பூர்வத்தினுடையது.

அன்பு சகோதரியே நீங்கள் சிறியவராகவும், எல்லாராலும் ஏளனமாகவும் எண்ணப்பட்டுக் கொண்டிருக்கலாம், ஆனால் இயேசு உங்களிலே பிறக்கும்படிக்கு இயேசுவுக்கு நீங்கள் வேண்டும். தங்களை அழகுள்ளவர்கள் என்றும், பட்டதாரிகள் என்றும், பட்டணவாசிகள் என்றும், செல்வந்தர் என்றும், சகல ஆசீர்வாதங்களையும் கொண்டிருப்பவர் என்றும், அழகாய் ஜெபிப்பவர், நேர்த்தியாய் தேவவார்த்தைகளை வியாக்கியானம் செய்பவர், அனைத்தும் அறிந்தவர், சிறந்த பேச்சாளர், சாதுரியவான், ஞானி என்றெல்லாம் நினைத்து உங்களை சிறியவர் என்று எண்ணி எள்ளி நகையாடிக்கொண்டிருக்கிற ஆயிரம் ஜனங்கள் மத்தியிலே தேவன் உங்களை நேசிக்கிறார். ஆனபடியினாலே, "தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்" (யோவா.3:16) என வாசிக்கிறோம்..

தேவன் கொண்ட அன்பினிமித்தமாகவே தம்முடைய ஒரே பேறான குமாரன் இயேசு உலக இரட்சகராக பிறந்து, முன்னணையிலே **(Manger)** அதாவது கால்நடைகள் தங்கும் இடத்தில் தாழ்மை கோலம் பூண்டவராய் கிடத்தப்பட்டிருந்தார். பாவங்களின் மிகுதியால் ஆவி, ஆத்துமா, சரீரம் போன்றவற்றில் அசுத்தமாக

அருவருப்பாக துர்நாற்றம் வீசும் ஜீவியத்திலிருந்து நம்மை விடுவித்து பாவமற கழுவி சுத்திகரிக்கும்படி இயேசு பிறந்தார். அன்பு சகோதரியே, இயேசு கிடத்தப்பட்டிருந்த அந்த முன்னணையைக் குறித்து எப்போதாவது சிந்தித்தது உண்டா? இயேசுவின் பிறப்பாகிய இந்த நற்செய்தியை அறிவிக்க ஒருவேளை நீங்கள் அழகிய நறுமணம் வீசும் நாகரீகமான இடத்தையே நாடிச் செல்லுகிறீர்களா, அல்லது அற்பமாக எண்ணப்பட்ட இடத்தில் ஊழியஞ்செய்யும் உங்கள் சகோதரிகளைக் குறித்து சிறியவராய் எண்ணுகிறீர்களா?

இதை வாசிக்கிற அன்பு சகோதரியே, நீங்கள் அழிந்து போகக்கூடிய இவ்வுலகில் நாகரிகத்தின் உச்சியில் இருந்தால், "இந்தச் சிறியரில் ஒருவனையும் அற்பமாய் எண்ணாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; அவர்களுக்குரிய தேவதூதர்கள் பரலோகத்திலே என் பரமபிதாவின் சமூகத்தை எப்போதும் தரிசிக்கிறார்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" (மத்.18:10) என்று கூறும் இயேசுவின் சத்தத்திற்குச் செவிசாயுங்கள் அல்லது சிறுமையாக, எல்லோராலும் ஏளனமாக நடத்தப்பட்டு வேதனையோடே நாட்களைக் கழிப்பீர்களானால், இதோ வேதம் கூறுகிறது, "அவர் சிறியவனைப் புழுதியிலிருந்து எடுத்து, எளியவனைக் குப்பையிலிருந்து உயர்த்துகிறார்; அவர்களைப் பிரபுக்களோடே உட்காரவும், மகிமையுள்ள சிங்காசனத்தைச் சுதந்தரிக்கவும் பண்ணுகிறார்.." (1சாமு.2:8) என்ற வேதவாக்கியம் உங்களைத் தேற்றக்கூடியதாய் இருக்கிறது.

அன்றைய நாளில் அன்னாள் என்ற ஒரு ஸ்திரீ வாழ்ந்து வந்தாள். "கர்த்தர் அவளுடைய கர்ப்பத்தை அடைத்தபடியினால், அவளுடைய சக்களத்தி அவள் துக்கப்படும்படியாக அவளை மிகவும் விசனப்படுத்துவாள்" (1சாமு.1:6) அவள் மனங்கசந்து, மிகவும் அழுது, கர்த்தருடைய சந்நிதியில் தன் இருதயத்தை ஊற்றி ஜெபித்தாள். கர்த்தர் அவளுடைய விண்ணப்பத்திற்குச் செவிசாய்த்து அவள் ஒரு குமாரனைப் பெற்றெடுக்க அநுக்கிரகம் பண்ணினார். அவன்தான் கர்த்தருடைய பெரிய வேலையைச் செய்த சாமுவேல் தீர்க்கதரிசி! அன்பு சகோதரியே, நீங்கள் ஏதோ ஒரு சூழ்நிலையில் சிறியவராகவும், ஏளனமாகவும் நடத்தப்பட்டு மிகவும் விசனப்பட்டுக் கொண்டிருக்கலாம். அற்பமாக கருதப்படுகிற உங்களை தேவன் நேசிக்கிறார். பலவீனமாயிருக்கிற உங்களை பலமுள்ளவராகிய தேவன் நேசிக்கிறார்.

பலமுள்ளவைகளை வெட்கப்படுத்தும்படி பலவீனமான உங்களைத் தெரிந்து கொண்டார். ஞானிகளை வெட்கப்படுத்தும்படி ஞானத்தில் குறைவுள்ளவர்களான பைத்தியமானவர்களைப்போல் கருதப்படும் உங்களைத் தேவன் தெரிந்து கொண்டார். "உள்ளவைகளை அவமாக்கும்படி, உலகத்தின் இழிவானவை களையும், அற்பமாய் எண்ணப்பட்டவைகளையும், இல்லாதவைகளையும், தேவன் தெரிந்துகொண்டார்" (1கொரி.1:28) என வாசிக்கிறோம். கர்த்தருக்குள்ளான சகோதரிகளே, கர்த்தரை மகிமைப்படுத்துங்கள், கர்த்தரை அறிவியுங்கள்.

சீரியா தேசத்திற்கு ஒரு இஸ்ரவேல் பெண் அடிமையாகக் கொண்டு போகப்பட்டாள். அங்கு நாகமான் என்ற படைத்தலைவன் வீட்டில் வேலைக்காரியாக பணிவிடை செய்து கொண்டுவந்தாள். அந்த வேலைக்காரியின் மூலம் அந்நாட்டிற்கே



இரட்சிப்பு வந்தது. இச்சம்பவத்தினை 2இராஜாக்கள் 5-ம் அதிகாரத்தில் வாசிக்கிறோம். இஸ்ரவேல்தேசத்திலிருந்து சிறைக் கைதியாக பிடித்துக் கொண்டு போகப்பட்ட இந்த சிறுபெண் தன் அடிமைத்தனத்தையோ, சிறையிருப்பையோ எண்ணி தன்னைதானே வேதனைக்குள்ளாக்கிக் கொள்ளவில்லை. தன் எஜமானியின் கீழ் அவள் அடங்கி இருந்தாள் என்பது நமக்குத் தெரியாது, ஆனால் அவளோ தன் அடிமைத்தனத்தையும் எண்ணாது கர்த்தருடைய வல்லமையைப் பிரசித்தப்படுத்துகிறாள்.

சகோதரிகளே, நீங்கள் உங்களுடைய சிறுமையை எண்ணி வருந்தாமல் கர்த்தரை நினைத்து அவரை மகிமைப்படுத்துங்கள். கர்த்தராகிய இயேசு தம்முடைய சிலுவையின் மரணபரியந்தம் தம்மைத்தாமே தாழ்த்தினார் (பிலி.2:8), அவர் அசட்டை பண்ணப்பட்டவரும், மனுஷரால் புறக்கணிக்கப்பட்டவருமாயிருந்தார், அவர் எண்ணப்படாமற்போனார் (ஏசா.53:3). ஆனால் தேவன் அவரை உயர்த்தினார். அவரால் இவ்வுலகிற்கு இரட்சிப்பு வந்தது.

நீங்கள் வசிக்குமிடத்தில், வேலை ஸ்தலத்தில், ஆயிரம் ஜனங்களுக்குள்ளே சிறியவர்களாய் காணப்படலாம். ஆனால் ஆயிரங்களுக்குள்ளே சிறியதாய் காணப்பட்ட பெத்லகேமிலேதான் வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமுடையவர் பிறந்தார். அவராலே உலகத்திற்குப் பாவத்திலிருந்து விடுதலையும், சமாதானமும் உண்டாயிருக்கிறது. நீங்கள் உங்களுடைய சிறுமையை எண்ணி சோர்ந்து போகாமல் உங்கள் மூலம் இயேசு கிறிஸ்து இவ்வுலகிற்கு அறிவிக்கப்பட உங்களை அவருக்கு அர்ப்பணியுங்கள். அவர் உங்களை உயர்த்துவார். அவர் உங்கள் மூலம் மகிமைப்படுவார்.

## கேள்விகள்

1. யூதேயாவிலுள்ள ஆயிரங்களுக்குள்ளே சிறியதாயிருந்த ஊர் எது?
2. தேவன் எவ்வளவாய் அன்புகூர்ந்தார்?
3. கர்த்தர் சிறியவனை புழுதியிலிருந்து எடுத்து யாரை உயர்த்துகிறார்?
4. உள்ளவைகளை அவமாக்கும்படி தேவன் எவைகளைத்தெரிந்துகொண்டார்?
5. கர்த்தராகிய இயேசு தம்முடைய சிலுவையின் மரணபரியந்தம் என்ன செய்தார்?

# *ஒரு சிறிய ஊசியினால்*
# With a Small Needle...

**35**

**சி**று துரும்பும் பல் குத்த உதவும்' என்பது தமிழ் பழமொழி. உண்மைதான்! தங்களிலிருந்த சிறிய காரியங்களைக் கொண்டு பெரிய காரியங்கள் நடைபெற காரணமாயிருந்த அநேக சகோதரிகளை நம்முடைய வேதாகமம் நமக்கு அறிமுகப்படுத்தியுள்ளது. அநேகர் தங்களிடமிருந்த கொஞ்சப் பொருளை தேவ சித்தம் நிறைவேற பயன்படுத்தி பெரிய ஆசீர்வாதங்களைப் பெற்றிருக்கின்றனர். அப்போஸ்தலர்9:36- ஒரு அருமையான சகோதரியை நமக்கு அறிமுகப்படுத்துகிறது. இந்த ஸ்திரீ தன்னுடைய சிறிய ஊசியினால் பெரிய காரியத்தை தேவநாம மகிமைக்காக செய்தவள் என வேத வல்லுநர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். இவள் பெயர் தொற்காள். யோப்பா பட்டணத்தில் வாழ்ந்து வந்த ஒரு சீஷி. இயேசுவுக்கு சீஷிகள் அநேகர் இருந்தனர். தங்களுடைய ஆஸ்திகளால் அவருக்கு ஊழியஞ்செய்து வந்த யோவன்னாள், சூசன்னாள் போன்றவர்களைப் பற்றி நாம் அறிவோம். இவர்களைப் போல இந்த தொற்காள் என்று அர்த்தங்கொள்ளும் தபீத்தாள் சீஷியாக இருந்துகொண்டு இயேசுவின் குணாதிசயங்களை வெளிப்படுத்தி வந்தாள்.

**தபீத்தாள் என்றால் 'Gazelle'** என்று பொருள். இந்த **'Gazelle'** என்ற ஆங்கில வார்த்தைக்கு 'வேகமாக ஓடக்கூடிய **ஒருவகை அராபிய மான்**' என அகராதி விளக்கமளிக்கிறது. நம்மில் அநேகர் மானினுடைய சாந்தமுள்ள கண்கள், மெல்லிய ஒல்லியான கால்கள், அதனுடைய வசீகரமான மற்றும் வேகமான ஓட்டம் போன்றவற்றையெல்லாம் ரசிக்கின்றோம். இந்த அர்த்தமுடைய பெயரை தரித்திருந்த இந்த தபீத்தாள் மான்களுக்குரிய இந்த குணாதிசயங்களில் ஏதேனும் ஒன்றினைப் பெற்றிருந்தாளா? அவளைக் குறித்து வேதம் '...அவள் நற்கிரியைகளையும், தருமங்களையும் மிகுதியாய் செய்துகொண்டு வந்தாள்' எனக் கூறுகிறது (வச.36). இவள் விதவைகளையும் அவர்களுடைய பிள்ளைகளையும் ஆதரித்து அவர்களுக்கு உதவி செய்துகொண்டு வந்திருக்கிறாள்.

அப்படியானால் இவளுக்கு குடும்பமிருந்ததா? இவள் திருமணமானவளா? இவளுக்குப் பிள்ளைகளிருந்தார்களா? இவள் வயது சென்றவளா? இதைப்பற்றி யெல்லாம் வேதம் நமக்குத் தெளிவுபடுத்தவில்லை. ஆனால் இவள் இயற்கையான மரணம் எய்யவில்லை. இவள் வியாதிப்பட்டு மரணமடைந்தாள் என வேதம் கூறுகிறது (வச.37). எனவே அவள் தன் இளம்வயதில் மரித்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது. அவள் மரணமடைந்தபின் அவளுடைய மகிமை வெளிப்படுகிறதை பின்னுள்ள வசனங்களின் மூலம் அறிந்துகொள்ளலாம். "...விதவைகளெல்லாரும் அழுது, தொற்காள் தங்களுடனேகூட இருக்கையில் செய்திருந்த அங்கிகளையும் வஸ்திரங்களையும் காண்பித்து..." (வச.39) என வாசிக்கிறோம். இவளுடைய வாழ்விலிருந்து நாம் என்ன கற்றுக்கொள்ளலாம்?



**1. தொற்காள் தன்னுடைய தாலந்தை தேவனுக்காகப் பயன்படுத்தினாள்:**

தன்னுடைய சிறிய ஊசியினால் அங்கிகளையும், வஸ்திரங்களையும் பின்னி விதவைகளுக்கும் எளியவர்களுக்கும் அவைகளைக் கொடுத்து உதவிசெய்திருக்கிறாள். தன்னைச் சுற்றியிருந்த ஜனங்களுக்கு உதவி செய்திருக்கிறாள். பவுல் கொலோசெயருக்கு, "நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்துவைச் சேவிக்கிறதினாலே, சுதந்தரமாகிய பலனைக் கர்த்தராலே பெறுவீர்களென்று அறிந்து, எதைச் செய்தாலும், அதை மனுஷர்களுக்கென்று செய்யாமல், கர்த்தருக்கென்றே மனப்பூர்வமாய்ச் செய்யுங்கள்" (கொலோ.3:23,24) என்று எழுதினார். இந்த தபீத்தாள் ஒரு சீஷியாக இருந்தாளென நாம் வாசித்தோம். எனவே பவுல் கூறியதைப்போல கிறிஸ்துவுக்கு சீஷியாக இருந்ததினிமித்தம் சுதந்தரமாகிய பலனைக் கர்த்தராலே பெறுவோமென்று அறிந்து கர்த்தருக்கென்றே மனப்பூர்வமாய் செய்திருக்கிறாள்.

ஆம், அன்பான சகோதரிகளே, இவள் ஜீவியம் நமக்கு சிறந்த எடுத்துக்காட்டல்லவா? இயேசுவுக்கு சீஷியாகமாறின நீங்களும் நானும் இந்த சிந்தனையுள்ளவர்களாயிருக்கிறோமா? வரப்போகிற சுதந்தரமாகிய பலனை எண்ணி நன்மைசெய்கிறோமா? இவ்விதமான கேள்வி கேட்டாலே சிலர் சலித்துக்கொள்ளு கின்றனர். எங்கே எனக்கே ஒன்றுமில்லாதிருக்கையில் நான் எப்படி மற்றவர்களுக்கு உதவுவது என்பர். இவள் தன்னிடமிருந்த சிறிய ஊசியைக் கொண்டு தானே இந்த நற்கிரியைச் செய்தாள். அப்படியானால், நாம் நம்மிடமுள்ள சிறிய தாலந்துகளைப் பயன்படுத்தி கர்த்தரை பிரியப்படுத்தக் கூடாதா? அன்பு சகோதரியே, உங்களை நீங்களே வருத்திக்கொள்ளாதீர்கள். தேவன் உலகத்திலுள்ள ஒவ்வொருவருக்கும் சில தாலந்துகளைக் கொடுத்துள்ளார். ஏதோ பெரிய டாக்டராகவோ, எஞ்சினியராகவோ அல்லது பெரிய அந்தஸ்தோடே பணபலமிக்கவராகவோ இருந்தால் தான் மற்றவர்களுக்கு உதவி செய்யமுடியும் என்று சொல்லி உங்களுக்குக் கொடுக்கப்பட்ட தாலந்தைப் புதைத்துப்போட்டு விடாதீர். இருக்கிற சிறிய தாலந்தை எவ்வாறு கர்த்தருக்கென்று பயன்படுத்தலாம் என்று சிந்தித்துப்பாருங்கள். சாறிபாத் என்ற ஊரிலிருந்த ஒரு விதவை தன்னிடமிருந்த கொஞ்சமாவையும் எண்ணெயையும் கர்த்தருக்கென்று பயன்படுத்தினாள். அதனால் பஞ்சகாலமெல்லாம் ஆசீர்வதிக்கப்பட்டாள். கர்த்தருக்கென்று ஒரு காரியத்தைச் செய்யும் போது மிகுந்த பலனைப் பெறுவோம்.

**2. தொற்காள் ஒரு பணிவிடைக்காரி:**

இவள் நற்கிரியைகளையும் தருமங்களையும் மிகுதியாய்ச் செய்து கொண்டு வந்தாள் என வசனம் 36-ல் வாசிக்கிறோம். நற்கிரியைகளையும், தருமங்களையும் சாதாரணமாகச் செய்யவில்லை மிகுதியாய்ச் செய்துகொண்டு வந்தாள் என வாசிக்கிறோம். இங்கே கவனியுங்கள்: அவள் வசூல் செய்து தானதர்மம் பண்ணினாளா? இல்லை. தன் சொந்தக் கைகளினால் வேலை செய்து, அதிலிருந்து

வரக்கூடிய வருமானத்திலிருந்து மிகுதியாய் செய்தாள். உங்களுடைய தானதர்மம் எப்படிப்பட்டது? பவுல், "... கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாயும் இருப்பீர்களாக" (1கொரி.15:56) என்று எழுதுகிறார். கர்த்தருக்குப் பணிவிடைசெய்கிற சகோதரியே, கர்த்தருக்குச் செய்கின்ற கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாக, எச்சூழ்நிலையிலும் சோர்ந்து போகாது செய்கிறீர்களா? இல்லை, நமக்கொரு வெற்றி, நமக்கொரு பெரிய ஆசீர்வாதம், நமக்கொரு உத்தியோகம் கிடைத்தால் மட்டும் கர்த்தரை நினைத்து அவருடைய கிரியைகளில் ஈடுபடுகிறோமா? எல்லாமே எனக்குக் கிடைக்கவேண்டும், மகளுக்குத் திருமணமாக வேண்டும். மகனுக்கு வேலை கிடைக்க வேண்டும், நோய் குணமாகவேண்டும், இவையெல்லாம் இருந்தால் தான் கர்த்தருக்கடுத்த செயல்களில் ஈடுபடுவேன் என்கிறீர்களா? இம்மைக்குரிய ஆசீர்வாதங்களுக்காக மட்டும் கர்த்தரை பின்பற்றுவீர்களானால் மிகவும் பரிதபிக்கப்படத்தக்கவர்களாவீர்கள்.

இந்த தபீத்தாளுக்கோ எந்த உறவுமிருந்ததாக வேதம் கூறவில்லை. இவளுக்கு ஆதரவாகவும், உதவியாகவும் யாரும் இருந்ததாகத் தெரியவில்லை. ஆனாலும் நற்கிரியை செய்வதிலும், தருமங்கள் செய்வதிலும் எப்பொழுதும் பெருகுகிறவளாயிருந்திருக்கிறாள். "...நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத் தக்கதாக, யாவருக்கும், விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும், நன்மைசெய்யக் கடவோம்" (கலா.6:10) என்ற வசனத்திற்கேற்ப தனக்குக் கிடைத்த சமயத்தையும் சூழ்நிலையையும் இவள் பயன்படுத்திக் கொண்டாள்.

**3. அறியப்பட்டவர்களால் நேசிக்கப்பட்டாள்.**

தபீத்தாள் செய்த உதவியினிமித்தம் அவளால் அறியப்பட்ட விதவைகள் தபீத்தாள் மரணமடைந்ததும் அழுது, தொற்காள் தங்களுடனேகூட இருக்கையில் செய்திருந்த அங்கிகளையும், வஸ்திரங்களையும் காண்பித்து பேதுருவை சூழ்ந்து நின்றார்கள் என வசனம் 39-ல் வாசிக்கிறோம். அவளுடைய பிரிவை அந்த விதவைகளால் தாங்கிக் கொள்ளமுடியவில்லை. எனவே அவர்களெல்லாரும் பேதுருவினிடம் எல்லாவற்றையும் காண்பித்து அழுதிருக்கிறார்கள்.

நமக்கு அன்பான அருமையான ஒருவரை நாம் மரணத்தின் மூலம் இழக்கும்போது நாமும்கூட அவர்கள் உயிரோடிருந்தபோது செய்த நற்காரியங்களைச் சொல்லி அழுகிறோ மல்லவா? ஏன்? நாம் அவர்களிடம் கொண்ட அன்பு அவ்வாறு நம்மைச் செய்யத் தூண்டுகிறது. தபீத்தாள் மீது கொண்ட அன்பு, தபீத்தாள் அவர்களுக்குச் செய்த உதவியினால் வந்தது. எனவே அதையெல்லாம் காண்பித்து அழுதார்களென வாசிக்கிறோம். வல்லமையுள்ள தேவனோ பேதுருவைக்கொண்டு இந்த தபீத்தாளை உயிரடையச் செய்தார். இது யோப்பா பட்டணம் எங்கும் தெரியவந்தபோது அநகர் கர்த்தரிடத்தில் விசுவாசமுள்ளவர்களானார்கள்.

அன்பு சகோதரியே, தபீத்தாளிடமிருந்த அந்த சிறிய ஊசி எப்பேர்ப்பட்ட காரியத்தைச் செய்துள்ளது! இவளுடைய ஜீவியம் நமக்கு ஒரு நல்மாதிரி அல்லவா!



தேவனால் உண்டாக்கப்பட்ட அவருடைய ஜனங்களாகிய நாமனைவரும் ஒரு சில தாலந்துகளை நிச்சயமாகவே பெற்றிருக்கிறோம். நாம் செய்யவேண்டிய பணிகள் அதிகம். இந்தப்பணிகளைச் செய்யவேண்டியது தேவனுடைய திட்டமாயிருக்கிறது. நமக்குக் கொடுக்கப்பட்ட தாலந்திற்கேற்ப நாம் என்ன செய்யவேண்டுமென சிந்திப்போம். கர்த்தர் தாமே தம்முடைய சித்தத்தின்படி அவருடைய கிரியையிலே நாம் பெருகும்படி நமக்கு உதவிசெய்வாராக!

## கேள்விகள்

1. தபீத்தாள் என்றால் என்ன பொருள் என்று கூறப்படுகிறது?
2. தபீத்தாள் தன்னிடத்தில் இருந்த எதைக்கொண்டு மற்றவர்களுக்கு உதவி செய்தாள்?
3. நாம் எதைச் செய்தாலும் யாருக்கென்று எப்படிச் செய்யவேண்டும்?
4. நமக்கு கிடைக்கும் சமயத்திற்குத் தக்கதாக எதைச் செய்யக்கடவோம்?
5. தபீத்தாள் எப்பட்டணத்தில் வாழ்ந்து வந்த சீஷி?

# <u>அதிகமாய்க் கொடுக்கப்படும்</u>
# <u>More Will be Given</u>

**36**

**அ**ன்பு சகோதரிகளே, நம்முடைய ஆயுசு நாட்கள் கடந்து ஓடுகின்றன. ஒருநாள் பிறப்பதை நீ அறியாயே என்ற வசனத்திற்கேற்ப நாளை என்பது நம் கையில் இல்லை. பிரசங்கி சாலொமோன் கூறுவதைப் போல் எல்லாம் மாயையே! இந்த மாயையான வாழ்க்கையிலும் நம்மை உண்டாக்கின தேவன் எப்போதும் நம்மேல் இரக்கமும், உருக்கமும் உள்ளவராக பரிபூரண ஆசீர்வாதத்தைக் கொடுக்கச் சித்தமுள்ளவராக இருக்கிறார். ஆனால் அதைப் பெற்றுக்கொள்ள நாம் பாத்திரவான்களாயிருக்கிறோமா என்று நம்மை சோதித்துப் பார்ப்பது அவசியம்!

தேவன் ஒவ்வொருவரையும் வெறுமனே படைக்கவில்லை. ஒவ்வொருவரையும் தனித்திறன்மிக்கவராகவே படைத்துள்ளார். தனித் தனியே நமக்கென்று கொடுக்கப்பட்டுள்ள அந்த திறமைகள் அல்லது தாலந்துகளை நாம் எப்படி பயன்படுத்தினோம் இனிமேலும் எப்படி பயன்படுத்தப் போகிறோம் என்பதைப் பற்றி ஆராய்வது வரவிருக்கும் நமக்குப் பயனுள்ளதாய் இருக்குமென நம்புகிறேன்.

"அதிகமாக கொடுக்கப்படும்" என்றால் அது என்ன? எது அதிகமாக கொடுக்கப்படும்? ஆசீர்வாதமா அல்லது ஆசீர்வாதமில்லாதவையா? மத்தேயு 25-ம் அதிகாரத்தில் பரலோகராஜ்யத்தை பல உவமைகளோடு ஒப்பிட்டு இயேசுகிறிஸ்து விளக்கமளிக்கிறார். அதில் வசனம் 14 முதல் 30 வரை தூரதேசமாய் புறப்பட்டுப் போகிற ஒரு எஜமானைப் பற்றியும் அவனுடைய ஊழியக்காரர்களைப் பற்றியும் குறிப்பிடுகிறார். இவ்வசனங்களில் அந்த எஜமான் தன் ஊழியக்காரரில் ஒருவனுக்கு ஐந்து தாலந்தும், இன்னொருவனுக்கு இரண்டு தாலந்தும் மற்றொருவனுக்கு ஒரு தாலந்தும் கொடுத்து விட்டு செல்லுகிறான்.

தூர தேசத்திற்குப் பிரயாணமாய் சென்ற அந்த எஜமான் "வெகுகாலமானபின்பு திரும்பி வந்து அவர்களிடத்தில் கணக்குக் கேட்டான் அப்பொழுது ஐந்து தாலந்தை வாங்கினவன் வேறு ஐந்து தாலத்தைக் கொண்டு வந்து, ஆண்டவனே, ஐந்து தாலந்தை என்னிடத்தில் ஒப்புவித்தீரே, அவைகளைக்கொண்டு இதோ, வேறு ஐந்து தாலந்தை சம்பாதித்தேன் என்றான். அவனுடைய எஜமான் அவனை நோக்கி: நல்லது, உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய்; அநேகத்தின்மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன், உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி என்றான்" (மத்.25:19-21). இவ்விதமாகவே இரண்டு தாலந்தை வாங்கினவனும் வந்து; ஆண்டவனே, இரண்டு தாலந்தை என்னிடத்தில் ஒப்புவித்தீரே; அவைகளைக் கொண்டு இதோ, வேறு இரண்டு தாலந்தைச் சம்பாதித்தேன் என்றான். அவனுடைய எஜமான் அவனை நோக்கி: நல்லது, உத்தமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய் அநேகத்தின்மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன்; உன்



எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி என்றான் (மத்.25:22-23). ஆனால் ஒரு தாலந்தை வாங்கினவன் வந்து ஆண்டவனே, நீர் விதைக்காத இடத்தில் அறுக்கிறவரும் தெளிக்காத இடத்தில் சேர்க்கிறவருமான கடினமுள்ள மனுஷன் என்று அறிவேன் ஆகையால் நான் பயந்து போய், உமது தாலந்தை நிலத்தில் புதைத்து வைத்தேன்; இதோ, உம்முடையதை வாங்கிக்கொள்ளும் என்றான்" (மத்.25:24-25).

அன்பு சகோதரிகளே இந்த உவமையிலிருந்து நீங்கள் என்ன அறிந்துகொள்ளுகிறீர்கள்? தேவன் உங்களுக்கென கொடுத்த தாலந்துகளை அவருடைய நாமத்தின் மகிமைக்கென்று பயன்படுத்தி அதை பெருக்குகிறவர்களாக இருக்கிறீர்களா? அல்லது தேவ நாமத்தை தூஷித்துக் கொண்டு; ஒன்றுமே செய்யாமல் சோம்பேறியாக வாழ்ந்து கொண்டு, எப்போது பார்த்தாலும் தேவன் எனக்கு இதைச் செய்யவில்லை, அதைச்செய்யவில்லை, ஆசீர்வாதம் என்பதே என் வாழ்க்கையில் கிடையாது என்ற சொல்லிகொண்டு ஒன்றுமே முயற்சிக்காமல் தேவனுடைய நாமத்தை அறிவிக்காமல் தேவன் உங்களுக்குக் கொடுத்த தாலந்தை புதைத்து வைத்திருக்கிறீர்களா? இன்றே மனந்திரும்பி தேவனுடைய நாமத்தை மகிமைப்படுத்தும்படி உங்கள் தாலந்தை பயன்படுத்துங்கள் அப்படிப் பயன்படுத்த தீர்மானிப்பீர்களானால் ஐந்து தாலந்துள்ளவன் பெற்ற ஆசீர்வாதத்தைப் பெறுவீர்கள்.

அந்த எஜமான் ஒரு தாலந்தை பெற்று அதை பயன்படுத்தாமல் புதைத்து வைத்திருந்தவனிடமிருந்து அதை வாங்கி பத்து தாலந்துள்ளவனுக்குக் கொடுங்கள் என்றான். "உள்ளவனெவனோ அவனுக்குக் கொடுக்கப்படும், பரிபூரணமும் அடைவான்; இல்லாதவனிடத்திலிருந்து உள்ளதும் எடுத்துக்கொள்ளப்படும்" என்றார் (மத்.25:29). ஆம் அப்படிப்பட்டவர்களுக்கு அதிகமாய் கொடுக்கப்பட்டது. உள்ளவன் எவனோ அவன் உண்மையும் உத்தமுமாய் ஜீவிக்கும்போது இன்னும் அதிகமாகக் கொடுக்கப்படுகிறது. இல்லாதவனிடத்திலிருந்து உள்ளதும் எடுத்துக்கொள்ளப்படுகிறது. இக்கூற்று ஒருவேளை உங்கள் பார்வையில் அல்லது உலகத்தார் பார்வையில் அநியாயமாகக் காணப்படலாம். உண்மையும், நியாயமும் இது தான் பிரியமானவர்களே! ஸ்திரீகளாகிய நமக்கோ உலகப்பொருட்களின் மேல் கொள்ளை ஆசை. அதை வாங்கவேண்டும், இதை வாங்கவேண்டும், அவர்கள் வைத்திருப்பது மிக அழகாய் இருக்கிறது. அதைப் போல் நமக்கும் ஒன்று வேண்டுமென அடுக்கிக் கொண்டே போகிறவர்கள் அநேகர்.

நவீன உலகில் பல நவீனங்கள் கண்களின் இச்சையைத்தூண்டி, இச்சைகளுக்குட்படுத்துகின்றன. எனவே நாம் சிலவேளைகளில் இப்படியாக நினைக்கிறோம். இல்லாதவனிடத்தில் உள்ளதை எடுத்துக்கொள்வது பாவமா? அவனிடத்தில் உள்ளதை எடுத்துக்கொள்ளலாமா? என்றெல்லாம் நினைத்து உள்ளவனைப் பார்த்து பொறாமை கொண்டு அவனுக்கு ஏன் இன்னும் அதிகமாய்க் கொடுக்கப்படுகிறது என நினைக்கிறோம். அன்பு சகோதரிகளே, வசனம் ஒருபோதும் தவறிழைக்காது. அது ஏழுதரம் புடமிடப்பட்டவைக்கும் மேலானது. அதிகமாக சாம்பாதிக்க அல்லது முயற்சி எடுத்து, உழைக்க நினைக்கும் ஒவ்வொருவருக்கும்

அதிகமாய்த்தான் கொடுக்கப்படுகிறது. அப்படிப்பட்டவர்கள் பரிபூரணமும் அடைவார்கள்.

ஆம், சகோதரிகளே, நம் எண்ணத்தை மாற்றிக்கொண்டு தேவனால் நமக்கென்று கொடுக்கப்பட்ட தாலந்துகளை புதைத்து வைக்காமல் பயன்படுத்தி பெருக்கிக் காட்டுவோம். பரிபூரண ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்ளுவோம். கர்த்தர் தாமே நமக்கு உதவிசெய்வாராக!

### கேள்விகள்

1. யாருக்கு அதிகமாக கொடுக்கப்படும்?
2. இயேசு கூறிய உவமையில் எஜமான் யாரைப் பார்த்து அநேகத்தின்மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன் என்று சொன்னான்?
3. ஒரு தாலந்தை வாங்கினவன் தன் ஆண்டவனைப் பார்த்து என்ன சொன்னான்?



# அவள் வருங்காலத்தைப் பற்றியும் மகிழ்கிறாள்
# She Shall Rejoice In Time To Come

**37**

**யா**ர் இவள்? வருங்காலத்தைப் பற்றி மகிழ்கிற ஸ்திரீ எப்படிப்பட்டவள்? ஏன் நீதிமொழிகள் 31-ம் அதிகாரம் வசனம் 10 முதல் 31 வரை இவளைப் பற்றி இவ்விதமாய் வர்ணிக்கிறது?

இவள் ஒரு "குணசாலியான ஸ்திரீ". அப்படித்தான் இவளிடம் என்னென்ன விசேஷித்த குணங்கள் உண்டு என்று பார்ப்போமே. இவளுடைய குணங்கள் நிச்சயமாக நம்மையும் மகிழ்ந்திருக்கப்பண்ணும் என்பதில் சந்தேகமில்லை.

ஆம், **இந்த குணசாலியான ஸ்திரீயின் விலை முத்துக்களைப் பார்க்கிலும் உயர்ந்தது** (வசன.10). எஸ்தர் என்ற ஸ்திரீயைப் பற்றி நாம் எஸ்தர் புத்தகத்தில் வாசிக்கலாம். எஸ்தர் ஒரு யூத ஸ்திரீ. இவளுக்குத் தாய்தகப்பன் இல்லை. மொர்தெகாய் என்பவனின் சிறிய தகப்பன் குமாரத்தி தான் இந்த எஸ்தர் என்பவள். இவளை மொர்தெகாய் எஸ்தரின் பெற்றோர் மரணமடைந்தவுடன் தன் குமாரத்தியாக எடுத்து வளர்த்து வந்தான் (எஸ்.2:7). இந்த எஸ்தர் தாயும் தகப்பனையும் இழந்த போதிலும் குணசாலியான ஸ்திரீயாகத் திகழ்ந்தாள். எனவே தான் இவள் மூலமாக யூத குலத்திற்கே இளைப்பாறுதல், சந்தோஷம், மகிழ்ச்சி கிடைத்தன (எஸ்.9:21).

இவள் இந்துதேசமுதல் எத்தியோப்பியா தேசம்வரைக்குமுள்ள நூற்றிருபத்தேழு நாட்டிற்கும் ராஜாத்தியாக மாறினாள். இவள் குணசாலியாக இருந்ததினால் ராஜாவாகிய அகாஸ்வேருவை சந்திக்கப் புறப்படுமுன் தன் தாதிமார்களோடு மூன்றுநாள் தேவசமூகத்தில் ஜெபம்பண்ணி அதன்பின் ராஜாவை ஏற்ற சமயத்தில் சந்தித்து தன் விண்ணப்பத்திற்குப் பதிலைப் பெற்றுக்கொண்டாள் (எஸ்.4:16). ராஜாவின் கண்களில் தயவையும் பெற்றுக்கொண்ட ஸ்திரீ இவள். நீதி.31:1-ல் "அவள் புருஷனுடைய இருதயம் அவளை நம்பும் எனக்காண்கிறோம். இதைப்போலவே எஸ்தரின் புருஷனாகிய அகாஸ்வேருவின் இருதயம் அவளை நம்பினது. இவள் விலை முத்துக்களைப் பார்க்கிலும் உயர்ந்ததல்லவா?

மேலும் **ஒரு குணசாலியான ஸ்திரீ தன் புருஷனுக்குத் தீமையையல்ல நன்மையையே செய்கிறாள்** என வாசிக்கிறோம் (நீதி.10;12). ஒரு உண்மைக் கிறிஸ்தவளாக இருக்கும் ஸ்திரீயும் தன் புருஷனுக்கு நன்மையையே செய்யவேண்டும். எவ்விதத்திலும் தன் புருஷன் மட்டுமே கஷ்டப்பட்டு வேலை செய்து வரவேண்டும். நாம் வீட்டில் சும்மா இருந்துகொண்டு பொழுதைக் கழிக்கலாம் என்றிருக்கக்கூடாது. அநேக ஸ்திரீகள் அவ்வாறு தான் இருக்கிறார்கள். இப்படியிருப்போமானால் நம் கணவருடைய சம்பத்துக் குறையத் தான் செய்யும். ஆனால் ஒரு குணசாலியான ஸ்திரீ நிச்சயம் வீட்டிலிருந்துகொண்டே எவ்விதத்திலெல்லாம் தன் புருஷனுக்கு நன்மை செய்யலாம் என்று சிந்திப்பாள்.

அடுத்ததாக, **குணசாலியான ஸ்திரீ 'உற்சாகத்தோடே வேலை செய்கிறாள்.** அவள் வியாபாரக் கப்பல்களைப் போலிருக்கிறாள்; தூரத்திலிருந்து தன் ஆகாரத்தைக் கொண்டுவருகிறாள்" (வச.13,14) என்று வாசிக்கிறோம். அனுதினமும் எங்கள் தெருவிற்கு அதிகாலமே ஒரு பெண் காய்கறிகள், கீரை என்று சத்தம் போட்டு கூவி அழைத்து விற்பனை செய்ய வருவாள். அவளுடைய சப்தத்தைக்கேட்டு தூங்கிக் கொண்டிருக்கிற அனைவருமே விழித்துக்கொள்ளவேண்டும். இந்த ஸ்திரீ ஒரு அந்நிய ஸ்திரீ ஆனால் நீதிமொழிகளில் கூறப்பட்ட குணசாலியான ஸ்திரீயைப்போலவே வியாபாரக் கப்பல்களைப் போலிருக்கிறாள். அநேக கிறிஸ்தவ ஸ்திரீகள் இப்படிப்பட்ட உற்சாகத்துடன் காணப்படுவதில்லை. மேலும் இன்னும் சிலருக்கு **'Prestige Issue'.** நாம் போய் ஒரு கீழான வேலை செய்வதா? என்று நினைத்து ஆடம்பர வாழ்வு வாழ்ந்து கடன்பட்டு இங்குமங்குமாக அலைந்து கொண்டிருப்பர். அன்பு சகோதரியே, இந்த குணசாலியான ஸ்திரீயைப் போல் வியாபாரக் கப்பல்களைப் போல் மாறுங்கள். உங்கள் புருஷனின் சம்பத்துக்குறையாதிருக்கும்.

மாத்திரமல்ல, **குணசாலியான ஸ்திரீ திராட்சத் தோட்டத்தை நாட்டுகிறாள்** தன் கைகளைப் பலப்படுத்துகிறாள். தன் கைகளை இராட்டினத்தில் வைக்கிறாள் அவள் விரல்கள் கதிரைப் பிடிக்கும். சிறுமையானவர்களுக்குத் தன் கையைத் திறந்து ஏழைகளுக்குத் தன்கரங்களை நீட்டுகிறாள் (வச.16-20). இவ்வசனங்களை வாசிக்கும் போது புதிய ஏற்பாட்டு புத்தகத்தில் இடம்பெற்றுள்ள நாம் ஏற்கனவே வாசித்து அறிந்த தபீத்தாள் என்பவள் நினைவிற்கு வருகிறாள். "தொற்காள் என்று அர்த்தங்கொள்ளும் தபீத்தாள் என்னும் பேருடைய ஒரு சீஷி நற்கிரியைகளையும், தருமங்களையும் மிகுதியாய்ச் செய்துகொண்டு வந்தாள்" (அப்.9:36) என வாசிக்கிறோம். இவளுடைய நற்கிரியைகளைப் பற்றி அப்பட்டணத்திலிருந்த மற்ற ஸ்திரீகள் சாட்சி பகருகின்றனர் (அப்.9:39).

மேலும் நீதிமொழிகள் புத்தகத்தில் இடம்பெற்றுள்ள **குணசாலியான ஸ்திரீ அவளுடைய புருஷனுக்குக் கிரீடமாயிருக்கிறாள்** மெல்லிய புடவைகளை விற்கிறாள் அவள் புருஷன் தேசத்து மூப்பர்களோடே நியாயஸ்தலத்தில் உட்கார்திருக்கையில் பேர் பெற்றவனாயிருக்கிறான் என்றெல்லாம் வாசிக்கிறோம். ஒவ்வொரு குணசாலியான ஸ்திரீயினிமித்தம் அவளுடைய புருஷனுக்குப் பேரும் புகழும் ஏற்படவேண்டும். அப்போது அவளுடைய புருஷனுக்கு அவள் கிரீடமாயிருப்பாள். ஆபிரகாமின் மனைவி "அந்தப்படியே ஆபிரகாமை ஆண்டவன் என்று சொல்லி, அவனுக்குக் கீழ்ப்படிந்திருந்தாள்" (1பேது.3;6). நாமும் இவர்களைப் போலிருப்போமா?

கடைசியாக: **குணசாலியான ஸ்திரீ, "...வருங்காலத்தைப்பற்றியும் மகிழ்கிறாள்"** (நீதி.31:25). ஏனென்றால், மேற்குறிப்பிட்டுள்ள காரியங்களைச் செய்யும் போது நாம் சோம்பலின் அப்பத்தைப் புசிக்கமாட்டோம், நம்பிள்ளைகள் எழும்பி நம்மை பாக்கியவதி என்பர் நம் புருஷன் நம்மைப் பார்த்து 'அநேகம் பெண்கள் குணசாலிகளாயிருந்ததுண்டு; நீயோ அவர்கள் எல்லாருக்கும் மேற்பட்டவள் என்று புகழுவார் (வச.27-29) குணசாலியான ஸ்திரீ இவ்விதமாகக் காணப்படும் போது



அவள் கர்த்தருக்குக்குப் பயப்படுகிற ஸ்திரீயாகவும் புகழப்படுவாள் (வச.30). கர்த்தர் தாமே சகல ஆசீர்வாதங்களினாலும் நம்மையும் ஆசீர்வதித்து வருங்காலத்தைக் குறித்து மகிழப்பண்ணுவாராக! ஆமென்.

## கேள்விகள்

1. குணசாலியான ஸ்திரீயின் விலை எதைப்பார்க்கிலும் உயர்ந்தது?
2. குணசாலியான ஸ்திரீ தன் புருஷனுக்கு எதையே செய்கிறாள்?
3. குணசாலியான ஸ்திரீ தன் புருஷனுக்கு எப்படியிருப்பாள்?
4. இந்த ஸ்திரீ எதைப்பற்றியும் மகிழ்கிறாள்?
5. குணசாலியான ஸ்திரீ தன் புருஷனால் எவ்வாறு புகழப்படுகிறாள்?

# விக்கிரகாராதனைக்காரர் ஆகாதிருங்கள்
# Do Not Become Idolaters

**38**

**அ**ன்பு சகோதரிகளே, மீண்டுமாக வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்ளுவதோடு, சிந்தனைக்கென்று சில காரியங்களையும் உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

கிறிஸ்தவர்களென அழைத்துக் கொள்ளுகிற நீங்கள் ஒரு விக்கிரகாராதனைக்காரரா? இல்லை என்று தானே சொல்கிறீர்கள். நல்லது. ஆனால் ஆவியானவர் சொல்லும்போது, மோசேக்குள்ளாக மேகத்தினாலும் சமுத்திரத்தினாலும் ஞானஸ்நானம்பண்ணப்பட்டு, ஒரே ஞானபோஜனத்தைப் புசித்து, ஒரே ஞானபானத்தைக் குடித்து, கன்மலை கிறிஸ்துவின் ஜீவத்தண்ணீரைக் குடித்த இஸ்ரவேல் ஜனங்களை திருஷ்டாந்தமாக வைத்து நம்மை எச்சரிக்கிறதை 1கொ.10:2-12-ல் காணலாம். அவர்கள் ஜீவனுள்ள தேவனை தெய்வமாகக் கொண்டிருந்தவர்கள். ''...அவர்களில் அதிகமானபேர்களிடத்தில் தேவன் பிரியமாயிருந்ததில்லை;...'' (1கொ.10:5) என வாசிக்கிறோம்.

தம்முடைய சொந்த ஜனத்தினிடத்தில் தேவன் பிரியமில்லாதிருந்ததற்குக் காரணமென்ன? ''ஜனங்கள் எல்லாரும் தங்கள் காதுகளில் இருந்த பொன்னணிகளைக் கழற்றி, ஆரோனிடத்தில் கொண்டு வந்தார்கள். அவர்கள் கையிலிருந்து அவன் அந்தப் பொன்னை வாங்கி, சிற்பக் கருவியினால் கருப்பிடித்து, ஒரு கன்றுக்குட்டியை வார்ப்பித்தான், அப்பொழுது அவர்கள்: இஸ்ரவேலரே, உங்களை எகிப்துதேசத்திலிருந்து அழைத்துக் கொண்டுவந்த உங்கள் தெய்வங்கள் இவைகளே என்றார்கள். ஆரோன் அதைப் பார்த்து, அதற்கு முன்பாக ஒரு பலிபீடத்தைக் கட்டி, நளைக்குக் கர்த்தருக்குப் பண்டிகை என்று கூறினான். மறுநாள் அவர்கள் அதிகாலையில் எழுந்து, சர்வாங்க தகனபலிகளையிட்டு, சமாதானபலிகளைச் செலுத்தினார்கள்; பின்பு, ஜனங்கள் புசிக்கவும் குடிக்கவும் உட்கார்ந்து, விளையாட எழுந்தார்கள்'' (யாத்.32:3-6).

இதே வசனத்தையே பவுல் கொரிந்து சபைக்கு, ''ஜனங்கள் புசிக்கவும் குடிக்கவும் உட்கார்ந்து விளையாட எழுந்திருந்தார்கள் என்று எழுதியிருக்கிறபடி, அவர்களில் சிலர் விக்கிரகாராதனைக்காரர் ஆனது போல நீங்களும் ஆகாதிருங்கள் (1கொரி.10:7) என்று எச்சரிக்கிறார்.

அன்பு சகோதரிகளே, யாத்.32:3-6 மற்றும் 1கொ.10:7-ல் குறிப்பிடப்பட்டுள்ள வசனங்களை நிதானமாக வாசியுங்கள், அதன்பின்பு இவ்வசனங்களுக்கும் நமக்கும் ஏதேனும் சம்பந்தமிருக்கிறதா என்று சிந்தியுங்கள். அன்று அவர்கள் பொன்னினால் கன்று குட்டியைசெய்து வழிபட்டார்கள். இன்று நீங்கள் இயேசுவுக்கு ஒரு சொரூபத்தையோ அல்லது ஒரு குடிலை ஏற்படுத்தி அதில் மரியாள், யோசேப்பு, ஆடு,



மாடுகள், சாஸ்திரிகள் போன்றவர்களின் பொம்மைகளை வைத்து பண்டிகை ஒன்றை ஆசரித்து அவைகளுக்கு முன் மண்டியிட்டு பணிந்து கொள்ளுகிறதில்லையா? பின்பு புசிப்போம், குடிப்போம், விளையாடுவோம் என்று கூறி ஆர்ப்பரிக்கவில்லையா? இல்லையென்று கூறுவீர்களென்றால் கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

இயேசு கிறிஸ்து பாவிகளை இரட்சிக்க இவ்வுலகத்தில் மானிடனாய் பிறந்தார், அவருடைய பிறந்தநாளைத் தான் நினைவுகூருதலாகக் கொண்டாடினோம். தேவகுமாரனின் பிறந்த நாளை கொண்டாட வேண்டியது அவசியமல்லவா! என்று கூறலாம். கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்னும் இரட்சகர் உலகத்தின் பாவங்களை சுமந்து தீர்க்கும்படி, அதாவது உலகத்தை பாவத்திலிருந்து மீட்கும்படி பிறந்தார் என்பது உண்மையிலும் உண்மை. ஆனால் அவர் தம்முடைய பிறந்த தினத்தை நினைவுகூருங்கள் என்றோ, பண்டிகையாக ஆசரியுங்கள் என்றோ கட்டளையிடவில்லை மாறாக அவருடைய மரணத்தை நினைவுகூரும்படி கூறினார்.

''நான் உங்களுக்கு ஒப்புவித்ததைக் கர்த்தரிடத்தில் பெற்றுக்கொண்டேன்; என்னவெனில், கர்த்தராகிய இயேசு தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி, அதைப்பிட்டு: நீங்கள் வாங்கிப்புசியுங்கள், இது உங்களுக்காகப் பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார்... இந்தப் பாத்திரம் என் இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது; நீங்கள் பானம்பண்ணும்போதெல்லாம் என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார்'' (1கொ.11:23-26). இதையே பண்டிகை என்று 1கொ.5:8-ல் வாசிக்கிறோம். இந்த பண்டிகையை வாரத்தின் முதல்நாள்தோறும் ஆசரிக்க வேண்டியவர் களாயிருக்கிறோம். இதில் தேவன் பிரியமாயிருக்கிறார்.

பவுல் அவர்களில் சிலர் விக்கிரகாராதனைக்காரர் ஆனது போல நீங்களும் ஆகாதிருங்கள் என்றார். அன்பு சகோதரிகளே, இதை வாசிக்கிற நீங்கள் ஓர் தீர்மானம் பண்ணுங்கள். உங்களில் ஏதேனும் விக்கிரகம் காணப்படுகிறதா என்று சிந்தியுங்கள். ஆதியிலிருந்தே தேவன் விக்கிகாராதனையை வெறுக்கிறார். நமக்கு பொருட்களின் மேல் ஆசை இருக்குமானால் அதுவும் விக்கிரகாராதனை தான், உறவுகளின் மேல் அதாவது தேவனிடத்தில் காட்டும் அன்புக்கு மேல், ஆசை, அன்பு இருக்குமானால் அதுவும் விக்கிரகாராதனையாக மாறிவிடும். அநேகர் தங்களுக்கு அன்பானவர்களை தெய்வமாக எண்ணி வணங்குவதை நாம் அறிவோம். ஆக, இதுவும் ஒரு வகையான விக்கிரகாராதனை தான். இஸ்ரவேல் ஜனங்கள் விக்கிரகாராதனை செய்ததினிமித்தமே தேவன் அவர்களிடத்தில் பிரியமாயிருந்ததில்லை. ஆதலால் வனாந்தரத்திலே அவர்கள் அழிக்கப்பட்டார்கள்.

அன்பானவர்களே, நாம் சிந்திபோம், நம் குடும்பத்தாரையும் சிந்திக்கவைப்போம். அன்று ஞானஸ்நானம் பெற்று ஒரே ஞானபோஜனத்தைப் புசித்த தேவ ஜனங்கள் மேல் தேவன் பிரியமில்லாதிருந்தார். அவர்கள் அழிக்கப்பட்டார்கள். நம்முடைய நிலை எவ்வாறு உள்ளது? நாம் ஒருவேளை ஞானஸ்நானம் பெற்றவர்களாய் ஒரே ஞான போஜனத்தைப் புசித்து, கன்மலை (கிறிஸ்து) தண்ணீரை

பருகி கிறிஸ்தவர்களாக பக்தியுடன் தான் இருக்கிறோம் என்று மெத்தனமாக இருக்கலாம். அந்த இஸ்ரவேல் ஜனங்களைப் போல புசிப்போம், குடிப்போம், உட்கார்ந்து விளையாடுவோம் என்று சொல்லி பண்டிகைக் கிறிஸ்தவர்களாய் இருக்கலாம். ஒருவரையும் குற்றப்படுத்தும்படி இதைக் கூறவில்லை. எங்கே அவர்களிடம் பிரியமில்லாதிருந்ததைப் போல, தேவன் நம்மிடத்திலும் பிரியமில்லாதவராய் போய்விடுவாரோ என்று பயமடைந்தவளாய் பாரத்தோடு எழுதுகிறேன். எனவே புத்தியுள்ள ஸ்திரீகளாக இருந்து கர்த்தருக்கு பிரியமானது இன்னதென்று அறிந்து நாமும் நம்மையும் நம் குடும்பத்தையும் அழிவுக்குத் தப்புவித்துக்கொள்ளும் காரியங்களையே சிந்தித்து செயல்படுவோம். கர்த்தர் தாமே உங்கள் இருதயங்களைத் திறப்பாராக!

### கேள்விகள்

1. எவர்களில் அதிகமானபேர்களிடத்தில் தேவன் பிரியமாய் இருந்ததில்லை? ஏன்?
2. நாம் ஆசரிக்க வேண்டிய பண்டிகை எது?
3. இயேசுவை நினைவுகூறும்படி இதைச் செய்யுங்கள் என்று பவுல் எதைக்குறித்து கூறுகிறார்?
4. ஜனங்கள் எல்லாரும் தங்கள் காதுகளில் இருந்த பொன் அணிகளை ஆரோனிடம் கொடுத்தபோது அவன் அதை என்னசெய்தான்?
5. எதனால் இஸ்ரவேலர் வனாந்தரத்தில் அழிக்கப்பட்டார்கள்?



## ஊழியருக்கேற்ற மனைவி
## A Proper Wife for A Minister

**39**

**அ**ன்பான சகோதரிகளே, உங்களது கணவன் கிறிஸ்துவை அறிவிக்கும் ஒரு ஊழியரா? அப்படியென்றால் கிறிஸ்துவை அறிவிக்கும் நற்பணியில் உங்கள் கணவரோடு கூட உங்களுடைய பங்கு என்ன? உங்களுடைய கணவருக்கு ஏற்ற மனைவியாக செயல்படுகின்றீர்களா? உங்கள் கணவரோடு கூட சபையைக் கட்டும்பணியில் உங்களுடைய முயற்சி, மற்றும் ஈடுபாடு எவ்விதம் உள்ளது? சற்றுசிந்தியுங்கள்.

அன்று இயேசுகிறிஸ்து சுவிசேஷத்தை அறிவிக்கும் பணிக்கு சீஷர்களை அனுப்பியபோது இரண்டு இரண்டு பேராக அனுப்பினார். தேவன் மனுஷனை உண்டாக்கியபோது மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல, அவனுக்கு ஏற்ற துணையை உண்டாக்குவேன் எனக்கூறி ஏவாளை ஏற்றதுணையாக உண்டாக்கினார். இன்றும் அவருடைய பணியைச் செய்ய, அவருடைய சபையைக் கட்ட, வேதவசனங்களைப் பகிர்ந்து கொள்ள கணவனோடு கூட சேர்ந்து, ஊழியருக்கு ஏற்ற மனைவியாக செயல்பட வேண்டுமென்று தேவன் விரும்புகிறார். அவ்விதமாக செயல்பட்ட அருமையான தம்பதியர்கள் வேதத்தில் அநேகருண்டு.

அதில் ஆக்கில்லா, பிரிஸ்கில்லாள் என்ற தம்பதியர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். அவர்கள் எவ்விதமான ஊழியத்தை செய்தார்கள் எனப்பார்க்கும்போது "அவன் (அப்பொல்லோ) ஜெப ஆலயத்தில் தைரியமாய்ப் பேசத் தொடங்கினபோது, ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் அவன் பேசுகிறதைக் கேட்டு, அவனைச் சேர்த்துக்கொண்டு, தேவனுடைய மார்க்கத்தை அதிக திட்டமாய் அவனுக்கு விவரித்துக் காண்பித்தார்கள்" (அப்.18:26).

அன்பான சகோதரிகளே, இந்த பிரிஸ்கில்லாள் எத்தனை ஆர்வமாக தான் கண்டுகொண்ட தேவனுடைய மார்க்கத்தை தன் கணவனோடு கூட அதிக திட்டமாய் விவரித்து காண்பித்து ஊழியனுக்கு ஏற்ற மனைவியாக வாழ்ந்திருக்கிறாள்! இன்றைய நாளில் ஊழியரின் மனைவியாக இருக்கிற நீங்கள் இவ்விதமாக உங்கள் கணவரோடுகூட ஊழியத்திற்குச் சென்று தேவனுடைய மார்க்த்தை விவரித்துக் காண்பிக்கிறீர்களா? அல்லது சாக்கு போக்குச் சொல்லிக் கொண்டு உங்களுடைய பிள்ளைகள், உங்களுடைய குடும்பம் மட்டுமே பெரிதென நினைத்து தேவனுடைய மார்க்கத்தை அறியாத பல கோடி மக்களைக் குறித்த கரிசனை இல்லாமலிருக்கிறீர்களா? நாமும் நம் குடும்பமும் மட்டும் இரட்சிக்கப்பட நினைப்பது தன்னலம். வேத வசனம் கூறுகிறது, "அவனவன் தனக்கானவைகளையல்ல, பிறருக்கானவைகளையும் நோக்குவானாக" (பிலி.2:4) என்று. ஆனபடியினால் அழிந்து போகின்ற ஆத்துமாக்களை அக்கறையுடன் நோக்குவோமா?

இவர்களைப்போலவே சகரியா, எலிசபெத் என்ற இன்னொரு தம்பதியரும் உண்டு. "அவர்கள் இருவரும் கர்த்தரிட்ட சகல கற்பனைகளின்படியேயும் நியமங்களின்படியேயும் குற்றமற்றவர்களாய் நடந்து, தேவனுக்கு முன்பாக நீதியுள்ளவர்களாயிருந்தார்கள்" என லூக்.1:6-ல் வாசிக்கிறோம். இவர்கள் தேவனுக்கு முன்பாக நீதியுள்ளவர்களாய் கர்த்தரிட்ட சகல கற்பனைகளின்படியும் நடந்து தேவனை மகிமைப்படுத்தியிருக்கிறார்கள். அன்பான சகோதரிகளே, நமது வாழ்வில் அவருடைய கட்டளைகளின் படி நடந்து தேவனுக்கு முன்பாக நீதியுள்ளவர்களாக காணப்பட வேண்டும். இவ்விஷயத்தில் தேவனுக்கு முன்பாக பொய்சொன்ன அனனியா சப்பீராளை நன்கு அறிவீர்கள். அவர்களுடைய கதி என்னவாயிற்று ஒரே நாளில் இருவரும் மரித்தார்கள். இவைகள் எல்லாம் நமக்கு எச்சரிப்புண்டாகும்படி எழுதப்பட்டுள்ளது. அப்போஸ்தலனாகிய பவுல் கூறும் வார்த்தையை கவனியுங்கள். "சுவிசேஷத்தை நான் பிரசங்கியாதிருந்தால், எனக்கு ஐயோ" (1கொரி.9:16).

இது நற்செய்தியை அறிவிக்கவேண்டிய காலம். நற்செய்தி அறிவிக்காவிட்டால் குற்றம் நம்மேல் சுமரும். ஊழியத்திற்கு தடையாய் இல்லாதபடி கர்த்தருடைய சபை கட்டப்பட புத்தியுள்ளவர்களாக மேற்கண்ட பிரிஸ்கில்லாள், எலிசபெத் போன்றோரைப் போல கர்த்தருடைய ஊழியத்தை செய்துவரும் உங்கள் கணவருக்கு ஏற்ற மனைவியாக செயல்பட துவங்குங்கள். கர்த்தர் தாமே உங்களுக்கு உதவி செய்வாராக!

### கேள்விகள்

1. தேவன் ஏவாளை என்னவாக இருக்கும்படி உண்டாக்கினார்?
2. பிரிஸ்கில்லாள் தன்புருஷனோடு கூட யாருக்கு விவரித்துக்காண்பித்தாள்?
3. கர்த்தரிட்ட சகல கற்பனைகளின்படியேயும் குற்றமற்றவர்களாய் நடந்த தம்பதியர் யார்?
4. சப்பீராள் தன் புருஷனோடு கூட ஒருமனப்பட்டுச் சொன்னது என்ன?
5. சுவிசேஷத்தை நான் பிரசங்கியாதிருந்தால் எனக்கு ஐயோ என்று சொன்னவர் யார்?



## உங்கள் பிள்ளைகள் சத்தியத்திலே நடக்கிறார்களா?
## Your Children walk In Truth?

**40**

**அ**ன்பான சகோதரிகளே, உங்களுடைய பிள்ளைகள் எப்படி நடக்கிறார்கள்? நடக்க வேண்டிய வழியிலே நடக்கிறார்களா? அவ்வாறு நடக்கவேண்டிய வழி எதுவென்று கேட்கலாம். இயேசுவின் அப்போஸ்தலனாகிய யோவான் சத்தியத்தின்படி நேசித்த காயு என்பவனைக் குறித்து, "சகோதரர் வந்து நீ சத்தியத்தில் நடந்துகொள்ளுகிறாய் என்று உன்னுடைய உண்மையைக் குறித்துச் சாட்சி கொடுத்தபோது மிகவும் சந்தோஷப்பட்டேன்" (3யோவா.3) என்று எழுதியுள்ளார். ஒவ்வொரு தாயும் தன் பிள்ளைகளைக் குறித்து மற்றவர்கள் நற்சாட்சி கொடுக்கும்போது மிகவும் சந்தோஷப்படுவார்கள். ஆனால் இன்றைய நாட்களில் அநேக பிள்ளைகள் பெற்றோருக்கு சந்தோஷத்தைக் கொடுப்பதில்லை. தன் இஷ்டம் போல் வாழ்நாட்களை கழித்து, பாவத்தைத் தண்ணீரைப்போல பருகி முடிவில் தானும் கண்ணீர் வடித்து, தன் பெற்றோரையும் கண்ணீர்வடிக்கச் செய்கின்றனர். காரணம் என்ன? தன் பிள்ளைகளை அவர்களுடைய இஷ்டத்திற்கு விட்டுவிடுவது தான்.

சிறுவயதிலிருந்தே பிள்ளைகள் கண்டிப்பில்லாமல் வளர்க்கப்படுகின்றனர். அநேக தாய்மார்கள் தங்கள் பிள்ளைகள் நற்காரியங்களைச் செய்தாலும் பூரிப்படைவார்கள், துற்காரியங்களைச் செய்தாலும் அளவில்லா மகிழ்ச்சி யடைவார்கள் இப்பேர்பட்டவர்களை நான் கண்டுள்ளேன். நீதிமொழிகள் 29:15-ல் "...தன் இஷ்டத்திற்கு விடப்பட்ட பிள்ளையோ தன் தாய்க்கு வெட்கத்தை உண்டுபண்ணுகிறான்" என்கிறது. அன்பு சகோதரியே, ஜாக்கிரதையாயிருங்கள் உங்கள் பிள்ளைகள் எப்படி நடக்கிறார்கள், எப்படிப் பேசுகிறார்கள், எப்படி உடுத்துகிறார்கள் என்பதை கண்காணிக்க வேண்டியது உங்கள் கடமை என்பதை மறந்துவிடாதீர்கள். இல்லையேல், மேற்குறிப்பிட்ட வசனத்தின்படி வெட்கமடைய வேண்டியநிலை ஏற்பட்டுவிடும்.

தேவன் உங்களுக்குக் கொடுத்துள்ள பிள்ளைகளின் ஆத்துமாக்கள் கர்த்தருடையது. கர்த்தருடையதை கர்த்தருக்கேற்ற சிட்சையிலும், சத்தியத்தை அறிகிற அறிவிலும் வளர்க்க வேண்டியவர்களாயிருக்கிறீர்கள். பிள்ளைப் பாசம் கண்ணை மறைக்கும் என்பர். அந்தப் பாசம் உங்கள் பிள்ளைகள் பாவத்திற்குள் வழுக்கி விழக் காரணமாகிவிடக்கூடாது.

பரிசுத்த வேதாகமம், பிள்ளைகளை எப்படி வளர்க்கவேண்டும், எப்படி ஆசீர்வாதத்திற்கு பங்குள்ளவர்களாக அவர்களை வளர்க்கவேண்டும் என்பதற்கான ஆலோசனைகளையும், நல்ல உதாரணங்களையும் நமக்குப் கொடுக்கிறது. பரிசுத்த வேதாகமத்தை கற்றுக்கொண்டு அதற்கேற்ப ஜெபத்திலும், பக்தியிலும் நல்லொழுக்கத்திலும் பிள்ளைகளை வளர்க்கப் பிரயாசப்படும்போதும் நீதிமொழிகள்23:24,25-ன்படி, "நீதிமானுடைய தகப்பன் மிகவும் களிகூருவான்; ஞானமுள்ள பிள்ளையைப் பெற்றவன் அவனால் மகிழுவான். உன் தகப்பனும் உன் தாயும் சந்தோஷப்

படுவார்கள்; உன்னைப் பெற்றவள் மகிழுவாள்'' என்ற வசனம் உங்கள் வாழ்விலும் நிறைவேறும். பழைய ஏற்பாட்டு காலத்தில் யோசியா என்ற ராஜா எட்டு வயதில் ராஜாவாகி முப்பத்தொரு வருஷம் எருசலேமில் அரசாண்டான். இவனுடைய சிறுபிராயமும், வாலிபப் பிராயமும், ஏன் இவனுடைய முழு வாழ்வும் மிகச் சிறப்பானதாக இருந்தது. தாய்மார்களாகிய உங்களுக்கு இவனுடைய காரியங்கள் நிச்சயமாகவே சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கும், இவனுடைய நற்கிரியைகளைக் குறித்து 2நாளாகமம்34-ம் அதிகாரத்தில் வாசிக்கலாம்.

**முதலாவதாக,** தான் எட்டு வயதுடையவனாயிருக்கும்போதே ''அவன் கர்த்தருடைய பார்வைக்குச் செம்மையானதைச் செய்து, தன் தகப்பனாகிய தாவீதின் வழிகளில் வலது இடதுபுறமாக விலகாமல் நடந்தான்'' (2நாளா.34:2) சிறுவயது தொடங்கியே கர்த்தருடைய பார்வைக்குச் செம்மையானதைச் செய்து, அது மாத்திரமல்ல ஒரு நல்ல மாதிரியாகிய தாவீதின் வழிகளில் நடந்தான் என்று வாசிக்கிறோம். உங்களுடைய பிள்ளைகள் கர்த்தருடைய பார்வைக்குச் செம்மையானதைச் செய்கிறார்களா? நல்ல மாதிரியை பின்பற்றுகிறார்களா? மாறாக, இன்றைய அருவருப்பான உலகில் கெட்ட வழியில் நடந்து கெட்ட நண்பர்களை மாதிரியாகக் கொண்டிருக்கிறார்களா? உங்கள் பிள்ளைகள் உலகத்தை சிநேகிக்கத் தொடங்கும் முன் அணைபோடுங்கள். சிறுவயதிலேயே கர்த்தருடைய பார்வைக்குச் செம்மையானவற்றைக் கற்றுக்கொடுங்கள்.

**இரண்டாவதாக,** ''அவன் தன் ராஜ்யபாரத்தின் எட்டாம் வருஷத்தில், தன் தகப்பனாகிய தாவீதின் தேவனைத் தேட ஆரம்பித்து'' (வச.34:3). அதாவது தன்னுடைய 16வது வயதில், இளமைப் பருவத்தில் தன் தேவனைத் தேட ஆரம்பித்தான். நாம் வணங்கும் தேவன் கண்களிருந்தும் காணாத, காதுகளிருந்தும் கேளாத, கால்களிருந்தும் நடக்கமாட்டாத, மூக்கிருந்தும் முகராத ஒரு உயிரற்ற விக்கிரகமல்ல. நம் தேவன் அண்டசராசரங்களையும் படைத்த பரிசுத்தமுள்ள தேவன். இந்த தேவனைத் தேட ஆரம்பித்தான் யோசியா என்ற அந்த இஸ்ரவேல் ராஜா. பரிசுத்தமுள்ள தேவனைத் தேடினால் பரிசுத்த வாழ்வு கிடைக்குமல்லவா! ''நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள் என்று எழுதியிருக்கிறதே'' (1பேது.1:16). வாலிபப் பிள்ளைகள் தன் இருதயத்தின் நினைவுகளுக்கேற்ப பொல்லாதவற்றையும், அருவருப்புகளையும் நாடித் தேடுகிறார்கள். உங்கள் பிள்ளைகளுக்கு உண்மையுள்ளவரும், பரிசுத்தமுள்ளவருமாகிய அந்த ஒரே தேவனைத்தேட கற்றுக்கொடுங்கள். அப்பொழுது நீங்கள் மகிழுவீர்கள்.

**மூன்றாவதாக,** ''...பன்னிரண்டாம் வருஷத்தில் மேடைகள் தோப்புகள் சுரூபங்கள் விக்கிரகங்கள் ஆகிய இவைகள் அற்றுப்போகும்படி, யூதாவையும் எருசலேமையும் சுத்திகரிக்கத் தொடங்கினான்'' (வச.34:3). அதாவது, தன்னுடைய 20வது வயதில் யூதாவையும் எருசலேமையும் சுத்திகரிக்கத் தொடங்கினான். இது நன்மை தீமை அறியத்தக்க வயது என்றுகூடச் சொல்லலாம், தான் மட்டும் கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதைச் செய்து, தன் தேவனைத் தேடினால் போதாது என்று யூதாவையும், எருசலேமையும் சுத்திகரிக்கத் தொடங்கியிருக்கிறான். எத்தனை



அருமையான செயல் இது! தேவையற்ற சுரூபங்கள் விக்கிரகங்களை அகற்றி சுத்திகரிப்பது அதிக அவசியமல்லவா? இன்றைய நாட்களில் மாய்மாலமான, வீணான ஆராதனை செய்யும் மக்களை ஜீவனுள்ள தேவன் அண்டைக்கு திருப்பி அவர்கள் சுத்திகரிக்கப்பட உதவுவது உங்களுடைய பிள்ளைகளின் பணி என்பதை மறந்துவிடவேண்டாம். அநேக தாய்மார்கள் தங்களுடைய பிள்ளைகளின் எதிர்காலத்தைக் குறித்து பெரிய பெரிய கற்பனையில் இருக்கலாம். என் பிள்ளை விஞ்ஞானி ஆக வேண்டும், டாக்டராக வேண்டும், கலெக்டர் ஆக வேண்டும், ஐ.பி.எஸ் ஆக வேண்டும் என்று பல்வேறு கற்பனைகளில் இருப்பீர்கள். நல்லது! ஆனால் இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி: ''அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம்; ஆகையால் அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள்'' (லூக்.10:2) என்று கூறின சப்தம் உங்கள் காதில் விழவில்லையா? யோசியா ராஜாவாக இருந்து கொண்டே மற்றவர்களை சுத்திகரிக்கத் தொடங்கினானே! உங்கள் பிள்ளைகளையும் அவ்விதமாய் கர்த்தருக்கென்று மனுஷரைப் பிடிக்க அனுப்பலாமே.

கடைசியாக, கர்த்தருடைய ஆலயத்தில் கண்டெடுக்கப்பட்ட உடன்படிக்கைப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிற உடன்படிக்கையின் வார்த்தைகளின்படியே தான் செய்வதினாலே, கர்த்தரைப் பின்பற்றி நடப்பேன் என்றும், தன் முழு இருதயத்தோடும் தன் முழு ஆத்துமாவோடும் அவருடைய கற்பனைகளையும் அவருடைய சாட்சிகளையும் அவருடைய கட்டளைகளையும் கைக்கொள்ளுவேன் என்றும் கர்த்தருடைய சந்நிதியில் உடன்படிக்கைபண்ணி எருசலேமிலும் பென்யமீனிலும் காணப்பட்ட யாவரையும் அதற்கு உட்படபண்ணினான்'' அவன் உயிரோடிருந்த நாளெல்லாம் அவர்கள் (இஸ்ரவேல்) தங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தரை விட்டுப் பின்வாங்கின தில்லை'' (வச.31-33). இவனுடைய நற்சாட்சியான ஜீவியம் நமக்கும் நம்முடைய பிள்ளைகளுக்கும் திருஷ்டாந்தமாயிருக்கிறதல்லவா?

அன்புச் சகோதரியே, உங்களுடைய பிள்ளை எப்படி நடக்கிறார்கள் என்று கருத்தாய் கவனியுங்கள். அவர்கள் இந்த யோசியாவைப் போல, காயுவைப்போல சத்தியத்திலே நடந்து உங்களை மகிழ்விக்கவும் உங்களுடைய பிள்ளைகள் நாளைய, இரட்சிப்பைச் சுதந்தரிக்கப்போகிறவர்களினிமித்தமாக ஊழியஞ்செய்யும்படிக்கு அவர்களெல்லாரும் அனுப்பப்படும் பணிவிடை ஆவிகளாயிருக்கவும் கர்த்தர் கிருபை செய்வாராக!

## கேள்விகள்

1. தன் இஷ்டத்திற்கு விடப்பட்ட பிள்ளையோ எதை உண்டுபண்ணுகிறான்?
2. ஞானமுள்ள பிள்ளையைப் பெற்றவர்கள் என்ன செய்வார்கள்?
3. எந்த ராஜா தான் எட்டு வயதாக இருக்கும்போதே கர்த்தருடைய பார்வைக்குச் செம்மையானதை செய்தான்?
4. அவன் தன்னுடைய எந்த வயதில் தாவீதின் தேவனை தேட ஆரம்பித்தான்?
5. யூதேயாவையும் எருசலேமையும் சுத்திகரிக்கத் தொடங்கின ராஜா யார்?

# கொடுங்கள்– Give

**41**

**கி**றிஸ்துவை தங்களுடைய இருதயங்களில் ஏற்றுக்கொண்ட அன்பு சகோதரிகளே, ''வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம் என்று கர்த்தராகிய இயேசு சொன்ன வார்த்தைகளை'' (அப்.20:35) நாமெல்லோரும் நன்கு அறிவோம். இன்று கிறிஸ்தவ சகோதரிகள் கூட ஆசீர்வதிக்கப்படாமல் எப்போது பார்த்தாலும் கடன், கஷ்டம் என்று அங்கலாயித்துக் கொண்டிருப்பதைக் காண்கிறோம். ஏன் இந்த அவலநிலை? ''கர்த்தரை தெய்வமாகக் கொண்ட ஜனம் பாக்கியமுள்ளது'' என்ற தேவவசனம் பொய்யாயிற்றோ! நிச்சயமாக இல்லை. வானமும் பூமியும் ஒழிந்து போனாலும் என் வார்த்தைகளோ ஒழிந்து போவதில்லை என கர்த்தர் சொல்லியிருக்கிறார். அப்படியானால் ஆசீர்வாதக் குறைச்சலுக்குக் காரணம் தான் என்ன? நாமே காரணம்! ஆம். வேதம் கூறுகிறது '' கொடுங்கள் அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும் அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து, உங்கள் மடியிலே போடுவார்கள்; நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும் என்றார்''(லூக்.6:38) நமதாண்டவர். ஆனபடியால் நீங்கள் ஆசீர்வதிக்கப்பட, கொடுக்கிறவர்களாகமாற வேண்டும்.

அன்பு சகோதரியே, கொடுக்கின்ற பழக்கம் உங்களுக்கு உண்டா? அநேகர் கொடுக்கின்ற விஷயத்தில் மிகவும் பின்னிலையில் தான் இருக்கின்றனர். கிறிஸ்துவின் நாம மகிமைக்கென்று கொடுக்கும் போது கிடைக்கின்ற ஆசீர்வாதத்திற்கு அளவே இல்லை. இன்றைய நாட்களில் அநேகர் தங்களுக்கு ஏதாவது கிடைக்குமென்றே கிறிஸ்தவர்களாக மாறுகின்றனர். இது தவறான எண்ணம். தேவன் கிறிஸ்துவையே நமக்கென்று கொடுத்துவிட்டாரே, அப்படியிருக்கும் போது நாம் தேவபணிக்கென்று, தேவ நாம மகிமைக்கென்று கொடுப்போம், அப்பொழுது நமக்கும் கொடுக்கப்படும். ஆனால் நாம் செய்யவேண்டியது என்ன? கொடுக்க வேண்டும். அதுவும் நமக்கு அதிகம் கொடுக்கப்படத்தக்க அளவில் கொடுக்க வேண்டும். வேதாகமத்தில் இவ்விதமாக கொடுத்து ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் அநேகர்.

அன்று கர்த்தருடைய தீர்க்கதரிசியாகிய எலியாவை சாறிபாத் என்ற ஊரிலிருந்த ஒரு விதவை உணவு கொடுத்து பராமரித்தாள். இந்த விதவையின் நிலை என்ன தெரியுமா? பானையில் ஒரு பிடி மாவும் கலயத்தில் கொஞ்சம் எண்ணெயுமே இருந்தது. அதை அவளும் அவளது குமாரனும் சாப்பிட்டுச் செத்துப்போக விறகு பொறுக்கிக்கொண்டிருந்தாள். ஆனால் தேவ ஊழியன் எலியாவோ, அவளை நோக்கிக் கூப்பிட்டு, கொஞ்சம் தண்ணீரும் கொஞ்சம் அப்பமும் உன்கையிலே எனக்குக் கொண்டுவா என்றான். அவளோ, தானும் தன் குமாரனும் சாப்பிட்டுச் செத்துபோக தங்களுக்கு ஆயத்தப்படுத்துகிறதற்கு விறகு பொறுக்குகிறேன் என்றாள். ஆனால் எலியா அவளைப் பார்த்து: ''பயப்படாதே, நீ போய் என் வார்த்தையின் படி ஆயத்தப்படுத்து; ஆனாலும் முதல் அதிலே எனக்கு ஒரு சிறிய அடையைப்பண்ணி



என்னிடத்தில் கொண்டு வா; பின்பு உனக்கும் உன் குமாரனுக்கும் பண்ணலாம். கர்த்தர் தேசத்தின் மேல் மழையைக் கட்டளையிடும் நாள் மட்டும் பானையின் மா செலவழிந்து போவதும் இல்லை; கலசத்தின் எண்ணெய் குறைந்து போவதும் இல்லை என்று இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார் என்றான். அவள் போய், எலியாவின் சொற்படி செய்தாள்; அவளும், இவனும், அவள் வீட்டாரும் அநேகநாள் சாப்பிட்டார்கள். கர்த்தர் எலியாவைக் கொண்டு சொன்ன வார்த்தையின்படியே, பானையிலே மா செலவழிந்துபோகவும் இல்லை; கலசத்தின் எண்ணெய் குறைந்துபோகவும் இல்லை'' (1இரா.17:9-16). பாருங்கள் இந்த விதவை முதலாவது தேவ ஊழியனுக்குக் கொடுத்தாள், அப்பொழுது இவளுக்கும், இவள் வீட்டாருக்கும் குறைவில்லாமல் கொடுக்கப்பட்டது.

இந்த விதவையைப்போலவே ஒரு பையன் தன்னிடத்திலிருந்த ஐந்து வாற்கோதுமை அப்பங்களையும் இரண்டு மீன்களையும் கொடுத்து ஏறக்குறைய ஐயாயிரம் புருஷர்கள் ஆசீர்வதிக்கப்பட காரணமானான் (யோவா.6:9). பொதுவாக சிறுபிள்ளைகள் தங்களிடமுள்ள எதையும் மற்றவர்களுக்குக் கொடுக்க விரும்பமாட்டார்கள். ஆனால் இந்த பையனோ கொடுக்க அறிந்தவனாயிருந்தான். எனவே ஆசீர்வாதத்திற்குக் காரணமானான். இவ்வாறு நாமும் கொடுக்கும் போது நாம் மட்டுமல்ல மற்றவர்களும் ஆசீர்வதிக்கப்பட காரணமாகிறோம்.

நம்மில் சிலர் இவ்விதமாகக் கொடுப்பதில்லை. கர்த்தர் என் கஷ்டத்தைப் போக்கட்டும், என் கடன் பிரச்சனையை நீக்கட்டும் எனக்கே வழியில்லாமலிருக்கும் போது கர்த்தருக்கடுத்த காரியத்திற்குக் கொடுக்கவோ, உதவிசெய்யவோ முடியாது என்பர். வேதாகமத்தில் மாற்கு12:42-ல் கூறப்பட்டுள்ள இரண்டு காசு காணிக்கையாக போட்ட அந்த ஏழை விதவையைப் பற்றி சிந்தித்துப் பாருங்கள்! அவள் காணிக்கையாகப் போட்டது இரண்டு காசு என்றாலும் தன் வறுமையிலிருந்து தன் ஜீவனத்துக்கு உண்டாயிருந்ததெல்லாம் போட்டுவிட்டாள். இவளைப் பார்த்த இயேசு ''....இந்த ஏழை விதவை அதிகமாய்ப் போட்டாள்'' என்றார். அன்பு சகோதரியே உற்சாகமாய் கொடுக்கிறவனிடத்தில் கர்த்தர் பிரியமாயிருக்கிறார்.

வேறுசிலர் தாம் ஏதோ நிரந்தரமாக இப்பூமியில் இருக்கப் போவதைப்போல் எண்ணி பணத்துக்கு மேல் பணத்தையும் சொத்துக்குமேல் சொத்தையும் தமக்காக சேமித்து மற்றவர்களுக்குக் கொடுக்க கொஞ்சங்கூட விரும்பமாட்டார்கள். உன்னோடிருக்கும் ஒரு ஏழை சகோதரியை, அல்லது குறைச்சலுள்ள ஒரு சகோதரியை குறித்து என்றாவது சிந்தித்ததுண்டா? ''ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்குக் கடன் கொடுக்கிறான்; அவன் கொடுத்ததை அவர் திரும்பக் கொடுப்பார்'' (நீதி.19:17). கிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் நீங்கள் கொடுத்ததை கர்த்தர் உங்களுக்குத் திரும்பக்கொடுப்பார் என்பதை மறக்கவேண்டாம்.

மேலும் நமக்கும் நம்முடைய குடும்பத்திற்கும் வேண்டுமென எண்ணி சுயநலமாய் வாழாதீர்கள். கொடுப்பதில் கருமித்தனமாயிராதீர்கள். தாராளமாய் கொடுத்துதவினால் நமக்கு இல்லாமல் போய்விடும் என நினைக்காதீர்கள். ''வாரியிறைத்தும் விருத்தியடைவாரும் உண்டு; அதிகமாய்ப் பிசினித்தனம்

பண்ணியும் வறுமையடைவாரும் உண்டு. உதாரகுணமுள்ள ஆத்துமா செழிக்கும்; எவன் தண்ணீர் பாய்ச்சுகிறானோ அவனுக்குத் தண்ணீர் பாய்ச்சப்படும்'' (நீதி.11:24,25) என வேதம் கூறுகிறது. இறைக்கிற கிணறுதான் ஊறும்.

நாங்கள் ஒருமுறை கர்த்தருடைய வசனத்தை விதைக்கும்பொருட்டு சிலருக்கு வேதாகமம் வாங்கிக் கொடுக்க நினைத்தோம். அப்பொழுது எங்களிடம் வேதாகமம் வாங்குவதற்கான பணமில்லை, ஜெபித்தோம். பிறகு எங்களிடமிருந்த கொஞ்சப் பணத்தை முதலாவது தேவ நாம மகிமைக்கென்று கொடுத்து சில வேதாகமம் மட்டும் வாங்குவோம் என நினைத்து முதலில் 20 வேதாகமம் மட்டும் வாங்கி சிலருக்கு கொடுக்க ஆரம்பித்தோம். பாருங்கள், என்ன ஆச்சரியம்! எதிர்பாரத விதமாக 20 வேதாகமமே வாங்கின எங்களுக்கு 312 வேதாகமங்கள் வாங்கத்தக்க அளவில் கொடுக்கப்பட்டது. அன்பு சகோதரியே, வசனம் ஒருபோதும் பொய்யாகாது. நம்மிடமுள்ள கொஞ்சத்தை உற்சாகமாய் கொடுக்கும் போது, நமக்கு அமுக்கி குலுக்கி சரிந்து விழும்படி அளவில்லாமல் கொடுக்கப்படுகிறது. ஆகவே நீங்கள் முதலாவது கொடுக்க ஆரம்பியுங்கள். உலகத்தார் எதிர்பார்ப்பது போல மற்றவர்களை எதிர்பார்க்காதீர்கள். உங்களிடத்திலுள்ளதைக் கொடுங்கள்.

உங்களுக்காக தன் ஜீவனையே கொடுத்த இயேசுவின் நாம மகிமைக்கு உங்களுடையதோடுகூட உங்களையும் கொடுங்கள். அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும். அமுக்கி குலுக்கி சரிந்துவிழும்படி கொடுக்கப்படும். ''கேட்கிறதற்கு ஒருவன் காதுள்ளவனாயிருந்தால் கேட்கக் கடவன் என்றார். பின்னும் அவர்(இயேசு) அவர்களை நோக்கி: நீங்கள் கேட்கிறதைக் கவனியுங்கள். எந்த அளவினால் அளக்கிறீர்களோ, அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும், கேட்கிற உங்களுக்கு அதிகம் கொடுக்கப்படும். உள்ளவனெவனோ அவனுக்குக் கொடுக்கப்படும், இல்லாதவனெவனோ அவனிடத்தில் உள்ளதும் எடுத்துக் கொள்ளப்படும் என்றார்''(மாற்.4:24,25). அன்பு சகோதரிகளே, இல்லை என்று சொல்லாமல் தம்மிடமிருந்த ஒரு பிடி மாவு, கொஞ்சம் எண்ணெயை கொடுத்த விதவையைப் போல, தம்மிடமிருந்த சில அப்பம், மீனைக் கொடுத்த பையனைப் போல, தம்மிடமிருந்த இரண்டு காசைப் போட்ட விதவையைப் போல, நம்மிடமிருக்கும் கொஞ்சத்தை உற்சாகமாய் கர்த்தருடைய பணிக்கெனக் கொடுத்து, ஆசீர்வதிக்கப்படுவோம். கர்த்தர் தாமே கொடுக்கும்படி உங்கள் இருதயங்களைப் பக்குவப்படுத்துவாராக! வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம்.

### கேள்விகள்

1. கொடுங்கள் அப்பொழுது உங்களுக்கு எப்படிக் கொடுக்கப்படும் என வேதம் கூறுகிறது?
2. எந்த ஊர் விதவை தேவனுடைய ஊழியனுக்கு அப்பமும் தண்ணீரும் கொடுத்து அநேக நாள் ஆசீர்வதிக்கப்பட்டாள்?
3. ஏறக்குறைய ஐயாயிரம் பேர் சாப்பிட்டு திருப்தியடைய காரணமாயிருந்தவன் யார்?
4. ஏழைக்கு இரங்குகிறவன் யாருக்குக் கடன்கொடுக்கிறான்?
5. யாருடைய ஆத்துமா செழிக்கும்?



# நீங்கள் தேவை
# You Are Needed

**42**

**அ**ன்பு சகோதரியே, நீங்கள் தேவை. இது விளம்பரம் போலிருக்கிறதே என்று நினைக்கிறீர்களா? இது ஒரு சாதாரண கம்பெனியின் விளம்பரமோ அல்லது ஒரு தொழிலுக்கான விளம்பரமோ அல்ல. நீங்கள் இயேசுவுக்கு தேவை. அவர் உங்களை பராமரித்து போஷித்து காப்பாற்றும் ஆண்டவர். அவருக்கு நீங்கள் இன்று மிக அதிகமாகத் தேவைப்படுகிறீர்கள். அவரது அழைப்பின் குரல் கேட்கின்றதா? ஒருவேளை நீங்கள் தேவனை அறிந்தவர்களாயிருக்கலாம், அல்லது தேவனை அறியாதவர்களாயிருக்கலாம். நீங்கள் யாராகயிருந்தாலும் சரி, எவ்வாறாக இருந்தாலும் சரி இயேசுவின் அரசாங்கத்திற்குள் வரவிரும்புகிற ஒருவரையும் அவர் புறம்பே தள்ளுகிறவரல்ல. இன்று உலகவேலைகளுக்காக, உலகத்தில் அந்தஸ்தைப் பெறுவதற்காக பல தகுதிகளோடு அலைந்து திரிகிறவர்களை அநுதினமும் காண்கிறோம். ஆனால், ஒருவரும் எதிலும் திருப்தியடையமுடிவதில்லை. பிரசங்கி என்ற வேதாகமப் புத்தகத்தில் ஞானியான சாலொமோன் ராஜா, ''சூரியனுக்குக் கீழே செய்யப்படுகிற காரியங்களையெல்லாம் கவனித்துப் பார்த்தேன்; இதோ, எல்லாம் மாயையும், மனதுக்குச் சஞ்சலமுமாயிருக்கிறது'' என்றார் (பிர.1:14).

அன்பு மகளே, என் அன்பு சகோதரியே, நான் எவ்வளவோ கஷ்டத்தின் மத்தியில் படித்தேன், எல்லாம் வீணாய் போயிற்றே, என் படிப்பிற்கேற்ற வேலை கிடைக்கவில்லையே, அல்லது கிடைத்திருக்கிற வேலையும் திருப்தி அளிக்கவில்லையே என்று புலம்புகிறாயா? ''அதிக ஞானத்திலே அதிக சலிப்புண்டு; அறிவுபெருத்தவன் நோவு பெருத்தவன்'' (பிர.1:18). ஆனால் உன்னை உண்டாக்கின தேவனுக்கு நீ தேவை, அவர் உன்னை ஏற்றுக்கொள்ள ஆயத்தமாயிருக்கிறார். அன்று இயேசுவுக்கு ஒரு கழுதைக் குட்டி தேவைப்பட்டது. ''...மனுஷர் ஒருவரும் ஒருக்காலும் ஏறியிராத ஒரு கழுதைக்குட்டி கட்டியிருக்கக் காண்பீர்கள், அதை அவிழ்த்துக் கொண்டு வாருங்கள்... இது ஆண்டவருக்கு வேண்டுமென்று சொல்லுங்கள்;...'' (மாற்.11:2,3) என்றார்.

''அவர்கள் அந்தக்குட்டியை இயேசுவினிடத்தில் கொண்டு வந்து, அதின்மேல் தங்கள் வஸ்திரங்களைப் போட்டார்கள்; அவர் அதின் மேல் ஏறிப்போனார்'' (மாற்.11:7). அந்த கழுதைக்குட்டி இயேசுவை சுமந்துசென்று தீர்க்கதரிசனம் நிறைவேற உதவியது. அந்த கழுதைக் குட்டியைப்போல இயேசுவின் சுவிசேஷத்தை சுமந்து சொல்ல நீங்கள் தேவை! இயேசுவுக்காக இந்த தேசத்தை சுதந்தரித்துக்கொள்ள நீங்கள் தேவை!! இயேசு கிறிஸ்து தேவனிடத்திலிருந்து வந்தவர். மனுக்குலத்தின் பாவத்தைப் போக்க தம்மைத்தாமே பலியாக ஒப்புக்கொடுத்தவர். அது மாத்திரமல்ல, மரித்தும் மூன்றாம் நாள் உயிரோடெழுந்து இன்றும் உயிருள்ளவராகவும் நம்மை காத்து இரட்சிக்கிறவராகவுமிருக்கிறார். இந்த சுவிசேஷத்தை சுமந்து சென்று இயேசுவை இந்த தேசத்திற்கு அறிமுகம் செய்ய நீங்கள் தேவை. இயேசு

அனைவருக்கும் தேவையுள்ளவராயிருக்கிறார். ஏனெனில் இயேசு கிறிஸ்து ஒருவரே சமாதானத்தையும், சந்தோஷத்தையும் கொடுத்து பாவத்தின் கொடூரபிடியிலிருந்தும், பாவத்தினால் உண்டாகும் மனவேதனையிலிருந்தும் ஒவ்வொருவரையும் மீட்கக்கூடியவர். அவரை விசுவாசித்து ஏற்றுக்கொள்ளும் தேசத்திற்கு சமாதானம் உண்டாகும்! ஆகவே இச்செய்தியினை அறிவிக்க இயேசுவுக்கு நீங்கள் தேவை! அன்று அவர் உயிர்த்தெழுந்த செய்தியை மகதலேனா மரியாளும், யோவன்னாளும், யாக்கோபின் தாயாகிய மரியாளும் பதினொருவருக்கும் மற்றெல்லாருக்கும் அறிவிக்க தயங்கவில்லை. நாம் தயக்கங் கொள்ளலாமா?

ஒரு அடிமைப்பெண் சீரிய தேசத்திற்குத் தேவைப்பட்டாள். தன்னுடைய அடிமைத்தனத்தினை எண்ணி தன்னையே அவள் நொந்துகொண்டிருக்கவில்லை. தான் ஓர் பெரிய அந்தஸ்த்தில் இல்லையே, தான் ஒரு சிறந்த ஞானியாக இல்லையே, எனக்கு எந்த தகுதியுமில்லையே, அந்நிய நாட்டில் ஜீவனுள்ள தேவனைக் குறித்து என் எஜமானுக்கு நான் எப்படிச்சொல்லுவேன் என்னுடைய ஜீவனுக்கு ஆபத்துவந்துவிடுமே என்றெல்லாம் அவள் சிந்திக்கவில்லை. தான் அறிந்து கொண்ட தன் தேவன் ஜீவனுள்ளவர், இந்த தேவனைத் தவிர பூமியெங்கும் வேறே தேவன் இல்லை, இந்த தேவன் தன் எஜமானுக்கு சுகமளிக்க முடியும் என்று எண்ணி, "அவள் தன் நாச்சியாரைப் (எஜமாட்டியைப்) பார்த்து, என் ஆண்டவன் சமாரியாவிலிருக்கிற தீர்க்கதரிசியினிடத்தில் போவாரானால் நலமாயிருக்கும்; அவர் இவருடைய குஷ்டரோகத்தை நீக்கிவிடுவார் என்றாள்" (2இராஜா.5:3).

அந்தப்படியே சீரிய ராஜாவின் படைத்தலைவன் நாகமான் போய் சுகம்பெற்றான். "...அவனைக் கொண்டு கர்த்தர் சீரியாவுக்கு இரட்சிப்பைக் கட்டளையிட்டார்" (2இராஜா.5:1). ஒரு அடிமைப் பெண் கூறின நற்செய்தி அந்த தேசத்திற்கு இரட்சிப்பைக் கொண்டுவந்தது. அன்பு சகோதரியே, நம் தேசம் காக்கப்பட வேண்டாமா? எங்கு பார்த்தாலும் வன்முறைகளும், கலவரங்களும், அன்புத்தாழ்ச்சியினால் கொலைகளும், கொள்ளைகளும், சமாதானமின்மையும் காணப்படுகின்ற இவ்வேளையில் நீங்கள் தேசத்திற்குத் தேவை. அன்பும், பரிசுத்தமும், உள்ள இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தினால் உண்டாகும் சந்தோஷத்தையும், சமாதானத்தையும் அறிவிக்க நீங்கள் இயேசுவுக்குத் தேவை.

பழைய ஏற்பாட்டில் யோசியா ராஜாவின் காலத்தில் ஒரு பெண் தீர்க்கதரிசி வாழ்ந்து வந்தாள். அவள் பெயர் உல்தாள். அவள் ஒரு வஸ்திரசாலை விசாரிப்புக்காரனின் மனைவி. அப்படியானால் ஒரு சாதாரண, உடைகள் வைக்கும் அறையின் பொறுப்பாளியின் மனைவி ஆனால் இவள் ராஜாவுக்கு அவனுடைய ஊழியக்காரர் மூலமாக கர்த்தருடைய வார்த்தைகளை சொல்லியனுப்பி ஒரு தீர்க்கதரிசியாக விளங்கினாள் (2நாளா.34:21-28). இவளைக் குறித்து 2நாளா.22-ல் இவள் இரண்டாம் வகுப்பிலே குடியிருந்தாள் (அதாவது நடுத்தரவகுப்பில்) என்றும் வாசிக்கிறோம். ஒரு சாதாரண பெண் தன்னுடைய ராஜாவுக்கு கர்த்தருடைய வார்த்தைகளை சொல்லியனுப்பினாள் என்றால் நாமும்கூட நம்முடைய சமாதானக் கர்த்தரின் சுவிசேஷத்தையும், இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக்



குறித்தும் நம் தொழிகளுக்கு அறிவிக்க முடியுமே. இயேசுகிறிஸ்து திரும்பவும் வரபோகிறார் அவருடைய வருகைக்கு அடையாளமாக, "யுத்தங்களையும் யுத்தங்களின் செய்திகளையும் கேள்விப்படுவீர்கள்; ...ஜனத்துக்கு விரோதமாய் ஜனமும், ராஜ்யத்துக்கு விரோதமாய் ராஜ்யமும் எழும்பும், பஞ்சங்களும், கொள்ளை நோய்களும், பூமியதிர்ச்சிகளும் பல இடங்களில் உண்டாகும்... அக்கிரமம் மிகுதியாவதினால் அநேகருடைய அன்பு தணிந்துபோம்" (மத்.24:6-12). "ராஜ்யத்தினுடைய இந்தச் சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும் அப்போது முடிவு வரும்" (மத்.24:14) என்று வேதம் கூறுகிறது. மேற்கூறிய சம்பவங்கள் இன்று நடக்கவில்லையா? நடக்குமானால் இராஜ்யத்தின் சுவிசேஷச் செய்தியினை தேசத்திற்கு அறிவித்து தேசத்தை அழிவுக்குத் தப்புவிக்க இயேசுவுக்கு நீங்கள் தேவை.

அன்று பிலேயாம் என்ற தீர்க்கதரிசிக்கு புத்திசொல்ல ஒரு கழுதை தேவைப்பட்டது. பிலேயாமின் வழி கர்த்தருக்கு மாறுபாடாயிருந்ததனால் கர்த்தர் கழுதையின் வாயைத் திறந்தார் (எண்.22:21-33). நீங்கள் எப்பேர்ப்பட்டவர்களாயிருந்தாலும் கர்த்தருக்கு நீங்கள் தேவை. அவர் உங்களை தம்முடைய ராஜ்யத்தில் அல்லது தம்முடைய அரசாங்கத்தில் பணிபுரிய அழைக்கிறார். உங்களால் கர்த்தருடைய சுவிசேஷத்தைப் பகிர்ந்து கொள்ளமுடியவில்லையென்றால் ஜெபிக்கமுடியுமே. அன்பு சகோதரியே, நீங்கள் எப்போதும் எந்நிலையிலும் கர்த்தருக்குத் தேவை என்பதை மறந்துபோகாதீர்கள்.

இயேசுவின் நாட்களில் அநேக ஸ்திரீகள் இயேசுவோடுகூட ஊழியத்தில் ஈடுபட்டிருந்தனர். காலம் செல்லாது கிறிஸ்துவின் வருகை மிகச்சமீபம். ஒரு திரளான கூட்டமோ அல்லது உங்கள் தேசமோ அல்லது உங்கள் ஜனமோ அல்லது குடும்பமோ நித்திய ஆக்கினைக்குள்ளாகத் தள்ளப்பட்டு போய்விடாதபடிக்கு அவர்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்க, ஜீவனுள்ள மார்க்கத்தை அறிவிக்க, ஜீவனுள்ள தேவனை அடையாளம் காட்ட அல்லது அவர்களுக்காக ஜெபிக்க நீங்கள் தேவை. இன்றே நற்செய்தியை அறிவிக்கும் நாள். புறப்படுங்கள். இல்லையேல் திறப்பின் வாசலில் நின்று இரவு பகலாக ஜெபியுங்கள். இயேசுவின் அரசாங்கத்தில் பணியிடங்கள் அநேகம் உண்டு. அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம். எனவே நீங்கள் இயேசுவுக்கு தேவை இன்றே பணியில் சேருங்கள். கர்த்தர் உங்களை வழிநடத்தி, ஆசீர்வதிப்பாராக!

## கேள்விகள்

1. எவைகள் மனதுக்கு சஞ்சலமாயிருக்கிறது என்று பிரசங்கி கூறுகிறான்?
2. அறிவு பெருத்தவன் எப்படிப்பட்டவனாயிருக்கிறான்?
3. இது ஆண்டவருக்கு வேண்டுமென்று சொல்லுங்கள் என்று எதைக்குறித்து இயேசு சொன்னார்?
4. இப்பாடத்தில் குறிப்பிடப்படும் பெண் தீர்க்கதரிசியின் பெயர் என்ன?
5. எப்போது முடிவு வரும் என்று வேதம் கூறுகிறது?

# முதல் நூற்றாண்டில் முதன்மையான தம்பதியர்
# An Excellent Couple In The First Century

**43**

**ச**கரியா, எலிசபெத். இவர்களை அறியாதவர்கள் உண்டா? நிச்சயமாக இருக்கமுடியாது. சகரியா என்பவன் ஒரு ஆசாரியனாக இருந்தான். அதாவது தேவனுக்கு பணிவிடை செய்யும் ஒரு ஊழியனாக செயல்பட்டான். அவன் மனைவி எலிசபெத் ஆரோனுடைய குமாரத்திகளில் ஒருத்தி. இவர்கள் இருவருமே தேவனுக்கு ஊழியஞ்செய்தவர்கள். ஆதாமுக்கு ஏற்ற துணையை கர்த்தர் உண்டு பண்ணினார் என்று ஆதியாகம புத்தகத்தில் படிக்கிறோம். எலிசபெத் சகரியாவுக்கு ஏற்ற துணையாக இருந்து ஊழியத்தில் உதவினாள். கர்த்தருக்கு பணிவிடை செய்தவர்களாக மட்டுமல்ல, இருவரும் ஒருமித்தவர்களாய் தேவனுடைய சித்தம் செய்கிறவர்களாயுமிருந்தார்கள்.

கர்த்தருடைய தூதன் சகரியாவை நோக்கிக்கூறுகையில், 'சகரியாவே, பயப்படாதே, உன் வேண்டுதல் கேட்கப்பட்டது' என்றான் (லூக்.1:13). சகரியா ஊக்கமாக தேவனை நோக்கி ஜெபிக்கிற ஒரு தேவ மனிதனாக இருந்தான். இன்றைக்கு இந்த சகரியாவோ தன் தேவனை நோக்கி வேண்டினான் அவனுடைய வேண்டுதல் கேட்கப்பட்டது. எலிசபெத்தும் தன் தேவனிடத்தில் மிகுந்த பக்தியுள்ள ஒரு ஸ்திரீயாகவும் இருந்திருக்கிறாள். இன்றைக்கு இப்படிப்பட்ட ஒருமனமுள்ள தம்பதிகள் கர்த்தருடைய ஊழியத்திற்கு தேவை. முதல் நூற்றாண்டில் வாழ்ந்த அநேக தம்பதியர்களைக் குறித்து புதியஏற்பாட்டில் வாசிக்கிறோம்.

குறிப்பாக இயேசுவின் பிறப்பின்போது இருந்த இந்த தம்பதியர்கள் முதன்மையானவர்கள் என்றே சொல்லவேண்டும். ஏனென்றால் ஆண்டவரின் பிறப்பை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தவர்கள். மரியாள் தங்களோடு மூன்று மாதம் தங்கி இருக்கும் பாக்கியத்தை பெற்றவர்கள். இதோ சகோதரர் ஒருமித்து வாசம் பண்ணுகிறது எத்தனை நன்மையும் எத்தனை இன்பமுமானது என தாவீது பாடின பாடலின் படி ஒருமித்து வாசம் செய்து தேவனை துதிக்கிற பாக்கியத்தைப் பெற்றவர்கள். என்னதான் உடன் பிறந்தவர்களாக இருந்தாலும் விருந்தோம்பல் என்பது ஒரு சில நாட்கள் தான். அதன் பின்பு அது கசப்பாகிவிடுகிறது. அதற்கும் மிஞ்சினால் சண்டையில் வந்து முடியும். ஆனால் தேவனுக்குள்ளாக இருக்கும் இந்த ஐக்கியம் எப்படிப்பட்டதென்று பாருங்கள். மூன்று மாதம் சகரியா வீட்டில் தங்கியிருந்தாள் என்றால் எவ்வளவு ஆசீர்வாதமான காரியம்.

மேலும், சகரியா எலிசபெத் ஒருமித்தவர்களாய் இருந்தார்கள் என்பதற்கு இன்னொரு சம்பவத்தையும் கூறலாம். எலிசபெத்தும் சகரியாவும் தன்னுடைய பிள்ளைக்கு யோவான் என்ற பெயரிட மனதாயிருந்தார்கள். ஏனெனில் இது தேவனால் கட்டளையிடப்பட்ட பெயர். தேவனுடைய கட்டளையை மீறாதவர்களாக



தங்களுடைய உறவினர்கள் விருப்பத்தின்படி பேரிட மனதாயிராமல் இருவருமே யோவான் என பேரிட வேண்டுமென்றிருந்தார்கள் என வாசிக்கிறோம். "அப்பொழுது அதின் தாய் (எலிசபெத்): அப்படியல்ல, அதற்கு யோவான் என்று பேரிடவேண்டும் என்றாள். அதற்கு அவர்கள்: உன் உறவின் முறையாரில் இந்தப் பேருள்ளவன் ஒருவனும் இல்லையே என்று சொல்லி, அதின் தகப்பனை (சகரியாவை) நோக்கி: இதற்கு என்ன பேரிட மனதாயிருக்கிறீர் என்று சைகையினால் கேட்டார்கள். அவன் எழுத்துப் பலகையைக் கேட்டு வாங்கி, இவன் பேர் யோவான் என்று எழுதினான்; எல்லாரும் ஆச்சரியப்பட்டார்கள்" (லூக்.1:60-63). பாருங்கள், இந்த தம்பதியர் உறவினர்களின் விருப்பத்தைக் காட்டிலும் கர்த்தருடைய விருப்பத்தினைச் செய்வதில் எவ்வளவு ஜாக்கிரதையாக இருந்திருக்கிறார்கள்!

இச்செய்தியை வாசிக்கின்ற என் அன்பு சகோதரியே, நீங்களும் எலிசபெத்தைப்போல் உங்களுடைய கணவனோடுகூட ஒருமித்தவர்களாய் தேவனுடைய சித்தம் செய்கிறவர்களாக இருக்கிறீர்களா அல்லது உறவினருடைய விருப்பத்தையே செய்கிறவர்களாக இருக்கிறீர்களா? எந்த ஒரு தம்பதியரும் தேவனுக்கடுத்த காரியத்தைச் செய்வதில் ஒருமனமுடையவர்களாக இருந்தால் தான் அந்தக் காரியத்தில் வெற்றிபெறமுடியும். சில சகோதரிகள் சின்ன சின்ன விஷயங்களில் கூட தன்னுடைய கணவனோடு ஒத்துப்போகமட்டார்கள். அப்படியிருக்கும் போது குடும்பத்தில் பிரச்சனைகள் ஏற்படும். சமாதானக்குறைவு உண்டாகும். ஆகையால் இயேசு சொல்வதைக் கவனியுங்கள்; "ஒரு வீடு தனக்குத்தானே விரோதமாகப் பிரிந்திருந்தால், அந்த வீடு நிலைநிற்கமாட்டாதே" என்கிறார் (மாற்.3:25). உங்கள் வீடு நிலை பெற தேவசித்தத்திற்கு ஒப்புக்கொடுங்கள்.

அவர்கள் ஒருமனப்பட்டவர்களாய் இருந்தது மாத்திரமல்ல, "அவர்கள் இருவரும் கர்த்தரிட்ட சகல கற்பனைகளின்படியேயும் நியமங்களின்படியேயும் குற்றமற்றவர்களாய் நடந்து, தேவனுக்கு முன்பாக நீதியுள்ளவர்களாயிருந்தார்கள்" என்று வாசிக்கிறோம் (லூக்.1:6). இவ்வசனத்தில் கணவன் மட்டும் அல்லது மனைவி மட்டும் கர்த்தருடைய கற்பனைகளின்படி நடந்ததாக கூறப்படவில்லை. அவர்கள் இருவரும் கர்த்தரிட்ட சகல கற்பனைகளின்படியேயும் நியமங்களின் படியேயும் குற்றமற்றவர்களாய் நடந்து என்று எழுதப்பட்டுள்ளது. இருவருமே இந்த மேன்மையான காரியத்தை குற்றமற்றவர்களாய் செய்தார்களென்றால், நிச்சயமாக அவர்களுக்கு தேவன்பால் மிகுந்த அன்பும் பக்தியும் இருந்திருக்கவேண்டும். "கர்த்தரை தங்களுக்குத் தெய்வமாகக்கொண்ட ஜாதியும், அவர் தமக்குச் சுதந்தரமாகத் தெரிந்துகொண்ட ஜனமும் பாக்கியமுள்ளது" என்ற சங்கீதம்33:12-ன் படி இவ்விருவரும் கர்த்தரை தங்களுக்குத் தெய்வமாகக் கொண்டிருந்தனர்.

இவர்கள் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள். அன்பு, அன்பு என்று சொல்லுகிறோம் அந்த அன்பின் வடிவாக, சொருபியாக இருக்கும் தேவனுடைய வசனம் சொல்லுகிறது, "நாம் அவருடைய கற்பனைகளின்படி நடப்பதே அன்பு" என்று (2யோவா.6). இந்தக்கற்பனையின் படி நடக்க சகரியாவும் எலிசபெத்தும் தவறவில்லை. இன்று இவ்விதமான தம்பதியரைக் காண்பது அரிதாயிருக்கிறது. முதல்

நூற்றாண்டிலே பொய் சொல்வதில் ஒன்றுமையாக இருந்த அனனியா சப்பீராளைப்போல உள்ள தம்பதியரையே காணமுடிகிறது.

பூமியிலே வாழ்க்கை என்பது ஒரு முறை தான். அந்த ஒரு முறை வாழக்கூடிய வாழ்க்கையில் இந்த சகரியா எலிசபெத் தம்பதியரைப் போல தேவனுடைய கற்பனைகளின்படியும் நியமங்களின்படியும் குற்றமற்றவர்களாய் நடந்து, தேவனுக்கு முன்பாக நீதியுள்ளவர்களாயிருக்க பிரயாசப்படுங்கள். பவுல் சொல்லுகிறார்; "இதனால் நான் தேவனுக்கும் மனுஷருக்கும் முன்பாக எப்பொழுதும் குற்றமற்ற மனச்சாட்சியை உடையவனாயிருக்கப்பிரயாசப் படுகிறேன்" (அப்.24:16). நீங்கள் எப்படிப்பட்டவர் களாக இருக்கப்போகிறீர்கள்? உங்களுடைய வாழ்க்கைப் பாதையில் முதல் நூற்றாண்டில் ஜீவித்த முதன்மையான தம்பதியரை மாதிரியாக நோக்குங்கள். கர்த்தர் அதற்கு வேண்டிய ஞானத்தையும், பெலத்தையும் உங்களுக்குத் தரும்படியாக ஜெபிக்கிறோம்.

### கேள்விகள்

1. சகரியா எலிசபெத் தம்பதியர் ஒரே மனதுடையவர்களாக இருந்தார்கள் என்பதற்கான ஒரு சான்றினைக் கூறுக?
2. ஒரு வீடு எப்போது நிலைநிற்க மாட்டாதே என வேதம் கூறுகிறது?
3. சகரியா எலிசபெத் தம்பதியர் எப்படிப்பட்டவர்களாயிருந்தார்கள்?
4. எந்த ஜாதியும் ஜனமும் பாக்கியமுள்ளது?
5. எவர்களுக்கு முன்பாக குற்றமற்ற மனசாட்சியுடையவர்களாக இருக்கவேண்டும்?



## தாய் – Mother

## 44

"பிள்ளையானவன் நடக்க வேண்டிய வழியிலே நடத்து, அவன் முதிர்வயதிலும் அதை விடாது பற்றிக்கொள்ளுவான்" என வேதம் கூறுகிறது (நீதி.22:6). உங்கள் பிள்ளைகள் நடக்க வேண்டிய வழியிலே அவர்களை நடத்தினீர்களா? உங்கள் பிள்ளைகளுக்குக் கர்த்தருடைய வார்த்தையை கருத்தாய் போதித்து, நீ உன் வீட்டில் உட்கார்ந்திருக்கிறபோதும், வழியிலே நடக்கிற போதும், படுத்துக்கொள்ளுகிற போதும் எழுந்திருக்கும் போதும் அவைகளைக் குறித்துப் பேசினீர்களா? (உபா.6:7). இல்லையென்றால் கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறதைக் கேளுங்கள், "இதோ, எல்லா ஆத்துமாக்களும் என்னுடையவைகள்; ...அப்படியே மகனின் ஆத்துமாவும் என்னுடையது (எசேக்.18:4). எனவே கர்த்தருக்குரியவர்களை அவருடைய சித்தத்திற்கு ஒப்படையுங்கள். அப்படியாக ஒப்படைத்து தேவ ஆசீர்வாதம் பெற்ற சில தாய்மார்களைப் பற்றி தியானிப்போம்.

அன்னாள் ஒரு அருமையான தாய். பிள்ளையில்லை என்ற காரணத்தால் மற்றவர்களால் விசனப்படுத்தப்பட்டவளாய் கர்த்தருடைய சமூகத்தில் மனங்கசந்து அழுது, கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணி; சேனைகளின் கர்த்தாவே, தேவரீர் உம்முடைய அடியாளின் சிறுமையைக் கண்ணோக்கிப் பார்த்து, உம்முடைய அடியாளை மறவாமல் நினைத்தருளி, உமது அடியாளுக்கு ஒரு ஆண்பிள்ளையைக் கொடுத்தால், அவன் உயிரோடிருக்கும் சகல நாளும் நான் அவனை கர்த்தருக்கு ஒப்புக்கொடுப்பேன்; ...என்று ஒரு பொருத்தனை பண்ணினாள்" (1சாமு.1:11). அந்தப்படியே அவள் ஒரு குமாரனைப் பெற்று, "....அவன் கர்த்தருக்கென்று கேட்கப்பட்டபடியினால், அவன் உயிரோடிருக்கும் சகல நாளும் அவனைக் கர்த்தருக்கே ஒப்புக்கொடுக்கிறேன் என்றாள்" (1சாமு.1:28). தான் வெகுவாய் சிறுமைப்படுத்தப்பட்டிருந்த நிலையில் அநேக நாட்களுக்குப் பின் பிறந்த பிள்ளையை நான் எப்படி கர்த்தருக்கென்று ஒப்புக்கொடுப்பது என்று தயங்கினாளா? இல்லை தேவனுக்குரியதை தேவனுக்கென்று கொடுத்தாள். 'சாமுவேல்' என்ற பிள்ளையாண்டானோ, பெரியவனாக வளர்ந்து கர்த்தருக்கும் மனுஷருக்கும் பிரியமாக நடந்து கொண்டான் (1சாமு.2:26). அன்பான தாய்மார்களே, உங்களுடைய பிள்ளைகள் இவ்விதமாய் நடந்து கொள்ளுகின்றார்களா?

பாருங்கள், மனோவாவின் மனைவி பிள்ளை பெறாத மலடியாயிருந்தாள். "கர்த்தருடைய தூதனானவர் அந்த ஸ்திரீக்கு தரிசனமாகி, அவளை நோக்கி: இதோ, பிள்ளை பெறாத மலடியான நீ கர்ப்பந்தரித்து, ஒரு குமாரனைப் பெறுவாய் என்றார் (நியா.13:3). இதை அறிந்த இந்த தம்பதியாரோ, பிள்ளை பிறக்கும் முன்பே அந்தப் பிள்ளையை எப்படி வளர்க்க வேண்டும், அதை எப்படி நடத்தவேண்டும் என்றெல்லாம் கேட்டறிந்து கர்த்தருக்குப் பிரியமாய் செயல்பட முற்பட்டனர். கர்த்தருடைய சுதந்தரமாகிய பிள்ளைகளைப் பெற்றெடுத்த தாய்மார்களே, நீங்கள் உங்கள்

பிள்ளைகளை எப்படி வளர்க்கவேண்டும், அதை எப்படி நடத்த வேண்டும் என்று அறிந்திருக்கிறீர்களா? இல்லை, அதிசயமாய் கிடைத்த என் பிள்ளை உலகத்தின் காரியங்களில் இஷ்டம்போல் நடக்கட்டும் என்றிருக்கிறீர்களா?

எலிசபெத் என்ற ஒரு தாயைக் குறித்து நீங்கள் அறிவீர்கள். லூக்.1:5-7 வரை வேதாகமம் இவளைக் குறித்து அழகாய் சாட்சி பகர்கின்றது. "அவர்கள் இருவரும்....கர்த்தரிட்ட சகல கற்பனைகளின்படியேயும் நியமங்களின்படியேயும் குற்றமற்றவர்களாய் நடந்து, தேவனுக்கு முன்பாக நீதியுள்ளவர்களாயிருந்தார்கள். எலிசபெத்து மலடியாயிருந்தபடியினால், அவர்களுக்குப் பிள்ளையில்லாதிருந்தது; இருவரும் வயது சென்றவர்களாயும் இருந்தார்கள்" என்று கூறுகிறது. வயது சென்றவளாயிருந்த இவர்களுக்கு கர்த்தர் யோவானைக் கொடுத்தார். இவனைக் குறித்து கர்த்தருடைய தூதன் "பிதாக்களுடைய இருதயங்களைப் பிள்ளைகளிடத்திற்கும், கீழ்ப்படியாதவர்களை நீதிமான்களுடைய ஞானத்திற்கும் திருப்பி, உத்தமமான ஜனத்தைக் காத்தருக்கு ஆயத்தப்படுத்தும்படியாக, அவன் எலியாவின் ஆவியும் பலமும் உடையவனாய் அவருக்கு முன்னே நடப்பான் என்றான்" (லூக்.1:17).

அந்தப்படியே யோவான், இயேசுவே உலகத்தின் ஒளி என்றும், உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி என்றும், அவர் தேவனுடைய குமாரன் என்றும் சாட்சி கொடுத்து வந்தான். இந்த எலிசபெத் தான் கர்த்தரிட்ட சகல கற்பனைகளின் படியேயும் நடந்து வந்தபடியினால் தன் மகனையும் கர்த்தரைக் குறித்து சாட்சி கொடுக்கும்படி ஒப்புக்கொடுத்தாள். அன்பு தாய்மார்களே, நீங்கள் உங்கள் பிள்ளைகளை கர்த்தரைக் குறித்து சாட்சி சொல்லும்படி ஒப்புக் கொடுத்துள்ளீர்களா?

இயேசுவின் தாயாகிய மரியாளைப் பாருங்கள். மாம்சத்தில் வந்த இயேசுவைப் பெற்றெடுத்த போதிலும் பிதாவின் சித்தத்திற்கு இயேசுவை ஒப்புக்கொடுத்த தோடல்லாமல் தானும் தன்னை பிதாவின் சித்தத்திற்கு ஒப்புக்கொடுத்து ஊழியத்திலே இயேசுவோடு கூட சென்று, "அவர் (இயேசு) உங்களுக்கு என்ன சொல்லுகிறாரோ, அதன்படி செய்யுங்கள்..." (யோவா.2:5) என்று சொல்லி அநேகரை இயேசுவுக்கு நேராய் வழி நடத்தினாள். அதுமாத்திரமல்ல பிதாவின் சித்தம் செய்து ஊழியம் செய்து வந்த இயேசுவுடனே கூட அவருக்குப் பின்சென்று ஊழியஞ்செய்யும்படி தன்னுடைய மற்ற பிள்ளைகளையும் ஒப்புக்கொடுத்திருந்தாள். "சில ஸ்திரீகளும் தூரத்திலிருந்து பார்த்துக்கொண்டிருந்தார்கள். அவர் கலிலேயாவிலிருந்தபோது அவருக்குப் பின் சென்று ஊழியஞ்செய்து வந்த மகதலேனா மரியாளும், சின்ன யாக்கோபுக்கும் யோசேக்கும் தாயாகிய மரியாளும்.... அவருடனே கூட எருசலேமுக்கு வந்திருந்த வேறே அநேக ஸ்திரீகளும் அவர்களோடே இருந்தார்கள் (மாற்.15:40,41).

அன்பு தாய்மார்களே, உங்களுடைய பிள்ளைகளை கர்த்தருக்கு ஊழியஞ்செய்ய ஒப்புக்கொடுத்திருக்கிறீர்களா? அல்லது ஊழியஞ்செய்யும் உங்கள் பிள்ளையிடம் உங்கள் மாம்ச அன்பைக் காட்டி பிதாவினிடத்தில் முழு அன்பு கூர தடையாயிருக்கிறீர்களா? ஒன்றை மறந்து போக வேண்டாம். உங்கள் பிள்ளைகளின் ஆத்துமா கர்த்தருடையது. அவர்கள் கர்த்தருடையவர்கள் (எசேக்.18:4).



ஐனிக்கேயாள் ஓர் விசுவாசமிகுந்த தாய். அவளுக்குள் நிலைத்திருந்த விசுவாசம் அவளுடைய மகன் தீமோத்தேயுக்குள்ளும் நிலைத்திருந்தது. இது குறித்து பவுல் "அந்த விசுவாசம்... உன் தாயாகிய ஐனிக்கேயாளுக்குள்ளும் நிலைத்திருந்தது; அது உனக்குள்ளும் நிலைத்திருக்கிறதென்று நிச்சயத்திருக்கிறேன்" (2தீமோ.1:5) என தீமோத்தேயுக்கு எழுதுகிறான். எனவே தீமோத்தேயு ஒரு உத்தம ஊழியனாயிருந்தான். அன்பு தாயே, உங்களுடைய விசுவாசம் உங்களுடைய பிள்ளைகளுக்குள் நிலைத்திருக்கிறதா? அல்லது இக்காலத்திற்கேற்றவாறு உங்கள் பிள்ளைகளை வளர்க்கின்றீர்களா? பேதுரு, விசுவாசத்தை கூட்டி வழங்கும்படி அறிவுறுத்துகிறார் (2பேது.1:5). உங்கள் பிள்ளைகளுக்கு விசுவாசத்தை கூட்டி வழங்கி அநேக தீமோத்தேயுக்களை உருவாக்குவீர்களா?

எனக்குப் பிரியமான தாய்மார்களே, உலகம் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறது. நாம் நம்முடையவர்களல்ல. அப்படியிருக்க உங்களுடைய பிள்ளைகளும் உங்களுடையவர்களல்ல. எல்லா ஆத்துமாவும் கர்த்தருடையது என அறிகிறோம். கர்த்தரிடத்திலிருந்து இரவலாக பெற்றுள்ள பிள்ளைகளை உலகத்திற்கொத்த வேஷம் தரிக்க வழிநடத்தாமல் கர்த்தருக்கேற்ற சிட்சையில் வளர்த்து பிள்ளையானவன் நடக்க வேண்டிய வழியில் நடத்தி பொல்லாங்கனுக்கு நம்முடைய பிள்ளைகளை ஒப்புக்கொடுத்து விடாமல் கர்த்தருக்கே ஒப்புக்கொடுப்போம். மாம்சசிந்தைக்கு இடமளிக்காமல் கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையைப் பெற்று மேற்கண்ட தாய்மார்களைப் போல் முழுமனதுடனே நம்முடைய பிள்ளைகளை பிதாவின் சித்தத்திற்கு ஒப்படைத்து இம்மையிலும் மறுமையிலும் நாமும் நம்முடைய பிள்ளைகளும் காக்கப்படுவோமாக!

## கேள்விகள்

1. எல்லா ஆத்துமாகக்களும் யாருடையவைகள்?
2. தன் சகல நாளும் கர்த்தருக்கே ஒப்புக்கொடுக்கிறேன் என்றவள் யார்?
3. பிள்ளைபிறக்கும் முன்பே அந்த பிள்ளையை எப்படி வளர்க்கவேண்டுமென்று கர்த்தரிடம் கேட்டவர்கள் யார்?
4. உத்தமான ஜனத்தைக் கர்த்தருக்கு ஆயத்தப்படுத்தும்படியாக வந்த எலியாவின் ஆவியும் பலமும் உடையவன் யார்?
5. எவர்களுடைய விசுவாசம் தீமோத்தேயுவுக்குள்ளும் நிலைத்திருந்தது?

# கர்த்தர் தெய்வமானால் அவரை பின்பற்றுங்கள்
# If The Lord Be God, Follow Him

**45**

**அ**ன்பான சகோதரிகளே, இன்று ஆவியானவர் நம்மை நோக்கி அறைகூவலிடும் இச்சத்தத்தை நம்மால் உணர முடிகிறதா? இன்றைய கிறிஸ்தவ சகோதரிகளுக்கு இது மிகத்தேவையான ஒரு அறைகூவல் என்றே எண்ணுகிறேன்.

அன்றைய நாளில் இஸ்ரவேல் ஜனங்களை நோக்கி எலியா தீர்க்கதரிசி "...நீங்கள் எந்த மட்டும் இரண்டு நினைவுகளால் குந்திக்குந்தி நடப்பீர்கள்; கர்த்தர் தெய்வமானால் அவரை பின்பற்றுங்கள்..." என்றான். ஆம் சகோதரிகளே, கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொண்டு அநேகர் இவ்விதமாகத்தான் குந்திக்குந்தி நடக்கிறார்கள். கர்த்தரை ஜீவனுள்ள தேவனுடைய குமாரன் என்று இருதயத்தில் விசுவாசித்து, அறிக்கையிட்டு ஞானஸ்நானத்திற்கு ஒப்புக்கொடுத்த அன்று முதல் கிறிஸ்தவர்கள் அல்லது கிறிஸ்துவை உடையவர்கள் என்று உன்னத நிலைக்கு வந்து விட்டு இன்று குந்தி குந்தி நடப்பது ஏன்?

காரணம், உலகக் காரியங்கள், இனம், ஜனம், ஜாதி, நிறம், பணம் என்ற பல வகையான உருவில் அநேகரை இருமனமுள்ளவர்களாக குந்திக் குந்தி நடக்கப்பண்ணுகிறதாய் இருக்கிறது. நமதாண்டவராகிய இயேசுகிறிஸ்து நான் உலகத்தானல்லாதது போல நீங்களும் உலகத்தாரல்ல என்கிறாரே! அவரை வஞ்சிக்க நினைக்கலாமா?

கிறிஸ்தவர்களாய் இருக்கிற நாம் உண்மையான முழு மனதுடன் கிறிஸ்துவினிடத்தில் அன்பு கூர்ந்து அவரை பின்பற்றுகிறவர்களாய் இருப்பதையே தேவன் நம்மில் எதிர் பார்க்கிறார். கர்த்தரை நம் தெய்வமாய் கொண்டிருந்தோமானால் அவரை பின்பற்றுவோம். எப்படி?

"கொரி. 6:14-18 முடிய உள்ள வசனங்களில், அந்நிய நுகத்திலே விசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருப்பீர்களாக, அவிசுவாசியுடனே விசுவாசிக்குப் பங்கேது? தேவனுடைய ஆலயத்துக்கும் விக்கிரகங்களுக்கும் சம்பந்தமேது? நீங்கள் ஜீவனுள்ள தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களே, ஆனபடியால், நீங்கள் அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டுப் பிரிந்துபோய் அசுத்தமானதைத் தொடாதிருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். அப்பொழுது நான் உங்களை ஏற்றுக் கொண்டு உங்கள் பிதாவாயிருப்பேன், நீங்கள் எனக்குக் குமாரரும் குமாரத்திகளுமாயிருப்பீர்களென்று சர்வ வல்லமையுள்ள கர்த்தர் சொல்லுகிறார்" என்று எழுதியிருக்கிறதே.

இப்படியிருக்க அன்பு வாலிப சகோதரியே, உன் எதிர்காலத்தை குறித்து என்ன சிந்தித்துக் கொண்டிருக்கிறாய்? அவிசுவாசிக்கும், விசுவாசியாகிய உனக்கும் சம்பந்தமில்லையே. தேவன் அவ்விதமான சம்பந்தத்தை அல்லது திருமண உறவை



நிச்சயமாகவே அங்கீகரிக்கமாட்டாரே. கிறிஸ்துவினிடத்தில் அன்பு கூருவாயானால் அவரது கற்பனைகளைக் கைக்கொள் (1யோவா.2:6). அவிசுவாசியாகிய ஒரு நபரை உன் வாழ்க்கைத் துணையாக அடைய விரும்பாதே. ஒரு வேளை உன் வீட்டில் எழுந்துள்ள கட்டாயத்தின் பேரில் அவ்விதமான துணையை ஏற்கத்துணியாதே, மனுஷருக்கு பயப்படுவதைப் பார்க்கிலும் கர்த்தருக்குப் பயப்படு. கர்த்தர் உன்னை உயர்த்துவார். நீ ஜீவனுள்ள தேவனுடைய ஆலயம் என்பதை மறந்து அந்த ஆலயத்தை கெடுத்து விடாதே. கிறிஸ்து இயேசுவுக்காக பாடுபட்டால் அவரோடுகூட ஆளுகையும் செய்வோம்.

அன்பான தாய்மார்களே! உபாகமம்7:2-4 முடிய உள்ள வசனங்களில் "....அவர்களோடே உடன்படிக்கை பண்ணவும் அவர்களுக்கு இரங்கவும் வேண்டாம். அவர்களோடே சம்பந்தம் கலவாயாக; உன் குமாரத்திகளை அவர்கள் குமாரருக்கு கொடாமலும், அவர்கள் குமாரத்திகளை உன் குமாரருக்குக் கொள்ளாமலும் இருப்பாயாக" என்று எழுதியிருக்கிறதே. இப்படியிருக்கும் போது நம் ஜனம், ஜாதி நம்மை ஒதுக்கி விடுமே அல்லது ஏளனமாய் பேசுவார்களே என்று சொல்லி உங்களது பிள்ளைகளுக்கு அந்நியரிடத்தில் சம்பந்தம் கலக்க நினைக்கிறீர்களா? வேண்டாம். கர்த்தரை தெய்வமாகக் கொண்ட ஜனமே பாக்கியமுள்ளது.

ஒருவேளை கர்த்தரின் கட்டளையை மீறுவோமானால் ஆவியானவரை துக்கப்படுத்துகிறவர்களாயிருப்போம். "ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான், அவனில் என் பிதா அன்பாயிருப்பார், நாங்கள் அவனிடத்தில் வந்து வாசம் பண்ணுவோம்" என்று இயேசு கூறுகிறார் (யோவா.14:23). ஆம், அன்பான சகோதரிகளே, கர்த்தர் தெய்வமானால் அவரை முழுமனதோடு பின்பற்றுவோம். சுதந்திரமாக கர்த்தரை பின்பற்றும் இந்நாட்களில் சமுதாயத்தைக் கண்டு பயப்படவேண்டாம். சாத்ராக், மேஷாக், ஆபேத்நெகோ, தானியேல் போன்றோரை தப்புவித்து காத்து ரட்சித்த கர்த்தர் நம்மையும் அவ்விதமாக காத்து ரட்சிப்பார். அவர்களுக்குப் பங்காளிகளாகாதிருங்கள். முற்காலத்தில் நீங்கள் அந்தகாரமாயிருந்தீர்கள், இப்பொழுதோ கர்த்தருக்குள் வெளிச்சமாயிருக்கிறீர்கள்; வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்து கொள்ளுங்கள்" (எபே.5:7,8). கர்த்தர் உங்களை பெலப்படுத்துவாராக!

## கேள்விகள்

1. கர்த்தர் தெய்வமானால் அவரைப் பின்பற்றுங்கள் என்றவன் யார்?
2. ஒரு விசுவாசி அவிசுவாசியை திருமணம் செய்ய வேதம் அனுமதிக்கிறதா?
3. உபாகமம் 7:2-4ன் படி எவர்களோடே சம்பந்தம் கலக்கக்கூடாது?
4. நாம் இயேசுவினிடத்தில் அன்பாயிருந்தால் கிடைக்கும் ஆசீர்வாதங்கள் யாவை?
5. முற்காலத்தில் நாம் எப்படியிருந்தோம்? இப்பொழுதோ நாம் எப்படி நடந்துகொள்ள வேண்டும்?

# நித்திய ஜீவனைப் பற்றிக்கொள்
# Hold On Eternal Life

**46**

**அ**ன்பான சகோதரிகளே, கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொள்ளுகிற நாம் எதற்காக கிறிஸ்தவர்களானோம்? பிரச்சனை நீங்கவா? வியாதி குணமாகவா? உலக ஆசீர்வாதங்களை பெறவா? அல்லது தேவன் அருளிய ஆசீர்வாதமாகிய ‘‘நித்திய ஜீவனை’’ பெறுவதற்கா? சற்று யோசித்துப்பார்ப்போம்.

அப்போஸ்தலனாகிய பவுல் ‘‘இயேசுகிறிஸ்துவினால் நான் எதற்காகப் பிடிக்கப்பட்டேனோ அதை நான் பிடித்துக்கொள்ளும்படி ஆசையாய்த் தொடர்கிறேன்’’ என்று பிலிப்பியர்3:12-14-ல் சொல்வதை வாசிக்கிறோம். ஆம், நமது விருப்பமும், ஆசையும் இவ்விதமாகவே இருக்கட்டும். அண்டசராசரங்களை உண்டாக்கின சர்வவல்லமை பொருந்திய தேவன் நம்மை மட்டுமல்ல உலகிலுள்ள அனைவரையும் இரட்சிக்கும்படியும், நித்திய ஜீவனைத் தரும்படியும் தமது ஒரே பேறான குமாரன் இயேசுகிறிஸ்துவை தந்தருளினார். இதை அறியாத புரியாத அநேகர் கிறிஸ்தவத்தை தவறாக புரிந்து கொண்டு நித்திய ஜீவனை இழக்க ஆயத்தமாகிக் கொண்டிருக்கின்றனர். அன்பான சகோதரியே, நீ எப்படியிருக்கிறாய்? மேலான ஆசீர்வாதமான நித்திய ஜீவனை பற்றிக்கொள் அதற்காகவே நீ அழைக்கப்பட்டாய்.

இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கும் நாம் எதற்காக அவரால் பிடிக்கப்பட்டோம் என்பதை நன்கு அறிந்துகொள்ளவேண்டும். நாம் அவரைத் தெரிந்துகொள்ள வில்லை, முதலாவது இயேசுகிறிஸ்து தான் நம்மைத் தெரிந்துகொள்ளுகிறார். "அவர் முந்தி நம்மிடத்தில் அன்புகூர்ந்தபடியால் நாமும் அவரிடத்தில் அன்புகூருகிறோம்" என்று 1யோவா.4:19 கூறுகிறது. நமக்கு நித்திய ஜீவனைக் கொடுக்கும்படி நம்மை பிடித்துக்கொண்டார். எனவே நாம் அதைப் பிடித்துக்கொள்ளும்படி ஆசையாய் தொடரவேண்டும். ஆனால் நம்மில் அநேகர் நம்முடைய கிறிஸ்தவ ஓட்டத்தினை சந்தோஷமாகவும் மகிழ்ச்சியாகவும் ஓடி முடிக்க பிரயாசப்படுவதில்லை. ஏதோ, கிறிஸ்தவம் என்பது மற்ற மதங்களைப்போல ஒன்றுதான். என் பெற்றோர் கிறிஸ்தவர்கள் ஆகையால் நானும் கிறிஸ்தவளாக இருக்கிறேன் என்று சொல்லி பெயரளவில் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். கிறிஸ்தவ ஜீவியம் என்பது அற்புதமானது. இம்மையிலும் மறுமையிலும் ஆசீர்வாதம் நிறைந்தது. அன்றாட வாழ்வில் இயேசு எவ்வளவு நல்லவராய் இருக்கிறார் என்பதை ருசித்துப்பாருகள். அப்பொழுது தான் நமக்காக நித்தியஜீவனைக் கொடுக்கும்படி அவர் காத்துக்கொண்டிருக்கிறார் என்பதைப் புரிந்து கொண்டு அதைப் பெற்றுக்கொள்ளும்படி ஆசையாய் தொடருவீர்கள்.

இவ்வுலகத்தில் ஒரு காரியத்தைப் பெறவேண்டுமென்றால் அநேக பிரயாசங்களை எடுக்கிறோம். பெற்றுக்கொள்ளும்வரை நாம் போராட்டத்தைக் கைவிடுவதில்லை. "உலகமும் அதன் இச்சையும் ஒழிந்துபோம்" (1யோவா.2:17)



என்று சொல்கிறது. ஆனால் நாமோ நித்தியஜீவனைப் பெற்றுக்கொள்ளும்படி அழைக்கப்பட்டிருக்கிறோம் என்பதை மறந்துவிடுகிறோம்."பந்தயத்திற்கு போராடுகிற யாவரும் எல்லாவற்றிலேயும் இச்சையடக்கமாயிருப்பார்கள். அவர்கள் அழிவுள்ள கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறார்கள். நாமோ அழிவில்லாத கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறோம்" (1கொரி.9:25) என்று பவுல் கூறுகிறார். உண்மைதான். நமக்குத் தெரிந்திருக்கிறபடி நம்முடைய பிள்ளைகள் தாங்கள் விரும்புகிற ஒரு நிலையை அடையவேண்டுமென்று சொல்லி தகுதித்தேர்வுக்காக எவ்வளவாய் தங்களை வருத்தி இச்சையடக்கமாயிருந்து போராடுகிறார்கள்! அவர்கள் அழிவுள்ள கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறார்கள்.

ஆனால் நாம் அப்படியல்ல. அழியாத நித்திய ஜீவகிரீடத்தைப் பெறும்படிக்கு விசுவாசத்தின் நல்லபோராட்டத்தைப்போராட வேண்டியவர்களாயிருக்கிறோம். நாம் பந்தைய பொருளைப் பெறும்படி இது தேவனுடைய பரம அழைப்பாக இருக்கிறது. "கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தையப் பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன்" (பிலி.3:16) என வேதம் சொல்லுகிறது. அன்பு சகோதரியே, இது ஒரு பரம அழைப்பு! நம்மை உண்டாக்கினவர் ஒருவரும் கெட்டுப்போய்விடக்கூடாது அல்லது நித்திய ஜீவனை இழந்துவிடக்கூடாது என்பதற்காக நம்மை அழைக்கும்படி தேவனிடமிருந்து வருகின்ற **High Calling** ஆகும். எனவே இந்த அழைப்பை அசட்டை செய்யவேண்டாம்.பரம அழைப்புக்கு பங்குள்ளவர்களாகிய நம்மைப்பார்த்து வேதம் பரிசுத்தவான்கள் என்று அழைக்கிறது (எபி.3:1). எப்பேர்பட்ட பாக்கியம் இது! நாம் நித்தியஜீவனைப் பற்றிக்கொள்வோம்.

"விசுவாசத்தின் நல்லபோராட்டத்தை போராடு, நித்தியஜீவனைப் பற்றிக்கொள்; அதற்காகவே நீ அழைக்கப்பட்டாய்;..." (1தீமோ.6:12) என வேதம் கூறுகிறது. ஒருவேளை நீங்கள், சகல சம்பத்துக்களோடு வாழும் எங்களுக்கு தேவஆசீர்வாதம் இல்லாமலா நாங்கள் சம்பூரணமாய் வாழுகிறோம் என்றும் இவ்வுலகில் நாங்கள் போராட்டமான வாழ்க்கை வாழ அவசியமே இல்லை என்று கூறலாம்.

இதோ வேதம் சொல்வதைக் கவனிப்போம். "இவ்வுலகத்திலே ஐசுவரியமுள்ளவர்கள் இருமாப்பான சிந்தையுள்ளவர்களாயிராமலும், நிலையற்ற ஐசுவரியத்தின்மேல் நம்பிக்கை வையாமலும், நாம் அநுபவிக்கிறதற்குச் சகல வித நன்மைகளையும் நமக்கு சம்பூரணமாய்க் கொடுக்கிற ஜீவனுள்ள தேவன் மேல் நம்பிக்கை வைக்கவும், நன்மைசெய்யவும், நற்கிரியைகளில் ஐசுவரியவான் களாகவும், தாராளமாய் கொடுக்கிறவர்களும், உதாரகுணமுள்ளவர் களுமாயிருக்கவும், நித்திய ஜீவனைப் பற்றிக்கொள்ளும்படி வருங்காலத்திற்காகக் தங்களுக்கு நல்ல ஆதாரத்தை பொக்கிஷமாக வைக்கவும் அவர்களுக்குக் கட்டளையிடு" (1தீமோ.6:17-19) என்று சொல்லும் ஆவியானவரின் சத்தத்திற்கு செவி மடுத்து நித்திஜீவனைப் பற்றிக்கொள்ளுவோம். அதற்கென்று கிரியை நடப்பிபோம்.

இவ்வுலகத்தின் அதிபதியாகிய பிசாசு, இன்றைய நாட்களில் சகோதரிகளிடத்திலே அழிந்து போகக்கூடிய பொருட்களின் மேல் ஆசை, இச்சைகளை அளவில்லாமல் விதைத்துக்கொண்டு வருகிறான். அன்றைய நாளிலும் பார்வைக்கு

இன்பமும், இச்சிக்கப்படத்தக்க விருட்சமும் எனக்கண்ட ஏவாளுக்கும் தவறான ஆலோசனையைக் கொடுத்து விழச்செய்தான். அதே பிசாசு இன்றும் நம்மிடையே பலவித கவர்ச்சிகரமான பொருட்களைக் காண்பித்து தன் வலைக்குள் இழுக்கப் பார்க்கிறான். நாமோ நித்திய ஜீவனாகிய கிறிஸ்துவை பற்றிக்கொள்வோம். "அந்த ஜீவன் அவருடைய குமாரனில் இருக்கிறதென்பதே அந்தச் சாட்சியாம்" (1யோவா.5:11).

பிரியமான சகோதரிகளே! யாருக்கு நித்திய ஜீவனை அளிப்பார்? வேதம் கூறுகிறது. "சோர்ந்து போகாமல் நற்கிரியைகளைச் செய்து, மகிமையையும் கனத்தையும் அழியாமையையும் தேடுகிறவர்களுக்கு நித்திய ஜீவனை அளிப்பார்" (ரோம.2:7). ஆம். நீங்களும் நானும் இதை தேடி நித்திய ஜீவனைப் பற்றிக்கொள்வோம். கர்த்தர் தாமே நமக்கு நித்திய ஜீவனை அளிப்பாராக. ஆமென்!

### கேள்விகள்

1. பவுல் எதைப்பிடிக்கும்படி ஆசையாகத் தொடருகின்றேன் என்றான்?
2. நாம் எதற்காக இலக்கைநோக்கித் தொடரவேண்டும்?
3. எதற்காக நாம் அழைக்கப்பட்டோம்?
4. பந்தையத்திற்கு போராடுகிற யாவரும் எப்படியிருப்பார்கள்?
5. தேவன் யாருக்கு நித்திய ஜீவனை அளிப்பார்?



## ஒன்றுக்கும் கவலைப்படாதிருங்கள்
## Be Careful for Nothing

**47**

**அ**நேகக் காரியங்களைக் குறித்து கவலைப்பட்டு, கலங்கிக் கொண்டிருக்கிற அன்பான சகோதரிகளே, இதோ ஆறுதலின் தேவன் நம்மை ஒன்றுக்கும் கவலைப்படாதிருங்கள் என அன்பாய் ஆவியானவர் மூலம் திருவுளம் பற்றுகிறார். இயேசு கிறிஸ்து நேற்றும், இன்றும், என்றும் மாறாதவராயிருக்கிறார். கிறிஸ்துவின் வசனம் ஜீவனுள்ளதாயிருக்கிறது இன்றும் நம்மைத் தேற்றுகிறது.

அநேகக் காரியங்களைக் குறித்து மார்த்தாள் என்ற சகோதரி கவலைப்பட்டு கலங்கிக் கொண்டிருந்தாள். இவ்விதமாய் சஞ்சலப்படுவதற்கு இவள் இயேசுவுக்குத் தூரமானவளுமல்ல. இயேசுவை தன் வீட்டிலே ஏற்றுக்கொண்ட ஸ்திரீ. ஆனால் ஒரே முறுமுறுப்பு இவளுக்கு. "இயேசு அவளுக்குப் பிரதியுத்தரமாக; மார்த்தாளே, மார்த்தாளே, நீ அநேக காரிங்களைக் குறித்துக் கவலைப்பட்டு கலங்குகிறாய் என்றார்" (லூக்.10:41).

ஆம், சகோதரிகளே, நாமும் கூட இவ்விதமாக கவலைப்பட்டு கலங்குகிறவர்களாய் தான் இருக்கிறோம். ஆனால் நாம் இயேசுவை விசுவாசித்து, அநேகருக்கு முன்பாக அறிக்கையிட்டு, ஞானஸ்நானம் பண்ணப்பட்டு அவரை நம் இருதயமாகிய வீட்டிற்குள் ஏற்றுக் கொண்டவர்கள் தான்! இருப்பினும் அஞ்ஞானிகளைப் போல (தேவனை அறியாதவர்களை) உலகக் காரியங்களைக் குறித்து கவலைப்படுகிறவர்களாகவேயிருக்கிறோம். இது தேவனுக்குப் பிரியமாயிருக்குமா என சற்று சிந்திப்போம்.

இப்பேர்பட்டவர்களை வேதம், அற்ப விசுவாசிகள் என்றும் அஞ்ஞானிகள் என்றும் அழைக்கிறது, மத்தேயு6:31,32 வரை வாசித்துப் பார்ப்போமானால் அற்ப விசுவாசிகளே! இன்றைக்கு இருந்து நாளைக்கு அடுப்பிலே போடப்படும் காட்டுப் புல்லுக்குத் தேவன் இவ்விதமாக உடுத்துவித்தால், உங்களுக்கு உடுத்துவிப்பது அதிக நிச்சயமல்லவா? ஆகையால் என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம், என்னத்தை உடுப்போம் என்று கவலைப்படாதிருங்கள். இவைகளையெல்லாம் அஞ்ஞானிகள் நாடித்தேடுகிறார்கள்; இவைகளெல்லாம் உங்களுக்கு வேண்டியவைகள் என்று உங்கள் பரமபிதா அறிந்திருக்கிறார் என அழகாய் கூறப்பட்டுள்ளது.

சகோதரிகளே, இயேசுவை விசுவாசிக்கிறோம், அவரை ஏற்றுக்கொண்டோம், ஜெபிக்கிறோம், சபை கூடி வருதலை விட்டு விடாதிருக்கிறோம் என்றெல்லாம் கூறிக்கொண்டு உலகக் காரியங்களைக் குறித்து கவலைப்படலாமா? கவலைப்படுவதினால் யார் தன் சரீர அளவோடு ஒரு முழத்தைக் கூட்டுவான்? அப்படி கவலைப்படுவோமானால், நம்மில் தேவ அன்பு இல்லை என்று தான் அர்த்தம்.

“பூரண அன்பு பயத்தைப்புறம்பே தள்ளும்” (1யோவா.4:18). அன்பு என்பது எது? நாம் அவருடைய கற்பனைகளின்படி நடப்பதே அன்பு (1யோவா5:3). ஆம், அன்பு சகோதரிகளே அவரது கற்பனைகளின்படி நடப்போமானால் நிச்சயம் கவலைகள் நம்மை மேற்கொள்ளாது.

இயேசுவினிடத்தில் அன்பு கூருகிறேன் என வாயில் கூறுவது அன்பல்ல. யோவா.14:23-ல் “ஒருவன் என்னில் அன்பாயிருந்தால் அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான்” என இயேசு கூறுகிறார். கிரியையில்லாமல் நாம் அவரிடத்தில் அன்பு கூருகிறோம் எனச் சொல்வோமானால் நம்மை நாமே ஏமாற்றுகிறவர் களாயிருப்போம். அவரிடத்தில் அன்பு கூருவோமேயானால் நிச்சயம் அவரை விட்டு எடுபடாது அவரோடு கூட நெருங்கிய ஐக்கியமுள்ளவர்களாயிருப்போம்.

இந்த மார்த்தாள் இவ்விதமாய் இருக்கும்போது பாருங்கள், இவளது சகோதரி மரியாளோ; “....இயேசுவின் பாதத்தருகே உட்கார்ந்து அவருடைய வசனத்தைக் கேட்டுக் கொண்டிருந்தாள்” (லூக்.10:39). எனவே இயேசு அவளைக் குறித்து தேவையானது ஒன்றே, மரியாள் தன்னை விட்டுடெடுபடாத நல்ல பங்கைத் தெரிந்துகொண்டாள் என்றார் (லூக்.10:42). ஆம், இவள் தெரிந்து கொண்ட இந்த நல்ல பங்காகிய இயேசுவின் பாதத்தில் அவரது வசனத்தைக் கேட்டு அதன்படி செய்வோமானால் நாம் அவரில் அன்பாய் இருக்கிறோம் என்பதை நிரூபிக்கிறவர் களாயிருப்போம். பிலி.4:6,7-ல் சொல்லப்பட்டுள்ளபடி நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும், வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள். அப்பொழுது எல்லாப்புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக் கொள்ளும். “கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள்; சந்தோஷமாயிருங்கள் என்று மறுபடியும் சொல்லுகிறேன்” (பிலி.4:5).

உண்மையாய் இயேசு கிறிஸ்துவை நம் இருதயமாகிய வீட்டிற்குள் ஏற்றுக் கொண்டு, அவரது பாதத்தில் உட்கார்ந்து நம் விண்ணப்பங்களை அவர் மூலம் தேவனுக்கு தெரியப்படுத்தி, வசனத்தைக் கேட்டு, அதன்படி நடப்போமானால் உலகத்தின் கவலையை ஜெயிக்கிறவர்களாயிருப்போம். தேவன் தாமே உதவி செய்வாராக!

**கேள்விகள்**

1. இயேசு யாரைப்பார்த்து நீ அநேக காரியங்களைக்குறித்து கவலைப்பட்டு கலங்குகிறாய் என்றார்?
2. அஞ்ஞானிகள் எதை நாடித் தேடுகிறார்கள்?
3. எது பயத்தைப் புறம்பே தள்ளும்?
4. நாம் ஒன்றுக்குங் கவலைப்படாமல் தேவனுக்குத் தெரியப்படுத்தும்போது என்ன நடக்கும்?
5. இயேசுவினிடத்தில் அன்பு இருந்தால் நாம் என்ன செய்வோம்?



# *அலங்காரம்* – The Ornament

**48**

**ஸ்**திரீகள் தங்களை அலங்கரித்துக் கொள்வதில் அதிக நாட்டமுடையவர்கள் என்பது ஒத்துக் கொள்ளக்கூடிய ஒன்றுதான். இன்றைய உலகில் பெண்கள் தங்களை பலவிதங்களில் அலங்கரித்துக்கொள்கின்றனர். நவநாகரீக உடைகளினாலும், ஆபரணங்களினாலும், அலங்கரிப்பதோடு **Beauty Parlour** க்கும் சென்று தங்கள் முகம், தலை, நகங்கள் போன்றவற்றை அழகுபடுத்துவதிலும் மிகவும் ஆர்வமுடையவர்களாகக் காணப்படுகின்றனர். சாதாரணமாக ஒரு பெண் தன்னை அலங்கரித்துக் கொள்வது தவறில்லை. இதைத் தவறு என்று சொன்னாலும் உலகம் ஒத்துக்கொள்ளாது. ஆனால் கிறிஸ்தவ ஸ்திரீகளாகிய நமக்கு இவ்வகையான அலங்கரிப்பு அவசியமா? அல்லது இவ்வகையான அலங்கரிப்பு தகுதியானதா? என்பதைப் பற்றி வேதாகமத்தின் துணை கொண்டு ஆராய்வோம்.

அன்பு சகோதரியே, “உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிற தென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா? கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே; ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள்” (1கொ.6:19,20) என்று வேதம் கூறுகிறது.

இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தால் பாவமற கழுவப்பட்ட ஒவ்வொருவரும் கிரயத்துக்குக் கொள்ளப்பட்டவர்கள் அதாவது இயேசு நம்மை தமது இரத்தத்தைக் கொடுத்து தேவனுக்கென்று விலைக்கு வாங்கியிருக்கிறார். ஆனபடியினால் நம்முடைய சரீரமும், ஆவியும் நமக்கல்ல அவருக்குச் சொந்தமானதாக மாறிவிட்டது. அப்படியிருக்க நம்முடைய சரீரத்தையும், ஆவியையும் அவருக்குப்பிரியமானபடி அலங்கரிக்க வேண்டியது அவசியமாயிருக்கிறது. ஆவிக்குரிய கிறிஸ்தவர்கள் எனத் தங்களை அழைத்துக் கொள்பவர்கள், தாங்கள் ஆவியில் நிறைந்து ஜெபிப்பதாகவும் தேவனை மகிமைப்படுத்துவதாகவும் கூறுவர், ஆனால் தங்களுடைய சரீரத்தை தேவனுக்கேற்ற விதத்தில் அலங்கரிக்க வேண்டுமென்பதை மறந்துவிடுகின்றனர்.

நம்முடைய இருதயம் மகா திருக்குள்ளதும், மகா கேடுள்ளதுமாயிருக்கிறது என வேதம் கூறுகிறது. இருதயத்தில் பலவிதமான ஆசை இச்சைகள் புறப்படலாம். உலகத்தின் ஆசைகளும், இச்சைகளும், கண்களின் இச்சையும், மாம்சத்தின் இச்சையும் ஒழிந்துபோம் (1யோவா.2:16,17). ஆனால் நம்முடைய இருதயத்தில் தங்கியிருக்க வேண்டிய குணம் சாந்தமும் அமைதியுமாம். அதுவே உங்களுக்கு அலங்காரமாயிருக்கும். ஆம், அழியாத அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே உங்களுக்கு அலங்காரமாயிருக்கக் கடவது; அதுவே தேவனுடைய பார்வையில் விலையேறப் பெற்றது” (1பேது.3:4) என்று பேதுரு கூறுகிறார். இது வாசிப்பதற்கு ஏற்றது, ஆனால்

நடைமுறைக்கு ஒத்துவராது, ஓரளவுக்காவது நம்மை உலகத்திற்கேற்றார் போல் அலங்காித்துக் கொள்ளாவிட்டால் உலகம் நம்மை மதிக்காது என்று சாக்கு போக்கு சொல்லலாம். எது எப்படியிருப்பினும் தேவனுடைய பார்வையில் எது விலையேறப் பெற்றதோ அதுவே நமக்கு அலங்காரம், நம்மை அழகுபடுத்தக் கூடிய இந்த சாந்த குணத்தையும், அமைதியான குணத்தையும் ஆவியானவர் அழிந்து போகாத அலங்கரிப்பு என்று கூறுகிறார். ஒருவேளை இந்த இரண்டு ஆபரணங்களினாலும் நம்மை அலங்கரித்துக் கொள்வது என்பது மிகக்கடினமாகக் காணப்படலாம்.

இந்த அருமையான குணங்களினால் நம்மை அலங்கரித்துக் கொள்ள முயற்சிக்கும் போது பலவிதமான அவமானங்களும் பரிகாசங்களும் நமக்குத் தடைகளாக உருவெடுக்கலாம். நாம் சாந்தத்தோடும், அமைதியோடும் நடந்து கொள்ளும்போது உறவினரின் மத்தியில், நமக்குப் பிரியமானவர்கள் மத்தியில், வேலைபார்க்குமிடத்திலும் மிகவும் சிறுமையும், எளிமையும் அற்பமுமாக எண்ணப்படலாம், ஆனால் தேவனுடைய பார்வையில் நம்முடைய இந்த இரண்டு அலங்கரிப்பும் விலையேறப்பெற்றது என்பதை மறந்து விட வேண்டாம்.

சாந்தமும், அமைதலுள்ள ஆவியுமாகிய இந்த ஆபரணங்களை நாம் தரித்துக் கொண்டோமானால் நம் இருதயத்திலிருந்து நல்ல பொக்கிஷங்கள் வெளிப்படும். “நல்ல மனுஷன் தன் இருதயமாகிய நல்ல பொக்கிஷத்திலிருந்து நல்லதை எடுத்துக் காட்டுகிறான்” (லூக்.6:45). என்ற வசனத்திற்கேற்ப நல்ல கனிகளைக் கொடுப்போம். நல்ல கனிகளாகிய அன்பு, சந்தோஷம், சமாதானம் நீடியபொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் போன்றவற்றை வெளிப்படுத்துவோம். அப்பொழுது கிரியையுள்ள கிறிஸ்தவர்களாக காணப்படுவோம். அநேகரை ஆதாயப்படுத்திக் கொள்வோம். சாந்தம் மற்றும் அமைதலுள்ள ஆவியாகிய இந்த ஆபரணங்களால் நம்மை அலங்கரிக்கும்போது புறம்பான அலங்கரிப்பை நம் மனம் அற்பமாக எண்ணத்துவங்கும். இவையிரண்டும் இருதயத்தில் நிறைந்திருக்கும் போது பொல்லாத குணங்களுக்கு இடமில்லாமல் போய்விடும்.

உலகத்திற்கு ஒத்த வேஷம் தரியாதிருங்கள் என வேதம் கூறுகிறது எனவே “தகுதியான வஸ்திரத்தினாலும், நாணத்தினாலும், தெளிந்தபுத்தியினாலும் தேவபக்தியுள்ளவர்களென்று சொல்லிக்கொள்ளுகிற ஸ்திரீகளுக்கு ஏற்றபடியே நற்கிரியைகளினாலும் தங்களை அலங்கரிக்க வேண்டும்” (1தீமோ.2:10). புறஜாதிகளை நமக்கு மாதிரிகளாக கொள்ளக்கூடாது. புறஜாதிகளுடைய மார்க்கத்தைக் கற்றுக்கொள்ளக்கூடாது (எரே.10:2).

அன்பு சகோதரிகளே, புதிய மனுஷனைத் தரித்துக்கொண்டு சரீரத்தினாலும் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துவோம். தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்ற அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமும் அமைதியுமாகிய ஆவியை ஆபரணங்களாகத் தரித்துக்கொண்டு பரிசுத்த மணவாளனாகிய இயேசுவை சந்திக்க ஆயத்தமுள்ளவர்களாயிருப்போம். அநேகரை நம்முடைய நடக்கையினால் ஆதாயப்படுத்துவோம். தேவன் தாமே உதவி செய்வாராக.



## கேள்விகள்

1. உங்கள் சரீரமானது என்னவாயிருக்கிறது?
2. தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றது எது?
3. தேவபக்தியுள்ள ஸ்திரீகள் தங்களை எப்படி அலங்கரிக்கவேண்டும்?
4. எவர்களுடைய மார்க்கத்தை நாம் கற்றுக்கொள்ளக்கூடாது?
5. நல்ல மனுஷன் எவ்வாறு நல்லதை காட்டுகிறான்?

# <u>தேவன் உங்களை உயர்த்துவார்</u>
# <u>God May Exalt You</u>

**49**

**அ**ன்பு சகோதரிகளே, தேவன் உங்களை உயர்த்துவார் என வாழ்த்துகிறேன். நிச்சயமாக தேவன் நம்மை உயர்த்துவார். அவருடைய ஜனங்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப் போவதில்லை. தேவன் நம்மை உயர்த்தும்படி நாம் என்ன செய்ய வேண்டுமென தேவன் நம்மில் எதிர்பார்க்கிறார் என வேதத்தின் உதவி கொண்டு பார்ப்போம்.

**கர்த்தருக்குமுன் தாழ்மைப்படுவோம்:**

ஆம். கர்த்தருக்கு முன் நம்மைத் தாழ்த்துவோம், அவருக்கு முன் பணிந்து குனிந்து முழங்காற்படியிடுவோம். இன்னும் மென்மேலும் உயர்த்தப்பட "நம்முடைய தேவனாகிய கர்த்தரை உயர்த்தி அவர் பாதபடியிலே பணியுங்கள்; அவர் பரிசுத்தமுள்ளவர்" (சங்.99:5). சகோதரியே, இன்று உன்னுடைய கல்வி, உன்னுடைய பட்டம், உன்னுடைய அந்தஸ்து, உன்னுடைய செல்வம், உன்னுடைய அனைத்து ஆசீர்வாதங்களும் யாரால் வந்தது? உன்னுடைய ஞானம், உழைப்பு, இவற்றால் வந்தது என எண்ணுகிறாயோ? இல்லை. நிச்சயமாய் இல்லை. கர்த்தருக்கு முன் உன்னைத் தாழ்த்து.

"தம்முடைய சொந்தக்குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர், அவரோடே கூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி?" (ரோம.8:32) என்ற வசனத்திற்கேற்ப நமக்கு ஜீவன், சுகம், பெலன், செல்வாக்கு, அந்தஸ்து என எல்லாவற்றையும் அருளிச் செய்திருக்கிறார். இது அவருடைய பெரிதான கிருபையல்லவா? இப்பேர்ப்பட்ட நம்முடைய கர்த்தருக்கு முன்பாக நம்மைத் தாழ்த்துவோம். நம்முடைய சுயபெலத்தால் ஒன்றையும் சவதரிக்கமுடியாது என நினைவுகூருவோம். கர்த்தர் ஒருவனை ஆசீர்வதித்தாலொழிய ஒருவனும் ஆசீர்வதிக்கப்படான். நமக்குரியதைக் குறித்து மேட்டிமையாயிராமல் கர்த்தருக்கு முன் தாழ்மைப்படுவோம். பெருமையுள்ளவர்களுக்குத் தேவன் எதிர்த்து நிற்கிறார். தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபையளிக்கிறார் (1பேது.5:5). அவர் பாதபடிமுன் பணிவோம் அவரையே உயர்த்துவோம். வரும் நாட்களிலும் அவரால் உயர்த்தப்படுவோம்.

**கீழ்ப்படிந்து தம்மைத்தாமே தாழ்த்துவோம்:**

கர்த்தருக்கு முன் நாமொன்றுமில்லை என அவருக்குமுன் தாழ்மைப்படுவதோடுகூட அவருக்குக் கீழ்ப்படிந்து நம்மை நாமே தாழ்த்துவதும் அவசியமாயிருக்கிறது. ஆம், நம்முடைய ஆண்டவர், தேவனுடைய மடியிலிருந்தவர் தம்மை தாழ்த்தினார். "அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும் .......... அடிமையின் ரூபமெடுத்து, மனுஷசாயலானார். சிலுவையின் மரணபரியந்தமும் **கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார். ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி.....** எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத்தந்தருளினார்" (பிலி.2:6-11). இயேசுவானவர் தம்மைத் தாமே தாழ்த்தினார், ஆதலால் தேவனால் உயர்த்தப்பட்டார். நீங்களும், நானும் எப்படியிருக்கிறோம்? சற்றே வேதாகமத்தின் வெளிச்சத்திலே நம்மை நிதானித்து அறிவோம். மனமேட்டிமை, பெருமை, அகந்தை போன்றவைகள் நம்மிடம் காணப்படுகிறதா? நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம் பிசாசின் பிள்ளைகளுக்கு முன் நாம் எப்படி தாழ்ந்து போவது என எண்ணுகிறீர்களா? உங்களுடைய நாமங்கள் ஜீவ புத்தகத்தில் எழுதப்பட்டிருப்பது பற்றி சந்தோஷப்படுங்கள் என்று தான் நமதாண்டவர் சீஷர்களைப் பார்த்துக் கூறினாரேயன்றி பெருமைகொள்ளுங்கள் எனக் கூறவில்லை.

"அவர்....... தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல்..... கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்" (பிலி.2:6-8) என வாசிக்கிறோம். நமதாண்டவராகிய கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே நம்மிலும் இருக்கக்கடவது. நமதாண்டவரே தேவனுக்குக் கீழ்ப்படிந்து அவருடைய சித்தம் செய்தாரென்றால் அவரைப்பின்பற்றுகிற நாம் எவ்வளவு அதிகமாகக் கீழ்ப்படிந்து அவருடைய சித்தம் செய்ய வேண்டும்! நம்முடைய மரணபரியந்தம் கர்த்தருக்குக் கீழ்ப்படிவோம் கீழ்ப்படிவதும், நம்மைத் தாழ்த்துவதும் கடினமாகயிருக்கிறதென்று சொல்வோமானால் நிச்சயமாக உயர்த்தப்படமாட்டோம். தன்னைத் தான் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்.

**அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருப்போம்:**

கிறிஸ்துவை உயர்த்தின தேவன் நம்மையும் உயர்த்தும்படி அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருப்போம். "....... ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்" (1பேது.5:6) என வேதம் கூறுகிறது. கிறிஸ்தவர்களாகிய நமக்கு இவ்வுலக ஜீவியம் எப்போதும் சாதகமாக இருக்கும் எனக் கூறஇயலாது. சிலவேளைகளில் கிறிஸ்தவ ஓட்டத்தில் பிரச்சனைகளும், தோல்விகளும் வரலாம். சமுதாயத்தில் நம்முடைய பக்தியின் ஜீவியத்தையும், உண்மையான நடக்கையினையும் உலகத்தார் பார்த்து பொறுக்கக் கூடாமல் பொறாமை கொண்டு நம்மைக் குற்றப்படுத்திக் கொண்டேயிருக்கலாம். இவ்வாறு இவ்வுலகம் நம்மை குற்றப்படுத்தும்போது, இயேசுவையும் குற்றப்படுத்தியது என்பதை நினைத்து மனத்தாழ்மையை அணிந்து கொள்ளுவோம்.

வேதபாரகர், பிரதான ஆசாரியர் போன்றவர்கள் இயேசுவைக் குற்றப்படுத்தும்படியே வகைதேடினார்கள். சிலுவையின் கடைசிபரியந்தமும் பரியாசஞ்செய்தனர். "மற்றவர்களை ரட்சித்தான், தன்னைத் தான் ரட்சித்துக்கொள்ளத் திராணியில்லை, இவன் இஸ்ரவேலின் ராஜாவானால் இப்பொழுது சிலுவையிலிருந்து இறங்கி வரட்டும், அப்பொழுது இவனை விசுவாசிப்போம், தன்னைத் தேவனுடைய குமாரனென்று சொல்லி, தேவன் மேல் நம்பிக்கையாயிருந்தானே; அவர் இவன்மேல் பிரியமாயிருந்தால் இப்பொழுது இவனை இரட்சிக்கட்டும் என்றார்கள்" (மத்.27:42-

43). ஆனால் இயேசுவோ, ''..... பிதாவே இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே என்றார் ........'' (லூக்.23:34). நம்மால் இப்படிக்கூறமுடியுமா? இவ்வாறெல்லாம் பொறுமையாக, மனத்தாழ்மை யுடன் அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருக்க முடியுமா? தேவன் நம்மைக் குறித்து கொண்டுள்ள சித்தத்தினை நிறைவேற்றும்படி அவருடைய பலத்தகைக்குள் அடங்கியிருந்தால் தான் அவர் நம்மை உயர்த்துவார்.

ஆம், முடிவில் என்ன நடந்தது? ''...... தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, .........எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்''(பிலி.2:9-11). நமக்கு வரும் பிரச்சனைகளில் **'Prestige Issue'** என்னால் விட்டுக்கொடுத்து தாழ்ந்து போக முடியாது என சொல்வோமானால் மிகுந்த வேதனையடைய வேண்டியிருக்கும் நம்முடைய பிடிவாதம் ஒருபோதும் நமக்கு வெற்றியைக் கொண்டுவராது. ''ஒன்றையும் வாதினாலாவது வீண்பெருமை யினாலாவது செய்யாமல், மனத் தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர் களாக எண்ணக்கடவீர்கள்''(பிலி.2:3) என வேதம் கூறுகிறது.

அன்பு சகோதரியே, கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தை நம்மில் இருக்குமானால், கிறிஸ்துவைப் போல தேவனுக்குக் கீழ்ப்படிந்து, நம்மை நாமே தாழ்த்தி, தேவனுக்கு முன்பாக தாழ்மைப்பட்டு அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருக்க முடியும். அப்படியிருக்கும் போது கிறிஸ்துவை தேவன் உயர்த்தியது போல நம்மையும் உயர்த்துவார். ''கர்த்தருக்கு முன் தாழ்மைப்படுங்கள், அப்பொழுது அவர் உங்களை உயர்த்துவார்''(யாக்.4:10). தேவன் தாமே நமக்கு உதவிசெய்வாராக!.

### கேள்விகள்

1. தேவன் நம்மை எப்போது உயர்த்துவார்?
2. இயேசுகிறிஸ்து எவ்வாறு தம்மைத் தாழ்த்தினார்?
3. யாருடைய பலத்த கைக்குள் நாம் அடங்கியிருக்க வேண்டும்?
4. நாம் யாருக்கு முன்பாக தாழ்மைப்பட வேண்டும்?
5. இயேசு தம்மைப் பரியாசம் பண்ணினவர்களுக்காக எவ்வாறு வேண்டிக் கொண்டார்?



# யார் வஞ்சகர்?
# Who are Deceivers?

**50**

**யா**ர் வஞ்சகர்? பிரியமான சகோதரிகளே, மாம்சத்தில் வந்த இயேசு கிறிஸ்துவை அறிக்கைபண்ணாத அநேக வஞ்சகர் உலகத்திலே தோன்றியிருக்கிறார்கள் (2யோவா.7). ஆம், இன்றைய உலகில், இயேசுவே தங்களுடைய இரட்சகர், அவரே தங்கள் பாவங்களிலிருந்து விடுவித்து ஒரு பரிசுத்தமான வாழ்வை அளித்துள்ளவர், அவரே இந்த உலகமும் அதிலுள்ளவை களும் கொடுக்க முடியாத சமாதானத்தையும், சந்தோஷத்தையும் கொடுக்கிறவர், அவர் ஒருவரே தங்களை உண்டாக்கினவர் என தைரியமாய் அறிக்கை பண்ணாதவர்கள் தங்களை கிறிஸ்தவர்கள் என்று அழைத்துக்கொள்ளுகின்றனர். ஆனால் இவர்களைப் பார்த்து வேதம் வஞ்சகர் என்றும் அந்திகிறிஸ்துவுமாயிருக்கிறார்கள் என்றும் கூறுகிறது.

அநேக சகோதரிகள் மிக உற்சாகமாய் இயேசுவை தங்கள் இரட்சகராக ஏற்றுக்கொள்ளுகின்றனர். ஆனால் காலப்போக்கில் ஆதியில் கொண்டிருந்த அன்பையும், விசுவாசத்தையும் தள்ளிவிட்டு தங்களுடைய கிரியையினாலும், வார்த்தையினாலும் இயேசுவை அறிக்கை பண்ணாமல் மறுதலிக்கின்றனர். காரணம், உலகம் அவர்களை வழிவிலகச் செய்கிறது. ஐயோ, இயேசுவை அறிக்கையிட்டால் அல்லது நாங்கள் கிறிஸ்தவர்கள் எனக் கூறினால் அரசாங்கத்தின் சலுகைகள் பறிபோய்விடுமே, என்னுடைய குழந்தைகளின் பெயர் கிறிஸ்தவ பெயராயிருந்து கிறிஸ்தவர்கள் எனக் கூறுவோமானால் எந்த சலுகையும் பெற முடியாதே என்று எஸ்தர் என வைத்த பெயரை நாகலட்சுமி என மாற்றுகின்றனர். பீட்டர் என்ற பெயரை பெருமாள் என மாற்றுகின்றனர்.

அன்பு சகோதரியே உங்களுடைய குழந்தைகளின் பெயரை இவ்விதமாய் மாற்றி நிரந்தரமாக நித்திய தேவனிடமிருந்து கிடைக்கும் சலுகையை, ஆசீர்வாதங்களை இழந்து அநித்தியமான கொஞ்சகாலத்திற்கு மட்டுமிருக்கப்போகிற சலுகைக்காக இயேசுவை மறுதலிக்கிறீர்களா? கர்த்தர் உங்களைப் பார்த்து நகைப்பார். ''மனுஷர் முன்பாக என்னை மறுதலிக்கிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக மறுதலிப்பேன்''(மத்.10:33) எனக்கூறுகிற இயேசுவின் தொனி உங்கள் காதுகளில் விழவில்லையா? மோசம் போகாதீர்கள். தேவன் தம்மை பரியாசம் பண்ண வொட்டார். மனந்திரும்பி இயேசுவை அறிக்கைபண்ணுங்கள்.

வேறு சிலர், இயேசுவைத்தங்கள் இருதயங்களில் ஏற்றுக்கொண்டபோதிலும், திருமணத்திற்காகவோ, வேலை வாய்ப்பிற்காகவோ, வேறு உலக சம்பத்துக்களுக் காகவோ இயேசுவை மறுதலிக்கின்றனர். அநேகர் தங்களுக்கு அரசாங்கத்தில் வேலை கிடைக்கவேண்டுமென்பதற்காக தங்களுக்கு சூட்டப்பட்டிருந்த கிறிஸ்தவப்

பெயர்களை மாற்றி இன்று பெரிய பெரிய பதவியில் அமர்ந்திருக்கின்றனர். அலுவலகத்தில் கிறிஸ்தவரல்லாதவர், ஆனால் வெளியில் கிறிஸ்தவர்கள் என அழைத்துக்கொள்ளுபவர் அநேகர். இவையெல்லாவற்றிற்கும் இயேசுகிறிஸ்துவே நமக்கு நல் மாதிரியாகயிருக்கிறார். "...பிசாசு அவரை (இயேசுவை) மிகவும் உயர்ந்த மலையின் மேல் கொண்டு போய், உலகத்தின் சகல ராஜ்யங்களையும் அவைகளின் மகிமையையும் அவருக்குக் காண்பித்து: நீர் சாஷ்டாங்கமாய் விழுந்து, என்னைப் பணிந்து கொண்டால், இவைகளையெல்லாம் உமக்குத் தருவேன் என்று சொன்னான்" (மத்.4:8,9). வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் கொண்டவரையே பிசாசு இவ்வாறு சோதித்தான்.

"அப்பொழுது இயேசு: அப்பாலே போ சாத்தானே, உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்து கொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக என்று எழுதியிருக்கிறதே என்றார்"(மத்.4:10). அன்பு சகோதரியே, உலகப்பொருளுக்காக இயேசுவை மறுதலித்து வாழ்ந்து கொண்டிருக்கிறீர்களா? அப்படியென்றால் நீங்கள் இயேசுவை அறிக்கைபண்ணாத வஞ்சகரும் அந்திகிறிஸ்துவுமாயிருக்கிறீர்கள். மனந்திரும்பி இயேசுவை அறிக்கையிடுங்கள்.

இன்னும் அநேக ஸ்திரீகள் தங்களுடைய அன்பை விட்டுவிடுகின்றனர். சதா உலகக்காரியங்களுக்காகக் கவலைப்பட்டு இயேசுவை தங்களுடைய கிரியைகளில் மறுதலிக்கின்றனர். அன்பு சகோதரியே, தவறான நோக்கத்தோடே நீங்கள் இயேசுவை பின்பற்றுவீர்களானால் ஏமாந்து போவீர்கள். இயேசுவை ஏற்றுக்கொண்டால் நமக்கு உலக சம்பத்துகள் அனைத்தும் கிடைத்துவிடும் என லௌகீக இச்சைகளை நிறைவேற்றும்படி பின்பற்றாதீர்கள். "முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும்"(மத்.6:33) என்று வேதம் கூறுகிறது.

முழு இருதயத்தோடும் முழு ஆத்துமாவோடும் தேவனுடைய ராஜ்யத்தையும், நீதியையும் தேடுங்கள். உண்மையான வாஞ்சையோடு உங்கள் பாவங்கள் கழுவப்பட இயேசுவே தஞ்சம் என எண்ணுங்கள். இயேசுகிறிஸ்துவின் நீதியையும், பரிசுத்தத்தையும், பாவமன்னிப்பையும் நாடுங்கள். அப்போது உங்களுடைய சரீரத்திற்கு வேண்டிய நன்மைகளைப் பெற்றுக் கொள்வீர்கள். இயேசு கிறிஸ்துவை சரியான வழியில் பின்பற்றுங்கள். இயேசுவை உலகத்தார் முன் அறிக்கையிடுங்கள்.

அநேகர் மாயமான, பல தந்திரமான வழிகளைத் தெரிந்தெடுத்து வெளித்தோற்றத்தில் பக்திமான்கள் போல வேஷந்தரித்து மற்றவர்களை தங்களைப்போல மாற்றும்படி விரும்புகின்றனர். இப்பேர்பட்டவர்களைக் குறித்து, "மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, ஒருவனை உங்கள் மார்க்கத்தானாக்கும்படி சமுத்திரத்தையும் பூமியையும் சுற்றித்திரிகிறீர்கள்; அவன் உங்கள் மார்க்கத்தானான போது அவனை உங்களிலும் இரட்டிப்பாய் நரகத்தின் மகனாக்குகிறீர்கள்"(மத்.23:15) என வேதம் கூறுகிறது. இவர்களுக்கும் கிறிஸ்துவின் உபதேசத்திற்கும் சம்பந்தமேயிராது. தாங்களே கிறிஸ்தவர்கள், அபிஷேகம்



பண்ணப்பட்டவர்கள், தரிசனம் பெற்றவர்கள், என அடிக்கிக் கொண்டே போவார்கள், ஆனால் உங்களுடைய சரீரமாகிய சபைக்குத் தலை யாரென்று கேட்டால் யார் யாரையோ கூறி, தம்முடைய இரத்தத்தையே சிந்தி சம்பாதித்துக் கொண்ட கிறிஸ்துவை மறுதலித்து சபைக்கு ஏதோ ஏதோ பெயர் சொல்லுவார்கள். அன்பு சகோதரிகளே, இவர்களே கிறிஸ்துவை அறிக்கைபண்ணாத வஞ்சகர்களும் அந்திக்கிறிஸ்துமாயிருக்கிறார்கள். நீங்களும் இவர்களில் ஒருவராக இருப்பீர் களென்றால், இன்றே மனந்திரும்பி கிறிஸ்துவின் நாமத்தைப் பற்றிக் கொள்ளுங்கள். அவரது நாமத்தை அறிக்கையிட்டு மகிமைப்படுத்துங்கள்.

".....மாம்சத்தில் வந்த இயேசுகிறிஸ்துவை அறிக்கைபண்ணுகிற எந்த ஆவியும் தேவனால் உண்டாயிருக்கிறது. மாம்சத்தில் வந்த இயேசுகிறிஸ்துவை அறிக்கை பண்ணாத எந்த ஆவியும் தேவனால் உண்டானதல்ல; வருமென்று நீங்கள் கேள்விப்பட்ட அந்திக்கிறிஸ்துவினுடைய ஆவி அதுவே, அது இப்பொழுதும் உலகத்தில் இருக்கிறது"(1யோவா.4:2,3). அன்பு சகோதரிகளே, நீங்கள் தேவ ஆவியைப் பெற்றிருப்பீர்களென்றால், இயேசு கிறிஸ்துவை அறிக்கைபண்ணி உங்கள் வார்த்தையினாலும், கிரியையினாலும், அவரை மகிமைப்படுத்துகிறவர் களாயிருப்பீர்கள். கிறிஸ்துவை அறிக்கை பண்ணாமல் மறுதலிப்பீர்களானால், "இயேசுவைக் கிறிஸ்து அல்ல என்று மறுதலிக்கிறவனேயல்லாமல் வேறே யார் பொய்யன்? பிதாவையும் குமாரனையும் மறுதலிக்கிறவனே அந்திக்கிறிஸ்து" 1யோவா.2:22; 2யோவா.7 என்ற வசனங்களுக்கேற்ப வஞ்சகரும் அந்திக்கிறிஸ்துவு மாயிருப்பீர்கள். எனவே மனந்திரும்பி மாம்சத்தில் வந்த இயேசு கிறிஸ்துவை அறிக்கைபண்ணுங்கள். அப்பொழுது இயேசு கிறிஸ்து பிதாவின் முன்பாக உங்களை மறுதலியாமல் அறிக்கையிடுவார்.

## கேள்விகள்

1. யாரைக்குறித்து இயேசு என் பிதாவின் முன்பாக அவனை மறுதலிப்பேன் என்றார்?
2. இயேசு எவ்வாறு சாத்தானை ஜெயித்தார்?
3. எப்போது இவைகளெல்லாம் நமக்குக் கூடக்கொடுக்கப்படும்?
4. யாரைப் பார்த்து வேதம் உங்களுக்கு ஐயோ என்று சொல்லுகிறது? ஏன்?
5. யார் பொய்யன்?

# இதையே சிந்தித்துக் கொண்டிருங்கள்
# Put it into practice

**51**

**இ**தை வாசிக்கும் அன்பு சகோதரிகளுக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வருகின்ற புத்தாண்டில் நீங்கள் எதைச் செய்யவேண்டுமென சிந்திக்கிறீர்கள்? அல்லது கடந்த ஆண்டில் நான் பட்ட கஷ்டங்களே போதும் போதும் என்றாகிவிட்டது, இனி எதை சிந்திப்பது என பழையவைகளையே சிந்தித்துக் கொண்டிருக்கப்போகிறீர்களா? நாம் பிலி.4:8 லிருந்து 8 காரியங்களைக் கற்றுக்கொள்ளுவோம்.

**உண்மையுள்ளவைகள்:**

உண்மையுள்ளவைகள் எவைகள் என ஆராயும் போது நம் நினைவிற்கு வரவேண்டியவர் 'இயேசு கிறிஸ்துவே' ஆம், யோவான்14:6-ல் இயேசு 'நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்.." என்றார். உண்மை அல்லது சத்தியமாகிய இவரையே சிந்தித்துக் கொண்டிருக்க வேண்டும். "நீங்கள் உங்கள் இரட்சிப்பின் சுவிசேஷமாகிய சத்திய வசனத்தைக் கேட்டு, விசுவாசிகளானபோது, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்தஆவியால் அவருக்குள் முத்திரை போடப்பட்டீர்கள்" (எபே.11:3) என்று பவுல் எபேசியருக்கு எழுதியதுபோல, விசுவாசத்தினால் சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார் (யோவா.16:13). இயேசு கிறிஸ்துவையே சிந்தித்துக் கொண்டிருக்கும்போது, பொல்லாத இவ்வுலகின் பிரச்சனைகளில் அகப்பட்டுக் கொள்ளாமலும், பாவமில்லாத பரிசுத்த வாழ்க்கை வாழவும் சத்தியமாகிய அவருடைய வசனத்தினால் நம்மைக் காத்துக்கொள்வோம் (யோவா.17:17-19).

**ஒழுக்கமுள்ளவைகள்:**

"குணசாலியான ஸ்திரீ தன் புருஷனுக்குக் கிரீடமாயிருக்கிறாள்; இலச்சை உண்டு பண்ணுகிறவளோ அவனுக்கு எலும்புருக்கியாயிருக்கிறாள்" (நீதி.12:4). இலச்சை உண்டு பண்ணுகிறவள் அல்லது அவமானத்தைக் கொண்டுவருபவள் தன் புருஷனுக்கு எலும்புருக்கியாயிருக்கிறாள். அதாவது ஒழுக்கமற்றுதிரிந்து கொஞ்சம் கொஞ்சமாக தன் புருஷனைக் கொல்லுகிறவளாயிருப்பாள். செய்தித்தாளை எடுத்து வாசித்தால் இப்படிப்பட்ட செய்திகளைத் தான் அதிகம் வாசிக்க முடிகிறது. பழைய ஏற்பாட்டு காலத்தில் கூட தேவனுடைய ஜனங்களிடையே இப்படிப்பட்ட ஒழுக்கமற்ற காரியங்கள் காணப்பட்டதாக வேதாகமம் கூறுகிறது (ஆதி.34:1-31). யாக்கோபின் ஒரே மகள் தீனாள் தேசத்துப் பெண்களைப் பார்க்கப் புறப்பட்டாள். அதன் விளைவு அத்தேசத்தின் பிரபு அவளைக் கண்டு அவளை தீட்டுப்படுத்தினான். அன்றைய நாட்களிலே பெண்பிள்ளைகளுக்கு இந்த கெதியென்றால் பாவம் பெருகி கிடக்கும் இந்த நாட்களில் இப்பேர்பட்ட சம்பவம் நடப்பதில் ஆச்சரியம் என்ன? எனவே, வாலிபப்



பிள்ளையே, உன்னைக் காத்துக்கொள். உன் உடையும், உன் நடையும் கற்புள்ள ஸ்திரீக்கேற்ற வண்ணமாக இருக்கட்டும், பெற்றோரே, உங்கள் பிள்ளைகளை மிக கவனமாக பாதுகாப்பது உங்கள் கடமையாயிருக்கிறது. "நல்லொழுக்கமுள்ள ஸ்திரீ மானத்தைக் காப்பாள்" (நீதி.11:16) என்பதையே சிந்தித்துக்கொண்டிருங்கள்.

**நீதியுள்ளவைகள்:**

"நீங்கள் உங்கள் அவயவங்களை அநீதியின் ஆயுதங்களாகப் பாவத்திற்கு ஒப்புக் கொடாமல், உங்களை மரித்தோரிலிருந்து பிழைத்திருக்கிறவர்களாகத் தேவனுக்கு ஒப்புக் கொடுத்து, உங்கள் அவயவங்களை நீதிக்குரிய ஆயுதங்களாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுங்கள்" (ரோ.6:13). சிலர் சன்மார்க்கமாய் வாழ்ந்தாலே அது நீதிக்குரியவைகள் என எண்ணுகின்றனர். நான் ஒரு முறை ஒரு தோழியிடம் நாம் பாவிகள். நமது பாவத்திலிருந்து விடபட இயேசு நமக்குத் தேவை என்ற போது, நாங்கள் எந்த பாவமும் செய்யவில்லை, என் கணவன், என் பிள்ளைகள் யாரும் எந்த பாவமும் செய்யவில்லை என்றாள். இப்படித்தான் அநேகர் நினைத்துக் கொண்டிருக்கின்றனர். ரோமர் 3:10-ல் "....நீதிமான் ஒருவனாகிலும் இல்லை" என்கிறது வேதம். "...கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக்கொண்டு நீதிமான்களாக்கப் படுகிறோம்" (ரோ.3:24). "அவர் நம்முடைய பாவங்களுக்காக ஒப்புக்கொடுக்கப் பட்டும், நாம் நீதிமான்களாக்கப்படுவதற்காக எழுப்பப்பட்டும் இருக்கிறார்" (ரோ.4:25). இவ்விதமாக நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறோம். "....தேவனுக்கு அடிமைகளானதினால், பரிசுத்தமாகுதல் உங்களுக்குக் கிடைக்கும் பலன், முடிவோ நித்தியஜீவன்" (ரோம.6:23). எனவே நித்திய ஜீவனைப் பெறும்படி நீதியுள்ளவைகளையே சிந்தித்துக்கொண்டிருங்கள்.

**கற்புள்ளவைகள்:**

நாம் நம்மை பரிசுத்தமாகக் காத்துக் கொள்வதே கற்புள்ளவைகளாகும். "உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறதுபோல, நீங்களும் உங்கள் நடக்கைகளெல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள். நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள் என்று எழுதியிருக்கிறதே" (1பேது.1:15,16). நம் ஆண்டவர் "பரிசுத்தரும், குற்றமற்றவரும் மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவரும், வானங்களிலும் உயர்ந்தவருமாயிருக்கிறார்" (எபி.7:28). நாமும் நம் நடக்கைகைகளில் இவற்றையே சிந்தித்துக் கொண்டிருப்போம்.

**அன்புள்ளவைகள்:**

அன்பிற்கு அடையாளம் தேவனைத் தவிர இப்புவியில் வேறு எடுத்துக்காட்டே கிடையாது. "தேவன், தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்" (யோவா.3:16). பாவிகளை இரட்சிக்க இயேசு இவ்வுலகத்தில் வந்தாரென்றும், அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தாரென்றும், இப்படி இயேசு கிறிஸ்துவின் அன்பு பல வசனங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவருடைய அன்புக்குள்ளான நாமும்

அநேகரை கிறிஸ்துவுக்குள் கொண்டு வரும்படிக்கும், அழிந்துபோகிற ஆத்துமாக்கள் நித்திய ஜீவனைப் பெறும்படிக்கும் இவைகளை சிந்தித்துக் கொண்டிருப்போம்.

**நற்கீர்த்தி:**

நல்ல பெயர் எடுக்கவேண்டும் என்பர் கிறிஸ்தவர்களாகிய நம்மைப் பார்ப்பவர்கள் பல கண்ணோட்டத்தில் நம்மைப் பார்ப்பார்கள். நம்முடைய பேச்சு நடக்கை, உடை எல்லாவற்றையும் கவனிப்பார்கள். "தகுதியான வஸ்திரத்தினாலும், நாணத்தினாலும், தெளிந்த புத்தியினாலும், தேவபக்தியுள்ளவர்களென்று சொல்லிக்கொள்ளுகிற ஸ்திரீகளுக்கு ஏற்றபடியே நற்கிரியைகளினாலும் தங்களை அலங்கரிக்கவேண்டும்" (1தீமோ.2:10). இப்படிச் செய்யும்போது நம்முடைய தேவ நாமம் மகிமைப்படும். நாமும் ஒரு உண்மையுள்ள கிறிஸ்தவர் என்ற நற்கீர்த்தியைப் பெறுவோம். எனவே இவைகளையே சிந்தித்துக்கொண்டிருப்போம்.

**புண்ணியம்:**

புண்ணியம் என்றவுடனே தொற்காள் என்பவளுடைய நற்கிரியைகளும், தருமங்களும், கொர்நேலியுடைய தருமங்களும் நினைவிற்கு வருகிறது. "யோப்பா பட்டணத்தில் கிரேக்குப் பாஷையில் தொற்காள் என்று அர்த்தங்கொள்ளும் தபீத்தாள் என்னும் பேருடைய சீஷி இருந்தாள்; அவள் நற்கிரியைகளையும், தருமங்களையும் மிகுதியாய்ச் செய்து கொண்டு வந்தாள்" (அப்.9:36). அதைப்போல நூற்றுக்கு அதிபதியாகிய கொர்நேலியு என்ற தேவபக்தியுள்ளவனும் ...ஜனங்களுக்கு மிகுந்த தருமங்களைச் செய்து, எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபம்பண்ணிக் கொண்டிருந்தான் ... அது தேவனுக்கு நினைப்பூட்டுதலாக அவர் சந்நிதியில் வந்தெட்டியிருக்கிறது (அப்.10:1-4).

தொற்காளின் தானதருமங்கள், இன்னும் பல காரணங்கள், மரித்த போன அவளை உயிருள்ளவளாக்கியது (அப்.9:41). நாம் தரித்திரர்களையும், ஏழைகளையும், தேவையிலிருப்பவர்களையும் காணும் போது தருமங்களைச் செய்யக் கடவோம். அது தேவனுக்கு நினைப்பூட்டுதலாக அவர் சந்நிதியில் போய் எட்டும். நாமும் புண்ணியம் அல்லது தானதருமம் செய்வதை சிந்தித்துக் கொண்டிருப்போம்.

**புகழ்:**

"பூமியிலுள்ளவைகளை அல்ல, மேலானவைகளையே நாடுங்கள்" "நீங்கள் கிறிஸ்துவுடன் கூட எழுந்ததுண்டானால் கிறிஸ்து தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள்" (கொலோ.3;1,2). அழிந்துபோகிறவைகளையல்ல, உயர்வான அல்லது புகழுக்குரியவற்றை சிந்தித்துக்கொண்டிருப்போம்.

அன்பு சகோதரிகளே, கிறிஸ்தவர்களாகிய நாம் மேற்கூறிய 8 காரியங்களை சிந்தித்து அல்லது தியானித்துக்கொண்டு ஒவ்வொரு நாளும் செயல்படுவோமானால், இயேசு கிறிஸ்துவுடனேகூட ஊழியஞ்செய்த சகோதரிகளைப்போல ஆசீர்வதிக்கப் படுவதோடு, இந்தியாவை அல்லது தமிழ்நாட்டையாவது கிறிஸ்துவுக்கென்று



ஆதாயப்படுத்தி, ஆத்துமாக்களை அழிவுக்குத் தப்புவித்து, சீக்கிரமாக வரப்போகிற இயேசுவோடுகூட என்றென்றும் அழியாத பரலோகத்திற்கு பங்குள்ளவர்களாக இருப்போம். இந்தவிதமான சிந்தையோடிருங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

## கேள்விகள்

1. வேதவசனத்தின்படி நீங்கள் வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட அவருக்குள் (கிறிஸ்துவுக்குள்) எப்போது முத்திரைபோடப்பட்டீர்கள்?
2. நல்லொழுக்கமுள்ள ஸ்திரீ எதைக் காப்பாள்?
3. நம்முடைய அவயவங்களை எதற்குரிய ஆயுதங்களாக தேவனுக்கு ஒப்புக்கொடுக்கவேண்டும்?
4. பரிசுத்தரும் குற்றமற்றவரும் மாசில்லாதவரும் பாவிகளுக்கு விலகினவரும் வானங்களிலும் உயர்ந்தவருமாயிருக்கிறவர் யார்?
5. தபீத்தாள் என்னும் பேருடைய சீஷி என்னென்ன காரியங்களை மிகுதியாய் செய்து கொண்டுவந்தாள்?

# அதிக நாட்கள் காத்திருக்க வேண்டியிருந்த ஸ்திரீ
# The Woman Who Had To Wait For A Long Time

**52**

**எ**லிசபெத் ஒரு யூத ஆசாரியனின் மனைவி அவளைப் பற்றி ஆராய்ந்து பார்ப்பது நமக்கு மிகவும் அவசியம் எனக் கருதுகிறேன்.

**அவளுடைய குணம்**: அவளுடைய குணம் எப்படிப்பட்டதாய் இருந்தது? லூக்கா1:6-ல் அவள் தேவனுக்கு முன்பாக நீதியுள்ளவளாயிருந்தாள் என விவரிக்கப்பட்டுள்ளது. மனிதர் பார்வையில் நீதியுள்ளவர்களாக தங்களைக் காட்டுவதற்கு சிலர்மாய்மாலமான செயல்கள் செய்வர். மனிதர்களைப் பிரியப்படுத்த சிலர் வேஷம் போடுவர் வெளித்தோற்றத்தில் நீதியுள்ளவர்களைப் போல் தங்களை காண்பிப்பர். ஆனால் எலிசபெத்தோ தேவனுக்கு முன்பாக நீதியுள்ளவளாயிருந்தாள். அப்படியானால் மனிதர் பார்வையில் நீதியுள்ளவர்களாயிருப்பதோ? தேவனுக்கு முன்பாக நீதியுள்ளவர்களாயிருப்பதோ? எது எளிது? நம்மால் நீதியுள்ளவர்களாய் நடக்க முடியுமா? ரோமர்3:10..... "நீதிமான் ஒருவனாகிலும் இல்லை" என்கிறது.

பிலிப்பியர் 3:8,9-ல் "...என் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் மேன்மைக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ணிக் கொண்டிருக்கிறேன். நான் கிறிஸ்துவை ஆதாயப்படுத்திக் கொள்ளும்படிக்கும், நியாயப்பிரமாணத்தினால் வருகிற சுயநீதியை உடையவனாயிராமல், கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினால் வருகிறதும் விசுவாச மூலமாய்த் தேவனால் உண்டாயிருக்கிறதுமான நீதியை உடையவனாயிருந்து, கிறிஸ்துவுக்குள் இருக்கிறவனென்று காணப்படும்படிக்கு...." என பவுல் கூறுகிறான். அநேக ஸ்திரீகள் நியாயப்பிரமாணத்தினால் வருகிற சுயநீதியை உடையவர்களாயிருக்கிறார்கள். இவர்கள் கிறிஸ்துவை அறியாமல், மற்றவர்களுக்குத் தீங்கு செய்யாமை, பொய் சொல்லமை, திருடாமை, உதவிசெய்தல், இரக்கஞ்செய்தல் போன்ற நற்கிரியைகளைச் செய்து சுயநீதியுடைவர்களாயிருக்கின்றனர்.

ஆனால் கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினால் வரும் நீதியைக் குறித்து அறியாதவர்களாய், கிறிஸ்துவுக்குள் வராதவர்களாய் காலத்தைக் கழிக்கின்றனர். கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொள்ளுகிற ஸ்திகளும் கூட பழைய பாரம்பரியங்களில் நியாயப்பிரமாணத்தினால் வரும் சுயநீதிக்குக் கீழ்ப்பட்டு, கிறிஸ்துவின் கிருபைக்குக் கீழ்ப்படியாமலும், அவருடைய இரத்தம் சகல பாவங்களையும் நீக்கும் என்ற விசுவாசத்தினால் வருகிற நீதியைப் பெறாமலும் இருக்கின்றனர்.

அன்பு சகோதரிகளே, நம்மை நாமே சோதித்துப்பார்ப்போம். உண்மையாகவே பவுல் கூறியதுபோல் கிறிஸ்துவுக்காக, கிறிஸ்துவை அறிகிற அறிவின் மேன்மைக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று ஒதுக்கிவிட்டு



விசுவாசத்தினால் வருகிற நீதியைப் பெற்று எலிசபெத்தைப்போல் தேவனுக்கு முன்பாக (மனுஷருக்கு முன்பாக அல்ல) நீதியுள்ளவர்களாய் இருப்போம்.

**அவளுடைய வீடு:** அது ஒரு அமைதியான வீடா? சமுதாயத்தின் பார்வையில் அவள் வீடு நிறைவுள்ளதாயிருந்ததா? குடும்பமென்றிருந்தால் அதில் ஒரு குழந்தையாவது இருக்கவேண்டுமென சமுதாயம் கூறுகிறதே! லூக்கா1:7-ல் அவள் மலடியென்றும், வயது சென்றவளாயிருந்தாள் என்றும் கூறப்படுகிறது. அப்படியானால் எலிசபெத்தும் அவள் புருஷனும் குழந்தையில்லாமல் போனதினால் உண்டான ஏமாற்றத்தில் எப்படியிருந்திருப்பார்கள்? சமுதாயத்தின் ஏச்சு பேச்சுக்கெல்லாம் ஆளாயிருப்பார்கள். ஆனாலும் அவர்கள் என்ன செய்தார்கள்? லூக்கா 1:13-ல் அவர்கள் தேவனை நோக்கி பல வருடங்களாக வேண்டுதல் செய்தார்கள் என தெளிவு படுத்துகிறது. எனவே தான் அவ்வசனத்தில் கர்த்தருடைய தூதன் "....சகரியாவே, பயப்படாதே, உன் வேண்டுதல் கேட்கப்பட்டது; உன் மனைவியாகிய எலிசபெத்து உனக்கு ஒரு குமாரனைப் பெறுவாள்....." என்றான்.

பல வருடங்களாக பிள்ளையில்லாத குடும்ப வாழ்க்கையில் கர்த்தர் ஒரு குழந்தையை வாக்குப் பண்ணுகிறார். சாதாரணமாக, நாம் பல காரியங்களுக்காக தேவனை நோக்கி ஜெபிக்கிறோம். நம்முடைய ஜெபத்திற்குப் பதில் கிடைக்கவில்லை யென்றால் ஜெபிப்பதை நிறுத்தி விடுவோம். ஆனால் இந்த தம்பதியாரோ வயது சென்ற போதும் வேண்டுதலை நிறுத்தவில்லை போலும். எனவே தான் கர்த்தருடைய தூதன் 'உன் வேண்டுதல் கேட்கப்பட்டது' என்றான். எலிசபெத் வயது சென்றவளாயிருந்த படியினால் தேவனால் அவர்களுக்கு ஒரு குழந்தையைக் கொடுப்பது கூடாத காரியமாயிருந்ததா? இல்லை. "தேவனாலே கூடாத காரியம் ஒன்றுமில்லை" (வச.27). இதுமாத்திரமல்ல "தேவனாலே எல்லாம் கூடும்". நாம் செய்ய வேண்டியதென்ன? நாட்கள் கடந்தாலும், வருடங்கள் கடந்தாலும் நம் வேண்டுதலை தேவனுக்குத் தெரியப்படுத்திக் கொண்டேயிருக்கவேண்டும். கர்த்தருக்குச் சித்தமானது அவர் கையினால் வாய்க்கும்.

**அவளுடைய புருஷன்:** எலிசபெத்தின் புருஷனாகிய சகரியா எருசலேமில் தன் ஊழியத்தை நிறைவேற்றி ஊமையாகத் திரும்புகிறான் (லூக்.1:8-23). அன்பு சகோதரியே, இப்படிப்பட்ட நிலையில் தன் புருஷனை ஏற்றுக் கொள்ளவும் பேசமாட்டாத அவனுடன் கூடி வாழவும் எலிசபெத்திற்கு என்ன குணங்கள் தேவைப்பட்டிருக்கும்? தேவ பக்தியுள்ள, தேவனுடைய கட்டளைகளையும், கற்பனைகளையும் கைக்கொண்டிருந்த அவளுக்கு நிச்சயம் தேவனுடைய சித்தம் எதுவாயிருந்தாலும் அதை ஏற்றுக் கொள்ளும் குணம் தான் தேவைப்பட்டிருக்கும்.

சில சகோதரிகள் சந்தோஷமான சூழ்நிலையில் அதிகமான பக்தி வைராக்கியத்துடனிருப்பர். ஏதாவது கஷ்டமோ, துன்பமோ நேரிட்டால் அவர்களிடமிருந்த விசுவாசம் பறந்து போய்விடும். தேவனையே தூஷிக்கவும்கூட செய்வார்கள். யோபுவின் மனைவி, யோபுவுக்கு நேரிட்ட பயங்கரமான சோதனையைப் பார்த்து: ".....நீர் இன்னும் உம்முடைய உத்தமத்தில் உறுதியாய் நிற்கிறீரோ? தேவனைத் தூஷித்து ஜீவனை விடும் என்றாள்" (யோபு2:9). அநேகர்

கூட தங்களுடைய புருஷர்களுடைய உத்தம ஊழியத்தை நினைத்து கர்த்தரை ஸ்தோத்தரிக்காமல், ஏமாற்றங்களும், துயரங்களும், துன்பங்களும் ஏற்படுகிற சமயத்தில் சலித்துக் கொண்டு, குடும்பத்தில் பிரச்சனை ஏற்படக் காரணமாகின்றனர். சகரியா ஒரு சிறந்த ஊழியன், ஊழியத்தை நிறைவேற்றி சரீரத்தில் ஒரு ஆசீர்வாதத்தை இழந்தவனாய் திரும்புகிறான். ஆனால் எலிசபெத்தோ தேவனுக்கு முன்பாக நீதியுள்ளவளாயிருந்தபடியினால் சந்தோஷத்துடன் கூடி வாழ்ந்தாள்.

**அவளுடைய விருந்தாளி:** இயேசுவின் தாயாகப் போகவிருந்த மரியாளிடத்தில் எலிசபெத் அதிக அன்புள்ளவளாயிருந்தாள். எனவே தான் நடக்கவிருக்கிற இரகசியத்தை அறிந்தவளாய், "......எலிசபெத் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு, உரத்த சத்தமாய்: ஸ்திரீகளுக்குள்ளே நீ ஆசீர்வதிக்கப்பட்டவள், உன் கர்ப்பத்தின் கனியும் ஆசீர்வதிக்கப்பட்டது. என் ஆண்ட வருடைய தாயார் என்னிடத்தில் வந்தது எனக்கு எதினால் கிடைத்தது" (லூக்.1:42,43) என்றாள். இது எப்படியாகும்? புருஷனை அறியேனே என்று பயந்த மரியாளிடம் எப்பேர்பட்ட அன்பு காட்டியிருக்கிறாள் இந்த எலிசபெத்! மரியாளை வாழ்த்தி உபசரித்ததிலிருந்து (லூக்.1:42-45) என்ன குணம் தெளிவாகிறது? அன்புக்குப் பொறமையில்லை, தற்பெருமையுமில்லை என்ற குணம் தெளிவாகிறது.

ஆம், எலிசபெத்தோ, வயது முதிர்ந்த ஒரு ஊழியக்காரி, தேவனுடைய சகல நியமங்களையும் கைக்கொண்டு நடந்தவள், தன்னைக்காட்டிலும் வயதில் குறைந்தவள் மரியாள், தன்னிலும் மேன்மையுள்ளவள், ஆண்டவருடைய தாய் என பரிசுத்த ஆவியினால் அறிந்து அவளைப் புகழ்ந்தாள். இது மற்றவர்களின் உயர்வைக் கண்டு பொறாமை கொள்ளாத குணமல்லவா? கிறிஸ்துவின் ஆவி நமக்குள் இருக்குமானால் நாமும் எலிசபெத்தைப் போல் காணப்படுவோம். எலிசபெத்திடமிருந்த இந்த நற்குணம் இல்லையென்றால் நிச்சயமாகவே நமக்குள் கிறிஸ்துவின் ஆவி இல்லை என்று தான் அர்த்தம். "கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல".

**அவளுடைய மகன்:** எலிசபெத் பல வருடங்களாகக் காத்திருந்து, தேவசித்தம் செய்தபடியினால் ஸ்திரீகளிடத்தில் பிறந்தவனிலும் யோவான்ஸ்நானகனைப் போல் ஒரு தீர்க்கதரிசி இல்லை என்றும், தீர்க்கதரிசியைப் பார்க்கிலும் மேன்மையுள்ளவன் என்று இயேசுவே சாட்சி பகர்ந்த மகனை பெற்றெடுத்தாள். யோவான் ஸ்நானகனைக் குறித்து பல காரியங்கள் முன்னறிவிக்கப்பட்டன. விருத்தசேதனம் பண்ணின நாளில் லூக்.1:60 "....அதற்கு யோவான் என்று பேரிட வேண்டும் என்றாள்". அவளுடைய இந்த காரியம் நமக்கு எதை வெளிப்படுத்துகிறது? இந்த பெயரை தேவதூதன் சகரியாவிடம் முன்னறிவித்திருந்தான்.

சகரியவோ தாம் ஊமையாயிருந்த போதும் தன் மனைவியிடம் இதைக்குறித்து ஏதோ ஒரு வழியில் தெரிவித்திருக்கவேண்டும். எனவே தான் தன் புருஷனோடு கூட தானும் தேவசித்தம் செய்ய வேண்டும், தேவதூதனால் அறிவிக்கப்பட்ட நாமம் தரிக்க வேண்டுமென தேவசித்தம் செய்வதில் கவனமாயிருந்தாள் எனத் தெரிகிறது. அத்தோடு கூட ஒரு பக்தியுள்ள தாயாகவும்



அவளிருந்திருக்கிறாள். ஆனபடியால் கர்த்தருடைய கரம் தன் தாய் தந்தையாரிடம் இருந்ததுபோல யோவானிடமும் இருந்தது.

அன்பு சகோதரியே, நம் வேண்டுதல்களை கர்த்தருக்குத் தெரியப்படுத்துவது மட்டுமல்ல, கர்த்தரிட்ட சகல கற்பனைகளின்படியும், நியமங்களின்படியும் தேவனுக்கு முன்பாக விசுவாசத்தினால் வரும் நீதியை பெறும்படிக்கும் வேண்டுதல்கள் கேட்கப்படும் படிக்கும் காத்திருக்கவேண்டும். எலிசபெத்தின் இந்த நல்மாதிரியை நாமும் பின்பற்ற தேவன் தாமே நமக்கு உதவிசெய்வாராக!.

## கேள்விகள்

1. கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் மேன்மைக்காக எவைகளை நஷ்டம் என்று எண்ணவேண்டும்?
2. "உன் வேண்டுதல் கேட்கப்பட்டது" என்று யார் யாரிடம் கூறினான்?
3. தேவனை தூஷித்து ஜீவனை விடும் என்று சொல்லியவள் யார்?
4. எலிசபெத் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டவளாக யாரை, எப்படி வாழ்த்தினாள்?
5. தீர்க்கதரிசியைப் பார்க்கிலும் மேன்மையுள்ளவன் என்று சாட்சி பகரப்பட்டவன் யார்?

# <u>*அற்பமாய் எண்ணாதிருங்கள்*</u>
## <u>Despise Not</u>

**53**

**இ**தை வாசிக்கும் அன்பு சகோதரியே, நீ தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்தும், இயேசு கிறிஸ்துவினுடைய நாமத்துக்கு ஏற்றவைகளைக் குறித்தும் அற்பமாய் எண்ணி, நவநாகரீக வாழ்வில் மோகங்கொண்டு உன் நாட்களைக் கழிக்கின்றாயா? இன்று ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையிருக்குமானால் நீ எங்கே செல்லுவாய்? அற்மாக எண்ணி ஒதுக்கப்பட வேண்டிய இவ்வுலக வாழ்வை மேன்மையாக எண்ணி மேன்மையான இரட்சிப்பைக் குறித்து அற்பமாக எண்ணிக்கொண்டிருப்பாயானால் உன் நிலைமை மிகவும் பரிதாபத்திற்குரியதாக மாறிவிடும்.

அன்று, நமது ஆதித்தாயாகிய ஏவாள் பாவஞ்செய்து தேவனுடைய மகிமையை இழந்தாள். அதனிமித்தம் நாமெல்லோரும் தேவ மகிமையை இழந்தோம். இழந்துபோன மகிமையை தம்மால் சிருஷ்டிக்கப்பட்ட அனைவருக்கும் கொடுக்கவே இயேசு இவ்வுலகத்திற்கு வந்தார். 'பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார்.......'' (1தீமோ.1:15) என்றும், ''எல்லாரும் பாவஞ்செய்து, தேவமகிமையற்ற வர்களாகி,'' (ரோம.3:23) என்றும் பரிசுத்த வேதம் கூறுகிறது. ஆனால் இன்று அநேக சகோதரிகள் நான் ஒரு பாவமும் செய்யவில்லை, என் பிள்ளைகளும், என் குடும்பம் முழுவதும் ஒரு பாவமும் செய்யவில்லை. தானதர்மங்கள் ஏரளாமாய் செய்கிறோம், மற்றவர்களுக்கு எந்ததீங்கும் செய்யாது வாழ்கிறோம் கடவுளுடைய ஆசீர்வாதத்தினால் எந்த குறைவுமின்றி வாழ்கிறோம். இப்படியிருக்க நாங்கள் எவ்வாறு பாவிகள் ஆவோம், எங்களுக்கு இயேவின் இரட்சிப்பு எதற்கு? என்கின்றனர். அதுமாத்திரமல்ல, வேத வசனங்களை விளக்கிக் கூற முற்படும் போது அதை அசட்டை செய்து அற்பமாய் எண்ணவும் செய்கின்றனர்.

அன்பு சகோதரியே, நீயும் இவ்வாறு தான் எண்ணுகிறாயா? உலக சம்பத்துக்களை குறைவில்லாமல் பெற்று மேன்மைபாராட்டிக் கொண்டு வாழும் ஜனங்களை நோக்கி, ''உள்ளவைகளை அவமாக்கும்படி, உலகத்தின் இழிவானவை களையும், அற்பமாய் எண்ணப்பட்டவைகளையும், இல்லாதவைகளையும், தேவன் தெரிந்து கொண்டார்'' (1கொரி.1:28) என்று வேதம் கூறுகிறது. ஆம், தேவன், இழிவாகவும் அற்பமாகவும் எண்ணப்பட்டவர்கள் மூலமாய் தம்முடைய குமாரனின் ராஜ்யத்திற்குள் அநேகரை கொண்டுவந்து சேர்த்துக் கொண்டேயிருக்கிறார்.

அன்று, தேவன் இஸ்ரவேல் தேசத்திலிருந்து சிறைபிடித்து கொண்டு செல்லப்பட்ட ஒரு சிறுபெண்ணின் மூலம் ராஜாவின் படைத்தலைவனும், அதிக எண்ணிக்கையுள்ள மக்கள் செல்வாக்கினைக் கொண்டிருந்த ஒரு பெரிய மனுஷனு மாயிருந்த நாகமான் என்பவனுக்கு நற்செய்தியை அனுப்பினார். அந்த சிறுபெண்



சீரியா தேசத்தில் இவனுடைய வீட்டில் வேலை செய்து வந்த ஒரு பணிவிடைக்காரி, அதாவது ஒரு வேலைக்காரி. அற்பமாய் எண்ணப்பட வேண்டிய இவள் தன் எஜமானாகிய இந்த மனுஷனுக்கு இருந்த குஷ்டரோகம் குணமாக ஒரு நற்செய்தி அறிவிக்கிறாள்''...... அவள் நாகமானின் மனைவிக்குப் பணிவிடை செய்துகொண்டிருந்தாள். அவள் தன் நாச்சியாரைப் பார்த்து என் ஆண்டவன் சமாரியாவிலிருக்கிற தீர்க்கதரிசியினிடத்தில் போவாரானால் நலமாயிருக்கும்; அவர் இவருடைய குஷ்டரோகத்தை நீக்கிவிடுவார் என்றாள்'' (2இராஜ.5:2,3).

அன்பு சகோதரியே, அவளுடைய எஜமாட்டி ஒரு வேலைக்காரியின் சொல்லைக் கேட்டு செயல்படுவதை இழிவாக அல்லது அற்பமாக எண்ணினாளா? அவ்வாறு எண்ணியிருப்பாளேயானால் நிச்சயம் தன் புருஷனுக்கு சுகத்தினைப் பெற்றிருக்கமாட்டாள். குஷ்டரோகம் என்ற அந்த வியாதி அன்றைய நாட்களில் தீட்டாக எண்ணப்பட்டு பெரிய வியாதியாகக் கருதப்பட்டது இன்றைய நாட்களில் ஜனங்களைப் பிடித்துள்ள மிகப்பெரிய வியாதி பாவம் என்ற வியாதி! ஆம், எவ்வாறு குஷ்டரோகம் அன்று அருவருக்கப்பட்டதோ, அதைக் காட்டிலும் மிக அருவருப்பான பாவ வியாதி மக்களை பிடித்துக் கொண்டிருக்கிறது.

ஒருவேளை வெளிப்படையாக நீ ஒரு பாவமும் செய்யவில்லையென்பாயாகில், இதோ, இருதயத்திலிருந்து புறப்பட்டுவரும் சில பாவங்கள் மனுஷனைத் தீட்டுப்படுத்துமே. ''எப்படியெனில், இருதயத்திலிருந்து பொல்லாத சிந்தனைகளும், கொலை பாதகங்களும், விபசாரங்களும், வேசித்தனங்களும், களவுகளும், பொய்சாட்சிகளும், தூஷணங்களும் .......மனுஷனைத் தீட்டுப்படுத்தும்......'' என்றார் (மத்.15:19) இயேசு கிறிஸ்து. இவைகளில் ஏதாவது உன்னிடத்தில் உண்டா? என்று சோதித்துப் பார். இதை வாசித்துக் கொண்டிருக்கும் என் அன்பு சகோதரியே, நான் தீர்க்கதரிசியிலும் பெரியவரும் மேன்மையுள்ளவருமாகிய இயேசுவினிடத்திற்கு நேராக உன்னை வழிநடத்துகிறேன். இயேசுவினுடைய இரத்தம் சகல பாவங் களையும் நீக்கிசுத்திகரிக்கும். உன்னை குணமாக்கும். சத்தியத்தை சத்தியமாய் போதிக்கும் போதகத்தையோ போதகரையோ அற்பமாய் எண்ணி இரட்சிப்பை இழந்து விடாதே. ''மூடர் ஞானத்தையும் போதகத்தையும் அசட்டை பண்ணுகிறார்கள்'' (நீதி.1:7) என வேதம் கூறுகிறது.

உலக ஞானத்தில் சிறந்து விளங்கும் ஒரு நபர் தெய்வஞானத்தை அசட்டை செய்யும் போது அவர்கள் தேவனுடைய பார்வையில் மூடரைப் போல்தான் இருக்கின்றனர். ''ஞானிகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பைத்தியமானவைகளைத் தெரிந்து கொண்டார்.....'' (1கொரி.1:27). சில வேளைகளில் நமக்குள் இருக்கும் சிறப்பான அறிவுக்கேற்ற காரியங்களை எண்ணி பெருமிதம் கொள்ளும்போதும் உலகப் பொருட்களை நாடி தேவனைப் புறக்கணிக்கும் போதும் தேவன் அற்பமானவைகளைக் கொண்டு நமக்குப் போதிக்க முற்படுகிறார். அன்று பிலேயாம் என்ற தீர்க்கதரிசிக்கு அற்பமான கழுதையைக் கொண்டு போதித்தார். மேலும் அற்பமாக எண்ணப்படுகிற ஆகாயத்துப் பறவைகள், மற்றும் காட்டுப் புஷ்பங்கள் போன்றவைகளிடமிருந்தும் போதனையைப் பெற அவைகளைக் கவனித்துப் பாருங்கள் என்று இயேசு சொல்கிறார்.

கிறிஸ்தவர்கள் என்று கூறிக்கொள்ளுகிற அநேக ஸ்திரீகளும் கூட தங்களுடைய பாரம்பரிய கட்டுகளால் கட்டப்பட்டு சத்தியத்தை அறிந்து கொள்ள மனதில்லாதிருக்கிறார்கள். தாங்கள் மாத்திரமல்ல தங்கள் குடும்பத்தாரையும் சத்தியத்தை அறிந்து கீழ்ப்படிய அனுமதிக்கிறதில்லை. அநேகக் குடும்பங்களில் ஸ்திரீகளுடைய ஆளுகை தான் காணப்படுகிறது. தங்களுடைய புருஷர்களின் விசுவாசத்திற்குக் கூட தடையாயிருப்பவர்களும் உண்டு. யோவுவின் மனைவியுங்கூட தன் புருஷனுடைய விசுவாசத்தைக் குறித்து அற்பமாய் எண்ணி, ‘தேவனை தூஷித்து ஜீவனை விடு என்றாள்’. இப்பேர்பட்டவர்களைக் குறித்து, “..நீங்களும் உட்பிரவேசிக்கிறதில்லை, உட்பிரவேசிக்கிறவர்களையும் தடைபண்ணுகிறீர்கள்” (லூக்.11:32) என்று வேதம் கூறுகிறது.

சகோதரியே, அன்று எலிசா தீர்க்கதரிசியின் காலத்தில் இஸ்ரவேலில் அநேக குஷ்டரோகிகள் இருந்தார்கள். ஆயினும் சீரியதேசத்தானாகிய நாகமானே அல்லாமல் வேறொருவனும் சுத்தமாக்கப்பட வில்லை (லூக்.4:27). அப்படியானால் தேவனுடைய சொந்த ஜனமாகிய இஸ்ரவேலில் இருந்த குஷ்டரோகிகள் கூட சுகமாக்கப்படவில்லை என்று தானே பொருள். ஆனால் புறதேசத்தானாகிய நாகமானுக்கு சுகம் கிடைத்தது.

ஆம், நான் கிறிஸ்தவள், நான் பக்தியுள்ளவள், பல ஆண்டுகளாக சபையில் அங்கம் வகிக்கிறவள், சிறுவர்பள்ளி நடத்தி வருகிறவள், அவ்வப்போது ஊழியம் செய்து கொண்டு வருகிறவள் என்று சொல்லி சத்தியத்தின்படி நடவாமல் உங்களுக்குள்ளே திருப்தியடைந்து வருகிறீர்களா? ஏமாந்து போகாதீர்கள். இம்மைக்குரிய ஆசீர்வாதங்களையே எதிர்நோக்கி, அதை அவ்வப்போது பெற்று அனுபவிப்பதனால் நாம் தேவனுடைய ராஜ்யத்திற்குட்பட்டவர்கள் என்று ஆகாது.

சத்தியத்தை பகுத்துப் படியுங்கள். வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்த்து, பூமிக்குரியவைகளையல்ல நித்தியத்திற்குரியவைகளைக் கண்டு கொள்ளுங்கள். அன்று நாகமானுக்குக் கிடைத்த நற்செய்தி இதை வாசிக்கும் உனக்கு இன்று கிடைத்துள்ளது. இழந்து போன ஆவிக்குரிய ஆசீர்வாதங்களையும், என்றென்றும் அவரோடு கூட உறவாடிக் கொண்டிருக்கும் ஆசீர்வாதங்களையும் மீண்டும் பெற இயேசுவினிடத்திற்கு வா. கிறிஸ்தவரல்லாத உனக்கு இயேசு தேவை, கிறிஸ்தவர்கள் என்று வெறுமனே எண்ணிக்கொண்டிருக்கிற உனக்கும் இயேசு தேவை.

இன்றே இயேசுவை அறிய வேண்டிய பிரகாரம் அறிந்து, அவரை விசுவாசித்து, மனந்திரும்பி, இயேசுவே தேவனுடைய குமாரன் என அறிக்கையிட்டு ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெற்றுக் கொள்வீர்கள். சத்திய ஆவியானவர் உங்களை சகல சத்தியத்திற்குள்ளும் நடத்திச் செல்வார். நித்திய ஜீவனுக்குள் பிரவேசிக்கும் பாக்கியத்தைப் பெறுவீர். தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்தும், இயேசு கிறிஸ்துவினுடைய நாமத்துக்கேற்றவைகளைக் குறித்தும் அறிய விரும்புகிற உங்களுக்கு உதவிசெய்ய எப்பொழுதும் ஆயத்தமாயிருக்கிறோம். தேவன் தாமே உங்களை வழி நடத்துவாராக!



## கேள்விகள்

1. உள்ளவைகளை அவமாக்கும்படி தேவன் எவைகளைத் தெரிந்துகொண்டார்?
2. தன் எஜமானனின் குஷ்டம் நீங்க நற்செய்தியை அறிவித்தவள் யார்?
3. எவைகள் மனுஷனைத் தீட்டுப்படுத்தும்?
4. யாரை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பைத்தியமானவைகளைத் தெரிந்துகொண்டார்?
5. இஸ்ரவேலில் அநேகர் குஷ்டரோகிகள் இருந்தார்கள் ஆயினும் ஒருவனே சுத்தமானான் என்று குறிப்பிடப்பட்டவன் யார்?

## ஓட்டத்தை முடித்தேன்
## I have finished my Course

**54**

பவுல் அப்போஸ்தலன் தன் தேகத்தை விட்டுப்பிரியும் காலம் வந்தது எனக் கருதி 'ஓட்டத்தை முடித்தேன்' என்றார் (2தீமோ.4:7). நானோ எனது அரசு பணிக்காலத்தை முடித்தபடியினால் இவ்வுலகப்பணி முடிவடைந்தது என்றெண்ணி 'ஓட்டத்தை முடித்தேன்' என்கிறேன். இது எவ்வளவு ஆசீர்வாதமான நிகழ்வு! என்னுடைய துவக்கம் அற்பமாயிருந்தாலும் என்னுடைய முடிவு சம்பூரணமாயிருக்கிறது (யோபு 8:7). ஆம் நான் எனது **B.Ed., படிப்பினை மதுரை Justin College-ல்** (நிர்மலா பள்ளி வளாகத்திற்குள் உள்ளது) முடித்தவுடன் வேலைக்கு விண்ணப்பிக்காமலே அதே கல்லூரியிலிருந்து அங்கிருந்த **English Medium School-ல் மாதம் ரூ280/- க்கு (Pocket Money)** பணியேற்கும்படி ஒரு தந்தி வந்தது. நானும் கர்த்தர் ஏதோ ஒரு நோக்கத்துடன் வாசலை திறக்கிறார் என நினைத்து குறைவான சம்பளத்தைப் பாராதபடி அங்கு சென்று ஒரு மாதம் மட்டும் பணி செய்தேன். அந்த ஒரு மாத பணிக்காலம் இயேசுவின் அன்பினையும் விக்கிரகாராதனையை தேவன் வெறுக்கிறார் என்பதையும் பகிர்ந்து கொள்ளும் இறைப்பணிக்காலமாகவே இருந்தது.

பின்பு கொடைக்கானலில் **St.Joseph's Public School மற்றும் St.Peter's Matriculation School-ல் கிட்டத்தட்ட நான்காண்டுகள் பணியாற்றினேன்.** அதன்பின் 1987-ல் அரசு பணி கிடைத்தது. அற்பமாக துவங்கப்பட்ட என் பணி தேனி மாவட்டத்திலுள்ள ஒரு அரசு உயர்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியையாக பதவி உயர்வு பெற்று, 2016-ல் 100 சதவீத தேர்ச்சியினை எமது பள்ளிபெற்று எனக்கு நற்சான்றிதலையும் பெற்றுத்தந்தது. 28 ஆண்டுகாலம் பணிபுரிந்து சம்பூரணமாக பணிநிறைவடைந்தது. இது உலகப்பணிதான் என்ன ஆச்சரியம்! எனது தலைமை ஆசிரியை பொறுப்பினை இன்னொரு ஆசிரியையிடம் ஒப்படைத்துவிட்டு **HM Room ஐ விட்டு வெளியேறினவுடனே SriLanka Church of Christ-லிருந்து 3 நாட்கள் கர்த்தருடைய பணியைச் செய்ய அழைப்பு வந்தது.** இதனை கேட்ட நானும் எனது கணவரும் எல்லையில்லா மகிழ்ச்சியில் நனைந்தோம்.

கர்த்தர் எங்களை நினைத்துக்கொண்டே இருக்கிறார் என்று சொல்லுவதா? கர்த்தரால் எதற்காகப் பிடிக்கப்பட்டேனோ அதனை இன்னும் உறுதியாகப் பிடித்துக்கொள்ளுவதற்கான அழைப்பா? அல்லது உலகப்பணி போதும் உன்னதப்பணியினை முழுநேரமாகச் செய்ய **Re-employment Order** கிடைத்தது என்று சொல்லுவதா? அனைத்தும் என்றுதானே சொல்லவேண்டும்.

ஆம், சகோதரியே, எங்கள் இருதயம் பூரிப்பால் பொங்கி வழிகிறது. ஒவ்வொரு நாளும் அழிந்து கொண்டிருக்கிற சகோதரிகளை கிறிஸ்துவின் இராஜ்யத்திற்கு உட்படுத்தும்பணியல்லவா இது! ஆம், உன்னதமான தேவனையும் அவர்



அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவிக்கும் பணி அநேகருக்கு நித்திய ஜீவனை கொடுக்கிறதாக இருக்கிறது. வேதம் கூறுகிறது; "ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன்" (யோவா.17:3). தேவன் அன்பாகவே இருக்கிறார். எனவே தம்மால் உண்டாக்கப்பட்ட ஒருவனும் கெட்டுப்போகக்கூடாதென்று விரும்புகிறார். எனவே தான் தம்முடைய ஒரே பேறான குமாரன் இயேசுகிறிஸ்துவை இவ்வுலகத்திற்கு அனுப்பினார். "தேவன், தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல், நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார். உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார்" (யோவா.3:16,17).

உலகில் பிறந்த ஒவ்வொருவரும் இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்க வேண்டியவர்களாயிருக்கிறோம். அப்பொழுது மாத்திரமே ஒருவன் கெட்டுப்போகாமல் அழியாத ஜீவனைப் பெற்றுக்கொள்ள முடியும். அநேகர் சம்பூர்ணமாக அனைத்து உலக ஆசீர்வாதங்களையும் பெற்றிருக்கும்போது மிகவும் களிகூர்ந்து சந்தோஷமாக வாழ்க்கின்றனர். இவையனைத்தும் அநித்தியமானவை, நிரந்தமற்றவை என நினைப்பதில்லை. எனவே தான் சகல சம்பத்துக்களையும் பெற்றிருந்த போதிலும் ஏதோ ஒரு சிறிய காரியத்தில் மனநிம்மதியை இழந்து தங்களை மாய்த்துக் கொள்கின்றனர்.

இவ்வுலகமோ, உலகின் செல்வ செழிப்போ, பட்டமோ, பதவியோ குழந்தைச் செல்வங்களோ ஒருவருக்கு நிச்சயமாகவே சந்தோஷத்தையும் சமாதானத்தையும் தராது. ஒருவேளை இவைகளெல்லாம் சிறிது காலத்திற்கு மனமகிழ்ச்சியைக் கொடுப்பதுபோல் தோற்றமளிக்கலாம். ஆனால் இவைகள் நித்திய மகிழ்ச்சியை ஒருபோதும் கொடுக்காது, உலகம் கொடுக்கக்கூடாத சமாதானத்தை இயேசு மாத்திரமே கொடுக்க முடியும் (யோவா.14:27).

தேவன் முதல் மனிதன் ஆதாமையும் அவன் மனைவி ஏவாளையும் ஏதேன் என்ற ஒரு தோட்டத்தை உண்டாக்கி அதிலே அவர்களை வைத்தார். ஏதேன் என்பதற்கு 'சந்தோஷமான இடம்' என்று பொருள். தேவன் பகலில் குளிர்ச்சியான வேளையிலே தோட்டத்தில் உலாவுகிறவராக இருந்தார். அப்படியென்றால் அவர்கள் இருவரும் அநுதினமும் கர்த்தருடைய சந்நிதியில் இருந்தார்கள் என்று பொருள். எப்பேர்பட்ட அற்புதமான மகிழ்ச்சியான சூழல் இது! இதனை அவர்கள் இழந்து தோட்டத்திலிருந்து துரத்தப்பட்டார்கள். தேவசமூகத்தை இழந்தார்கள். அவர்களது கீழ்ப்படியாமையினால் பாவம் உலகத்திற்குள் பிரவேசித்து அனைவரும் பாவத்திற்கு அடிமையானோம். ஆனால் தேவ அன்பு நம்மை பாவத்தின் கோரப்பிடியிலிருந்து விடுவித்து தம்மிடமாய் இழுத்துக்கொள்ளும்படி தமது ஒரே பேறான இயேசுவை உலகிற்கு அனுப்பி அவர் சிந்திய இரத்தத்தினால் நம்மை பாவத்திலிருந்து மீட்டுக்கொள்ள சித்தமானது.

"நான் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும்போது எல்லாரையும் என்னிடமாய் இழுத்துக்கொள்ளுவேன் என்றார்" இயேசு (யோவா.12:32). இந்த இயேசுவை விசுவாசித்து அவரை சொந்த மீட்பராக ஏற்றுக்கெள்ளும்போது, "நான் அவைகளுக்கு நித்திய ஜீவனைக் கொடுக்கிறேன்; அவைகள் ஒருக்காலும் கெட்டுப்போவதில்லை, ஒருவனும் அவைகளை என் கையிலிருந்து பறித்துக்கொள்வதுமில்லை" (யோவா.10:28) என்று உறுதியளிக்கிறார். நாம் இயேசுவை விசுவாசித்து அவரது கைகளில் முழுவதுமாக தன்னை ஒப்படைத்துவிடும்போது ஒரு பயமில்லாத சமாதானமிகுந்த மகிழ்ச்சியான வாழ்வினைப் பெறமுடியும். ஏனெனில் ஒருவனும் (பிசாசின் எந்த ஒரு வஞ்சகமான செயலும்) இயேசுவின் கையிலிருந்து நம்மைப் பறித்துக்கொள்ள முடியாது. நித்திய ஜீவனை நிச்சயமாகவே பெற்றுக்கொள்ளுவோம். ஒருவேளை நீங்கள் இயேசுவை விசுவாசியாமல் பாவத்தின் அடிமைத்தனத்திலேயே நிலைத்திருப்பீர்களென்றால் "பாவத்தின் சம்பளம் மரணம்" (ரோம.6:23) என்பதை மறக்க வேண்டாம். ஆனால் தேவனுக்கு அடிமைகளானால் "...பரிசுத்தமாகுதல் உங்களுக்குக் கிடைக்கும் பலன், முடிவோ நித்தியஜீவன் ரோமர் 6:22. அன்பான சகோதரியே, தேவன் உங்களிடத்தில் அன்பாயிருக்கிறார் என்பதை அசட்டை செய்து நித்திய ஜீவனை இழந்துவிடாதே.

இன்று அநேகர் தேவன் என்னோடு பேசினார், எனக்கு இன்னின்ன வாக்குத்தத்தங்களைக் கொடுத்துள்ளார் என அநேக வசனங்களைக் கூறி திருப்தியடைகின்றனர், ஆறுதலைடைகின்றனர். கர்த்தருடைய வசனம் ஜீவனாயும் ஆவியாயுமிருக்கிறபடியால் நிச்சயமாக நமக்கு ஆறுதலையும் ஆனந்தத்தையும் கொடுக்கும் சந்தேகமேயில்லை. வேதாகமத்தை வாசிக்கும்போது **யார், யாருக்கு, எப்போது** என்ற கேள்வியோடு வேதத்தை வாசியுங்கள். இப்போதிருக்கிற நமக்கு "நித்தியஜீவனை அளிப்பேன்" என்பதே அவர் நமக்குச் செய்த வாக்குத்தத்தம் என்று 1யோவா.2:25-ல் வாசிக்கிறோம். ஆம், சகோதரிகளே, "விசுவாசத்தின் நல்லபோராட்டத்தைப்போராடு, நித்திய ஜீவனைப் பற்றிக்கொள், அதற்காகவே நீ அழைக்கப்பட்டாய்" (1தீமோ.6:12). நாம் அழைக்கப்பட்ட அழைப்பைப் பற்றிக்கொள்வோம், ஆவிக்குரிய ஓட்டத்தை ஓடி முடிப்போம், நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்வோம். கர்த்தர் தாமே நமக்கு உதவிசெய்வாராக! ஆமென்.

### கேள்விகள்

1. யாரை அறிவது நித்திய ஜீவன்?
2. யாராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே தேவன் அவரை அனுப்பினார்?
3. ஏதேன் என்பதற்கு அர்த்தம் என்ன?
4. பாவத்தின் சம்பளம் எது?
5. நாம் எதற்காக அழைப்பட்டிருக்கிறோம்?



## கர்த்தர் வருகிறார்
## Maranatha

**55**

**க**ர்த்தர் வருகிறார் என்ற செய்தி உங்களுக்குக் களிப்பை உண்டாக்குகிறதா? அல்லது கலக்கத்தை உண்டாக்குகிறதா? எதுவாயிருந்தாலும் கர்த்தர் வருகிறார் என்பது நிச்சயம். ஆம், அவர் சீக்கிரமாய் வருகிறார் என வேதம் கூறுகிறது. "பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார்.."(1தீமோ.1:15). இவ்வாறாக பூமிக்கு வந்த கிறிஸ்து இயேசு நம்மை பாவத்திலிருந்து விடுவித்து காக்கும்படிக்கு சிலுவையிலே தம்முடைய இரத்தத்தை சிந்தி மரித்து, அடக்கம் செய்யப்பட்டு, மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார். உயிர்த்தெழுந்த கிறிஸ்து தெளிவான திருஷ்டாந்தங்களினாலே அப்போஸ்தலருக்குத் தம்மை உயிரோடிருக்கிறவராகக் காண்பித்தார் (அப்.1:3). மட்டுமல்ல "....அவர்கள் பார்த்துக் கொண்டிருக்கையில், உயர எடுத்துக் கொள்ளப்பட்டார், ....வெண்மையான வஸ்திரந்தரித்தவர்கள் இரண்டு பேர் அவர்களருகே நின்று: ..உங்களிடத்தினின்று வானத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப்போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார் என்றார்கள்"(அப்.1:9-11).

அன்பு சகோதரிகளே, இதைக்குறித்து இன்று அநேகர் பரியாசம் பண்ணுகின்றனர். சகலமும் சிருஷ்டிப்பின் தோற்றமுதல் இருந்தவிதமாயிருக்கிறதே என்று சொல்லுவார்கள். "பிரியமானவர்களே, கர்த்தருக்கு ஒரு நாள் ஆயிரம் வருஷம் போலவும், ஆயிரம் வருஷம் ஒரு நாள் போலவும் இருக்கிறதென்கிற இந்த ஒரு காரியத்தை நீங்கள் அறியாதிருக்க வேண்டாம். தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி, கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக் குறித்துத் தாமதமாயிராமல்; ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்" (2பேது.3:8,9).

ஆம், நம்மை உண்டாக்கின நம்முடைய தேவன் நம்மை அதிகமாய் நேசிக்கிறார். நம்மைக் காக்கும்படிக்கு, வரவிருக்கும் அழிவிலிருந்து விடுவிக்கும்படிக்கு சித்தமுள்ளவராயிருக்கிறார். எனவே தான் இங்கு "ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்" என ஆவியானவர் திருவுளம் பற்றுகிறார். அன்பு சகோதரியே, நீங்கள் மனந்திரும்பிவிட்டீர்களா? இல்லை,

நாங்கள் ஏற்கனவே கிறிஸ்தவர்கள் தான், எங்களுடைய முன்னோர்கள் சபை போதகராகவும், உபதேசியாராகவும் இருந்தார்கள். அவர்கள் வழி வந்தவர்களாகிய நாங்கள் கிறிஸ்தவர்களாகவே இருக்கிறோம் என்று சொல்லி திருப்தியடைந்தவர் களாய் காணப்படுகிறீர்களா? பேதுரு, "..நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொரு வரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்

கொள்ளுங்கள்..''(அப்.2:38) என்று யாரைப்பார்த்து பிரசங்கித்தான்? யெகோவா தேவனை அறிந்திருந்த யூதரைப் பார்த்தல்லவா! அவர்களே, மனந்திரும்ப வேண்டியது அவசியமாயிருந்ததென்றால் புறஜாதியாராகிய நமக்கு அது எவ்வளவு அவசியம்! எனவே ''மனந்திரும்பி, பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள்'' ஏற்கனவே நான் இரட்சிக்கப்பட்டு ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டேன் என்பீர்களானால் உங்களை நீங்களே வஞ்சித்துக் கொள்ளுகிறவர் களாயிருப்பீர்கள்.

தேவனுடைய சித்தத்தின்படி முதலாவது கர்த்தராகிய இயேசுவின் இரத்தம் நம்மை பாவமறகழுவ வல்லமையுடையது என அறிந்து பாவத்திற்காக மனந்திரும்பி, பிறகு அப்பாவங்கள் மன்னிக்கப்படும்படிக்கு ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள். இப்படிச் செய்யும் போது மட்டுமே நீங்கள் பாவத்திலிருந்து விடுதலையாக்கப்படுவீர்கள். பாவத்திலிருந்து இரட்சிக்கப்பட்டவர்களாயுமிருப்பீர்கள்.

அன்பு சகோதரிகளே, உலகில் ஒவ்வொரு நாளும் திடீர்திடீரென்று மாற்றங்கள் பல ஏற்பட்டுக் கொண்டேயிருக்கிறது. கடந்த சில ஆண்டுகளுக்குமுன் ஏற்பட்ட சுனாமி பேரழிவு உலகத்தையே உலுக்கி விட்டது. இந்த அழிவு இன்னும் நம்முடைய நினைவிலிருந்து நீங்காமல் உலுக்கிக் கொண்டிருக்கிறது. கொஞ்சங்குறைய இதைப்போன்ற சம்பவம் நோவா காலத்தில் ஏற்பட்டது. ''அப்போது இருந்த உலகம் ஜலப்பிரளயத்தினாலே அழிந்ததென்பதையும் மனதார அறியாமலிருக்கிறார்கள்.

இப்பொழுது இருக்கிற வானங்களும் பூமியும் அந்த வார்த்தையினாலேயே அக்கினிக்கு இரையாக வைக்கப்பட்டு, தேவ பக்தியில்லாதவர்கள் நியாயந்தீர்க்கப்பட்டு அழிந்து போகும் நாள் வரைக்கும் காக்கப்பட்டிருக்கிறது. ......இப்படி இவைகளெல்லாம் அழிந்து போகிறதாயிருக்கிறபடியால் **நீங்கள் எப்படிப்பட்ட பரிசுத்த நடக்கையும் தேவ பக்தியும் உள்ளவர்களாயிருக்க வேண்டும்**!'' (2பேது3:6-11) என வேதம் கூறுகிறது. அன்று நோவா தேவ சத்தத்திற்குக் கீழ்ப்படிந்தான், நோவாவின் மனைவி நோவாவுக்குக் கீழ்ப்படிந்தாள், அவனுடைய பிள்ளைகளும், மருமக்களும் கீழ்ப்படிந்தனர் ஆனபடியினால் காக்கப்பட்டனர்.


இதோ ''கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிறவிதமாய் வரும்; அப்பொழுது வானங்கள் மடமட என்று அகன்றுபோம், பூதங்கள் வெந்து உருகிப்போம், பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம்'' (2பேது.3:10). நாமோ பரிசுத்த நடக்கையும் தேவ பக்தியும் உள்ளவர்களாயிருக்க வேண்டும் என வேதம் கூறுகிறது.

நாம் மட்டுமல்ல நம்முடைய கணவன், நம்முடைய பிள்ளைகள், நம் குடும்பத்தார் அனைவரும் இவ்விதமாய் நடக்கவேண்டும். நோவாவும் அவன் குடும்பமும் காக்கப்பட்டது போல் நாமும் நம்முடைய குடும்பமும் காக்கப்பட வேண்டும். உலகத்திலுள்ள அனைவரும் காக்கப்பட வேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது. அவபக்தியுள்ளவர்களை கண்டிக்கிறதற்கும், ஆயிரமாயிரமான தமது பரிசுத்தவான்களோடுங்கூடக் **கர்த்தர் வருகிறார்** (யூதா15). கர்த்தரை சந்திக்க ஆயத்தப்படுவோம்.



## கேள்விகள்

1. இயேசுகிறிஸ்து உலகத்திற்கு எதற்காக வந்தார்?
2. கர்த்தர் எதற்காக நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்?
3. இப்போது இருக்கிற வானங்களும் பூமியும் எதற்கு இரையாக வைக்கப் பட்டுள்ளது?
4. வானத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இயேசு மீண்டும் வருவார் என்று சொன்னவர்கள் யார்?
5. மாரநாதா என்பதன் பொருள் யாது?


இதுபோன்ற பெண்களுக்கான ஆவிக்குரிய புத்தகங்கள் எங்களிடம் இருக்கிறது எழுதி பெற்றுக்கொள்ளுங்கள்.

World Evangelism Publications
P.O.Box No: 5
Batlagundu - 624 202
South India
Email: arjunanglory@gmail.com